வெளியீடு : 21-11-2002 Issued : 21-11-2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, மார்ச் 15, 2002 – தொகுதி 15 – எண் 2

Friday the, 15th March, 2002 – Volume 15 – No. 2

சட்டமன்றப் பேரவைச் [illegible]
Legislative Assembly [illegible]

15-3-2002

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 1, 2, 3 மற்றும் 4) | 123-393 |
| **2. அறிக்கை அளித்தல்—** | |
| பொதுக் கணக்குக் குழு | 394 |
| **3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதமும் பதிலுரையும்**—தொடர்ச்சி | 394-496 |
| திரு. ஜி.கே. மணி | 394-417 |
| *திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் | 417-439 |
| *திரு. துரைமுருகன் | 441-458 |
| மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 458-490 |
| **4. அரசினர் தீர்மானம்—** | |
| பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல் | 496-497 |
| **5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** | 497-498 |

[2002 மார்ச் 15

விடை —

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் பொதுமக்களுக்கு அறிவிப்புப் பலகை நிறுவுவது அரசின் நிதிநிலைக்குத் தக்கவாறு மேற்கொள்ள வேண்டிய நிலையில் இப்பணியை எப்போது மேற்கொள்ள முடியும் என்பதை அறுதியிட்டுக் கூற இயலாது.*

**2—**

## பட்டா

**வினா 1016—திரு. வி.கே. லட்சுமணன்:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கோயம்புத்தூர் நகரில் புறம்போக்கு நிலத்தில் நீண்ட காலமாகக் குடியிருக்கும் மக்களுக்கு எப்பொழுது பட்டா வழங்கப்படும்?*

விடை —

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர்:**

*கோவை நகர்ப்புறத்தில் கோவை வடக்கு மற்றும் தெற்கு வட்டங்களில் ஆக்கிரமிப்புப் பகுதிகளுக்கு பட்டா வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்கள்:—*

*கோவை (வடக்கு)—*

| | | | |
|---|---|---|---|
| 1. | சங்கனூர் | க.ச.15/1,115/1 (குட்டை வாரி) | க.ச.15/1-ல் 75 நபர்களுக்கும் க.ச. 115/1-ல் 11 நபர்களுக்கும் பட்டா வழங்க நடவடிக்கையில் உள்ளது. |
| 2. | கிருஷ்ணராயபுரம் | க.ச. 500/1 (வாய்க்கால்) | உயர் மின் அழுத்த மின் கம்பிகளுக்குக் கீழே உள்ளதால் பட்டா வழங்க இயலாது. |
| 3. | கணபதி [illegible] | க.ச. 377/1 (வண்டிப் பாதை) | மாநகராட்சியின் இசைவு கிடைக்கப் பெறாததால் பட்டா வழங்க இயலவில்லை. |

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்



2002 மார்ச் 15]

| | | | |
|---|---|---|---|
| 4. | புலியகுளம் | க.ச.811/1 (வாய்க்கால்) | மாநகராட்சியின் இசைவு கிடைக்கப் பெறாததால் பட்டா வழங்க இயலவில்லை. |

கோவை (தெற்கு) வட்டம்—

| | | | |
|---|---|---|---|
| 1. | குமாரபாளையம் | க.ச.580 (நீ.ஓ.தா.சு) | 65 குடும்பங்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. |
| 2. | சிங்காநல்லூர் | 708/3 | 20 குடும்பங்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. |

2. அரசாணை (நிலை) எண் 1427, நாள் 11-5-1991-ன்படி மாநகராட்சிப் பகுதியில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்கான தடையாணை மீள அமலில் உள்ளதால், மாநகராட்சிப் பகுதியில் தற்போது பட்டாக்கள் வழங்க இயலவில்லை.

**3—**

## ஊதிய உயர்வு

**வினா 2129—திரு. பி. ஆர். சுந்தரம்:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அரசு ஊழியர்கள் கணினிக் கல்வியில் தேர்ச்சி பெற்றால், ஊதிய உயர்வு அளிக்க அரசு பரிசீலனை செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர்:**

*அரசு ஊழியர்கள் கணினிக் கல்வியில் தேர்ச்சி பெற்றால், ஊதிய உயர்வு அளிப்பது குறித்து முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**4—**

## போதைப் பொருட்கள் கடத்தல்

**வினா 2339—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2002 மார்ச் 15

(அ) தமிழ்நாட்டில் போதைப் பொருட்கள் கடத்தியதற்காக 2000-2001 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அதில் கடத்தப்பட்ட போதைப் பொருள்கள் என்னென்ன? அதன் மதிப்பு எவ்வளவு?

விடை —

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் போதைப் பொருட்கள் கடத்தியதற்காக 2000 ஆண்டில் 1,200 நபர்களும் 2001 ஆம் ஆண்டில் ஜூன் 2001 வரை 2,100 நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(ஆ) போதைப் பொருட்கள் கடத்தப்பட்ட குற்றங்களில் பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருட்கள் மற்றும் அவற்றின் மதிப்பும் கீழே தரப்பட்டுள்ளன:

(1) இரண்டாயிரம் ஆண்டில் பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருட்கள்:

| | | |
|---|---|---|
| 1. கஞ்சா | : | ரூ. 2,70,00,000/- |
| 2. ஹெராயின் | : | ரூ. 86,00,000/-(*) |
| 3. ஹஷிஷ் ஆயில் | : | ரூ. 1,90,000/- |
| 4. டயாசிபம் | : | ரூ. 19,000/- |
| 5. புப்ரெனார்பின் ஊசி | : | ரூ. 85,000/- |
| 6. மார்பின் | : | ரூ. 3,50,000/- |
| 7. அபின் | : | ரூ. 38,000/- |
| 8. பாப்பி கேப்ஸ் | : | ரூ. 13,000/- |

(*) 13.011 கிலோ ஹெராயின் சர்வதேச சந்தையில் இதன் மதிப்பு சுமார் 13 கோடி ரூபாய்.



2002 மார்ச் 15]

(2) இரண்டாயிரத்து ஓராம் ஆண்டில் ஜூன் மாதம் வரை பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருட்கள்:—

| | | |
|---|---|---|
| (1) கஞ்சா | : | ரூ. 1,55,30,000/- |
| (2) ஹெராயின் | : | ரூ. 21,51,000/-(**) |
| (3) டயாசிபம் | : | ரூ. 3,500/- |
| (4) அபின் | : | ரூ. 50/- |

(**) 10.755 கிலோ ஹெராயின் சர்வதேச சந்தையில் இதன் மதிப்பு சுமார் 10.7 கோடி ரூபாய்.

5—

## வருவாய் கிராமங்கள்

**வினா 2350— திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியதாக உள்ள வருவாய் கிராமங்களை நிர்வாக வசதிக்காக இரண்டாகப் பிரிக்க அரசிடம் கருத்துரு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர்:**

(அ) இல்லை

(ஆ) வினா எழாது

6—

## அரசு அச்சகம்

**வினா 2659—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எழுதுபொருள் அச்சுத் துறையின் மூலம் அச்சிடப்படும் இரகசிய ஆவணங்கள் மற்றும் தேர்வு கேள்வித் தாள்கள் போன்றவை வெளியே வராமல் பாதுகாத்து கண்காணிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர்:**

(அ) எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் மூலம் அச்சிடப்படும் இரகசிய ஆணைகள், சென்னை அரசு மைய அச்சகத்தில் இரகசியப் பணிக்கான பிரிவுகளில் மட்டுமே ஒரு நபர் தலைமையின்கீழ் கடுக்கத்துடன் அச்சிடப்படுகின்றன. மேலும் இரகசியத்தைப் பேணிக்காக்க அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

7—

## எழுது பொருள்கள்

**வினா 2660—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு துறைகளுக்கு வழங்கும் எழுதுபொருள்கள் தரமுள்ளவையாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர்:**

(அ) அரசு துறைகளுக்குத் தேவைப்படும் எழுதுபொருட்கள் ஐ.எஸ்.ஐ. முத்திரையுடன் கூடிய தரமுள்ள எழுதுபொருள்களாக ஒளிவு மறைவில்லா ஒப்பந்தப்புள்ளி முலம் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

8—

## எழுதுபொருள் துறை இயந்திரங்கள்

**வினா 2665—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) எழுதுபொருள் துறையிடம் உள்ள பழைய தமிழ், ஆங்கிலத் தட்டச்சு இயந்திரங்களை உடல் ஊனமுற்றோர்கள், விதவைகள் ஆகியோருக்கு இலவசமாகவோ, குறைந்த விலையிலோ கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர்:**

(அ) உடல் ஊனமுற்றவர், விதவைகள் ஆகியோருக்கு கழிவுநீக்கம் செய்யப்பட்ட பழைய தமிழ்/ஆங்கில தட்டச்சு இயந்திரங்களை இலவசமாகவோ அல்லது குறைந்த விலையிலோ வழங்க விதிகளில் இடமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

9—

## போதைப் பொருட்கள்

**வினா 4805—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் மதுரை, தேனி மற்றும் கம்பம் பகுதிகளில் எவ்வளவு மதிப்புள்ள கஞ்சா போதைப் பொருட்கள் பிடிபட்டன?

(ஆ) எவ்வளவு மதிப்புள்ள கஞ்சா செடிகள் காவல் துறையால் அழிக்கப்பட்டன?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர்:**

(அ) மதுரை, தேனி மற்றும் கம்பம் பகுதிகளில் 2000 ஆண்டில் ரூ.94,95,165/- மதிப்புள்ள கஞ்சா போதைப் பொருட்களும் 2001 ஆம் ஆண்டு ஆகஸ்ட் வரை ரூ.85,76,170/- மதிப்புள்ள கஞ்சா போதைப் பொருட்களும் பிடிபட்டன.

(ஆ) இப்பகுதிகளில் 2000 ஆண்டில் ரூ.18.76 கோடி மதிப்புள்ள கஞ்சா செடிகளும் 2001 ஆம் ஆண்டில் ஆகஸ்ட் வரையில் ரூ.5.51 கோடி மதிப்புள்ள கஞ்சா செடிகளும் அழிக்கப்பட்டுள்ளன.

**10—**

## புயல் பாதுகாப்பு இல்லம்

**வினா 5154—திரு. ஜி. பழனிச்சாமி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கற்பகநாதர்குளம், தொண்டியக்காடு பகுதிகளில் புயல் பாதுகாப்பு இல்லம் கட்ட அரசிடத்தில் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

விடை —

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர் செல்வம், முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

**11—**

## மனைப்பட்டா

**வினா 5159—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், தம்பிக்கோட்டை ஊராட்சியிலுள்ள பழையாறோடு தெருவில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக வசித்துவரும் 50 குடும்பங்களுக்கு குடியிருப்பு மனைப்பட்டா வழங்க அரசிடத்தில் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை —

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர் செல்வம், முதலமைச்சர்:**

(அ) ஆம்.



(ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த தம்பிக்கோட்டை கீழக்காடு ஊராட்சியைச் சேர்ந்த 82 துறைக்காடு வருவாய் கிராமத்தில் புல எண் 54 நெடுஞ்சாலைத் துறை புறம்போக்கில் மொத்தப் பரப்பு 030.5 எக்டேர் இதில் 16 நபர்கள் குடியிருந்து வருகிறார்கள். இவர்களுக்கு தற்போது நில வகைமாற்றம் செய்ய நெடுஞ்சாலை கோட்டப் பொறியாளரிடமிருந்து தடையின்மை சான்று கோரி நடவடிக்கை மாவட்ட ஆட்சித் தலைவரால் எடுக்கப்பட்டு வருகிறது. புல எண் 181, ஆற்றுப் புறம்போக்கு, பரப்பளவு 0.54.0 எக்டேர். இதில் 13 நபர்கள் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள். இவர்கள் குடியிருந்து வரும் இடம் ஆறு புறம்போக்கு என்பதாலும், இவர்கள் ஆற்று ஓரத்தில் தாழ்வான பகுதியில் குடியிருந்து வருவதாலும் வெள்ளக் காலங்களில் அவர்களது குடியிருப்புகளுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதாலும் இவ்விடத்தை வகைமாற்றம் செய்து பட்டா வழங்க இயலாது.

**12—**

## பட்டா

**வினா 9332—செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

8-3-1988-ஆம் நாளிட்ட அரசாணை எண் 376-ன்படி 7 மாவட்டங்களுக்கு 16 கி.மீ. தூரத்திற்குட்பட்டு பட்டா வழங்கக்கூடாது என்ற ஆணையைத் தளர்த்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர் செல்வம், முதலமைச்சர்:**

அரசாணை எண் 376, வருவாய், நாள் 8-3-1988-ல் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட திண்டுக்கல், தூத்துக்குடி, சிவகங்கை, விருதுநகர் ஆகிய நான்கு மாவட்டத் தலைநகரங்களிலிருந்து 16 கி.மீ. சுற்றளவு வரை நில ஒப்படை செய்வதற்கும் வீட்டுமனை ஒப்படை செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஏழு மாவட்டங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்பது தவறு. இவ்வரசாணையில் விதிக்கப்பட்ட தடையாணையைத் தளர்த்துவது குறித்து தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2002 மார்ச் 15

13—

## பிற மாநில பரிசுச் சீட்டுகள்

**வினா 1303—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பரிசுச் சீட்டு தவிர பிற மாநில பரிசுச் சீட்டுகள் எவ்வளவு விற்பனையாகி உள்ளன?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் பிற மாநில பரிசுச் சீட்டுகள் ஆண்டிற்கு சுமார் ரூ.3,800 கோடி அளவிற்கு விற்பனைக்கு வெளியிடப்படுகிறது.

(ஆ) அருணாசலப் பிரதேசம், சிக்கிம், மிஜோரம், நாகாலாந்து, கர்நாடகா மற்றும் கோவா ஆகிய பிற மாநிலப் பரிசுச் சீட்டுகளும், பூட்டான் நாட்டின் பரிசுச் சீட்டுகளும் தமிழ்நாட்டில் விற்பனையாகின்றன. பிற மாநில பரிசுச் சீட்டில் சுமார் 35 குலுக்கல்கள் அனைத்து வார நாட்களிலும் நடத்தப்படுகின்றன. தற்போது நாள்தோறும் சுமார் 750 வரிசைகளில் பிற மாநிலப் பரிசுச் சீட்டுகள் தமிழ்நாட்டில் விற்பனையாகின்றன.

### தமிழ்நாட்டில் விற்பனையாகும் பிற மாநிலப் பரிசுச் சீட்டுகள் பற்றிய விவரம்

தமிழ்நாட்டில் விற்பனையாகும் பூட்டான் அரசு மற்றும் பிற மாநிலப் பரிசுச் சீட்டுகளின் உத்தேச விவரம் (யோகலட்சுமி நாளிதழின் அப்பாலையியின் பரிசுச் சீட்டு இயக்குநர் தந்த விவரத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது.)

2002 மார்ச் 15]

| வ. எண் | கிழமை | வரிசைகள் | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 1. | திங்கள் | 761 | 10.67 |
| 2. | செவ்வாய் | 755 | 11.15 |
| 3. | புதன் | 749 | 10.55 |
| 4. | வியாழன் | 757 | 10.27 |
| 5. | வெள்ளி | 734 | 10.40 |
| 6. | சனி | 749 | 10.[illegible] |
| 7. | ஞாயிறு | 749 | 10.55 |
| | மொத்தம் | **5254** | **74.14** |

ஒருவாரத்திற்கு வெளியிடப்படும் பிற மாநிலப் பரிசுச் சீட்டுகளின் மதிப்பு ரூ.74.14 கோடி

ஒரு ஆண்டுக்கு வெளியிடப்படும் பிற மாநிலப் பரிசுச் சீட்டுகளின் மதிப்பு: ரூ.3,855.28 கோடி (ரூ.74.14 கோடி x 52 வாரங்கள்)

### தமிழ்நாட்டில் விற்பனையாகும் பிற மாநிலப் பரிசுச் சீட்டுகளின் மாநில வாரியான விவரம்.

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | கிழமை | பூட்டான் | அருணாச்சல் | சிக்கிம் | மிசோரம் | கோவா | நாகாலாந்து | கர்நாடகம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | திங்கள் | 325 | 324 | 112 | 137 | 115 | 12 | 12 | 1067 |
| 2. | செவ்வாய் | 325 | 324 | 112 | 197 | 115 | 12 | 0 | 1115 |
| 3. | புதன் | 325 | 324 | 112 | 187 | 115 | 12 | 0 | 1055 |
| 4. | வியாழன் | 325 | 324 | 112 | 119 | 105 | 12 | 0 | 1027 |
| 5. | வெள்ளி | 325 | 294 | 112 | 152 | 115 | 12 | 0 | 1040 |
| 6. | சனி | 325 | 324 | 112 | 137 | 115 | 12 | 0 | 10[illegible] |
| 7. | ஞாயிறு | 325 | 324 | 112 | 137 | 115 | 12 | 0 | 1055 |
| | மொத்தம் | 2275 | 2238 | 784 | 1018 | 975 | 81 | 12 | 7111 |
| | வரிசைகள் | 8 | 12 | 4 | 4 | 5 | 1 | 1 | 35 |

[2002 மார்ச் 15

**14—**

## புத்தகங்கள்

**வினா 302—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா*

*(அ) 1999-2000 ஆண்டில் சேலம் மாவட்டத்திலுள்ள அரசு நூலகங்களுக்கு அரசு எவ்வளவு மதிப்புள்ள புத்தகங்கள் வழங்கி உள்ளது?*

*(ஆ) அரசின் அனைத்து நூலகங்களிலும் போதுமான பணியாளர்கள் உள்ளனரா?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

*(அ) 1999-2000 ஆண்டில் சேலம் மாவட்டத்தில் உள்ள 65 நூலகங்களுக்கு 2,844 தலைப்புகளில் தமிழ் நூல்களும் 732 தலைப்புகளில் ஆங்கில நூல்களும் ரூ.15,05,629 மதிப்பிற்கு வாங்கப்பட்டு உள்ளன.*

*(ஆ) அரசின் அனைத்து நூலகங்களிலும் போதுமான பணியாளர்கள் உள்ளனர். சில கிளை நூலகங்களில் மூன்றாம் நிலை நூலகர் பணியிடங்கள் நீதிமன்ற வழக்குகள் காரணமாக உடனடியாகப் பூர்த்தி செய்யப்படாமல் உள்ளன. இருப்பினும் நூலகங்கள் மூடப்படாமல் செயல்படுவதற்கு தற்காலிக மாற்று ஏற்பாடாக தினக்கூலி அடிப்படையிலும் செக்யூரிட்டி மூலமும் நபர்கள் நியமனம் செய்யப்பட்டு நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன.*

**15—**

## பொது நூலகங்கள்

**வினா 304—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியில் இயங்கிவரும் பொது நூலகங்கள் எத்தனை?*

*(ஆ) அதில் சொந்தக் கட்டடத்தில் இயங்கிவரும் நூலகங்கள் எத்தனை?*



2002 மார்ச் 15]

*(இ) வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் நூலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் மகுடஞ்சாவடி, கொங்கணாபுரம், எடப்பாடி, சித்தூர் மற்றும் இடங்கணசாலை, ஆகிய 5 இடங்களில் கிளை நூலகமும் நடுவனேரி என்னுமிடத்தில் ஒரு பகுதிநேர நூலகமும் செயல்படுகின்றன.*

*(ஆ) மகுடஞ்சாவடி, எடப்பாடி, சித்தூர் மற்றும் இடங்கண சாலை ஆகிய ஊர்களில் இயங்கிவரும் கிளை நூலகங்கள் சொந்தக் கட்டடத்தில் செயல்படுகின்றன.*

*(இ) வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் கொங்கணாபுரம் கிளை நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட காலிமனை இன்னும் பெறப்படவில்லை. நடுவனேரி பகுதிநேர நூலகம் இலவசக் கட்டடத்தில் இயங்கிவருகிறது. பகுதிநேர நூலகங்களுக்குத் தற்போது சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**16—**

## ஆய்வுக் குழு

**வினா 309—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்திலுள்ள மெட்ரிகுலேஷன் பள்ளிகளை ஆய்வு செய்ய ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மாவட்டக் கல்வி அலுவலர் (ஆய்வு) நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், இந்தக் கல்வி ஆண்டு முதல் செயல்படுத்தப்படுமா?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கென தனி இயக்குநரகம் ஒன்றினை ஏற்படுத்தி கூடுதல் மெட்ரிகுலேஷன் பள்ளி ஆய்வாளர்களையும் நியமிக்கலாமா என்ற கருத்துரு ஆராயப்பட்டு வருகிறது.*

[2002 மார்ச் 15

**17—**

## இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்

**வினா 320—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் எத்தனை உள்ளன?

(ஆ) அதில் அரசு மற்றும் தனியார் பள்ளிகள் எத்தனை?

(இ) அப்பள்ளிகளை மேலும் அதிகப்படுத்த அரசிடம் கருத்துரு உள்ளதா?

விடை-

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) 83

(ஆ) அரசு நிறுவனங்கள் - 38

தனியார் நிறுவனங்கள் - 45

(இ) இல்லை.

**18—**

## கட்டடம்

**வினா 393—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மூலம் எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கும், பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கும் நான்கு வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் குறித்து அரசு தெரிவிக்குமா?



2002 மார்ச் 15]

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மூலம் சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கும், பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கும் நான்கு வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டுவதற்கு தற்போது நிதிநிலை சீராக இல்லாததால், இயலாத நிலை உள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**19—**

## ஒற்றைச் சாளர முறை

**வினா 1103—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:

ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையின்போது முறைகேடுகள் நடக்காதவாறு ஒற்றைச் சாளர முறையில் (Single Window System) அதிக மதிப்பெண்களைப் பெற்ற மாணவர்களை தகுதி அடிப்படையில் தேர்வு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை-

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

தமிழ்நாட்டில் உள்ள மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்கள், அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள், அரசு உதவி பெறும் அங்கீகாரம் பெற்ற சிறுபான்மையினரல்லாத தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றில் உள்ள சேர்க்கை இடங்களையும், அரசு உதவி பெறும் சிறுபான்மை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் சிறுபான்மையினரல்லாத மாணவர்களுக்கான 50% சேர்க்கை இடங்களையும் +2 மதிப்பெண்கள் தகுதி அடிப்படையில் இனவாரி இட ஒதுக்கீட்டு பட்டியலின்படி 2001-2002 கல்வியாண்டு முதல் ஒற்றைச் சாளர முறையில் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர், மாணவர்களைத் தேர்வு செய்து நிரப்புவதற்கு அனுமதி வழங்கி 07-08-2001-ல் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

20—

## காலிப் பணியிடங்களை நிரப்புதல்

**வினா 1237—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடை பகர்வாரா:*

*தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பெரியூர் அரசு மேல்நிலைப் பள்ளியில், காலியாக உள்ள ஆசிரியர் மற்றும் உதவியாளர் பணியிடங்களை நிரப்ப அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?*

*விடை —*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

*2001-2002ஆம் ஆண்டில் வழங்கப்பட இருக்கும் பதவி உயர்வின் மூலமும், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தெரிவு செய்யப்படும் நபர்களைக் கொண்டும் மேற்கண்ட பள்ளியில் காலியாக உள்ள பணியிடங்கள் பூர்த்தி செய்யப்படும்.*

21—

## ஆசிரியர் பணியிடங்கள் நிரப்புதல்

**வினா 1239—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடை பகர்வாரா:*

*தருமபுரி மாவட்டம், பென்னாகரம் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தற்போது காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்பச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*விடை —*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

*2001-2002ஆம் ஆண்டில் வழங்கப்பட இருக்கும் பதவி உயர்வின் மூலமும், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தெரிவு செய்யப்படும் நபர்களைக் கொண்டும் மேற்கண்ட பள்ளியில் காலியாக உள்ள பணியிடங்கள் பூர்த்தி செய்யப்படும்.*





22—

## ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதல்

**வினா 1241—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடை பகர்வாரா:*

*தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களைப் பூர்த்தி செய்ய ஆவன செய்யுமா?*

*விடை —*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

*2001-2002ஆம் ஆண்டில் வழங்கப்பட இருக்கும் பதவி உயர்வின் மூலமும், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தெரிவு செய்யப்படும் நபர்களைக் கொண்டும் மேற்கண்ட பள்ளியில் காலியாக உள்ள பணியிடங்கள் பூர்த்தி செய்யப்படும்.*

23—

## கல்லூரிகள்

**வினா 1317—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை பகர்வாரா:*

*(அ) 2000-2001 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் தொடங்கப்பட்ட கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் எத்தனை?*

*(ஆ) அதில் தனியார் கல்லூரிகள் எத்தனை?*

*(இ) இவற்றில் பயிலும் மாணவர்கள் எத்தனை பேர்.*

*விடை —*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

*(அ) 2000-2001ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் ஒரு சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரி மட்டும் தொடங்கப்பட்டுள்ளது.*

*(ஆ) அக் கல்லூரி சேலம், ஜெயராம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி என்னும் பெயர் கொண்ட தனியார் சுயநிதிக் கல்லூரி ஆகும்.*

[2002 மார்ச் 15

(இ) அக் கல்லூரியில் மொத்தம் 7 மாணவ மாணவியர்கள் மாத்திரமே பயிலுகின்றனர். அதில் பி.காம் பாடப் பிரிவில் 5 மாணவியர்களும், பி.எஸ்.ஸி., கணிப்பொறி அறிவியல் பாடப் பிரிவில் 1 மாணவரும் 1 மாணவியும் பயிலுகின்றனர்.

**24—**

## சுற்றுச் சுவர்

**வினா 2862—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதிக்குட்பட்ட திருக்களப்பூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதிக்குட்பட்ட திருக்களப்பூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் அமைப்பது சார்பாக அரசின் நிதி ஒதுக்கீடு ஏதுமில்லை. எனினும் அரசாணை எண் 581, கல்வித் துறை, நாள் 14-7-1994-ன்படி பசுமைவேலி அமைப்பது சார்பாக வனத் துறை அலுவலருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதன்மை கல்வி அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**25—**

## பள்ளி சுற்றுச் சுவர்

**வினா 2864—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஒன்றியம், மேலனிக்குழி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2002 மார்ச் 15]

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஒன்றியம், மேலனிக்குழி அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் அமைப்பது சார்பாக அரசின் நிதி ஒதுக்கீடு ஏதுமில்லை. எனினும், அரசாணை எண் 581, கல்வித் துறை, நாள் 14-7-1994-ன்படி பசுமைவேலி அமைப்பது சார்பாக வனத் துறை அலுவலருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதன்மை கல்வி அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**26—**

## சுற்றுச் சுவர் அமைத்தல்

**வினா 2872—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, ஆண்டிமடம் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, ஆண்டிமடம் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் அமைப்பது சார்பாக அரசின் நிதி ஒதுக்கீடு ஏதுமில்லை. எனினும் அரசாணை எண் 581, கல்வித் துறை, நாள் 14-7-1994-ன் படி பசுமைவேலி அமைப்பது சார்பாக வனத் துறை அலுவலருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதன்மை கல்வி அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

27—

## இலங்கை அகதிகள் முகாம்

**வினா 4873—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இலங்கை அகதிகள் முகாம் தமிழகத்தில் எத்தனை இடங்களில் உள்ளன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

இலங்கை அகதிகள் முகாம்கள் தமிழகத்தில் 23 மாவட்டங்களில் மொத்தம் 115 முகாம்கள் உள்ளன. அவற்றில் 2001 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் நிலவரப்படி 64,248 அகதிகள் வசித்து வருகின்றனர்.

28—

## வேலைவாய்ப்பில் முன்னுரிமை

**வினா 7423—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தமிழ் வழியில் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை நாட்களில் நடைமுறைப்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) அரசின் ஆய்வில் உள்ளது.

(ஆ) உறுதியிட்டுக் கூற இயலாது.





29—

## பள்ளித் தரம் உயர்த்துதல்

**வினா 7554—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், சட்டியம்பட்டியை அடுத்துள்ள பொன்னேரியிலுள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002ஆம் கல்வியாண்டில் 100 அரசு ஊராட்சி ஒன்றிய/நகராட்சி/மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தியும், அரசு மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து மகளிரைப் பிரித்து மகளிர் உயர்நிலைப் பள்ளிகளாகத் தொடங்கவும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேற்கண்ட பள்ளி குறித்து வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டு, உயர்மட்டக் குழுவால் பரிந்துரைக்கப்படுமானால் அரசின் நிதிநிலைமைக்குட்பட்டு உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

30—

## மின் இணைப்பு

**வினா 295—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் விவசாய மின் இணைப்பு கோரி வந்த மனுக்கள் எத்தனை?

(ஆ) அதில் இணைப்புகள் வழங்கப்பட்டவை எத்தனை?

(இ) நிலுவையிலுள்ள மனுக்களுக்கு எப்போது இணைப்பு வழங்கப்படும்?

[2002 மார்ச் 15

விடை —

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மின்துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் விவசாய மின் இணைப்பு கோரி வந்த மனுக்கள் 24,981.

(ஆ) இதில் 1,383 எண்ணிக்கைகளுக்கு மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

(இ) நிலுவையிலுள்ள 23,598 எண்ணிக்கைகளுக்கு, வருடாந்திர குறியீட்டிற்குட்பட்டு விண்ணப்பங்களின் பதிவு மூப்பு அடிப்படையில் மின் இணைப்புகள் வழங்கப்படும்.

**31—**

## விவசாய மின் இணைப்பு

**வினா 296—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் வட்டம், எடப்பாடி நகராட்சி மற்றும் கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி ஆகிய ஒன்றியங்களில் விவசாய மின் இணைப்பு கோரி வந்த மனுக்கள் எத்தனை?

(ஆ) அதில் இணைப்பு வழங்கப்பட்டவை எத்தனை?

(இ) நிலுவையிலுள்ள மனுக்களுக்கு எப்போது இணைப்பு வழங்கப்படும்?

விடை —

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மின்துறை அமைச்சர்:**

| | எடப்பாடி நகராட்சி | எடப்பாடி ஒன்றியம் | கொங்கணாபுரம் ஒன்றியம் | மகுடஞ்சாவடி ஒன்றியம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| அ) மின் இணைப்பு கோரி வந்த மனுக்கள் | 58 | 2,712 | 637 | 961 | 4,368 |
| ஆ) மின் இணைப்பு வழங்கப்பட்டவை | 6 | 261 | 52 | 49 | 368 |
| நிலுவையிலுள்ளவை | 52 | 2,451 | 585 | 912 | 4,000 |



2002 மார்ச் 15]

(இ) நிலுவையிலுள்ள மனுக்களுக்கு, வருடாந்திர குறியீட்டிற்கேற்ப வரிசைக் கிரமப்படி மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**32—**

## மின் அளவு

**வினா 500—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் அனல் மின் திட்டத்தில் தற்பொழுது எடுக்கப்படும் மின் அளவு எவ்வளவு?

(ஆ) அதை உயர்த்த அரசிடம் கருத்துரு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மின்துறை அமைச்சர்:**

(அ) மேட்டூர் அனல் மின் நிலையத்தின் மொத்த நிறுவுத் திறன் 840 மெகாவாட் ஆகும். இந்நிலையத்தில் 210 மெகாவாட் திறன் கொண்ட நான்கு (4) இயந்திரங்கள் உள்ளன. மொத்த உற்பத்தித் திறனான 840 மெகாவாட் அனைத்தையும் தமிழ்நாடு மின்சார வாரியம் உபயோகித்துக் கொள்கின்றது.

(ஆ) தற்சமயம் மேட்டூர் அனல் மின் நிலையத்தின் நிறுவுத்திறன் அளவை உயர்த்த கருத்துரு இல்லை.

**33—**

## கூடுதல் நிர்வாகப் பிரிவுகள்

**வினா 1282—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:-

புதுக்கோட்டை மின் பகிர்மான வட்டத்தில் தற்போது நிர்வாகப் பிரிவுகள் பிரிவில் ஏனைய மின் பகிர்மான வட்டங்களில் நான்கு நிர்வாகப் பிரிவுகள் உள்ளது போல் நான்கு நிர்வாகப் பிரிவுகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை —

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மின் துறை அமைச்சர்:**

ஒவ்வொரு மின் பகிர்மான வட்டத்தின் பரப்பளவு, பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் நிர்வாகப் பிரிவு வழங்கப்பட்டது. ஒவ்வொரு மின் பகிர்மான வட்டத்திற்கும் நான்கு நிர்வாகப் பிரிவு வழங்கிட வேண்டும் என்ற பொதுவான விதிமுறை ஏதுமில்லை. மேலும் நிர்வாகம், கணக்கு மற்றும் பண்டகசாலை பிரிவுகளில் துரிதமாகவும், திறம்படவும் செயலாற்றிட கணினிமயமாக்குதலும் நடைபெற்று வருகிறது. புதுக்கோட்டை மின் பகிர்மான வட்டம் அளவிலும், நிர்வாகக் கட்டமைப்பிலும் மேலும் விஸ்தரிக்கப்படாமையாலும், தற்பொழுதுள்ள நெருக்கடியான நிதி நிலைமைகளைக் கருதியும், கூடுதலாக நிர்வாகப் பிரிவுகள் வழங்க இயலாது.

**34—**

## மின்சார வாரியம் சீரமைப்பு

**வினா 1296—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தை சீரமைப்பதற்குத் தேவையான ஆய்வுகள் செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து விவரங்களை அரசு தெரிவிக்குமா?

விடை —

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மின் துறை அமைச்சர்:**

(அ) ஆம். தமிழ்நாடு மின்சார வாரியத்தை சீரமைப்பதற்கான தேவைபற்றி ஆயவு செய்வதற்காக Earnest and Young என்ற ஒரு ஆலோசனை நிறுவனத்தை தமிழ்நாடு மின் வாரியம் அமர்த்தியுள்ளது.

(ஆ) ஆலோசனை வழங்கும் நிறுவனம் தனது முதற்கட்ட மற்றும் இடைக்கால அறிக்கையை சமர்ப்பித்து நான்கு வழிமுறைகளை தெரிவித்துள்ளது வாரியம் 'அ' (Optional) என்ற வழிமுறையை தேர்வு செய்துள்ளது. இதன்படி மின் உற்பத்தி இலாப நோக்கு மையம், மின் தொடர் இலாப நோக்கு மையம் மற்றும் மின் இலாப நோக்கு மையம்



போன்ற தனித் தனி அமைப்புகள் தமிழக மின் வாரிய அமைப்பின் அங்கங்களாக, நம்பகத் தன்மை, உற்பத்திப் பெருக்கம், பயனீட்டாளர் திருப்தி ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டு அமைக்கப்பட்ட அரசுக்கு பரிந்துரைத்துள்ளது. இப் பரிந்துரை தொடர்பான சில விளக்கங்களை தமிழ்நாடு மின் வாரியத்திடம் அரசு கோரியுள்ளது. அவை வரப்பெற்றதும், அரசு பரிசீலிக்கும்.

**35—**

## மின்சார அளவு

**வினா 1306—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி 110 கிலோ வாட் துணை மின் நிலையத்தில் சராசரி தினசரி விநியோகிக்கும் மின்சார அளவு எவ்வளவு?

(ஆ) அந்தத் துணை மின் நிலையத்தின் அதிகபட்ச ஆற்றல் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மின் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி 110 கி.வாட் துணை மின் நிலையத்தில் சராசரி தினசரி விநியோகிக்கும் மின்சார அளவு 3,32,376 யூனிட்டுகள்.

(ஆ) அந்தத் துணை மின் நிலையத்தின் அதிக பட்ச ஆற்றல் 32 மே. வா. ஆ (2 X16 மெ.வா.ஆ)

**36—**

## நிலுவைத் தொகை

**வினா 1310—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் ஆண்டு வரை எடப்பாடி நகராட்சி, மின் சார வாரியத்திற்குக் கட்ட வேண்டிய நிலுவைத் தொகை எவ்வளவு?

[2002 மார்ச் 15

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மின் துறை அமைச்சர்:**

2000-2001 ஆம் ஆண்டு வரை எடப்பாடி நகராட்சி, மின்சார வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய மின் கட்டண நிலுவைத் தொகை ஏதும் இல்லை.

**37—**

## வருமானம்

**வினா 338—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் நிதியாண்டில் இந்து சமய அறக்கட்டளை நிர்வகிக்கும் மடங்கள் மற்றும் கோயிலுக்குச் சொந்தமான கட்டடங்கள், நிலங்கள் பொது ஏலம் விட்டதில் எவ்வளவு வருமானம் வந்துள்ளது?

(ஆ) வருமானத்தை அதிகரிக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 நிதியாண்டில் இந்து சமய அறக்கட்டளை நிர்வகிக்கும் மடங்கள் மற்றும் கோயிலுக்குச் சொந்தமான கட்டடங்கள், நிலங்கள் பொது ஏலம் விட்டதில் மொத்தம் ரூ. 6,508.01 இலட்சம் வரப்பெற்றுள்ளது.

(ஆ) திருக்கோயிலுக்குச் சொந்தமான கட்டடங்கள் மற்றும் மனைகளுக்கு நியாய வாடகை நிர்ணயக் குழு மூலமாக, நியாய வாடகை நிர்ணயம் செய்து மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை வாடகை அதிகரிக்கப்பட்டு நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது. நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்களுக்கு பொது ஏலம் மூலம் முன் பசலியை விட அதிகத் தொகைக்கு ஏலம் விட திருக்கோயில்களின் நிர்வாகிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



2002 மார்ச் 15]

**38—**

## கும்பாபிஷேகம்

**வினா 339—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் மாதம் வரை எத்தனை கோயில்களில் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது?

(ஆ) அரசு செலவழித்த தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் மாதம் வரை 256 திருக்கோயில்களில் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. இவற்றில் 248 திருக்கோயில் திருப்பணி மற்றும் கும்பாபிஷேகத்திற்கு அரசு நிதி ஏதும் பயன்படுத்தப்படவில்லை. முற்றிலும் உபயதாரர்களின் நன்கொடை மூலமே நடத்தப்பட்டது. மீதமுள்ள 8 திருக்கோயில்களுக்கு மட்டுமே அரசு நிதி பயன்படுத்தப்பட்டது.

(ஆ) அரசு செலவழித்த தொகை கீழ்க்கண்டவாறு:—

| | | | |
|---|---|---|---|
| (1) | அரசு மானியம் | - | ரூ. 11,29,737.00 |
| (2) | ஆணையர் பொதுநல நிதி | - | ரூ. 9,51,000.00 |
| (3) | ஆலய மேம்பாட்டு நிதி | - | ரூ. 2,00,000.00 |
| (4) | கிராமப்புற திருக்கோயில் திருப்பணி நிதியுதவி | - | ரூ. 50,000.00 |
| | மொத்தம் | - | ரூ. 23,30,737.00 |

**39—**

## கோயில் மராமத்துப் பணி

**வினா 342—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 மார்ச் 15

(அ) 2001-ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரை ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதர் ஆலயத்தில் பிரசாதம் மூலம் கிடைக்கப்பெற்ற தொகை எவ்வளவு?

(ஆ) அக்கோயிலுக்கு மராமத்துப் பணிக்கு அரசு வருடந்தோறும் எவ்வளவு செலவு செய்கிறது?

விடை.—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதர் ஆலயத்தில் பிரசாதம் விற்பனை செய்யும் உரிமம் ஒவ்வொரு பசலியும் பொது ஏலத்தில் விடப்படுகிறது. 1410-ஆம் பசலிக்கான மேற்படி உரிமம் ரூ. 16,85,500-க்கு ஏலம் விடப்பட்டு கீழ்க்கண்டவாறு மேற்படி திருக்கோயிலால் வசூல் செய்யப்பட்டுள்ளது:—

1410 ஆம் பசலி ஏலத் தொகை ரூ. 16,85,500—

| | | | |
|---|---|---|---|
| (1) | ஏலகால டிபாசிட் தொகை | .. | ரூ. 9,95,250.00 |
| (2) | 2000 ஆம் ஆண்டு டிசம்பர் முடிய வரவு | .. | ரூ. 1,19,250.00 |
| (3) | 2001 ஜனவரி மாதத்தில் வரவு | .. | ரூ. 2,07,750.00 |
| (4) | 2001 பிப்ரவரி மாதத்தில் வரவு | .. | ரூ. 2,50,000.00 |
| (5) | 2001 மார்ச் மாதத்தில் வரவு | .. | ரூ. 1,13,250.00 |
| | ஆக கூடுதல் | .. | 16,85,500.00 |

1410ஆம் பசலி ஏலத்தொகை முழுவதும் 2001 மார்ச் முடிய வசூலாகிவிட்டதால், 2001 ஏப்ரல் மாதத்தில், வசூல் செய்ய வேண்டிய பாக்கிகள் எதுவுமில்லை.

(ஆ) வருடந்தோறும் மராமத்துப் பணிக்கு அரசு நிதி எதுவும் வழங்கப்படுவதில்லை. 1410 ஆம் பசலியில் திருக்கோயில் நிதியிலிருந்து சிறிய மற்றும் பெரிய மராமத்துப் பணிக்கு ரூ. 1,66,700 செலவு செய்யப்பட்டுள்ளது.



2002 மார்ச் 15]

**40—**

## ஆலய விடுதிக்கு நவீன வசதி

**வினா 347—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை அருணாசலேசுவரர் திருக்கோயில் ஆலயத்தில், தங்கும் விடுதிகள் எத்தனை உள்ளன?

(ஆ) அவற்றை அதிகப்படுத்தி, நவீன வசதி செய்யவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) இத்திருக்கோயிலில் யாத்ரீகர்கள் தங்குவதற்கு வசதியான. திருக்கோயிலின் வெளிப்புறம் கிழக்கு வெளிமதிலை அடுத்து உண்ணாமுலையம்மன் வழிபடுவோர் விடுதி ஒன்று வகையில் அருள்மிகு உள்ளது. மேற்படி விடுதியில் இரட்டை அறைகள் ஆறும், ஒற்றை அறைகள் பதினொன்றும் உள்ளன. மற்றும் திருக்கோயில் உட்புறம் அர்ச்சகர் இல்லத்தில் இரட்டை அறைகள் எட்டு உள்ளன. இவை சேவார்த்திகள் நலன் கருதி குறைந்த வாடகையில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் உபயதாரர் மூலம் திருக்கோயிலின் வெளிப்புறம் (வடக்கு மதில் சுவரை ஒட்டி) நான்கு குடில்கள் கட்டப்பட்டுள்ளன. திருக்கோயில் நிர்வாகத்தின் மூலம் உள்பிரகாரத்தில் (5ஆம் பிரகாரம்) 2 குடில்கள் கட்டப்பட்டுள்ளன.

(ஆ) சேவார்த்திகள் பயன்பெறும் வகையில் டார்மிட்டரி அறை கட்டும் பணிக்கு 1999-2000 வருடத்தில் ரூ. 5.25 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகின்றது. இடம் தேர்வு செய்து, உரிய அனுமதிகள் பெற்று பணி தொடங்கப்படும்.

[2002 மார்ச் 15

**41—**

## திருத்தணி முருகன் கோயில் வருவாய்

**வினா 348—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் நிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி முருகன் கோயிலில் 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரை உண்டியலில் வசூலான தொகை எவ்வளவு?

(ஆ) அர்ச்சனைச் சீட்டு மூலம் வசூலான தொகை எவ்வளவு?

(இ) சிறப்புக் கட்டணம் மூலம் வசூலான தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) திருத்தணி அருள்மிரு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரை உண்டியலில் வசூலான தொகை ரூ. 47,11,426.55 ஆகும்.

(ஆ) இத்திருக்கோயிலில் 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரை அர்ச்சனைச் சீட்டு மூலம் வசூலான தொகை ரூ. 11,88,155.00 ஆகும்.

(இ) 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரை சிறப்புக் கட்டணம் மூலம் வசூலான தொகை ரூ. 10,29,897.00 ஆகும்.

**42—**

## கோயில் வருமானம்

**வினா 356—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

பழனி முருகன் கோயில் பிரசாதம் விற்றதில் உண்டியல் மற்றும் சிறப்பு வழிபாட்டின் மூலம் 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரை எவ்வளவு வருமானம் கிடைத்துள்ளது?



2002 மார்ச் 15]

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில் பிரசாதக் கடை 4-10-2000 முதல் 3-10-2001 முடிய ஓர் ஆண்டிற்கு ரூ. 48,75,000-க்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் முடிய பிரசாதக் கடை குத்தகையாக ரூ. 19,00,000 (ரூபாய் பத்தொன்பது இலட்சம் மட்டும்) வசூல் செய்யப்பட்டுள்ளது. 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் மாதம் முடிய பஞ்சாமிர்தம் ரூ. 1,82,11,000/-க்கு (ரூபாய் ஒரு கோடியே எண்பத்து இரண்டு இலட்சத்து பதினோராயிரம் மட்டும்) விற்பனை செய்யப்பட்டுள்ளது. 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் முடிய உண்டியல் மற்றும் சிறப்பு வழிபாட்டின் மூலம் கிடைத்த வருமானம் கீழ்வருமாறு:—

| | | |
|---|---|---|
| உண்டியல் வருமானம் | .. | ரூ. 2,80,16,430.85 |
| சிறப்புக் கட்டண வசூல் | .. | ரூ. 1,27,79,750.00 |

**43—**

## ஆலயங்கள்

**வினா 1073—திரு. சி.ஞானசேகரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டில் உள்ள ஆலயங்கள் எத்தனை?

(ஆ) அதில் வரும் வருவாயைக் கொண்டு கவனிப்பு மற்றும் பராமரிப்பு இன்றி உள்ள ஆலயங்களைப் பராமரிக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—  [2002 மார்ச் 15

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டில் மொத்தம் 36,352 திருக்கோயில்கள் உள்ளன.

(ஆ) உபரிநிதி மிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.5 கோடி பெற்று ஆணையர் பதவிப் பெயரில் வைப்பு நிதி ஏற்படுத்தி அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து, பாடல் பெற்ற, மங்களாசாசனம் பெற்ற பழமை வாய்ந்த நலிந்த திருக்கோயில்களின் திருப்பணிக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. மேலும் இதே போன்ற வைப்பு நிதி ஏற்படுத்தி அதன் வட்டித் தொகையிலிருந்து வருமானம் இல்லாத திருக்கோயில்களின் சிப்பந்திகள் பணிக்காலத்தில் இறக்க நேரிட்டால் அவர்களின் வாரிசுகளுக்கு 'குடும்ப நல நிதி' என்ற நிதியுதவி வழங்கப்படுகிறது. இதேபோல ரூ.1 கோடி வைப்பு நிதி ஏற்படுத்தி வருமானம் இல்லாத திருக்கோயில்களில் பணிபுரியும் சிப்பந்திகளின் சம்பள பாக்கிகள் வழங்கப்பட்டு வருகிறது. இதேபோல் பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் உபரி நிதியிலிருந்து ரூ.2 கோடி தனி வைப்பு நிதி ஏற்படுத்தி அதன் வட்டித் தொகையிலிருந்து கிராமப்புறங்களில் உள்ள சிறிய திருக்கோயில்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இதுபோன்று உபரி நிதி மிக்க திருக்கோயில்களிலிருந்து ஒரு வைப்பு நிதி ஏற்படுத்தி இத்திட்டத்தின்கீழ் ஒரு கால பூஜைக்குக் கூட வழியில்லாத திருக்கோயில்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. மேலும் வருவாய் இல்லாத பழமை வாய்ந்த திருக்கோயில்களிலும் நாதசுர மங்கள இசை முழங்க வேண்டும் என்ற எண்ணத்தில், இதற்காக ஒரு வைப்பு நிதி ஏற்படுத்தி இதில் வரும் வட்டித் தொகை மூலம் இம்மாதிரி திருக்கோயில்களில் பணிபுரியும் நாதசுர இசைக் கலைஞருக்கு சம்பளம் வழங்கப்படுகிறது.

**44—**

## ஆலய வருமானம்

**வினா 1161—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வருவாய் தரும் ஆலயங்களின் எண்ணிக்கையும், மொத்த வருவாய் விவரமும் என்ன?



2002 மார்ச் 15]

(ஆ) அவை எவ்விதத்தில் மக்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் மொத்தம் 36,352 திருக்கோயில்கள் உள்ளன. இவற்றின் மொத்த வருவாய் பசலி ஆண்டு 1410-ல் (1-7-2000 முதல் 30-6-2001 முடிய) ரூ.125.85 கோடியாகும்.

(ஆ) மேற்படி திருக்கோயில்களின் வருமானங்கள் ஒருங்கிணைந்த நிதித் தொகுப்பில் (Common Pool) பெறக்கூடியதல்ல. ஒவ்வொரு திருக்கோயில் வருமானமும் அந்தந்த திருக்கோயில் நிதியாக, அந்தந்த திருக்கோயில்களின் நிர்வாகத்தினரால் நிர்வகிக்கப்படும். திருக்கோயில்களுக்கு இவ்வாறு பெறப்படும் வருமானத்தை அந்தந்த திருக்கோயிலின் பூஜை, விழாச் செலவுகள், கோயில் பணியாளர்கள் சம்பளம், படி முதலான செலவுகள், சொத்துக்களின் பராமரிப்புச் செலவுகள் போன்ற நிர்வாகச் செலவுகளுக்குப் பயன்படுத்துவது குறித்து இந்து சமய அறநிலையத் துறை சட்டம் 22/1959-ன் சட்டப்பிரிவு 86-ன் படியும், மேற்படி செலவுகள் போக உபரி நிதி இருப்பின், சம்பந்தப்பட்ட திருக்கோயிலுக்கு வரும் சேவார்த்திகளுக்கு அடிப்படை வசதிகள் செய்யவும், அர்ச்சகர், அத்யாபகர், வேதபாராயணர், ஓதுவார் பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்கும் பயன்படுத்துவது குறித்து சட்டப்பிரிவு 35-ன்படியும் பயன்படுத்தப்படுகிறது. மேற்படி செலவுகள் போக, உபரி நிதி இருப்பின் அவை முதலீடு செய்யப்படுகிறது. இம்மாதிரி உபரி நிதிகளை சட்டப்பிரிவு 36-ன்கீழ் ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி சமயம் சார்ந்த மற்றும் அறம்சார்ந்த கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள், ஆதரவற்றோர் இல்லங்கள் போன்ற பொதுமக்களுக்குப் பயன்படக்கூடிய திட்டங்களுக்காக, தேர்வுக்கேற்றவாறு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**45—**

## அறங்காவலர்கள்

**வினா 1346—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2002 மார்ச் 15

கோவில்களுக்கு அறங்காவலர்களை நியமிக்கும்போது அவர்களுக்குத் தேவையான தகுதிகள் என்று எவை எடுத்துக்கொள்ளப்படுகின்றன?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

இந்து சமய அறநிலைக்கொடைகள் சட்டம், 1959, சட்டப்பிரிவு 26(1)ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்க்காணும் தகவின்மைகள் எவற்றையேனும் உடையவரா என்பது பரிசீலனை செய்யப்பட்டு அவ்வாறு தகவின்மை அல்லாதவர் மட்டுமே திருக்கோயிலுக்கு அறங்காவலர்களாக நியமனம் செய்யப்படுகின்றனர்:-

(அ) இந்து மதத்தை தழுவுபவராக இல்லாது இருத்தல்;

(ஆ) பரம்பரை அறங்காவலர்கள் தவிர மற்றவர்கள் இருபத்தைந்து வயதுக்குக் குறைந்தும், எழுபது வயதுக்கு மேற்பட்டும் இருத்தல்;

(இ) கடன் அடைக்க திறன் அற்றவர் (இன்சால்வென்சி) என்று அறிவிக்கப்பட்டிருத்தல்;

(ஈ) அறிவுத்தெளிவு இழந்தவராக அல்லது ஓர் அறங்காவலரின் கடமைகளை நிறைவேற்றவும், கடமைகளைச் செய்யவும் தகுதியற்ற மனநிலை பாதிப்பு அல்லது உறுப்புக் குறைவு உடையவராக அல்லது தொழுநோய் அல்லது அருவருக்கத்தக்க ஏதேனும் ஒரு நோயால் பாதிக்கப்பட்டுள்ளவராக இருத்தல்;

(உ) அறநிலையத்தில் ஏதேனும் ஒரு சொத்தில் செலாவணியில் இருக்கின்ற குத்தகை அல்லது செய்யப்பட்ட உடன்படிக்கை அல்லது மேற்படி நிறுவனத்திற்காகச் செய்யப்பட்ட ஏதேனும் ஒரு பணியில் உரிமை உடையவராக இருத்தலும் அல்லது மேற்படி அறநிலையத்திற்கு அல்லது கட்டளைக்குச் சேர வேண்டிய ஏதேனும் ஒருவகை நிலுவையைச் செலுத்தாமல் வைத்திருத்தலும், கோயிலின் நிலங்களைச் சட்டத்திற்கு எதிரான முறையில் அனுபவித்தலும்;

(ஊ) குறிப்பிட்ட அறநிலையத்தின் சார்பாக அல்லது அறநிலையத்திற்கு எதிராக ஊதியம் பெறும் வழக்கறிஞராக அமர்த்தப்பட்டிருத்தல்;

(எ) ஒழுக்கக்கேடு பற்றிய ஒரு குற்றத்திற்காக ஒரு குற்றவியல் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பெற்று அத்தகைய தண்டனை மாற்றப்படாமல் அல்லது மேற்படி குற்றம் மன்னிக்கப்படாமல் இருத்தல்;



2002 மார்ச் 15]

(ஏ) அறநிலையத்தின் நலன்களுக்கு மாறாகச் செயலாற்றியிருத்தல் அல்லது ஏதேனும் ஒரு அறநிலையத்தில் அறங்காவலராக நியமிக்கப்படுவதற்கு அல்லது அறங்காவலராவதற்குத் தகுதி இல்லாதிருத்தல்;

(ஐ) தமக்குள்ள சொத்துக்களின் விவரத்திற்குக் கிராம அதிகாரிகளின் சான்று பெற்று அனுப்பாமல் இருத்தல்;

(ஒ) அரசு ஊழியராக இருத்தல்;

மேலும் சட்டப்பிரிவு 47(1)(சி)-ன்படி திருக்கோயிலுக்கு நியமனம் செய்யப்படும் அறங்காவலர்களில் ஒருவர் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் வகுப்பிலிருந்து சட்டப்பிரிவு 26(1)-ன்படி தகவின்மை இல்லாதவர் என அறிந்து நியமனம் செய்யப்படுகிறார்.

**46—**

## கோயில் பசுக்களை பராமரித்தல்

**வினா 2222—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முதிர்ச்சி அடைந்த நிலையிலுள்ள கோயில் பசுக்களை மடங்கள், மடாலயங்கள் போன்ற கிராம பொதுச் சொத்துக்களை அனுபவிப்பவர்களிடம் ஒப்படைத்து பராமரிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

திருக்கோயிலுக்குச் சொந்தமான கறவை நின்றுபோன (முதிர்ச்சி அடைந்த) பசுக்களை மாவட்டந்தோறும் ஏற்படுத்தப்பட்டுள்ள பசு பாதுகாப்பகங்களுக்கு தானமாக வழங்க அரசு கடிதம் (நிலை) எண் 58, தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, நாள் 12-3-2001-ல் அனுமதி வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

**47—**

## குழு அமைத்தல்

**வினா 2230—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள அனைத்து ஆலயங்களையும், தூய்மையுடன் பராமரிக்க ஆன்மீக பக்தர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்கள் கொண்ட குழு அமைத்து பராமரிப்பு செய்யும் கருத்துரு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி.இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

அனைத்து ஆலயங்களையும் தூய்மையுடன் பராமரிக்க திருக்கோயில் நிர்வாகம் மூலம் பணியாளர்களைக் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே தமிழகத்திலுள்ள அனைத்து ஆலயங்களையும் தூய்மையுடன் பராமரிக்க ஆன்மீக பக்தர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்கள் கொண்ட குழு அமைத்து பராமரிப்பு செய்யும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**48—**

## திருக்கோயில் திருப்பணி

**வினா 2685—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பழவூர் கிராமத்திலுள்ள நாறும்புநாதர் திருக்கோயில் பழுதடைந்துள்ளதை சரிசெய்ய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?





விடை—

**மாண்புமிகு திரு. பி.சி.இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பழவூர் கிராமத்திலுள்ள நாறும்புநாதர் திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின்கீழ் உள்ள பட்டியலைச் சேராத திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு பசலி 1408-க்கு ரூ.17,743 உதவித்தொகை நிர்ணய வருமானமாக உள்ளது. சட்டப் பிரிவு 45(1)-ன் கீழ் செயல் அலுவலர் நியமிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்கு 12 பேர் கொண்ட திருப்பணிக் குழு அமைக்கப்பட்டது. தற்போது இத்திருக்கோயிலுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள ரூ.4.23 இலட்சம் செலவில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பொதுமக்களின் நன்கொடை மூலமாகவே செய்யப்படவுள்ளது. பிற திருக்கோயில்களில் திருப்பணிக்காக கடனாகப் பெற்றால் இத்திருக்கோயிலினால் அதைத் திருப்பிச் செலுத்தும் சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும் தற்போது உள்ள திருப்பணிக் குழு திருப்பணிகள் மேற்கொள்வதில் போதிய ஆர்வம் காட்டாததால் திருப்பணிக் குழுவை கலைக்க 29-8-2001-ல் உத்தரவிடப்பட்டுள்ளது. இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக்கு ஆண்டொன்றுக்கு ரூ.75.00 இலட்சம் மட்டுமே திருக்கோயில் திருப்பணிக்கு அரசு மானியமாக பெறப்படுகிறது. இத்தொகையினை முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்கள், பாடல் பெற்ற ஸ்தலங்கள் என்று முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இருப்பினும் இத்திருக்கோயிலுக்கு திருப்பணியில் உண்மையில் ஆர்வம் உள்ளவர்களைத் தெரிவு செய்து, திருப்பணிக் குழு உறுப்பினர்களாக நியமனம் செய்து, புதிய விலை நிலவரப்படி மதிப்பீடு தயார் செய்து, பொதுமக்கள் நன்கொடை மூலம் திருப்பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**49—**

## தொலைபேசி இணைப்பு

**வினா 150—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு வட்ட மருத்துவமனைக்கு ஒரு தொலைபேசி இணைப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை —

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*சேலம் மாவட்டம், எடப்பாடி வட்ட மருத்துவமனைக்கு ஒரு தொலைபேசி இணைப்பு வழங்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**50—**

## அறுவை சிகிச்சை அரங்கம்

**வினா 2395—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) எடப்பாடி தொகுதி, சித்தூர் கிராம ஆரம்ப சுகாதார நிலையத்தில் அறுவை சிகிச்சைக்கான அரங்கம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை —

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சித்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் அறுவை அரங்கு கட்டடம் உள்ளது. இது பஸ் போக்குவரத்து சாலையில் மிக அருகில் உள்ளதால் தூசிகள் படிவதாலும் கட்டடம் பழுதடைந்துள்ளதாலும் செயல்படவில்லை. 2001-2002 ஆம் ஆண்டு பராமரிப்பு நிதியிலிருந்து அறுவை அரங்கு கட்டடப் பழுதுகள் நிவர்த்தி செய்து, மின்சார இணைப்பு வசதி மற்றும் தண்ணீர் வசதிகள் ஏற்படுத்தி அறுவை அரங்கம் செயல்பட உரிய நடவடிக்கை மேற்கொள்ள கடலூர் சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். அறுவை அரங்கு கட்டடப் பழுதுகள் சரி செய்தவுடன் அறுவை சிகிச்சை நடைபெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*



**51—**

## மருத்துவமனை உபகரணங்கள்

**வினா 3271—திரு.கா.பூ. முனுசாமி:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மாவட்ட மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்ட பல்வேறு உபகரணங்கள் செயல்படாத நிலையில் உள்ள குறையைப் போக்கிட அரசின் நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மாவட்ட மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்ட பல்வேறு உபகரணங்கள் செயல்படாத நிலையைப் போக்கிட, அரசு ஏற்கெனவே நடவடிக்கை எடுத்து, எல்காட், ஈ.எம்.ஈ. ஆகிய அரசு நிறுவனங்கள் ஆண்டு பராமரிப்பு மூலம், பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் தகுந்த தொழில்நுட்ப நிபுணர்களைக் கொண்டு சாதனங்களை இயக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**52—**

## விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

**வினா 3273—திரு. கா.பூ. முனுசாமி:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்திட அரசின் நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம், தமிழகத்தில் எய்ட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்திட முனைப்புடன் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறது:

[2002 மார்ச் 15

## பொது ஜன தொடர்பு:

1. தொலைக்காட்சியில் எய்ட்ஸ் பற்றிய விவரங்கள், திரைப்படம் மற்றும் ஒலியும் ஒளியும் பாடல்கள் இடையே 30 வினாடிகள் பிரசாரப் படமாகவும், இரவு 8-30 மணி செய்திக்கு முன் 10 வினாடிகள் எய்ட்ஸ் விளம்பரம் திரையும் (டைம் செக்) ஒளிபரப்பப்பட்டு வருகிறது.

2. வானொலியின் வர்த்தக விளம்பர நிகழ்ச்சி சினிமா பாடல்கள் இடையேயும் மாலை மாநிலச் செய்திகளுக்கு இடையேயும் 30 வினாடிகள் எய்ட்ஸ் பற்றிய விளம்பரப் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.

3. **பத்திரிகை விளம்பரம்:** தமிழ் பத்திரிகைகளிலும், வாராந்திர புத்தகங்களிலும் எய்ட்ஸ் பற்றிய விளம்பரம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றது.

4. **சி.சி.டி.பி. தொலைக்காட்சி பெட்டி மூலமாக விளம்பரம்:** இரயில் நிலையங்களிலும், பேருந்து நிலையங்களிலும் உள்ள தொலைக்காட்சி பெட்டிகளின் மூலமாகவும் எய்ட்ஸ் பற்றிய விளம்பரம் செய்யப்பட்டு வருகின்றது.

5. **சினிமா சிலைடு:** தமிழகம் முழுவதிலும் உள்ள திரையரங்குகளில் சினிமா சிலைடு மூலமாக விளம்பரம் செய்யப்பட்டு வருகின்றது.

6. **சுவர் விளம்பரம்:** முக்கியமான இடங்களில் சுவர் விளம்பரங்கள் செய்யப்பட்டுள்ளன.

7. **நாடகம், கலை நிகழ்ச்சிகள்:** நாடகம், கலை நிகழ்ச்சிகள் மூலமாக தமிழகமெங்கும் எய்ட்ஸ் பிரசார நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

8. **விழிப்புணர்வுக் கூட்டங்கள்:** தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாக பல்வேறு விழிப்புணர்வுக் கூட்டங்கள் பலதரப்பட்ட மக்களுக்கும், குழுக்களுக்கும் நடத்தப்பட்டு வருகின்றன.

9. **ஆட்டோ விளம்பரம் மற்றும் பேருந்து விளம்பரம்:** ஆட்டோக்களிலும், பேருந்துகளிலும் தகர பலகைகள் மூலமாக (பேனர்ஸ்) எய்ட்ஸ் பற்றிய விளம்பரம் செய்யப்பட்டு வருகின்றது.

10. **செய்தி தொடர்பு பொருட்கள் விநியோகம்:** பொதுமக்களுக்கும், தொண்டு நிறுவனங்களுக்கும், அரசுப் பணியாளர்களுக்கும், எச்.ஐ.வி.யால்



2002 மார்ச் 15]

பாதிக்கப்படும் அபாயத்தில் உள்ளோர்களுக்கும் என பலதரப்பட்ட துண்டு பிரசுரங்கள், விளம்பர சுவரொட்டிகள், சிறு புத்தகங்கள், மடிப்புகள், கண்காட்சிப் பொருட்கள், ஸ்டிக்கர்கள், பேனர்கள் என பல்வேறு விளம்பரப் பொருட்கள் அதிக அளவில் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன.

11. **பொருட்காட்சி மற்றும் கண்காட்சி:** தமிழகமெங்கும் நடைபெறும் முக்கிய பொருட்காட்சி மற்றும் கண்காட்சி போன்ற நிகழ்ச்சிகளில் தனி ஸ்டால் மூலம் மக்களுக்கு எய்ட்ஸ் பற்றிய விளக்கங்கள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன.

**53—**

## குடிநீர் வழங்குதல்

**வினா 99—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், அழகப்பம்பாளையம் புதூரில் உள்ள காசக்காரனூர் பகுதியில் உள்ள மக்களுக்கு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு.சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், அழகப்பம்பாளையம் புதூரில் உள்ள காசக்காரனூர் குடியிருப்புக்கு ஆழ்துளை கிணற்று நீரை ஆதாரமாகக் கொண்டு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள ஒரு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அங்கு தற்போது நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 25 லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும், இக்குடியிருப்புக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் குடிநீர் வழங்க மகுடஞ்சாவடி ஒன்றியத்தைச் சார்ந்த 175 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் மீதான இறுதி முடிவுகள் எடுக்கப்பட்டு பணிகள் விரைவில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**54—**

## குடிநீர் வழங்குதல்

**வினா 101—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், அ. புதூர் காசக்காரனூர் பகுதியில் அண்ணா நகர் வரை மேல்நிலைத் தொட்டிக்கு குடிநீர் ஏற்றி பொதுமக்களுக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், அ. புதூர் ஊராட்சியிலுள்ள காசக்காரனூர் பகுதியில் உள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்து காசக்காரனூர் பகுதி அண்ணாநகர் குடியிருப்பிற்கு குழாய் நீட்டிப்பு செய்து 3 பொதுக் குழாய்கள் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**55—**

## மயானம் அமைத்தல்

**வினா 109—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி மன்னாதகவுண்டனூர் பகுதி மக்களுக்கு மயானம் இல்லையென்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்பகுதி மக்கள் குறையைப் போக்கும் விதத்தில் ஒரு மயானம் அமைக்க அரசு முன்வருமா?





விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இடங்கணசாலை பேரூராட்சிக்குட்பட்ட மன்னாதகவுண்டனூரில் மயானம் அமைக்க 4½ ஏக்கர் புறம்போக்கு நிலம் உள்ளது. மேற்படி இடத்தில் மன்னாதகவுண்டனூர் பகுதி மக்களுக்கு மயானம் அமைக்க நடவடிக்கைகள் பேரூராட்சியால் மேற்கொள்ளப்படும்.

**56—**

## மேல்நிலைத் தொட்டி

**வினா 374—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் எடப்பாடி நகராட்சி, பூலாம்பட்டி பேரூராட்சி, எடப்பாடி ஒன்றியம், கொங்கணாபுரம் ஒன்றியம், கொங்கணாபுரம் பேரூராட்சி, மகுடஞ்சாவடி ஒன்றியம் ஆகிய நிர்வாகங்களிடம் குடிநீர் வடிகால் வாரியத்தினால் மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டு ஒப்படைப்பு செய்யப்பட்டவை மற்றும் ஒப்படைப்பு செய்யப்படாமல் உள்ளவை எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேல்நிலை நீர்த்தேக்கத தொட்டி கட்டப்பட்டு ஒப்படைப்பு செய்யப்பட்டது மற்றும் ஒபபடைப்பு செய்யப்படாமல் உள்ளது பற்றிய விவரம் இணைப்பில் கீழே தரப்பட்டுள்ளது:

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் திட்டங்கள் முடித்து பொதுமக்களின் பயனுக்குக் கொண்டுவரப்பட்டவுடன், திட்டமிட்ட காலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிப்பு முடிந்தவுடன் சம்பந்தப்பட்ட நிர்வாகங்களிடம் ஒப்படைப்பு செய்யப்பட்டு வருகிறது.

## இணைப்பு

| வ. எண் | நகராட்சி/ பேரூராட்சி/ ஒன்றியத்தின் பெயர் | கட்டப்பட்ட மேல்நிலைத் தொட்டிகளின் எண்ணிக்கை | நிர்வாகங்களிடம் ஒப்படைப்பு செய்யப்பட்டது | நிர்வாகங்களிடம் ஒப்படைப்பு செய்யப்படாமல் இருப்பது | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. |
| 1. | எடப்பாடி நகராட்சி | 10 | 10 | | |
| 2. | பூலாம்பட்டி பேரூராட்சி | 5 | 5 | - | மேலும் 5 மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டு வருகின்றன. 12/2001-ல் முடிக்கப்பட்டு ஓர் ஆண்டு வாரியத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு 12/2002-ல் பேரூராட்சியிடம் ஒப்படைக்கப்படும். |
| 3. | கொங்கணாபுரம் பேரூராட்சி | 3 | - | 3 | சோதனை ஓட்டம் நடைபெறுகிறது. விரைவில் ஒப்படைக்கப் படவுள்ளது. |
| 4. | எடப்பாடி ஒன்றியம் | 97 | 46 | 51 | 51 மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டு சோதனை ஓட்டம் நடைபெறுகின்றது. திட்டமிட்ட காலம் முடிந்தவுடன் சம்பந்தப்பட்ட நிர்வாகங்களிடம் ஒப்படைக்கப்படும். |
| 5. | கொங்கணாபுரம் ஒன்றியம் | 70 | 19 | 51 | 51 மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டு சோதனை ஓட்டம் நடைபெறுகின்றது. திட்டமிட்ட காலம் முடிந்தவுடன் சம்பந்தப்பட்ட நிர்வாகங்களிடம் ஒப்படைக்கப்படும். |
| 6. | மகுடஞ்சாவடி ஒன்றியம் | 33 | 17 | 16 | சோதனை ஓட்டம் நடைபெறுகிறது. விரைவில் ஒப்படைக்கப்படவுள்ளது. |



**57—**

### குடிதண்ணீர் வசதி

**வினா 1129—திரு. லா. சந்தானம்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், கோவிலாங்குளம் பஞ்சாயத்து, பாடீசன்புரம் பகுதிக்கு போதிய குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

*பாடீசன்புரம் பகுதிக்கு கருமாத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் வைகை தண்ணீர் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. இக்குடியிருப்புப் பகுதிக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம், கூடுதல் அளவு குடிநீர் வழங்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

**58—**

### நிழற்குடை

**வினா 1271—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*புதுக்கோட்டை நகராட்சி, பிள்ளை தண்ணீர் பந்தலில் இந்த நிதியாண்டில் பயணிகள் நிழற்குடை அமைத்துக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*2001-2002 ஆம் நிதியாண்டிற்கான திட்டப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு பெறப்பட்ட பின்னர் நிழற்குடை அமைக்க நகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**59—**

### இந்திரா நினைவு குடியிருப்பு வீடுகள்

**வினா 1336—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2002 மார்ச் 15

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட வீடுகள் எத்தனை?

(ஆ) அதற்கான செலவுத்தொகை எவ்வளவு?

விடை.—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2000-2001 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் ரூ.11057.338 லட்சம் செலவில் 33,944 புதிய வீடுகள் கட்டப்பட்டன. ரூ.1581.098 லட்சம் செலவில் 15,970 கச்சா வீடுகள் பழுதுபார்க்கப்பட்டு மேம்படுத்தப்பட்டன.

**60—**

## இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்

**வினா 1340—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் ஈரோடு மாவட்டத்தில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட வீடுகள் எத்தனை?

(ஆ) ஊராட்சி ஒன்றிய வாரியாக அதன் விவரம் என்ன?

விடை.—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் ஈரோடு மாவட்டத்தில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 1,500 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டன.



2002 மார்ச் 15]

(ஆ) ஊராட்சி ஒன்றிய வாரியாக அதன் விவரம் கீழ்க்கண்டவாறு உள்ளது:—

| வ.எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | 2000-2001 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை எஸ்.சி./எஸ்.டி. | இதரர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | ஈரோடு | 41 | 23 | 64 |
| 2. | மொடக்குறிச்சி | 142 | 14 | 156 |
| 3. | கொடுமுடி | 10 | - | 10 |
| 4. | பெருந்துறை | 27 | 12 | 39 |
| 5. | சென்னிமலை | 25 | 7 | 32 |
| 6. | ஊத்துக்குளி | 190 | 12 | 202 |
| 7. | காங்கேயம் | 10 | 14 | 24 |
| 8. | வெள்ளக்கோயில் | 30 | — | 30 |
| 9. | தாராபுரம் | 85 | 5 | 90 |
| 10. | குண்டடம் | 70 | 8 | 78 |
| 11. | மூலனூர் | 20 | 8 | 28 |
| 12. | அம்மாபேட்டை | 121 | 26 | 147 |
| 13. | அந்தியூர் | 82 | 5 | 87 |
| 14. | பவானி | 80 | 11 | 91 |
| 15. | கோபி | 22 | 32 | 54 |
| 16. | நம்பியூர் | 54 | .. | 54 |
| 17. | டி.என். பாளையம் | 90 | 1 | 91 |
| 18. | சத்தி | 32 | 30 | 62 |
| 19. | பவானிசாகர் | 105 | 5 | 110 |
| 20. | தாளவாடி | 45 | 6 | 51 |
| | மொத்தம் | **1281** | **219** | **1500** |

[2002 மார்ச் 15

**61—**

## இந்திரா நினைவு குடியிருப்புத் திட்ட வீடுகள்

**வினா 1341—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001-ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட வீடுகள் எத்தனை?

(ஆ) ஊராட்சி ஒன்றிய வாரியாக அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001-ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 1,128 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டன.

(ஆ) ஊராட்சி ஒன்றிய வாரியாக அதன் விவரம் கீழ்க்கண்டவாறு உள்ளது:

| வ.எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | 2000-2001 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை எஸ்.சி./எஸ்.டி. | இதரர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | சேலம் | 8 | 10 | 18 |
| 2. | வீரபாண்டி | 20 | 17 | 37 |
| 3. | பனமரத்துப்பட்டி | 30 | 10 | 40 |
| 4. | அயோத்தியாபட்டணம் | 40 | 11 | 51 |
| 5. | வாழப்பாடி | 55 | 5 | 60 |
| 6. | ஏற்காடு | 50 | 0 | 50 |
| 7. | பெத்தநாயக்கன்பாளையம் | 60 | 5 | 65 |
| 8. | ஆத்தூர் | 60 | 5 | 65 |
| 9. | கெங்கவல்லி | 58 | 10 | 68 |



2002 மார்ச் 15]

| | | | | |
|---|---|---|---|---|
| 10. | தலைவாசல் | 69 | 5 | 74 |
| 11. | கொளத்தூர் | 75 | 0 | 75 |
| 12. | நங்கவள்ளி | 16 | 15 | 31 |
| 13. | மேச்சேரி | 40 | 5 | 45 |
| 14. | தாரமங்கலம் | 37 | 15 | 52 |
| 15. | ஓமலூர் | 85 | 5 | 90 |
| 16. | காடையாம்பட்டி | 97 | 15 | 112 |
| 17. | சங்ககிரி | 37 | 5 | 42 |
| 18. | எடப்பாடி | 55 | 15 | 70 |
| 19. | கொங்கணாபுரம் | 30 | 5 | 35 |
| 20. | மகுடஞ்சாவடி | 38 | 10 | 48 |
| | **மொத்தம்** | **960** | **168** | **1128** |

**62—**

## சுகாதாரச் சீர்கேடு

**வினா 1532—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் மற்றும் ஆழ்வார்திருநகரி பேரூராட்சிகளில் பன்றிகளின் தொல்லையினால் சுகாதாரச் சீர்கேடு உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதைச் சீர் செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சாத்தான்குளம் மற்றும் ஆழ்வார்திருநகரி பேரூராட்சிகளில் பன்றிகளைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட பன்றி வளர்ப்போர்களுக்கு எச்சரிக்கை அறிவிப்பு வழங்கப்பட்டு உள்ளது. மேலும் பன்றிகளை ஒழிக்க ஒப்பந்தப்புள்ளிகளை கோரப்பட்டு பெறப்பட்டு, மன்ற ஒப்புதலுடன் திரிந்து அலையும் பன்றிகளை ஒழிக்கத் துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**63—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா 2797—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, மஞ்சார அள்ளி ஊராட்சி, ஏர்கோல்பட்டிக்கு போதுமான குடிநீர் வசதிக்காக கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

*விடை —*

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பென்னாகரம் ஒன்றியம், மஞ்சார அள்ளி நகராட்சியைச் சார்ந்த ஏர்கோல்பட்டி குடியிருப்புக்கு தற்சமயம் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. குடிநீரில் நைட்ரேட் உப்பின் அளவு அதிகமாக உள்ளதால் நீரின் தரம் பாதிக்கப்பட்டுள்ளது.

ஊரக குடிநீர் திட்டக் கோட்பாடுகளுக்கு உட்பட்டு தேவை, தகுதி மற்றும் நிதி ஆதார அடிப்படையில் இக்குடியிருப்பிற்கு மாற்று நீராதாரம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**64—**

## குடிநீர்

**வினா 2803—திரு. ஜி. கே. மணி:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*





தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி ஒட்டலூரில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள தண்ணீர் இல்லாத மேல்நிலைத் தொட்டிக்கு தண்ணீர் ஏற்றி வழங்க அரசு ஆவன செய்யுமா

*விடை—*

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பென்னாகரம் ஒன்றியம், நாகமரை ஊராட்சியைச் சார்ந்த ஒட்டலூரில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது நீராதாரமான ஆழ்துளைக் கிணற்றில் நீர்வரத்து குறைந்துள்ளது. அதனால் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு சரிவர குடிநீர் ஏற்ற இயலவில்லை. இருப்பினும் இக்குடியிருப்பிற்கு புதிய நீராதாரம் உருவாக்கப்பட்டு உள்ளது. இந்த நீராதாரத்தைக் கொண்டு புதிய குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

**65—**

## அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

**வினா 2922—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எடப்பாடி தொகுதியில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் பலன் பெற்ற கிராமப் பஞ்சாயத்துகள் யாவை?

(ஆ) அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

*விடை—*

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ)

| ஆண்டு | பயன்பெற்ற கிராம ஊராட்சிகள் | செலவிடப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|
| 1997-98 | சித்தூர் | 46,37,619 |
| 1998-99 | வெள்ளாளபுரம் | 58,07,900 |
| 1999-2000 | வைகுந்தம் | 41,27,866 |
| 2000-2001 | இருளப்பள்ளி | 48,88,100 |

[2002 மார்ச் 15

66—

## அடிப்படை வசதிகள்

**வினா 2923—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நலிவுற்ற ஊராட்சிகளுக்கு முக்கியமான அடிப்படை வசதிகள் செய்ய அரசு என்னென்ன உதவிகள் செய்கிறது?

(ஆ) அந்த ஊராட்சிகளின் வருவாயைப் பெருக்க அரசு என்ன மாதிரியான ஆலோசனைகள் வழங்குகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மாநில அரசின் நிதி பகிர்ந்தளிப்பில் 15 சதவீதம் சமன்பாடு மற்றும் ஊக்க நிதியாக ஊராட்சிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. இதனைப் பயன்படுத்தி ஊராட்சிகளின் சாலைகள், விளக்குகள், தெருக்கள், குடிநீர் வசதி ஆகிய அடிப்படை வசதிகள் செய்து கொள்ளலாம். இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கச்சா வீடுகளைப் பழுதுபார்க்கவும், வறுமைக் கோட்டிற்கு சற்று மேல் உள்ள குடும்பங்களுக்கு புதிய வீடுகள் கட்ட மானியத்துடன் கூடிய கடனுதவியும் அளிக்கப்படுகிறது. நலிவடைந்த ஊராட்சிகள் செலுத்த வேண்டிய குடிநீர் மின்சாரக் கட்டணங்கள் செலுத்தவும் மானியம் வழங்கப்படுகிறது.

(ஆ) நலிவடைந்த ஊராட்சிகள் தங்கள் வருவாயைப் பெருக்க ஏதுவாக தொழில் வரி விதிப்பு மற்றும் வசூல் முறைகள் எளிதாக்கப்பட்டுள்ளன. சமன்பாடு மற்றும் ஊக்க நிதி, ஊராட்சிகள் தங்கள் சுயநிதி ஆதாரங்களைத் திரட்டி வருவாயைப் பெருக்க ஊக்கத் தொகையாகவும், ஊராட்சிகளின் உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நிதி ஆதாரத்தில் உள்ள இடைவெளியைச் சமன் செய்ய மானியமாகவும் வழங்கப்படுகிறது. வீட்டு வரி வசூலிக்கவும் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

ஊராட்சிகளுக்கு வருவாய் அளிக்கக்கூடிய அனைத்து வரியினங்களும் முறைப்படுத்தப்பட்டுள்ளதால் அதனை நிலுவையின்றி வசூல் செய்தும் திட்டப்பணிகளை செவ்வனே நிறைவேற்றி அதன் மூலம் ஊராட்சிகளின் வருவாயைப் பெருக்கவும் அரசு சார்பில் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.



2002 மார்ச் 15]

67—

## குடிநீர்

**வினா 3421—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001-ல் எடப்பாடி, பூலாம்பட்டி பேரூராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் கட்டப்பட்ட மேல்நிலைத் தொட்டிகள் எத்தனை?

(ஆ) அதில் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்ட பகுதிகள் எத்தனை? அதனால் பலனடையும் மக்கள்தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2000-2001 ஆம் ஆண்டில் எடப்பாடி தொகுதியைச் சேர்ந்த பூலாம்பட்டி பேரூராட்சி தொகுதியில் 5 மேல்நிலைத் தொட்டிகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இவை 12/2001-ல் முடிக்க இலக்கிடப்பட்டுள்ளது. இவற்றுள் ஒரு லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மூன்று மேல்நிலைத் தொட்டிகளும் 1.5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலைத் தொட்டியும் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலைத் தொட்டியும் அடங்கும்.

மேற்கண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டு வரும்பொழுது 10,155 மக்கள் பயன்பெறுவர்.

68—

## நமக்கு நாமே திட்டம்

**வினா 4749—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி ஊராட்சி ஒன்றியம் மற்றும் கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம் ஆகியவற்றிற்கு முறையே நமக்கு நாமே திட்டத்திற்கு 2000-2001 ஆம் நிதியாண்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) எவ்வளவு பணிகள் மேற்கொள்ளப்பட்டன?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2000-2001 ஆம் ஆண்டு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் எடப்பாடி வட்டாரத்தில் 4 பணிகள் மொத்தம் ரூ.15.25 இலட்சம் மதிப்பீட்டிலும், கொங்கணாபுரம் வட்டாரத்தில் 4 பணிகள் மொத்தம் ரூ.3.45 இலட்சம் மதிப்பீட்டிலும் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

**69—**

## வேலைவாய்ப்பு

**வினா 163—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சிவில் இன்ஜினியர், மருந்தாளுநர் பட்டம், முதுகலை பட்டம் மற்றும் பொதுவான பட்டப்படிப்பு முடித்து வேலை கோரி சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளவர்கள் 2001 வரை எத்தனை பேர்?

(ஆ) அவர்கள் வேலைவாய்ப்பிற்கு அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 31-5-2001 முடிய சேலம் மாவட்டத்தில் கீழ்க்கண்டவாறு மனுதாரர்கள் பதிவு செய்துள்ளனர்:

| | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| சிவில் இன்ஜினியர் | 457 | 81 | 538 |
| மருந்தாளுநர் பட்டம் | 592 | 211 | 803 |
| முதுகலை பட்டம் | 4,886 | 3,151 | 8,037 |
| பொதுவான பட்டப்படிப்பு | 8,035 | 3,463 | 11,498 |

(ஆ) வேலைவாய்ப்பு அலுவலகங்கள், வேலையளிப்போரால் தெரிவிக்கப்படும் பணிக்காலியிடங்களுக்கு மனுதாரர்களின் பதிவு மூப்பு, வயது, கல்வித் தகுதி ஆகியவற்றின் அடிப்படையில் வேலைவாய்ப்பு வேண்டி பதிவு செய்துள்ள மனுதாரர்களின் பெயர்களை அனுப்பும்



பணியை மேற்கொள்கின்றன. வேலைவாய்ப்புத் துறை தன்னிச்சையாக வேலை காலி இடங்களை உருவாக்க வழிவகையில்லை.

**70—**

## ஊனமுற்றோருக்கு வேலைவாய்ப்பு

**வினா 4411—திரு ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் 2000-2001 ஆம் நிதியாண்டில் அரசு வேலைவாய்ப்பில் ஊனமுற்றவர்கள் எவ்வளவு பேர் அரசுப் பணியில் சேர்ந்துள்ளனர்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் 2000-2001 ஆம் நிதியாண்டில் அரசு வேலைவாய்ப்பில் ஊனமுற்றவர்கள் 832 பேர் வேலைவாய்ப்பு அலுவலகங்களின் மூலமாக அரசுப் பணியில் சேர்ந்துள்ளனர்.

**71—**

## தோட்டத் தொழிலாளர்கள்

**வினா 5622—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பணியாற்றும் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) தோட்டத் தொழிலாளர் நலச் சட்டத்தின்கீழ் சலுகைகள் பெறும் தொழிலாளிகள் எத்தனை பேர்?

(இ) தோட்டத் தொழிலாளர் நலச் சட்டம் சரிவர அமல்படுத்தாதற்கு அரசு வழக்கு போடப்பட்ட தோட்ட நிர்வாகங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் உள்ள தோட்ட நிறுவனங்களில் நேரிடையாக பணியாற்றும் மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 1,07,986 ஆகும்.

(ஆண்கள் 45,164 மற்றும் பெண்கள் 62,822) இவற்றில் பதிவு பெற்ற தோட்ட நிறுவனங்களில் 96,296 தொழிலாளர்களும் (ஆண்கள் 40,191 பெண்கள் 56,105) பதிவுறா (Un-registered) தோட்ட நிறுவனங்களில் 11,690 தொழிலாளர்களும் (ஆண்கள் 4,973 மற்றும் பெண்கள் 6,717) பணிபுரிகின்றனர்.

(ஆ) பதிவுபெற்ற தோட்ட நிறுவனங்களுக்கு (Registered Plantations) மட்டுமே தோட்டத் தொழிலாளர் சட்டம் பொருந்தும். பதிவுபெற்ற தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் 96,296 தொழிலாளர்கள் (ஆண்கள் 40,191 மற்றும் பெண்கள் 56,105) தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் கீழ் வீட்டு வசதி, இலவச மருத்துவ வசதி, கல்வி வசதி, கம்பளி வசதி மற்றும் குடிநீர் வசதி ஆகிய நல வசதிகளைப் பெறுகின்றனர்.

பதிவுபெறாத தோட்ட நிறுவனங்களுக்கு தோட்டத் தொழிலாளர் சட்டம் பொருந்தாது. இந்நிறுவனங்களுக்கு—

(1) குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948.

(2) தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை) சட்டம், 1958 மட்டுமே பொருந்தும் என்பதால், தோட்டத் தொழிலாளர் நலச் சட்டத்தின் கீழான சலுகைகளைப் பதிவுபெறாத தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் பெற இயலாது.

(இ) ஜனவரி 2000 முதல் ஆகஸ்ட் 2001 வரையிலான காலங்களில் 264 தோட்ட நிறுவன நிர்வாகங்கள்மீது தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் விதிகளின்கீழ் பல்வேறு பிரிவு மற்றும் விதிகளை அமல்படுத்தாமைக்குத் தோட்ட நிறுவன ஆய்வர்கள் மற்றும் உதவி [illegible]நத்துவர்களால் (தோட்டங்கள்) வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

**72—**

## தோட்டத் தொழிலாளர்கள்

**வினா 5623—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தோட்டத் தொழிலாளர் நலச் சட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகிற தோட்டங்கள் எத்தனை? அவற்றில் மொத்த தொழிலாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) தோட்டத் தொழிலாளர் நலச் சட்டத்துக்குட்படாத தோட்டங்கள் எத்தனை? அவற்றில் பணியாற்றுவோர் எவ்வளவு?





விடை—

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் 66 தோட்ட நிறுவனங்கள், தோட்டத் தொழிலாளர் நலச் சட்டத்தின்கீழ் செயல்படுகின்றன. இவற்றில் மொத்தம் 6,539 தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

(ஆ) தோட்டத் தொழிலாளர்கள் நலச் சட்டத்திற்கு உட்படாத தோட்டங்கள் 228 உள்ளன. இவற்றில் 460 தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

**73—**

## தொப்பக்கட்டில் நியாயவிலைக் கடை

**வினா 4747—திரு. ஐ. கணேசன்.** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், சோரணம்பட்டி கிராமம், தொப்பக்காட்டிலே ஒரு நியாயவிலைக் கடை புதிதாக உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், சோரணம்பட்டி கிராமம், தொப்பைக்காடு கிராமத்தில் ஒரு புதிய பகுதி நேர நியாயவிலைக் கடை திறக்கப்பட்டு 21-9-2001 முதல் செயல்பட்டு வருகிறது.

**74—**

## நியாயவிலைக் கடைகள்

**வினா 11087—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2002 மார்ச் 15

2001 ஆம் ஆண்டு மே மாதம் முடிய தமிழகத்தில் பகுதிநேர நியாயவிலைக் கடைகள் எத்தனை திறக்கப்பட்டன?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் 2001 ஆம் ஆண்டு மே மாதம் முடிய மொத்தம் 44,541 பகுதி நேரக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன. அவற்றில் 4,359 கடைகள் கூட்டுறவு நிறுவனங்களாலும், 50 கடைகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும், மீதம் 132 கடைகள் மீனவர் கூட்டுறவுகள், தொழிலாளர் கூட்டுறவுகள் போன்ற கூட்டுறவு நிறுவனங்களாலும் நடத்தப்பட்டு வருகின்றன.

**75—**

## தார்ச்சாலை புதுப்பித்தல்

**வினா 1394—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, குழுமூர்-அங்கனூர் இடையே உள்ள தார்ச் சாலையைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) ஆண்டிமடம் தொகுதி, குழுமூர்-அங்கனூர் இடையே உள்ள சாலையில் ரூ. 49 இலட்சம் செலவில் பழுதுகள் சீர்செய்யும் பணி நடை பெற்று வருகிறது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**76—**

## இழப்புத் தொகை

**வினா 430—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 மார்ச் 15]

(அ) தமிழகத்தில் வனப்பகுதிக்கு அருகில் உள்ள விவசாய நிலப்பகுதிகளில் காட்டுப் பன்றிகளால் ஏற்படும் சேதங்களுக்கென விவசாயிகளுக்கு இழப்புத்தொகை 2000-2001 ஆம் ஆண்டு அரசு எவ்வளவு வழங்கி உள்ளது?

(ஆ) இதன் மூலம் பயன்பெற்றவர்கள் எத்தனை பேர்

(இ) இவ்வகைச் சேதம் ஏற்படாமல் இருக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு, செய்தி, விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் வனப்பகுதிக்கு அருகில் உள்ள விவசாய நிலப்பகுதிகளில் காட்டுப் பன்றிகளால் ஏற்பட்ட சேதங்களுக்கென 2000-2001 ஆம் ஆண்டில், விவசாயிகளுக்கு இழப்புத்தொகை ஏதும் வழங்கப்படவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

(இ) காட்டுப் பன்றிகளின் தொந்தரவு குறித்து வனத் துறைக்கு தகவல் வரும்பட்சத்தில் வனப் பணியாளர்களின் உதவியுடன் அவற்றை விரட்ட மேல் நடவடிக்கை தொடரப்படும். எனினும் காட்டுப் பன்றியால் சேதம் ஏற்படாமல் தடுக்க நிலச் சொந்தக்காரர்களும் நிலத்தைச் சுற்றி முள்வேலிகளை அமைத்தும் காவலர்களை அமர்த்தியும் பயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளல் வேண்டும்.

**77—**

## மரங்கள் வளர்ப்பு

**வினா 1297—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் எத்தனை கிராமங்களில் மரங்கள் வளர்க்கப்பட்டன?

(ஆ) சட்டமன்றத் தொகுதி வாரியாக விவரம் என்ன?

[2002 மார்ச் 15

விடை —

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு, செய்தி, விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் 39 கிராமங்களை ஒட்டிய தரம் தாழ்ந்த காடுகளில் மரக்கன்றுகள் நடப்பட்டன.

(ஆ) தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் மரங்கள் நடப்பட்ட தரமிழந்த காப்புக்காட்டை ஒட்டியுள்ள கிராமங்களின் சட்டமன்றத் தொகுதி வாரியான விவரங்கள் பின்வருமாறு:—

| வரிசை எண் | சட்டசபை தொகுதி | கிராமங்கள்/சிற்றூர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | 1997—2001 | 2001—2002 | மொத்தம் |
| 1. | ஆத்தூர் | 6 | 4 | 10 |
| 2. | தாரமங்கலம் | - | 1 | 1 |
| 3. | மேட்டூர் | 7 | 1 | 8 |
| 4. | ஓமலூர் | 5 | 4 | 9 |
| 5. | பனமரத்துப்பட்டி | 9 | 5 | 14 |
| 6. | சங்ககிரி | 1 | - | 1 |
| 7. | தலைவாசல் | 4 | - | 4 |
| 8 | வீரபாண்டி | 2 | - | 2 |
| 9. | ஏற்காடு | 5 | 3 | 8 |
| | **மொத்தம்** | **39** | **18** | **57** |

**78—**

## ஊதிய உயர்வு

**வினா 1122—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவுத் திட்டத்தில் பணிபுரியும் ஊழியர்களின் ஊதியத்தை உயர்த்தித் தர அரசிடம் திட்டம் உள்ளதா?



2002 மார்ச் 15]

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டிலேயே நிறைவேற்றப்படுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சத்துணவு ஊழியர்களின் ஊதியத்தை உயர்த்தித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**79—**

## மாணவர் விடுதிகள்

**வினா 1874 (அ)—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதியில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மாணவர்களுக்கான மாணவர் விடுதிகள் எத்தனை உள்ளன?

(ஆ) அவர்களுக்கு மேலும் புதிய விடுதிகள் கட்டித் தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) வந்தவாசி சட்டமன்றத் தொகுதியில் ஆதிதிராவிடர் நலப்பள்ளி மாணவர் விடுதிகள் 3-ம், மாணவியர் விடுதிகள் 3-ம், ஆக மொத்தம் 6 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) புதிய விடுதிகள் கட்டுவது தொடர்பாக கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**80—**

## உதவித்தொகை

**வினா 2764—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் ஈரோடு, தருமபுரி, நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் மாநில அரசின் கல்வி உதவித்தொகை ஆதிதிராவிட மாணவர்கள் எத்தனை பேருக்கு அரசு வழங்கியுள்ளது?

(ஆ) அதேபோல் மத்திய அரசு எத்தனை பேருக்கு வழங்கியுள்ளது?

[2002 மார்ச் 15

விடை—

**மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001ஆம் ஆண்டில் ஈரோடு, தருமபுரி, நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் மாநில அரசின் கல்வி உதவித்தொகை ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட விவரம்:—

| வ.எண். | மாவட்டம் | பயனாளிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | ஈரோடு | 77 | 1.51 |
| 2. | தருமபுரி | 185 | 2.50 |
| 3. | நாமக்கல் | 57 | 0.85 |

(ஆ) 2000-2001 ஆம் ஆண்டில் ஈரோடு, தருமபுரி, நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் மத்திய அரசு கல்வி உதவித்தொகை ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட விவரம்:—

| வ.எண். | மாவட்டம் | பயனாளிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | ஈரோடு | 4,267 | 91.045 |
| 2. | தருமபுரி | 6,181 | 98.00 |
| 3. | நாமக்கல் | 5,040 | 78.03 |

**81—**

## கல்வி உதவித்தொகை

**வினா 2768—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் எடப்பாடி தொகுதியில் மைய அரசின் கல்வி உதவித்தொகை ஆதிதிராவிடர் மாணவர்கள் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?



2002 மார்ச் 15]

(ஆ) தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் எடப்பாடி தொகுதியில் மைய அரசின் கல்வி உதவித்தொகை 118 ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு அளிக்கப்பட்டது.

(ஆ) இதற்காக ரூ. 1.51 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**82—**

## கல்வி உதவித்தொகை

**வினா 2769—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 2000-2001ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மைய அரசின் கல்வி உதவித்தொகை ஆதிதிராவிடர் மாணவர் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கடந்த 2000-2001ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மைய அரசின் கல்வி உதவித்தொகை 1,98,434 ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) 1,98,434 ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு ரூ. 3,357.05 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**83—**

## விடுதிகள்

**வினா 3869—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள ஆதிதிராவிடர் நலத் துறையின் கீழ் இயங்கும் மாணவர் விடுதிகளில் தங்கிப் பயில்வோரின் எண்ணிக்கை எவ்வளவு?

[2002 மார்ச் 15

விடை —

**மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*ஆதிதிராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கும் மாணவர் விடுதிகளில் 51,762 மாணவர்களும், மாணவியர் விடுதிகளில் 24,538 மாணவிகளும் தங்கி கல்வி பயின்று வருகின்றனர்.*

**84—**

## படைவீரர்களின் குடும்பங்கள்

**வினா 4710—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டத்தில் போரில் மரணமடைந்த படைவீரர்களின் குடும்பங்கள் எத்தனை உள்ளன?*

*(ஆ) அந்தக் குடும்பங்களுக்கு மத்திய, மாநில அரசுகள் செய்துள்ள சலுகைகள் என்ன?*

விடை —

**மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) சேலம் மாவட்டத்தில் போரில் மரணமடைந்த படைவீரர்கள் குடும்பத்தினர் — 12*

*(ஆ) மத்திய அரசு மூலம் வழங்கப்படும் சலுகைகள்:*

*(அ) சிறப்பு குடும்ப ஓய்வூதியம்.*

*(ஆ) ரூ. 1 லட்சம் மத்திய பாதுகாப்பு நிதி.*

*(இ) இரயில்வே மற்றும் இந்தியன் ஏர்லைன்ஸ் பயணச் சலுகை.*

*(ஈ) கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு.*

*மாநில அரசு மூலம் வழங்கப்படும் சலுகைகள்:*

*(அ) தகுதியுள்ள வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு.*

*(ஆ) தொகுப்பு நிதி மற்றும் தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் கருணைத்தொகை.*

*(இ) தொகுப்பு நிதியிலிருந்து திருமண நிதியுதவி*

*(ஈ) தொகுப்பு நிதியிலிருந்து வீடு கட்டுவதற்கு மானியம்*

*(உ) வருடாந்திர பராமரிப்பு மானியம் ஒவ்வொரு ஆண்டும் ரூ. 2000.*



2002 மார்ச் 15]

**85—**

## அரசுப் பணி

**வினா 4713—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) இந்திய படைவீரர்கள் தங்கள் பணி ஒப்பந்த காலம் முடிந்து திரும்பி, பின்பு மாநில அரசில் கடந்த 2000-2001ஆம் ஆண்டில் சலுகை அடிப்படையில் அரசுப் பணி பெற்றவர்கள் எத்தனை பேர்?*

*(ஆ) அதற்காக மனு செய்தவர்கள் எத்தனை பேர்?*

விடை—

**மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) இந்திய படைவீரர்கள் தங்கள் பணி ஒப்பந்த காலம் முடிந்து திரும்பி, பின்பு மாநில அரசில் கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் சலுகை அடிப்படையில் அரசுப் பணி பெற்றவர்கள் .. 150*

*(ஆ) அதற்காக மனு செய்தவர்கள் .. 4,023*

**86—**

## மீன் விற்பனைக் கூடங்கள்

**வினா 4878—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி ஒன்றியத்திலுள்ள நாயக்கர் குப்பம் கிராமத்தில் மீன் விற்பனைக் கூடங்கள் கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன்வளத் துறை அமைச்சர்:**

*(அ) சீர்காழி ஒன்றியத்திலுள்ள நாயக்கர் குப்பம் கிராமத்தில் மீன் விற்பனைக் கூடங்கள் கட்டும் திட்டம் ஏதுமில்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

87—

## கால்நடை மருத்துவமனைகள் அமைத்தல்

**வினா 6557—திரு. எஸ்.எம். பாலன்:** *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வால்குடி தொகுதி, கால்நடை மருத்துவமனை இல்லாத கிராமங்களுக்கு கால்நடை மருத்துவமனைகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன்வளத் துறை அமைச்சர்:**

*(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.*

*(ஆ) எழாது.*

88—

## பால்வள கடன்

**வினா 1350—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் தேசிய பால்வள வாரியத்தில் பெற்றுள்ள திட்டக் கடன் எவ்வளவு?*

*(ஆ) 2000-2001 ஆம் ஆண்டில் அந்தக் கடனுக்குச் செலுத்தப்பட்ட வட்டி எவ்வளவு?*

*(இ) மொத்தத்தில் ஒன்றியம் லாபத்தில் அல்லது நஷ்டத்தில் இயங்குகிறதா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு, பால்வளத் துறை அமைச்சர்:**

*(அ) தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம், பால்வள பெருக்குத் திட்டத்தின்கீழ் தேசிய பால்வள வாரியத்திடம் பெற்ற திட்டக் கடன் தொகை ரூ. 1,07,86,000.*



*(ஆ) 2000-2001 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட*

| | |
|---|---|
| வட்டி | ரூ. 11,88,549.47 |
| கூட்டு வட்டி | ரூ.9,48,799.84 |
| மொத்த வட்டி | ரூ. 21,37,349.31 |

(இ) மொத்தத்தில் ஒன்றியம் திரண்ட நட்டத்தில் இயங்குகிறது.

89—

## பால் விற்பனை

**வினா 1355—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) 2000-2001 ஆம் ஆண்டில் தருமபுரி மற்றும் ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின் விற்பனை வருவாய் எவ்வளவு?*

*(ஆ) அதில் பால் மற்றும் பால் உப பொருட்கள் விற்பனை எவ்வளவு?*

*(இ) அது லாபத்தில் இயங்குகிறதா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு, பால்வளத் துறை அமைச்சர்:**

தருமபுரி:

| | | |
|---|---|---|
| (அ) | தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின் விற்பனை வருவாய் | ரூ. 48,67,30,485.00 |
| (ஆ) | (1) பால் விற்பனை | ரூ. 24,75,81,709.00 |
| | (2) பால் உப பொருட்கள் விற்பனை | ரூ. 23,91,48,776.00 |

(இ) ஒன்றியம் லாபத்தில் இயங்கவில்லை.

ஈரோடு:

| | | |
|---|---|---|
| (அ) | ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின் விற்பனை வருவாய் | ரூ. 7716.12 இலட்சங்கள். |

[2002 மார்ச் 15

(ஆ) பால் மற்றும் பால் உப பொருட்களின் விற்பனை ரூ. 7606.00 இலட்சங்கள்

(இ) இந்த ஒன்றியம் லாபத்தில் இயங்கவில்லை.

**90—**

## கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம்

**வினா 1368—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் ஒரு நாளைக்கு எத்தனை லிட்டர் பால் கொள்முதல் செய்கிறது.

(ஆ) இந்த உற்பத்தியாளர் ஒன்றியம் லாபத்தில் இயங்குகிறதா?

விடை —

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு, பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் ஒரு நாளைக்கு சராசரியாக 3,08,600 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது.

(ஆ) மேற்படி ஒன்றியம் லாபத்தில் இயங்கவில்லை.

**91—**

## பால்வள கடன்

**வினா 1370—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் தேசிய பால்வள வாரியத்தில் பெற்றுள்ள திட்டக் கடன் எவ்வளவு?

(ஆ) கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் அந்தக் கடனுக்குச் செலுத்தப்பட்ட வட்டி எவ்வளவு?

(இ) வட்டியினால் ஏற்படும் நஷ்டத்தைச் சரிக்கட்ட அரசு ஆவன செய்யுமா?



2002 மார்ச் 15]

விடை—

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு, பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் தேசிய பால்வள வாரியத்தில் பெற்றுள்ள திட்டக் கடன் ரூ. 8.97 கோடியாகும்.

(ஆ) கடந்த 2000-2001ஆம் ஆண்டில் கடனுக்குச் செலுத்திய வட்டித் தொகை ரூ. 98.25 இலட்சங்கள் ஆகும்.

(இ) நட்டத்தில் இயங்கிவரும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களை மேம்படுத்த மாதந்தோறும் நடைபெறுகின்ற உற்பத்தியாளர் ஒன்றியங்கள் கூட்டத்தில் (Programme Action Committee) சிறப்பு திட்டச் செயல்பாடு கூட்டத்தில் ஆணையரால் ஆய்வு செய்தும், அறிவுரைகள் வழங்கியும் நட்டத்தைக் குறைக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**92—**

## பால்வள கடன்

**வினா 1371—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் தேசிய பால்வள வாரியத்தில் பெற்றுள்ள திட்டக் கடன் எவ்வளவு?

(ஆ) கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் அந்தக் கடனுக்குச் செலுத்தப்பட்ட வட்டி எவ்வளவு?

(இ) வட்டியினால் ஏற்படும் நஷ்டத்தினைச் சரிக்கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு, பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் தேசிய பால்வள வாரியத்தில் பெற்றுள்ள திட்டக் கடன் ரூ. 1112.34 இலட்சங்கள் ஆகும்.

(ஆ) 2000-2001ஆம் ஆண்டில் கடனுக்குச் செலுத்தப்பட்ட வட்டி ரூ. 151.08 இலட்சங்கள் ஆகும்.

(இ) இந்த ஒன்றியம் வாயத்தில் இயங்குவதற்கு வேண்டிய அனைத்து செயல்பாடுகளையும் மேற்கொள்ளுமாறு திட்டச் செயல்பாடு கூட்டத்தில் சிறப்பு ஆணையர் அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**93—**

## பயிற்சிக் கட்டணம்

**வினா 306—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1999-2000 ஆண்டுகளில் மாவட்ட சாலைப் போக்குவரத்து நிறுவனத்தில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மாணவ/மாணவியர்கள் பயின்றவர்கள் எத்தனைபேர்?

(ஆ) அவர்களிடம் கட்டணமாக (படிப்பு) வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் 1999-2000 ஆண்டுகளில் மாவட்ட சாலைப் போக்குவரத்து நிறுவனத்தில் 575 தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும் மற்றும் ஒரு பழங்குடி இன மாணவருக்கும் கனரக வாகனம் ஓட்டுநர் பயிற்சியளிக்கப்பட்டது.

(ஆ) மேற்கூறிய மாணவர்களிடமிருந்து மாணவர் ஒருவருக்கு பயிற்சிக் கட்டணமாக 31-10-1999 வரை ரூ.12,200 வீதமும் 1-11-1999 முதல் ரூ.15,500 வீதமும் வசூலிக்கப்பட்டது.

**94—**

## பணிமனைக் கட்டடம்

**வினா 578—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் போக்குவரத்துக் கழகம், கோட்டம்-2, தருமபுரிக்குச் சம்பந்தப்பட்ட பணிமனைகள் எத்தனை உள்ளன?





(ஆ) அவைகளில் சொந்த கட்டடத்தில் இயங்கும் பணிமனைகள் எத்தனை?

(இ) சொந்த கட்டடத்தில் இயங்காத பணிமனைகள் எத்தனை? அவைகளுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்-கோ-2) தருமபுரிக்கு தற்போது மொத்தம் 14 பணிமனைகள் உள்ளன.

(ஆ) தருமபுரி அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் அனைத்துப் பணிமனைகளும் கழகத்திற்குச் சொந்தமான கட்டடங்களில்தான் இயங்கி வருகின்றன.

(இ) கேள்வி எழவில்லை.

**95—**

## சிறு பேருந்துகள்

**வினா 615—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுமைக்கும், மற்றும் எடப்பாடி தொகுதி, நாமக்கல் மாவட்டம், தருமபுரி மாவட்டம், சேலம் மாவட்டம் மற்றும் ஈரோடு மாவட்டம் ஆகிய பகுதிகளில் 2000-2001 ஆம் ஆண்டு வரை இயக்கப்படும் சிறு பேருந்துகள் (மினி பஸ்) எத்தனை?

(ஆ) சிறு பேருந்துகள் இயக்க அனுமதி கோரி நிலுவையிலுள்ள மனுக்கள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு முழுவதிலும் மற்றும் எடப்பாடி தொகுதியிலும் மற்றும் நாமக்கல் மாவட்டம், தருமபுரி மாவட்டம், சேலம் மாவட்டம் மற்றும் ஈரோடு மாவட்டம் ஆகிய பகுதிகளில் 2000-2001 ஆம் ஆண்டு வரை இயக்கப்படும் சிறு பேருந்துகள் எண்ணிக்கை கீழ்வருமாறு:

[2002 மார்ச் 15

| | | |
|---|---|---|
| தமிழ்நாடு முழுவதும் | : | 3973 |
| நாமக்கல் மாவட்டம் | : | 213 |
| தருமபுரி மாவட்டம் | : | 122 |
| சேலம் மாவட்டம் | : | 166 |
| ஈரோடு மாவட்டம் | : | 194 |
| எடப்பாடி தொகுதி மட்டும் | : | 14 |

(ஆ) சிறு பேருந்துகள் இயக்க அனுமதி கோரி நிலுவையிலுள்ள மனுக்கள் விவரம் கீழ்வருமாறு:—

| | | |
|---|---|---|
| தமிழ்நாடு முழுவதும் | : | 2054 |
| நாமக்கல் மாவட்டம் | : | 88 |
| தருமபுரி மாவட்டம் | : | 100 |
| சேலம் மாவட்டம் | : | 119 |
| ஈரோடு மாவட்டம் | : | 40 |

**96—**

## பேருந்து வசதி

**வினா 645 அ—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சாத்தான்குளம் தொகுதி, சாத்தான்குளம் ஒன்றியம், வடலிவிளை மற்றும் நகனை ஆகிய ஊர்களுக்குப் பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*வடலிவிளை மற்றும் நகனை ஆகிய குக்கிராமங்கள் நாசரேத்-சாத்தான்குளம், நாசரேத்—மெஞ்ஞானபுரம் ஆகிய இரு பிரதான சாலைகளுக்கிடையே, பிரதான சாலையிலிருந்து பிரிந்து உட்புறமாக அமைந்துள்ளன. வடலிவிளை, ஏறக்குறைய 50 வீடுகளும் மக்கள் தொகை சுமார் 200-ம் கொண்டது ஆகும். நகனை, சுமார் 150 வீடுகளும் மக்கள் தொகை சுமார் 900-ம் கொண்டது ஆகும். வடலிவிளையும், நகனையும்*



2002 மார்ச் 15]

*அடுத்தடுத்து 1.3 கி.மீ. தூரத்திற்குள் அமையப்பெற்றுள்ளன. நகனையிலிருந்து சுமார் 1.00 கி.மீ. தூரத்தில் உள்ள விலக்கு வந்து பேருந்து வசதி பெறுவதற்குப் போதிய வாய்ப்புகள் இருப்பதால், மிகவும் குறைந்த மக்கள்தொகை கொண்ட இக்குக்கிராமங்களுக்குப் பேருந்து இயக்குப சாத்தியக்கூறு ஏதும் இல்லை.*

**97—**

## பேருந்து இயக்குதல்

**வினா 1876—திரு. க. முருகவேல் ராஜன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வந்தவாசி தொகுதியில் விழுப்புரம் கோட்டம்-1, விழுப்புரம் கோட்டம்-2 மற்றும் கோட்டம்-3 ஆகிய போக்குவரத்துக் கழகங்கள் எண் 203 மூலம் இயங்கும் நடைகளை செய்யார் கிராமம் வழியாக நீட்டித்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?*

*(ஆ) மேலும், இத்திட்டத்தில் வேலூர் போக்குவரத்துக் கழகம் மூலம் இயங்கிக்கொண்டிருந்த நகரப் பேருந்து டபிள்யூ-9 என்ற பேருந்தினை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) வழித்தட எண் 203 பேருந்தை, அத்திப்பாக்கம், செம்பூர், செய்யார் வழியாக வழிமாற்றம் செய்தால், தற்போது போக்குவரத்து வசதியைப் பயன்படுத்திவரும் திரேசாபுரம், தெள்ளார், ஜப்திகாரணி, இளங்காடு கிராமப் பொதுமக்கள் நடைமுறையிலுள்ள வசதியை இழந்திடவும், அதனால் எதிர்ப்பும் எழ வாய்ப்புள்ளது. எனவே தட எண் 203 வழித்தடத்தை வழிமாற்றி, செய்யார், செம்பூர், அத்திப்பாக்கம் வழியாக இயக்க சாத்தியக்கூறு இல்லை.*

*(ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம் கோட்டம்-2) வேலூர் டபிள்யூ 9 நகரப் பேருந்தினை வந்தவாசி-செய்யார் கூட்டுச்சாலை 2 ? நடைகளும், வந்தவாசி - நல்லூர் வழி செய்யார் கூட்டுச்சாலை 2 நடைகளும் தொடர்ந்து இயக்கி வருகிறது.*

**98—**

## மினி பஸ் உரிமம்

**வினா 2405—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி, நாமக்கல், ஈரோடு மற்றும் சேலம் மாவட்டத்தில் வழங்கப்பட்ட மினி பஸ் உரிமத்தில் திரும்ப ஒப்படைக்கப்பட்டவைகள் எத்தனை?

(ஆ) அதற்கான காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி, நாமக்கல், ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களில் கீழ்க்கண்டவாறு சிற்றுந்து அனுமதிகள் (Mini Bus Permits) திரும்ப ஒப்படைக்கப்பட்டன.

| | |
|---|---|
| தருமபுரி | 14 |
| நாமக்கல் | 88 |
| ஈரோடு | 52 |
| சேலம் | 23 |

(ஆ) ஒரு சில இனங்களில், சிற்றுந்துகளின் வழித்தட தூரத்தை நீட்டிக்க வேண்டியிருந்ததால் பழைய அனுமதிகள் சரண் செய்யப்பட்டு புதிய அனுமதிகள் பெறப்பட்டுள்ளன. இன்னும் சில இனங்களில் போதிய வசூல் இல்லாததால், தொழிலில் ஏற்பட்ட இழப்பு காரணமாக அனுமதிகள் சரண் செய்யப்பட்டுள்ளன.

**99—**

## பேருந்துகள்

**வினா 2637—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 2000-2001-ஆம் ஆண்டு வரை இயக்கப்பட்டு வரும் அரசுப் பேருந்துகள் எத்தனை?

(ஆ) அவற்றை மேலும் அதிகரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(இ) அதன் விவரம் என்ன?



2002 மார்ச் 15]

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 31-3-2001 வரை இயக்கப்பட்டுவரும் அரசுப் பேருந்துகளின் எண்ணிக்கை 16,969 ஆகும்.

(ஆ) மற்றும் (இ) 2001-2002 ஆம் ஆண்டில் வயது முதிர்ந்த பழைய பேருந்துகளுக்குப் பதிலாக ரூ.150 கோடி செலவில் 1,550 புதிய பேருந்துகளை அறிமுகப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**100—**

## பணிமனைகள்

**வினா 2638—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் போக்குவரத்துக் கழகம் கோட்டம்-I, சேலத்திற்கு எத்தனை பணிமனைகள் உள்ளன?

(ஆ) அதில் சொந்தக் கட்டடத்தில் இயங்கும் பணிமனைகள் எத்தனை?

(இ) தனியார் கட்டடத்தில் இயங்கும் பணிமனைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) சேலம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் 14 பணிமனைகள் உள்ளன.

(ஆ) ஓமலூரில் உள்ள பணிமனை தவிர, அனைத்துப் பணிமனைகளும் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன.

(இ) ஓமலூரில் உள்ள பணிமனைக்குச் சொந்தமாகக் கட்டடம் கட்ட ஓமலூர் வட்டம் கோட்டமேட்டுப்பட்டி கிராமம் ஸ்ரீநல்லபெருமாள் கோவிலுக்குச் சொந்தமான நிலம் புல எண்14/3-இல் 3.50 ஏக்கர் நிலத்தினை இந்து சமய அறநிலையத் துறையிடம் இருந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2002 மார்ச் 15

## இரண்டாம் பட்டியல்

**1—**

### இலவச பட்டாக்கள்

**வினா 816—திரு. கே.சி. கருணாகரன்:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கோயம்புத்தூர் மாவட்டம், சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலும், மாவட்டத்தில் இதர பகுதிகளிலும், புறம்போக்கு நிலங்களில் பல ஆண்டுகளாக வசித்துவரும் மக்களுக்கு பட்டா வழங்குவதில் நிபந்தனைகளை நீக்கி இலவச பட்டாக்கள் தாமதமின்றி வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*விடை —*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர்:**

*கோயம்புத்தூர் மாவட்டம், சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலும், இதர பகுதிகளிலும் புறம்போக்கு நிலங்கள் தடை விதிக்கப்பட்டுள்ள வாய்க்கால் புறம்போக்கு, வாரி புறம்போக்கு, மந்தை புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்ட நிலங்களில் வசித்து வருபவர்களுக்கு அத்தடையை நீக்கி பட்டா வழங்க சாத்தியக்கூறுகள் இல்லை. தடை விதிக்கப்படாத பகுதிகளைப் பொறுத்தவரை பட்டாக்களை தாமதமின்றி வழங்க மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**2—**

### வீட்டுமனைப் பட்டா

**வினா 1993—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் பெரும்பாலான கிராமங்களில் இன்றுவரை வீட்டுமனைப் பட்டா வழங்கப்படாமலிருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் அனைத்து கிராமங்களிலும் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*



2002 மார்ச் 15]

*விடை—*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சமுதாயத்தில் பொருளாதாரத்தில் நலிவுற்ற நிலையிலுள்ள மக்களை முன்னேற்றுவதற்காக அடிப்படைத் தேவையான வசிப்பதற்கு இடம் வழங்குவது அரசின் கொள்கையாகும். ஒப்படை செய்ய எங்கெங்கு நிலம் உள்ளதோ அங்கு வீட்டுமனைகளை தகுதியுள்ள நபர்களுக்கு ஒப்படை செய்து வருவாய்த் துறை மக்களுக்கு உதவி செய்து வருகிறது.*

*இலவச வீட்டுமனைப் பட்டா கிராமப்புறங்களைப் பொறுத்தவரையில் ஆண்டு வருமானம் ரூ.16,000-க்கும் குறைவாக உள்ளவர்களுக்கும், நகர்ப்புறங்களைப் பொறுத்தவரையில் ஆண்டு வருமானம் ரூ.24,000-க்கு குறைவாக உள்ளவர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த அடிப்படையில் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களால் இலவசப் பட்டா வழங்கப்பட்டு வருகிறது.*

*தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் வீட்டுமனை பட்டா கோருபவர்களின் தகுதியின் அடிப்படையிலும் பட்டா கோரும் நிலத்தின் தகுதியின் அடிப்படையிலும் மாவட்ட ஆட்சியரால் வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.*

**3—**

### கள்ளச் சாராயம் ஒழித்தல்

**வினா 3306—திரு. வெ. ஏழுமலை:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செஞ்சி தொகுதி, கொங்கரப்பட்டு ஊராட்சியில் விற்கப்படும் கள்ளச் சாராயத்தை ஒழிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர் :**

*(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி, கொங்கரப்பட்டு ஊராட்சியில் கடந்த ஆறு மாதங்களில் கள்ளச் சாராய குற்றங்கள் எதுவும்*

[2002 மார்ச் 15

கண்டுபிடிக்கப்படவில்லை. இருப்பினும் தொடர் மதுவிலக்கு வேட்டை நடத்தப்பட்டு வருகின்றது. கடைசியாக 01-08-2001 அன்று நடத்திய மதுவிலக்கு வேட்டையில் எந்த மதுவிலக்கு குற்றமும் கண்டுபிடிக்கப்படவில்லை.

2001 ஆம் ஆண்டிலும் எந்த மதுவிலக்கு குற்றமும் இப்பகுதியில் கண்டுபிடிக்கப்படவில்லை.

4—

## கள்ளச் சாராய விற்பனையைத் தடுத்தல்

**வினா 3308—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதியில், வளத்தி காவல் நிலைய எல்லைகளில் கள்ளச் சாராய விற்பனையைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதியில் வளத்தி காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பாப்பன்தாங்கல், சொக்கப்பெருவளூர், மேல்மண்ணூர், ஈயக்குணம், பெண்ணகர், அம்மாக்குளம், நீலம்பூண்டி, தேவந்தவாடி, கொண்டூர், ஈச்சூர், பெரும்பூண்டி ஆகிய கிராமங்களில் இவ்வட்டத்தில் மதுவிலக்கு வேட்டை நடத்தியதில் இதுவரை 157 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 2000 ஆண்டில் 61 வழக்குகள் மேற்படி கிராமங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக்கிராமங்களில் தொடர் மதுவிலக்கு வேட்டை நடத்தப்பட்டு கள்ளச் சாராய விற்பனை நிகழாவண்ணம் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

5—

## எரிசாராய விற்பனையைத் தடுத்தல்

**வினா 3309—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 மார்ச் 15]

(அ) செஞ்சி வட்டம், பளப்பாக்கம் கிராமத்தில் எரிசாராய விற்பனையைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டிவனம் மதுவிலக்கு அமல் பிரிவினரால் செஞ்சி வட்டம், பளப்பாக்கம் கிராமத்தில், எரிசாராய வேட்டை 04-07-2001, 07-07-2001, 13-07-2001, 15-07-2001, 21-07-2001 மற்றும் 01-08-2001 ஆகிய நாட்களில் மேற்கொள்ளப்பட்டது. அங்கு எரிசாராய குற்றங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. 1999 ஆம் ஆண்டு 5 வழக்குகள் குற்றப்பிரிவு 4(1)(ஐ) மற்றும் தலைப்பு 6, தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2000 ஆண்டு 6 வழக்குகளும், 2001 ஆம் ஆண்டு 3 வழக்குகளும் குற்றப்பிரிவு 4(1)(ஐ) மற்றும் தலைப்பு 6, தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. தற்போது இக்கிராமத்தில் யாரும் இத்தொழிலில் ஈடுபடுவதில்லை. மேலும், இக்கிராமத்தில் மதுவிலக்கு குற்றங்கள் நிகழாவண்ணம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

6—

## களையூரில் எரிசாராய விற்பனை

**வினா 3310—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, களையூரில் எரிசாராய விற்பனையைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர்:**

(அ) திண்டிவனம் மதுவிலக்கு அமல் பிரிவினரால் களையூரில் எரிசாராய வேட்டை 04-07-2001, 07-07-2001, 13-07-2001, 15-07-2001, 21-07-2001 மற்றும் 01-08-2001 ஆகிய நாட்களில் மேற்கொள்ளப்பட்டது.



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224483
சென்னை-600 008

[2002 மார்ச் 15

அங்கு கள்ளச் சாராயம் விற்பனை செய்தது தொடர்பாக திண்டிவனம் மதுவிலக்கு அமல் பிரிவில் 5 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 5 நபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டனர். மேலும், அவர்களிடமிருந்து 65 லிட்டர் கள்ளச் சாராயமும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது. ஆனால் எரிசாராய குற்றங்கள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

(ஆ) இக்கிராமத்தில் மதுவிலக்கு குற்றங்கள் நிகழாவண்ணம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**7—**

### கள்ளச் சாராய விற்பனை

**வினா 4406—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் எத்தனை இடங்களில் கள்ளச் சாராயம் அடியோடு ஒழிக்கப்பட்டுவிட்டது என்று அரசு அறிவித்துள்ளது?

(ஆ) அதற்காக கள்ளச் சாராய விற்பனையை ஒழித்து அரசு எடுத்துவரும் நடவடிக்கை என்ன?

விடை —

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் எந்த ஒரு கரும்புள்ளி கிராமமும் கள்ளச் சாராயம் இல்லாத கிராமமாக அரசால் அறிவிக்கப்படவில்லை.

சேலம் மாவட்ட காவல் துறையினரும், மதுவிலக்கு பிரிவினரும் மதுவிலக்கு மத்திய புலனாய்வு அலகும் தொடர்ந்து மதுவிலக்கு குற்றவாளிகளுக்கு எதிராக எடுத்த நடவடிக்கையினால் அம்மாவட்டத்தில் மதுவிலக்குக் குற்றங்கள் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு (2000) சேலம் மாவட்டத்தில் மட்டும் 5,990 முறை மதுவிலக்கு வேட்டை நடத்தி, 22,524 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, அவற்றில் சம்பந்தப்பட்ட 19,444 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். 2,41,937 லிட்டர் கள்ளச் சாராயமும், 20,00,585 லிட்டர் சாராய ஊறலும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது. கள்ளச் சாராயம் கடத்த



2002 மார்ச் 15]

பயன்படுத்தப்பட்ட நான்கு சக்கர வாகனங்கள் 11, இரண்டு சக்கர வாகனங்கள் 197 கைப்பற்றப்பட்டுள்ளன. சேலம் மாவட்டத்தில் மட்டும் 45 மதுவிலக்குக் குற்றவாளிகள் தடுப்புக் காவல் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். 44 கரும்புள்ளி கிராமங்களில் மதுவிலக்கு ஒழிப்பு விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு அவற்றின் மூலமாக கள்ளச் சாராய நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2. நடப்பு ஆண்டில் (2001) இம்மாதம் வரை 3,578 முறை கள்ளச் சாராய சோதனை நடத்தப்பட்டு, 11,880 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 1,07,810 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். 1,75,568 லிட்டர் கள்ளச் சாராயமும் 13,42,080 லிட்டர் சாராய ஊறலும் மதுவிலக்கு வேட்டையின்போது கைப்பற்றி அழிக்கப்பட்டது. சாராயக் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட 7 நான்கு சக்கர வாகனங்களும், 93 இரண்டு சக்கர வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. இதுவரை 13 மதுவிலக்குக் குற்றவாளிகள் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இதுவரை 28 கரும்புள்ளி கிராமங்களில் மதுவிலக்கு விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு அதனால் மதுவிலக்குக் குற்றங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

**8—**

### சுற்றுச் சுவர்

**வினா 4798—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடியிலுள்ள சார் பதிவாளர் அலுவலக புதிய கட்டடத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர்:**

சேலம் (மேற்கு) பதிவு மாவட்டத்தைச் சேர்ந்த எடப்பாடி சார் பதிவாளர் அலுவலக புதிய கட்டடத்திற்கு சுற்றுச் சுவர் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

9— [2002 மார்ச் 15

## பட்டா

**வினா 8690—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரம், சீரங்குப்பம் வார்டில், சீரங்குப்பம் புறம்போக்கு இடத்தில் வாழும் மக்களுக்கு அரசு பட்டா வழங்கிட முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சமுதாயத்தில் பொருளாதாரத்தில் நலிவுற்ற நிலையிலுள்ள மக்களை முன்னேற்றுவதற்காக அடிப்படைத் தேவையான வசிப்பதற்கு இடம் வழங்குவது அரசின் கொள்கையாகும். ஒப்படை செய்ய எங்கெங்கு நிலம் உள்ளதோ அங்கு வீட்டுமனைகளை தகுதியுள்ள நபர்களுக்கு ஒப்படை செய்து வருவாய்த் துறை மக்களுக்கு உதவி செய்து வருகிறது.

2. இலவச வீட்டுமனைப் பட்டா கிராமப்புறங்களைப் பொறுத்தவரையில் ஆண்டு வருமானம் ரூ.16,000-க்கும் குறைவாக உள்ளவர்களுக்கும் நகர்ப்புறங்களைப் பொறுத்தவரையில் ஆண்டு வருமானம் ரூ.24,000-க்கும் குறைவாக உள்ளவர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த அடிப்படையில் அந்தந்த மாவட்டாட்சியர்களால் இலவசப் பட்டா வழங்கப்பட்டு வருகிறது.

3. இதே அடிப்படையில் பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரம், சீரங்குப்பம் வார்டில், சீரங்குப்பம் புறம்போக்கு இடத்தில் வாழும் மக்களுக்கு பட்டா வழங்க கடலூர் மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுப்பார்.



2002 மார்ச் 15]

10—

## வாடகை கட்டடங்கள்

**வினா 9898—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள சார் பதிவாளர் அலுவலகங்களில் எத்தனை வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்றன?

(ஆ) அவை, சொந்தக் கட்டடங்களில் இயங்க, அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர்:**

(அ) திருவண்ணாமலை பதிவு மாவட்டத்தில் இயங்கும் மொத்த சார் பதிவாளர் அலுவலகங்கள் 13. அவற்றில் கீழ்க்கண்ட எட்டு சார் பதிவாளர் அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன:—

1. தேவிகாபுரம்
2. மங்களம்
3. வேட்டவலம்
4. கடலாடி
5. தண்டராம்பட்டு
6. அசல் பத்திரப்பதிவு அலுவலகம் (திருவண்ணாமலை)
7. கீழ்பென்னாத்தூர்
8. தானிப்பாடி

(ஆ) மேற்படி வாடகை கட்டடத்தில் இயங்கும் சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு தற்போதைக்கு அரசின் பரிசீலனையில் இல்லை.

[2002 மார்ச் 15

11—

## கட்டட வசதி

**வினா 301—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999-2000 ஆண்டில் தமிழ்நாட்டில் எத்தனை நூலகங்களுக்கு அரசு கட்டடம் கட்டி கொடுத்துள்ளது?

(ஆ) தனியார் கட்டடத்தில் இயங்கும் நூலகம் அரசு கட்டடங்களில் இயங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) 1999-2000 ஆண்டில் 53 கிளை நூலகங்களுக்கு நூலக நிதியிலிருந்தும், 12 கிளை நூலகங்களுக்கு பிற நிதியிலிருந்தும் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. மேலும், 21 ஊர்ப்புற நூலகங்களுக்கு பிற நிதியிலிருந்து கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

(ஆ) வாடகைக் கட்டடத்தில் இயங்கும் நூலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட இலவசமாக காலிமனை பெறப்பட வேண்டும். தனியார் கட்டடத்தில் அதாவது வாடகைக் கட்டடத்தில் செயல்படும் 2 மாவட்ட மைய நூலகம் மற்றும் 99 கிளை நூலகங்கள் ஆகமொத்தம் 101 நூலகங்களுக்கு 2001-2002ஆம் ஆண்டில் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

12—

## நூலகம் திறத்தல்

**வினா 305—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியில் 5000 பொதுமக்கள் வசிக்கும் கிராமங்களில் நூலகம் இன்னும் திறக்கப்படாமல் எத்தனை கிராமங்கள் உள்ளன?

(ஆ) அவற்றில் இந்த நிதியாண்டில் நூலகம் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



2002 மார்ச் 15]

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் 5,000-க்கு மேல் மக்கள்தொகை இருந்தும் இன்னும் நூலகம் திறக்கப்படாமல் உள்ள கிராமம் பூலாம்பட்டி ஒன்று மட்டுமே ஆகும். பூலாம்பட்டி கிராம மக்களிடமிருந்து நூலகம் திறக்கக் கோரி விண்ணப்பம் ஏதும் பெறப்படாததாலும், ஒரு பகுதி நேர நூலகம் திறப்பதற்கான கீழ்க்கண்ட நிபந்தனைகளை நிறைவேற்றாததாலும் அக்கிராமத்தில் நூலகம் திறக்க இயலவில்லை.

(1) நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

(2) எதிர்காலத்தில் நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலிமனை நூலக ஆணைக் குழு பெயருக்கு பத்திரப்பதிவு செய்து தருதல் வேண்டும்.

(3) 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(4) ரூ.2,000 மதிப்புள்ள தளவாடப் பொருட்கள் நன்கொடையாக அளிக்கப்பட வேண்டும்.

(5) ரூ.1000 செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

13—

## ஆரம்பப் பள்ளிகள்

**வினா 507—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதியில், எடப்பாடி, கொங்கணாபுரம் மற்றும் மகுடஞ்சாவடி ஒன்றியங்களில் இந்த நிதியாண்டில் (2001-2002) புதிதாக துவக்க தேர்வு செய்யப்பட்ட ஆரம்பப் பள்ளிகள் எத்தனை? எந்தெந்த ஊரில்?

விடை — [2002 மார்ச் 15

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

எடப்பாடி, கொங்கணாபுரம் மற்றும் மகுடஞ்சாவடி ஆகிய ஒன்றியங்களில் முண்டச்சியூர், கள்ளபாளையம் காட்டுவளைவு அருந்ததியர் காலனி, இரும்பாலை பாரகல்லூர், பண்டிகாரனூர் மற்றும் தாசங்காடு ஆகிய ஊர்களில் புதியதாக தொடக்கப் பள்ளிகள் துவங்கிட கருத்துருக்கள் பெறப்பட்டுள்ளன. ஆனால் அரசின் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு 2001-2002 கல்வியாண்டில் புதிய தொடக்கப் பள்ளிகள் எதும் தொடங்கப்படவில்லை.

**14—**

## காலிப் பணியிடங்களை நிரப்புதல்

**வினா 1240—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தற்போது காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களைப் பூர்த்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை —

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் ஆண்டில் வழங்கப்படவிருக்கும் பதவி உயர்வின் மூலமும், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தெரிவு செய்யப்படும் நபர்களைக் கொண்டும் மேற்கண்ட பள்ளியில் காலியாக உள்ள பணியிடங்கள் பூர்த்தி செய்யப்படும்.

**15—**

## ஆசிரியர் பணியிடங்கள்

**வினா 1245—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை மேல்நிலைப் பள்ளியில் தற்போது காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?



2002 மார்ச் 15]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை —

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் ஆண்டில் வழங்கப்படவிருக்கும் பதவி உயர்வின் மூலமும், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தெரிவு செய்யப்படும் நபர்களைக் கொண்டும் மேற்கண்ட பள்ளியில் காலியாக உள்ள பணியிடங்கள் பூர்த்தி செய்யப்படும்.

**16—**

## பழைய மாணவர்கள் ஆலோசனை

**வினா 2224—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிக் கூடங்களில் பயின்று உயர் பதவியிலோ, சமூக சேவையிலோ இருக்கும் பழைய மாணவர்களின் ஆலோசனையையும் உதவியையும் பெற பள்ளிக் கூட நிர்வாகத்தினை அரசு கேட்டுக்கொள்ளுமா?

விடை —

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

தற்போது பெரும்பாலும் பள்ளிகளில், பழைய மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகளுக்கு அவ்வப்போது நன்கொடை மற்றும் பள்ளி வளர்ச்சிக்கு வேண்டிய உதவிகளையும், ஆலோசனைக் கருத்துகளையும் செய்து வருகின்றனர். அதேபோன்று உயர் பதவியில் இருக்கிறவர்களும், சமூக சேவையில் உள்ளவர்களும் தாங்கள் பயின்ற பள்ளிகளுக்கு அவ்வப்போது உதவி செய்கின்றனர். அவ்வப்போது பள்ளி நிர்வாகங்கள், பள்ளித் தலைமை ஆசிரியர்கள் பழைய மாணவர்களை அழைத்து கூட்டங்களை நடத்தி ஆலோசனைகளையும் பெறுகின்றார்கள். எனவே இது தொடர்பாக பள்ளி நிர்வாகங்களுக்கு அரசு தனியே அறிவுரை ஏதும் வழங்கும் தேவை எழவில்லை.

[2002 மார்ச் 15

17—

## நூலகம் அமைத்தல்

**வினா 2753—திரு. தி. வேல் முருகன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதியிலுள்ள தையல் குணாம்பட்டினம், தம்பிப்பேட்டை ஆகிய இடங்களில் நூலகம் அமைத்துத் தருவாரா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதியிலுள்ள தையல் குணாம்பட்டினத்தின் மக்கள்தொகை 1,952 ஆகும். தம்பிப்பேட்டையின் மக்கள்தொகை 1,496 ஆகும். மக்கள்தொகையின் அடிப்படையில் இவ் விடங்களில் பகுதிநேர நூலகம் திறக்கலாம். ஆனால் அவ்வூர் மக்கள் ஒரு நூலகம் திறக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாததால் அவ்வூர்களில் நூலகம் திறக்க இயலவில்லை:—

(1) நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்

(2) பின்னர் நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலி மனை நூலக ஆணைக் குழு பெயருக்கு பத்திரப் பதிவு செய்து கொடுக்க வேண்டும்.

(3) ரூ. 2,000 மதிப்புள்ள தளவாடப் பொருட்கள் நன்கொடையாக அளிக்கப்பட வேண்டும்.

(4) 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(5) ரூ. 1,000 வீதம் செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.



2002 மார்ச் 15]

18—

## இம்ப்ரூவ்மெண்ட் தேர்வு

**வினா 3458—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற ப்ளஸ் 2 தேர்வில் மேம்படுத்தும் (இம்ப்ரூவ்மெண்ட்) தேர்வு எழுதியவர்கள் எத்தனை பேர்?

(ஆ) எந்த மாவட்டத்தில் இத்தேர்வினை அதிகமான மாணவர்கள் எழுதியுள்ளனர்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) 2001 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற ப்ளஸ் 2 தேர்வில் மேம்படுத்தும் (இம்ப்ரூவ்மெண்ட்) தேர்வினில் முதன் முறையாக இம்ப்ரூவ்மெண்ட் தேர்வினை (6666 Category) 16,817 மாணவர்களும் இரண்டு அல்லது அதற்கு மேம்பட்ட வகையில் இம்ப்ரூவ்மெண்ட் தேர்வினை (7777 Category) 985 மாணவர்களும் தேர்வெழுதி பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

(ஆ) மார்ச், 2001 மேல்நிலைத் தேர்வினில் முதன் முறையாக இம்ப்ரூவ்மெண்ட் தேர்வினை (6666 Category) மிக அதிக மாணவர்கள் நாமக்கல் மாவட்டத்தில் தேர்வெழுத பதிவு செய்யப்பட்டுள்ளனர். அங்ஙனம் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 1,253. மேலும் இம்ப்ரூவ்மெண்ட் தேர்வினை இரண்டு அல்லது அதற்கு மேம்பட்ட வகையில் (7777 Category) மிக அதிக மாணவர்கள் தருமபுரி மாவட்டத்தில் தேர்வெழுதி பதிவு செய்யப்பட்டுள்ளனர். அங்ஙனம் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை-092.

19—

## வரலாறு ஆசிரியர் நியமித்தல்

**வினா 4155—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2002 மார்ச் 15

சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் கே.ஏ. நா. அரசினர் மேல்நிலைப் பள்ளியில் காலியாகவுள்ள பி.டி. வரலாறு ஆசிரியர் பணியிடத்தில் உடனடியாக நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை —

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் கே.ஏ.நா. அரசினர் மேல்நிலைப் பள்ளியில், பெரியபட்டி அரசினர் உயர்நிலைப் பள்ளி இடைநிலை ஆசிரியர் திரு. ஜி. ரமணி என்பவர் பள்ளி உதவியாசிரியர் (வரலாறு) பதவி உயர்வு பெற்று 16-8-2001 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார். எனவே இப்பள்ளியில் வரலாறு பட்டதாரி ஆசிரியர் பணியிடம் தற்போது காலியாக இல்லை.

**20—**

## சுற்றுச் சுவர்

**வினா 6735—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் கோவிந்தசாமி அரசு கலைக் கல்லூரிக்கு சுற்றுச் சுவர் கட்டிட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**21—**

## பள்ளித் தரம் உயர்த்துதல்

**வினா 7155—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 மார்ச் 15]

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தில் சிக்கம்பட்டி ஊராட்சியிலுள்ள பெரியகாடம்பட்டி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை —

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் கல்வியாண்டில் 100 அரசு/ஊராட்சி ஒன்றிய / நகராட்சி/ மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தியும், அரசு மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து மகளிரைப் பிரித்து மகளிர் உயர்நிலைப் பள்ளிகளாகத் தொடங்கவும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பள்ளி குறித்து வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டு உயர்மட்டக் குழுவால் பரிந்துரைக்கப்படுமானால் அரசின் நிதி நிலைமைக்குட்பட்டு உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

**22—**

## பள்ளித் தரம் உயர்த்துதல்

**வினா 7158—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், எல்லாபூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற இந்த நிதியாண்டில் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் கல்வியாண்டில் 100 அரசு/ஊராட்சி ஒன்றிய/நகராட்சி/மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தியும், அரசு மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து மகளிரைப் பிரித்து மகளிர் உயர்நிலைப் பள்ளிகளாகத் தொடங்கவும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பள்ளி குறித்து வரும்

[2002 மார்ச் 15

கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டு உயர்மட்டக் குழுவால் பரிந்துரைக்கப்படுமானால் அரசின் நிதி நிலைமைக்குட்பட்டு உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

**23—**

## பொது நூலகம் அமைத்தல்

**வினா 7324—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், குட்டம் ஊராட்சி, அண்ணா நகர் கிராமத்தில் பொது நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், குட்டம் ஊராட்சியில் ஏற்கெனவே ஊர்ப்புற நூலகம் செயல்படுகிறது. அண்ணா நகர் என்பது குட்டம் ஊராட்சியின் ஒரு பகுதியாகும். அண்ணா நகர் பகுதியில் நூலகம் இல்லை. அண்ணா நகர் பகுதியில் மக்கள்தொகை சுமார் 400 மட்டுமே உள்ளது. அண்ணா நகர் பகுதி மக்கள் குட்டம் ஊர்ப்புற நூலகத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம். இருப்பினும் அண்ணா நகர் பகுதி பொது மக்கள் கீழ்க்காணும் நிபந்தனைகளை நிறைவு செய்து தரும் பட்சத்தில், ராதாபுரம் வட்டம், குட்டம் ஊராட்சி, அண்ணா நகர் பகுதியில் ஒரு பகுதிநேர நூலகம் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும்:

(1) நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

(2) எதிர்காலத்தில் நூலகத்திற்கு சொந்த கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலிமனை நூலக ஆணைக் குழு பெயருக்கு பத்திரப் பதிவு செய்து தரப்பட வேண்டும்.

(3) 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(4) ரூ. 2,000 மதிப்புள்ள தளவாடங்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.



2002 மார்ச் 15]

(5) ரூ.1,000 வீதம் செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

**24—**

## மகளிர் மேல்நிலைப் பள்ளிகள்

**வினா 7342—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் மொத்தம் எத்தனை மகளிர் மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன? அதில் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளிகள், அரசு நிதியுதவி பெறும் தனியார் மகளிர் மேல்நிலைப் பள்ளிகள், சுயநிதி தனியார் மகளிர் மேல்நிலைப் பள்ளிகள் எத்தனை உள்ளன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

| | | |
|---|---|---|
| தமிழகத்தில் உள்ள மகளிர் மேல்நிலைப் பள்ளிகள் மொத்த எண்ணிக்கை | : | 456 |
| அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளிகள் | : | 221 |
| அரசின் நிதியுதவி பெறும் தனியார் மகளிர் மேல்நிலைப் பள்ளிகள் | : | 228 |
| சுயநிதி தனியார் மகளிர் மேல்நிலைப் பள்ளிகள் | : | 7 |

**25—**

## மேல்நிலைப் பள்ளி

**வினா 7387—திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் சின்னமலைப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியை தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2002 மார்ச் 15

விடை.—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் கல்வியாண்டில் 125 அரசு /நகராட்சி/ ஊராட்சி உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பள்ளி குறித்து வருகிற கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டால் உயர்மட்டக் குழுவால் பரிந்துரைக்கப்படின், அரசின் நிதிநிலைக்குட்பட்டு, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

**26—**

## உயர்கல்வி மன்றம்

**வினா 7648—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் எத்தனை உறுப்பினர்களைக் கொண்டது?

(ஆ) 2000-2001 ஆம் ஆண்டில் உயர்கல்வி மேம்பாட்டிற்கான திட்டம் என்ன?

விடை.—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் 14 உறுப்பினர்களையும் 3 [illegible] தேர்வு செய்யும் உறுப்பினர்களையும் கொண்டது.

(ஆ) 2000-2001 ஆம் ஆண்டில் உயர்கல்வி மேம்பாட்டிற்கென கீழ்க்காணும் பொருள்கள் குறித்து பரிந்துரைகள் இம்மன்றத்தால் அளிக்கப்பட்டுள்ளன:—

சென்னையில் வணிகவியல் பள்ளி துவக்குதல்.

பல்கலைக்கழக ஆசிரியர் தேர்வாணையம்.

தன்னாட்சிக் கல்லூரிகளில் பேராசிரியர்கள் பணியிடம் உருவாக்குதல்.

புதுமைக் கல்லூரிகள் தொடங்குதல்.

சுற்றுப்புறச் சூழல் என்ற பாடத்தினை கட்டாயப் பாடமாக அனைத்து பாடப் பிரிவுகளிலும் அறிமுகப்படுத்துதல்.



2002 மார்ச் 15]

மாநில அளவிலான தகுதித் தேர்வு (SLET) நடத்துதல்.

ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்தும் தகுதித் தேர்வு.

திறமையான பல்கலைக்கழக ஆசிரியர்களை கௌரவித்தல்.

மாநில சட்டப் பேரவை, பாராளுமன்றம் ஆகியவற்றில் உறுப்பினராகும் ஆசிரியர்களுக்கு விடுப்பு அளித்தல்.

பல்கலைக்கழகத் தேர்வு முடிவுகளை தத்தம் வெப்தளத்தில் வெளியிடுவதோடு தேசிய தகவல் மைய வசதிகளையும் பயன்படுத்திக் கொள்ளுதல்.

பெருகிவரும் தகவல் தொழில் நுட்பத்தினை பயன்படுத்திக்கொள்ளும் வகையில் இணையத்தின் வழி கற்பிக்கும் முறையில் பாடங்களை உருவாக்குதல்.

பல்கலைக்கழகங்கள் மற்றும் தன்னாட்சிக் கல்லூரிகளில் ஒரே மாதிரியான பாடத் திட்டத்தினை பின்பற்றுதல்.

கல்லூரிகளை ஒருங்கிணைத்தல்.

தொழில்நுட்பப் பாடப் பிரிவுகளில் இரட்டை பட்டப் படிப்பு முறையினை அறிமுகப்படுத்துதல்.

பல்கலைக்கழகங்களின் வளர்ச்சிக்கான நிதி ஆதாரங்களை பல்கலைக்கழகங்களே உருவாக்கிக்கொள்ளுதல்.

மேலும் பாடத் திட்டங்களை மேம்படுத்தும்பொருட்டு கணிப்பொறி கல்வி, இயற்பியல் மற்றும் வேதியியல் ஆகிய இளநிலை பட்டப் படிப்புகளுக்கான பாடத் திட்டங்களின்மீது கருத்தரங்குகள் நடத்தப் பெற்றன. பட்டப் படிப்பினில் பயிலும் மாணவர்களின் செயல்திறனை அதிகரிக்கும்பொருட்டு இளநிலை வணிகவியல் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றில் பயிலும் மாணவர்களின் செயல்திறன் குறித்த கருத்தரங்கம் நடத்தப்பெற்றது. நம் நாட்டின் முன்னேற்றத்திற்கும் மாநிலத்தின் முன்னேற்றத்திற்கும் ஏற்ப நம் மாநில பல்கலைக்கழகங்களில் அமைந்துள்ள சில துறைகளை உயர் தனிச் சிறப்பு மையங்களாக மேம்படுத்த அரசுக்கு ஆலோசனை அளிக்கப்பட்டது.

27—

[2002 மார்ச் 15

## பள்ளித் தரம் உயத்துதல்

**வினா 8413—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஒன்றியம், மன்னாடிமங்கலம் நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தித் தர நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஒன்றியம், மன்னாடிமங்கலம் நடுநிலைப் பள்ளியை நேரிடையாக மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த இயலாது. அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளை பூர்த்தி செய்யும் உயர்நிலைப் பள்ளிகள் மட்டுமே உயர்மட்டக் குழுவால் மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தக் கருதப்படும்.

28—

## இலங்கைத் தமிழ் அகதிகள்

**வினா 8843—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 2001 ஆம் ஆண்டு மே மாதம் வரை இந்தியாவிற்கு வந்த இலங்கைத் தமிழ் அகதிகள் எவ்வளவு பேர்?

(ஆ) அவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு அரசு எவ்வளவு ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்கிறது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் 2001 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் தேதி முடிய இலங்கையிலிருந்து 17,286 குடும்பங்களில் அடங்கிய 64,359 இலங்கைத் தமிழ் அகதிகள் இந்தியாவிற்கு வந்துள்ளனர். இவர்கள் அனைவரும் தமிழ்நாட்டில் 23 மாவட்டங்களிலுள்ள (சென்னை, நாகை, தஞ்சை, தேனி, திருவாரூர் மற்றும் நீலகிரி நீங்கலாக) 116 முகாம்களில் தங்க வைக்கப்பட்டு வாழ்ந்து வருகின்றனர்.



2002 மார்ச் 15]

(ஆ) இலங்கை அகதிகளுக்கு 1998-1999 ஆம் ஆண்டு முதல் 2001-2002 ஆம் ஆண்டு வரையில் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது:—

| ஆண்டு | ஒதுக்கீடு | செலவு |
|---|---|---|
| 1998-1999 | ரூ.26,03,44,000/- | ரூ.25,46,88,000/- |
| 1999-2000 | ரூ.26,48,24,000/- | ரூ.24,54,68,000/- |
| 2000-2001 | ரூ.23,29,50,000/- | ரூ.21,68,62,000/- |
| 2001-2002 | ரூ.23,22,28,000/- | ரூ.7,31,98,494/- |

(31-8-2001 முடிய நடப்பில் உள்ளது)

29—

## நூல் நிலையம்

**வினா 9115—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, கொளக்காட்டு புதூர் கிராமத்தில் நூல் நிலையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, கொளக்காட்டு புதூர் கிராமத்தின் மக்கள்தொகை 3,750 ஆகும். மக்கள்தொகையின் அடிப்படையில் அவ்வூரில் பகுதிநேர நூலகம் திறக்கலாம். அவ்வூர் மக்கள், நூலகம் அமைக்க வேண்டி விண்ணப்பிக்காததாலும், நூலகம் அமைக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளை நிறைவு செய்யாததாலும் அவ்வூரில் நூலகம் திறக்க இயலவில்லை:—

(1) நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

(2) எதிர்காலத்தில் நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலி மனை நூலக ஆணைக் குழு பெயருக்கு பத்திரப் பதிவு செய்து தரப்பட வேண்டும்.

(3) 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(4) ரூ.2,000 மதிப்புள்ள தளவாடங்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

[2002 மார்ச் 15

(5) ரூ.1,000/-வீதம் செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

**30—**

## நூலகம் தொடங்குதல்

**வினா 9116—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, கோலாரம் புதூர் கிராமத்தில் நூலகம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, கோலாரம் புதூர் கிராம மக்களிடமிருந்து நூலகம் தொடங்கக் கோரி விண்ணப்பம் ஏதும் பெறப்படாததாலும், நூலகம் திறக்க கீழ்க்கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததாலும் அவ்வூரில் நூலகம் திறக்க இயலவில்லை:—

(1) நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

(2) பின்னர் நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலிமனை நூலக ஆணைக் குழு பெயருக்கு பத்திரப் பதிவு செய்து தருதல் வேண்டும்.

(3) ரூ.2,000/- மதிப்புள்ள தளவாடப் பொருட்கள் நன்கொடையாக அளிக்கப்பட வேண்டும்.

(4) 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(5) ரூ.1,000/-வீதம் செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

**31—**

## அகதிகள் மறுவாழ்வு

**வினா 11437—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2002 மார்ச் 15]

2000-2001 ஆம் நிதியாண்டில் அகதிகள் மறுவாழ்விற்காக தமிழக அரசு ஒதுக்கிய நிதி எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

இலங்கை அகதிகளுக்காக அரசு கீழ்க்கண்ட தலைப்புகளில் 2000-2001 ஆம் நிதி ஆண்டில் வழங்கிய நிதி ஒதுக்கீடு வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| (1) | 2235-01-105-ஏஏ (வாகனங்கள் பராமரிப்பு மற்றும் எரிபொருள்) | : | ரூ. 2,93,000 |
| (2) | 2235-01-105-எச் (அகதிகள் பராமரிப்பு) | : | ரூ. 23,92,33,000 |
| (3) | 2235-60-200-ஜே.எல். (இலவச வேட்டி, சேலை வழங்குதல் மாநில அரசு திட்டம்) | : | ரூ. 28,00,000 |
| | மொத்தம் | : | ரூ. 24.23,26,000 |

**32—**

## புதிய மின் மீட்டர்கள்

**வினா 12—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மின்சார வாரியத்தில் பழைய மீட்டர்களை அகற்றி புதிய மின் மீட்டர்களைப் பொருத்தியது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அதன் விவரம் என்ன, அதனால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மின் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மின் வாரியத்தில் பழைய மீட்டர்களையும், குறைபாடுள்ள மீட்டர்களையும் அகற்றி புதிய மீட்டர்கள் பொருத்துவது நடைமுறையில் இருக்கும் வழக்கம். 2000 ஆண்டில், உயர்தர

[2002 மார்ச் 15

மீட்டர்கள் வாங்கப்பட்டன. இந்த உயர்தர மீட்டர்கள் மிகக் குறைந்த அளவு பயனீட்டளவையும், அதாவது 40 வாட்ஸ் முதல், துல்லியமாகப் பதிவு செய்கின்றன. தமிழ்நாடு மின் வாரியத்தில் நடைமுறையிலிருக்கும் வழக்கப்படி, பழைய மீட்டர்களும் குறைபாடுள்ள மீட்டர்களும் அகற்றப்பட்டு உயர்தர மீட்டர்கள் பொருத்தப்படுகின்றன. இதனால் தமிழ் நாடு மின் வாரியத்தின் வருவாய் அதிகரிக்கும். இவ்வாறு அகற்றப்பட்ட பழைய மீட்டர்கள் நல்ல நிலையில் இருந்தால் அவை குறைந்த மாத பயனீட்டளவு உள்ள மின் இணைப்புகளிலும் உயர்தர மீட்டர்கள் கிடைக்காத போதிலும் உபயோகிக்கப்படுகின்றன. பழைய மீட்டர்களை அகற்றி உயர்தரமீட்டர்கள் பொருத்துவதால், பயனீட்டளவு துல்லியமாகப் பதிவு செய்யப்படுகிறது. அதனால் வாரியத்தின் வருவாயும் அதிகரித்துள்ளது. எனவே பழைய மீட்டர்களை அகற்றி உயர்தர மீட்டர்கள் பொருத்துவதால் வாரியத்திற்கு எந்த இழப்பும் ஏற்படவில்லை.

33—

## மின் வசதி

**வினா 1422—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், உவரி கிராமப் பகுதியில் வசித்துவரும் மீனவ மக்களின் வீடுகளுக்கு மின் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மின் துறை அமைச்சர்:**

உவரி கிராமப் பகுதியில் குடிசைகளுக்கான மின் இணைப்பு வேண்டி பெறப்பட்ட விண்ணப்பங்கள் 61-ம் ஆய்வு செய்யப்பட்டு மின் வாரிய விதிகளின்படி "ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு" திட்டத்தின்கீழ் தகுதி வாய்ந்ததாக உள்ளன. அந்த விண்ணப்பங்களுக்கான மின் இணைப்புகள் விரைவில் கொடுக்கப்படும்.

34—

## மின் கம்பங்கள்

**வினா 1449—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2002 மார்ச் 15]

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்தங்கூர் ஊராட்சி, திருத்தங்கூர் மேலதெருவிற்குச் செல்லும் சாலையின் மையப் பகுதியிலுள்ள மின் கம்பங்களை அகற்றி, சாலை ஓரங்களில் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மின் துறை அமைச்சர்:**

இது தொடர்பாக விண்ணப்பம் ஏதும் கொடுக்கப்படவில்லை.

35—

## புதிய மின் கம்பம் அமைத்தல்

**வினா 1452—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி சேகல், சுந்தரபுரி ஆதிதிராவிடர் தெருவிற்கு புதிய மின் கம்பம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மின் துறை அமைச்சர்:**

சேகல், சுந்தரபுரி ஆதிதிராவிடர் தெருவில் உள்ள 18 தொகுப்பு வீடுகளுக்கு விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. 9 மின் கம்பங்கள் புதியதாக அமைத்து மின் இணைப்பு வழங்குவதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. விரைவில் மின் இணைப்பு வழங்கப்படும்.

36—

## புதிய மின் கம்பங்கள்

**வினா 1453—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, சேகல், வாத்து பெட்டி ஆதிதிராவிடர் தெருவிற்கு புதிய மின் கம்பங்கள் அமைத்துக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை —

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மின் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேகல், வாத்து பெட்டி ஆதிதிராவிடர் தெருவிற்கு புதிய மின் கம்பங்கள் அமைத்து தெருவிளக்கு போட திட்ட ஒதுக்கீடு ஏதும் இல்லை. மேலும் செலவுத் தொகையினை தாங்களே ஏற்றுக்கொண்டு பஞ்சாயத்து செலவில் அமைத்துக்கொள்ளும் வகையிலான விண்ணப்பம் ஏதும் பஞ்சாயத்திலிருந்து அளிக்கப்படவில்லை.

**37—**

## இழுவை ரயில்

**வினா 563—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் மாதம் வரை பழனி மலையில் இழுவை ரயில் மூலம், டிக்கெட் வாங்கி பயணம் செய்தவர்கள் எவ்வளவு பேர்?

(ஆ) அவர்கள் மூலம் அரசுக்கு எவ்வளவு வருமானம் கிடைத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் மாதம் வரை பழனி மலையில் இழுவை ரயில் மூலம் டிக்கெட் வாங்கி 5,03,192 பேர் பயணம் செய்துள்ளனர்.



(ஆ) 2001-ம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் மாதம் வரை இழுவை ரயில் மூலம் டிக்கெட் வாங்கி பயணம் செய்தவர்கள் மூலம் அரசுக்கு ரூ.56,92,085 வருமானம் கிடைத்துள்ளது.

**38—**

## புராதனக் கோயில்களின் வரலாறுகள்

**வினா 4180—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் புராதனக் கோயில்களின் வரலாறுகளை, குறிப்பாக இந்துக்கள் அறிவதற்கு என்ன நடவடிக்கை அரசு எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

புராதனக் கோயில்களின் சிறப்பையும், வரலாறுகளையும் சேவார்த்திகள் அறிவதற்காக அந்தந்த ஆலயத்திலிருந்து தலவரலாறு தயாரித்து அச்சிடப்பட்டு வெளியிடப்படுவதுடன், இவை திருக்கோயில்கள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

**39—**

## இலைப் பிரசாதம் வழங்குதல்

**வினா 5591—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் வழங்கி வந்த இலை விபூதி, சந்தனம் சரியாக வழங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2002 மார்ச் 15

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களுக்கு காலை 5.30 மணி முதல் இரவு நடைபெறும் திருக்காப்பீடு வரை விநாயகர் சந்நிதி அருகிலும், கொடி மரத்தின் அருகிலும் வைத்து சந்தனம் மற்றும் இலை விபூதி வழங்கப்படுகிறது. கூட்டம் மிகுதியான நாட்களில் கூடுதலாக உள் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தின் அருகிலும் வைத்து சந்தனம் மற்றும் இலை விபூதி வழங்கப்பட்டு வருகிறது. இருப்பினும், இலைப் பிரசாதம் தவறாது வழங்க நடவடிக்கை எடுக்க அறிவுரை ஆணையரால் தனியே வழங்கப்படுகிறது.

**40—**

## மருந்தாளுநர் பணியிடம் நிரப்புதல்

**வினா 32—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ஆரம்ப சுகாதார நிலையம், துணை சுகாதார நிலையம் மற்றும் அரசு பொது மருத்துவமனைகளில் காலியாக உள்ள மருந்தாளுநர் பணியிடம் பூர்த்தி செய்யப்படாமலிருப்பது குறித்து அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது பூர்த்தி செய்யப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் கீழ் இயங்கும் மருத்துவமனைகளில் காலியாக உள்ள 127 மருந்தாளுநர் பணியிடங்களை வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக, பதிவு மூப்பு அடிப்படையில் நேரடி நியமனம் செய்ய அரசு ஆணையிட்டுள்ளது. இதன் அடிப்படையில், மருந்தாளுநர் பணியிடங்கள் நிரப்பப்பட்டு விட்டன. பல மாவட்டங்களில் நேரடி நியமனம் செய்யப்பட்டு நிரப்பப்பட்டு விட்டன. மருத்துவக் கல்வி இயக்குநரகத்தின்கீழ் இயங்கும் மருத்துவமனைகளில் காலியாக இருந்த



2002 மார்ச் 15]

45 மருந்தாளுநர் பணியிடங்களில், அரசு பொது மருத்துவமனை மற்றும் குழந்தைகள் நல நிலையம், சென்னை ஆகிய இடங்களில் காலியாக உள்ள சில பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சில மாவட்டங்களில் பணி நியமனம் கோரி நீதிமன்றத்தில் பல வழக்குகள் மீது தடையாணை வழங்கப்பட்டுள்ளதால், சற்று தடையேற்பட்டுள்ளது. இப்பணியிடமும் விரைவில் நிரப்பப்படும்.

**41—**

## ஆரம்ப சுகாதார நிலையங்கள்

**வினா 469—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் எத்தனை?

(ஆ) அவற்றில் 24 மணி நேரமும் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் 1,410 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன.

(ஆ) இவற்றில் 241 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 24 மணி நேரமும் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகும்.

**42—**

## ஆரம்ப சுகாதார நிலையங்கள்

**வினா 470—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டு வரை சேலம், தருமபுரி, ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் எத்தனை?

(ஆ) அவற்றில் 24 மணி நேரமும் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் ஆண்டு வரை சேலம் மாவட்டத்தில் 70 ஆரம்ப சுகாதார நிலையங்களும், தருமபுரி மாவட்டத்தில் 69 ஆரம்ப சுகாதார நிலையங்களும், ஈரோடு மாவட்டத்தில் 66 ஆரம்ப சுகாதார நிலையங்களும் மற்றும் நாமக்கல் மாவட்டத்தில் 47 ஆரம்ப சுகாதார நிலையங்களும் செயல்படுகின்றன.

(ஆ) இவற்றில் சேலம் மாவட்டத்தில் 12 ஆரம்ப சுகாதார நிலையங்களும், தருமபுரி மாவட்டத்தில் 7 ஆரம்ப சுகாதார நிலையங்களும், ஈரோடு மாவட்டத்தில் 5 ஆரம்ப சுகாதார நிலையங்களும், நாமக்கல் மாவட்டத்தில் 8 ஆரம்ப சுகாதார நிலையங்களும் 24 மணி நேரம் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றப்பட்டுள்ளன.

**43—**

## மகப்பேறு மருத்துவமனைகள்

**வினா 481—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 2000-2001 ஆம் ஆண்டில் செயல்படாமல் உள்ள மகப்பேறு மருத்துவமனைகள் எத்தனை உள்ளன?

(ஆ) அவை செயல்படாமலிருக்க என்ன காரணம்?

(இ) அவற்றைச் செயல்பட வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மகப்பேறு மருத்துவமனை என்று தனியாக ஏதும் இல்லை. அரசு தலைமை மருத்துவமனை மற்றும் அரசு மருத்துவமனைகளில் உள்ள மகப்பேறு மருத்துவமனைப் பிரிவுகள் யாவும் தற்போது செயல்பட்டு வருகின்றன.

(ஆ) மற்றும் (இ) இவ்வினாக்கள் எழவில்லை.



**44—**

## சுற்றுச் சுவர் கட்டுதல்

**வினா 2394—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, சித்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சேர்ந்த நிலங்களை தனியார் ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்க சுற்றுச் சுவர் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**45—**

## பணி நியமனம்

**வினா 3283—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி அரசு மருத்துவமனையில் முடிதிருத்துபவர் ஒருவரை பணி நியமனம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) முடிதிருத்துபவர் பணியிடம் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைக்கு ஒன்று என்ற விகிதத்தில் உருவாக்கப்படுகிறது. பண்ருட்டி அரசு மருத்துவமனையில் 35 படுக்கைகள் மட்டுமே உள்ளதால், அங்கு முடிதிருத்துபவர் பணியிடம் உருவாக்க வேண்டிய அவசியமில்லை.

(ஆ) வினா எழவில்லை.

[2002 மார்ச் 15

46—

## மருத்துவமனைகள்

**வினா 3929—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளின் எண்ணிக்கையும், பணியாற்றும் மருத்துவர் எண்ணிக்கையும் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் மொத்தம் 12 அரசு மருத்துவமனைகள் உள்ளன. அவற்றில் 81 மருத்துவர்கள் பணியாற்றி வருகின்றனர்.

47—

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா 5161—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், வாட்டார் ஊராட்சி, வாட்டாரில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.



2002 மார்ச் 15]

48—

## மேம்பாலம் விரிவுபடுத்துதல்

**வினா 436—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பூர் லோக்கோ ஒர்க்ஸ் மேம்பாலம் விரிவாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது செயல்படத் தொடங்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை. லோகோ ஒர்க்ஸ் சாலையில் அமைந்துள்ள குறுகிய பாலத்தை விரிவுபடுத்துவதற்கு இரயில்வே துறை ஆய்வு செய்து லோகோ ஒர்க்ஸ் சாலையில் இரயில்வே தொழில் நிலையம், கிடங்குகள், முக்கிய தலைமை நிலையங்கள், மருத்துவமனைகள் மற்றும் குடியிருப்பு இல்லங்கள் அமைந்திருப்பதால் இவ்விடம் மிகவும் நெருக்கடியான இடமாக உள்ளது என்பதால் இங்கு குறுகிய பாலத்தை விரிவுபடுத்த சாத்தியக்கூறுகள் இல்லையெனக் கூறியது. மேலும் லோகோ ஒர்க்ஸ் சாலையில் அமைந்துள்ள குறுகிய பாலத்தை விரிவுபடுத்துவதற்கு பதிலாகத்தான் பெரம்பூர் சுரங்கப்பாதையின் மேல் மேம்பாலப் பணி நடைபெற்று வருகிறது. இந்தப் பாலம் அமையும் நிலப் பகுதியில் மண்ணின் தன்மை இடத்திற்கு இடம் மாறுபட்டு இருப்பதால் ஆழ்துளைக் கடைக்கால்கள் அமைக்கும் பணியில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இது குறித்து அறிய அரசு விசாரணைக் கமிஷன் அமைத்துள்ளது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

49—

## வடிகால் வசதி

**வினா 1045—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2002 மார்ச் 15

கோயம்புத்தூர் மாநகராட்சியில் 25-வது வார்டு, 22-வது வார்டு ஆகிய பகுதிகள் மூலமாகச் செல்லும் கழிவுநீர் கால்வாயைத் தூர் எடுத்து தண்ணீர் தேங்கி நிற்காமல் செல்ல வடிகால் வசதி ஏற்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

கோவை மாநகராட்சி 25 மற்றும் 22-ஆம் வார்டுகளின் வழியாகச் செல்லும் காந்திநகர், ஈஸ்வரன் செட்டியார் வீதி பகுதிக்கு உட்பட்ட கழிவுநீர் கால்வாயை, ரூ.1,00,000 செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தூர்வார நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**50—**

## பன்றி அழிப்பு

**வினா 1052—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் நகராட்சியில் பன்றித் தொல்லையைத் தடுக்க எந்த நடவடிக்கையையும் நகராட்சி எடுக்காததை அரசு அறியுமா?

(ஆ) அப்பன்றிகளை ஒழிக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) வேலூர் நகராட்சி, பன்றிகளை அழிக்கத் தேவையான செலவினத்திற்கு நகர்மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. பன்றிகளை அழிக்க மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து தமிழ்நாடு நகராட்சிகள் சட்டப பிரிவு எண் 247-ன்கீழ் அனுமதி பெறப்பட்டுள்ளது.

(ஆ) கடந்த ஆண்டு 261 பன்றிகள் அழிக்கப்பட்டு நகராட்சி எல்லைக்கு அபபால் உள்ள இடத்தில் புதைக்கப்பட்டன. தற்போது பன்றிகளைப் புதைப்பதற்கு வேறு புதிய இடம் ஏதுமில்லை. எனவே பன்றிகளை அழிக்கும் பணி பாதியிலேயே நிறுத்தி வைக்கப்பட்டது. சதுப்பேரி குப்பை உரக்கிடங்கில் பொதுமக்களுக்கோ அல்லது அருகாமையில் உள்ள குடியிருப்புகளுக்கோ பாதிப்பு ஏற்படா வண்ணம் ஆழமாகத் தோண்டிப் புதைக்கத் தேவையான பாதுகாப்பு அளிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்



2002 மார்ச் 15]

கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். பன்றிகளைப் புதைக்க இடம் தேர்வு செய்யப்பட்டவுடன் இதுகுறித்து நகராட்சியால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**51—**

## வீட்டு வரி

**வினா 1148—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகராட்சி வாணியம்பாடி, வாலாஜாபேட்டை, ராணிப்பேட்டை, அரக்கோணம், ஆம்பூர், குடியாத்தம், திருப்பத்தூர், ஆற்காடு நகராட்சிகளில் வீடு, கடை பகுதிகளுக்கு வீட்டு வரி அதிகம் உயர்த்தியதை அரசு எப்போது குறைக்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

1920 ஆம் ஆண்டைய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் அடிப்படையில் 1-10-1998 முதல் தமிழகத்தின் அனைத்து நகராட்சிகளிலும் சொத்துவரி திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இதில் வீடுகளுக்கு சொந்த குடியிருப்புக்கு ஏற்கெனவே விதிக்கப்பட்டுள்ள வரியிலிருந்து 25%-க்கு மிகாமலும், வாடகைக் குடியிருப்புக்கு 50%-க்கு மிகாமலும், கடைகளுக்கு ஏற்கெனவே உள்ள வரியில் 100%க்கு மிகாமலும் இருக்க வேண்டும் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன வரி உயர்வு அதிகமெனக் கருதும்போதும் அதுகுறித்து நகராட்சி வரி மேல் முறையீட்டுக் குழுவில் முறையீடு செய்து குறைத்துக்கொள்ள சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. சொத்து வரி உயர்வு, சட்டத்தின் அடிப்படையில் செய்யப்பட்டுள்ளதால், குறிப்பிட்ட சில நகராட்சிகளுக்கு மட்டும் சொத்து வரி விதிப்பைக் குறைத்து உத்தரவிட இயலாது.

**52—**

## தெரு விளக்குகள்

**வினா 1331—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சியில் உள்ள பாமனூர், மேட்டுக்காடு, சிட்டனூர் பகுதியில் தெரு விளக்குகள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தெரு மின் விளக்குகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்.**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி இடங்கணசாலை பேரூராட்சியில் உள்ள பாமனூர் பகுதியில் 7 தெரு விளக்குகளும், மேட்டுக்காடு பகுதியில் 5 தெரு மின் விளக்குகளும் அமைக்கப்பட்டு தற்போது பராமரிப்பில் உள்ளது. சிட்டனூர் பகுதியில் பேரூராட்சி நிதி நிலைமைக்கேற்ப அப்பகுதியில் தெரு விளக்குகள் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**53—**

## குடிநீர் வழங்கலுக்கான செலவு

**வினா 1342—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் குடிநீர் வழங்கலுக்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) அதில் மத்திய அரசுப் பங்கு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக செலவிடப்பட்ட தொகை ரூ.696.90 கோடி.

(ஆ) மத்திய அரசு பங்காக ரூ.75.54 கோடி செலவிடப்பட்டுள்ளது. சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் 16,879.51 இலட்சம் செலவு செய்துள்ளது.



சென்னை குடிநீர் வழங்கு திட்டத்திற்கு மத்திய அரசு நிதி உதவி செய்யவில்லை. சென்னை நீங்கலாக தமிழ்நாட்டின் இதர பகுதிகளுக்கு மத்திய அரசு ரூ.75.54 கோடி செலவிட்டுள்ளது.

**54—**

## சாலை வசதி

**வினா 1470—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி பேரூராட்சி, சங்கராபுரம் பழைய காலனி தெருக்களுக்கு சிமெண்ட் சாலை அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செஞ்சி பேரூராட்சியில் தற்போது போதிய நிதி வசதி இல்லை. நிதி வசதிக்கேற்ப சாலைப் பணி மேற்கொள்ளப்படும்.

**55—**

## மேல்நிலைத் தொட்டி

**வினா 2798—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சுஞ்சல்நத்தம் ஊராட்சி, பட்டக்காரன் கொட்டாய் குடியிருப்புக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சுஞ்சல்நத்தம் ஊராட்சி, பட்டக்காரன் கொட்டாய் குடியிருப்புக்கு தற்சமயம் ஐந்து கையிறைப்பான்கள் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

ஊரகக் குடிநீர் திட்டக் கோட்பாடுகளுக்கு உட்பட்டு தேவை, தகுதி மற்றும் நிதி ஆதார அடிப்படையில் இக்குடியிருப்புக்கு வரும் நிதியாண்டுகளில் கூடுதல் குடிநீர் வசதிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப் பரிசீலிக்கப்படும்.

56—

## மின் கம்பங்கள்

**வினா 3341—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கன்னந்தேரி கிராமத்தில் மின் கம்பங்கள் பழுதுபட்டு மிக மோசமான நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த பழுதுபட்ட மின் கம்பங்களை உடனடியாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை:

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தற்போது அறியப்பட்டது.

(ஆ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கன்னந்தேரி கிராமத்தில் 14 இரும்பு மின் கம்பங்கள் பழுதடைந்தது கண்டறியப்பட்டு புதிய மின் கம்பங்கள் மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

57—

## மேல்நிலைத் தொட்டி

**வினா 3419—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி, கொங்கணாபுரம் பேரூராட்சிப் பகுதியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 2000-2001 வரை கட்டப்பட்ட மேல்நிலைத் தொட்டிகள் எத்தனை?

(ஆ) அதில் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்ட பகுதிகள் எத்தனை? அதனால் பலனடையும் மக்கள்தொகை எவ்வளவு?



விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி கொங்கணாபுரம் பேரூராட்சிப் பகுதியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 2000-2001 வரை 4 இலட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு அதன்மூலம் கொங்கணாபுரம் நக்கியம்பட்டி-எச், கரடு காட்டுவளவு புதுக்காடு ஆகிய பகுதிகளுக்கு சீரான காவிரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அதனால் பயனடையும் மக்கட்தொகை சுமார் 7700 ஆகும்.

58—

## மேல்நிலைத் தொட்டிகள்

**வினா 3440—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001-ல் எடப்பாடி, கொங்கணாபுரம் ஒன்றியத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் கட்டப்பட்ட மேல்நிலைத் தொட்டிகள் எத்தனை?

(ஆ) அதில் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்ட பகுதிகள் எத்தனை? அதனால் பலனடையும் மக்கள்தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2000-2001 ஆம் ஆண்டில் எடப்பாடி, கொங்கணாபுரம் ஒன்றியங்களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் முறையே எடப்பாடி ஒன்றியத்தில் 59 தொட்டிகளும் கொங்கணாபுரம் ஒன்றியத்தில் 10 தொட்டிகளும் கட்டிமுடிக்கப்பட்டன.

இம்மேல்நிலைத் தொட்டிகள் மூலம் எடப்பாடி ஒன்றியத்தில் 59 பகுதிகளுக்கும் கொங்கணாபுரம் ஒன்றியத்தில் 10 பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. இதனால் எடப்பாடி ஒன்றியத்தில் 35,091 மக்களும் கொங்கணாபுரம் ஒன்றியத்தில் 6,005 மக்களும் பயன்பெறுகிறார்கள்.

59— [2002 மார்ச் 15

## குடிநீர் வழங்குதல்

**வினா 3441—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001-ல் எடப்பாடி ஒன்றியப் பகுதியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் கட்டப்பட்ட மேல்நிலைத் தொட்டிகள் எத்தனை?

(ஆ) அதில் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்ட பகுதிகள் எத்தனை? அதனால் பலனடையும் மக்கள் தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2000-2001 ஆம் ஆண்டில் எடப்பாடி ஒன்றியத்தில் 59 மேல்நிலைத் தொட்டிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் கட்டி முடிக்கப்பட்டன.

இதன் மூலம் 59 பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு, சுமார் 35,091 மக்கள் பயன்பெறுகிறார்கள்.

60—

## நவீனக் கழிப்பிடம்

**வினா 3480—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் வீடுகளிலுள்ள உலர் கழிப்பிடங்களை தண்ணீர் வசதியுடன் கூடிய கழிப்பிடங்களாக மாற்ற ஹட்கோ நிதியுதவியுடன் மத்திய அரசின் மானியத்துடன் 2001-2002-ல் செயல்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய தகவல்களை அரசு தெரிவிக்குமா?

(இ) இந்தத் திட்டம் பேரூராட்சிகளில் செயல்படுத்தப்படுமா?



2002 மார்ச் 15]

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) அத்தகைய திட்டம் ஏதுமில்லை.

(ஆ) மற்றும் (இ) வினா எழாது.

61—

## பொதுக் கழிப்பிடம் புதுப்பித்தல்

**வினா 3494—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் 16-வது கோட்டம் சின்னபுதூர் கல்லாங்குத்து பகுதியிலுள்ள பொதுக் கழிப்பிடம் பழுதடைந்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், பொதுக் கழிப்பிடத்தை இடித்துக் கட்டுவது எப்போது?

விடை:

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியின் மாமன்ற தீர்மான எண் 58, நாள் 19.7.2001-ன்படி மேற்படி இடத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டம் 2 ஒருங்கிணைக்கப்பட்ட சுகாதாரத் திட்டத்தின் கீழ் ரூ. 10.00 லட்சம் (உத்தேச) மதிப்பீட்டில் "புதிய சுகாதார வளாகம்" கட்டும் பணியைத் தொடங்க இடம் ஆய்வு செய்யப்பட்டு, அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

62—

## மேல்நிலைத் தொட்டி

**வினா 4379—திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டம் கரட்டுமடம் மேல்நிலைத் தொட்டி கொள்ளளவை அதிகப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை.—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், புங்குமத்தூர் ஊராட்சி, கரட்டுமடம் குடியிருப்புக்கு, கிராமக் குடிநீர் திட்ட விதிகளின்படி தற்போதுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் வழங்கப்படும் குடிநீர் தற்போதைய மக்கட்தொகைக்கு போதுமானதாக உள்ளதால் கரட்டுமடம் மேல்நிலைத் தொட்டி கொள்ளளவை தற்போது அதிகப்படுத்தும் அவசியம் எழவில்லை. வருங்காலத்தில் தேவை, தகுதி மற்றும் நிதி ஆதாரங்களுக்கு உட்பட்டு கூடுதல் உயர்நிலைத் தொட்டி அமைப்பது பரிசீலிக்கப்படும்.

**63—**

## அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

**வினா 4665—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 2001-2002 நிதியாண்டிற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது?

(ஆ) இதுவரை பணி ஏதேனும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 2001-2002-ம் நிதியாண்டிற்கு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 75 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) அண்ணா மறுமலர்சித் திட்டத்தை 2001-2002-ம் ஆண்டு செயல்படுத்துவதற்காக வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி அண்ணா மறுமலர்ச்சித் திட்டக் கிராமம் தேர்வு செய்து கிராம வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்க அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக முதல் தவணையாக ரூ. 37.50 கோடி விடுவிக்கப்பட்டு மாவட்டங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன.



**64—**

## குடிநீர்

**வினா 5521—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை பெரிய பூலாங்கிணறு பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் குடிதண்ணீரில் உப்புத் தண்ணீர் அசுத்தம் கலந்து வருவதைத் தவிர்க்க அரசு எடுக்க உள்ள நடவடிக்கை என்ன?

(ஆ) எப்போது இக்குறை சரி செய்யப்படும்?

விடை:

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை பெரிய பூலாங்கிணறு பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் திருமூர்த்தி அணை நீருடன் ஆழ்குழாய் கிணற்று நீரை ஊராட்சித் தலைவர் 4 மாதங்களுக்கு முன்னர் கலந்து விநியோகித்து விட்டார். பின்னர் வாரிய அலுவலர்கள் இதனைக் கண்டறிந்து ஆழ்துளைக் குழாய்க் கிணற்று நீர் கலப்பதைத் தவிர்த்துள்ளார்கள். திருமூர்த்தி அணை நீர் மட்டும் கடந்த 2 மாதங்களாக வழங்கப்படுகிறது. எனவே குடிநீர்ப் பிரச்சினை தற்போது இல்லை.

**65—**

## தொழிலாளர் நலன்

**வினா 5619—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் எந்தெந்த தொழிலாளர் நல வாரியத்தில் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்?

(ஆ) அவற்றின் எண்ணிக்கை விவரங்கள் என்ன?

(இ) வாரியத்தின் உதவியைப் பெற்றுள்ள தொழிலாளர்கள் எத்தனை? என்னென்ன உதவிகள் பெற்றுள்ளனர்?

விடை —

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கீழ்க்காணும் வாரியங்களில் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்:-

(1) தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்

(2) தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர்கள் நல வாரியம்

(3) தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் நல வாரியம்

(4) தமிழ்நாடு முடிதிருத்துவோர்கள் நல வாரியம்

(5) தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியம்

(6) தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர்கள் நல வாரியம்

(7) தமிழ்நாடு தையல் தொழிலாளர்கள் நல வாரியம்

(ஆ) மேற்படி வாரியங்களில் சேர்க்கப்பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை விவரங்கள்:-

| | | பழைய திட்டப்படி. | புதிய திட்டப்படி. | மொத்தம். |
|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் | 13,360 | 6,054 | 19,414 |
| 2. | தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர்கள் நல வாரியம் | 1,909 | 897 | 2,806 |
| 3. | தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் நல வாரியம் | 227 | 91 | 318 |
| 4. | தமிழ்நாடு முடிதிருத்தும் தொழிலாளர்கள் நல வாரியம் | 125 | 148 | 273 |
| 5. | தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியம் | 114 | 452 | 566 |
| 6. | தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர்கள் நல வாரியம் | 279 | 196 | 475 |
| 7. | தமிழ்நாடு தையல் தொழிலாளர்கள் நல வாரியம் | 14,496 | 2,989 | 17,485 |
| | மொத்தம் | 30,510 | 10,827 | 41,337 |



| | | |
|---|---|---|
| (இ) வாரியத்தின் உதவியைப்பெற்றுள்ள தொழிலாளர்கள்.. | | 29 |
| 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றதற்காக .. | 15 | நபர்களுக்கு (கல்வி உதவித் தொகை நபர் ஒன்றுக்கு ரூ.1000 வீதம்) |
| 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்றதற்காக .. | 10 | நபர்களுக்கு (கல்வி உதவித் தொகை நபர் ஒன்றுக்கு ரூ.1500 வீதம்) |
| திருமணத்திற்காக .. | 4 | நபர்களுக்கு (திருமண உதவித் தொகை நபர் ஒன்றுக்கு ரூ.2000 வீதம்) |
| | 29 | |

**66—**

## பீடித் தொழிலாளர்

**வினா 8218—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பீடித் தொழிலாளர்களின் வயது, பணிபற்றி விசாரிக்கும் அதிகாரிகள் ஏற்படுத்தும் கெடுபிடிகளைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) அதிகாரிகள் கெடுபிடி செய்வதாக இதுவரையில் எவ்விதப் புகாரும் பெறப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**67—** [2002 மார்ச் 15

## தொழிலாளர் நலன்

**வினா 8250—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏழை பீடித் தொழிலாளர்களுக்கு இலவசப் பேருந்துப் பயண அட்டை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பீடித் தொழிலாளர்களுக்கு இலவசப் பேருந்துப் பயண அட்டை வழங்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**68—**

## மைக்கா கனிமம்

**வினா 2402—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மைக்கா கனிமம் எங்கெங்கு கிடைக்கிறது?

(ஆ) கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் மொத்தம் கிடைத்த அளவு எவ்வளவு?

(இ) சேலம் மாவட்டத்தில் மட்டும் எடுக்கப்பட்டது எவ்வளவு?

(ஈ) அதனால் அரசுக்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் மைக்கா கனிமம் நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், சேரங்கோடு கிராமத்தில் கிடைக்கிறது. ஆனால் தற்போது இக்கனியத்தை வாங்குவோர் இல்லாததால் இதை வெட்டியெடுப்பது நிறுத்தப்பட்டுவிட்டது.



2002 மார்ச் 15]

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(இ) சேலம் மாவட்டத்தில் வெட்டி எடுக்கும் அளவிற்கு மைக்கா கனிமம் இல்லை.

(ஈ) இக்கேள்விக்கு இடமில்லை.

**69—**

## தொழிற்சாலைகள் தொடங்குதல்

**வினா 3631—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி தொழிலில் பின்தங்கிய பகுதி என்பதால் புதியதாக தொழிற்சாலைகள் தொடங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதியில் புதியதாக தொழிற்சாலைகள் தொடங்கும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும் தொழில் முனைவோர் நல்ல திட்டங்களுடன் இத்தொகுதியில் தொழிற்சாலைகள் தொடங்க முன்வந்தால் அவர்களுக்குத் தேவையான உதவிகளும் ஆலோசனைகளும் அரசின் சார்பில் வழங்கப்படும்.

**70—**

## கடனுதவி

**வினா 4404—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள தொழில் முதலீட்டுக் கழகம் மூலம் 2000-2001 ஆம் ஆண்டில் எவ்வளவு பேர் கடன் கேட்டு விண்ணப்பித்து உள்ளார்கள்?

(ஆ) எவ்வளவு பேருக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது?

விடை — [2002 மார்ச் 15

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலம் 2000-2001 ஆம் ஆண்டில் 3391 பேர் கடன் கேட்டு விண்ணப்பித்திருந்தார்கள்.

(ஆ) 3100 பேருக்குக் கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**71—**

## சிமெண்ட் ஆலைகள்

**வினா 4408—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் இயங்கிவரும் சிமெண்ட் ஆலைகள், அரசு மற்றும் தனியார் நிருவாகத்தில் உள்ளவை எத்தனை மற்றும் அவற்றின் உற்பத்தித் திறன் குறித்த விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், தொழில் துறை அமைச்சர்:**

சிமெண்ட் ஆலைகள் மற்றும் அவற்றின் உற்பத்தித் திறன் குறித்த விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன:

| வ.எண். | சிமெண்ட் ஆலையின் பெயர் மற்றும் இடம். | உற்பத்தித் திறன் (இலட்சம் டன்களில்) (16-8-2001 அன்றுள்ளபடி). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | டான்செம் (அரியலூர்) .. | 5.0 |
| 2. | டான்செம் (ஆலங்குளம்) .. | 4.0 |
| | *தனியார் ஆலைகள்* | |
| 1. | மெட்ராஸ் சிமெண்ட்ஸ் (ஆலத்தியூர்) | 9.0 |
| 2. | மெட்ராஸ் சிமெண்ட்ஸ் (துலுக்கப்பட்டி) | 7.0 |
| 3. | இந்தியா சிமெண்ட்ஸ் (சங்கர் நகர்) | 10.9 |



2002 மார்ச் 15]

| | | |
|---|---|---|
| 4. | இந்தியா சிமெண்ட்ஸ் (தளவாய், அரியலூர்) | 9.0 |
| 5. | இந்தியா சிமெண்ட்ஸ் (சங்ககிரி, சேலம்) | 6.0 |
| 6. | அசோசியேட் சிமெண்ட்ஸ் (மதுக்கரை) | 8.3 |
| 7. | செட்டிநாடு சிமெண்ட்ஸ் (புலியூர் கரூர்) | 6.0 |
| 8. | டால்மியா சிமெண்ட்ஸ் (டால்மியாபுரம்) | 10.34 |
| 9. | கிராசிம் சிமெண்ட்ஸ் (ரெட்டிப்பாளையம்) | 9.3 |
| 10. | செட்டிநாடு சிமெண்ட்ஸ் (கரிக்கால்) | 9.00 |
| 11. | லார்சன் அண்டு டியூப்ரோ (அரக்கோணம்) | 10.00 |

மேற்கண்டவை தவிர நாள் ஒன்றுக்கு 50 டன்கள் முதல் 300 டன்கள் வரை உற்பத்தித் திறன் கொண்ட எட்டு தனியார் சிறிய ஆலைகள் இயங்கி வருகின்றன.

**72—**

## நெல் கொள்முதல்

**வினா 245—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001 ஆம் ஆண்டு மே மாதம் முடிய தமிழகத்தில் எவ்வளவு மெட்ரிக் டன் நெல் குறுவை, சம்பா மற்றும் தாளடி பருவத்தில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது?

(ஆ) கொள்முதல் விலையை அதிகப்படுத்தும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் :**

(அ) தமிழகத்தில் குறுவை 2000 பருவத்தில் 5.55 இலட்சம் மெட்ரிக் டன் நெல்லும், சம்பா 2001-ஆம் பருவத்தில் 19.74 இலட்சம் மெட்ரிக் டன் நெல்லும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) கிரேடு 'ஏ' நெல் விலையை, குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 540-லிருந்து ரூ.560 ஆகவும், சாதாரண ரக நெல் விலையை, குவிண்டால் ஒன்றுக்கு ரூ.510-லிருந்து ரூ.530 ஆகவும் செப்டம்பர் 2001 முதல் மத்திய அரசு உயர்த்தியுள்ளது. இதற்கு மேல் இடைநிகழ் செலவாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ.40 வீதம் வழங்க தமிழக அரசு 14-9-2001 அன்று ஆணையிட்டுள்ளது.

**73—**

## குடும்ப அட்டை

**வினா 4295—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதியில் 2000-2001-ல் குடும்ப அட்டை வழங்கக் கோரி வந்துள்ள மனுக்கள் எத்தனை?

(ஆ) அவற்றில் குடும்ப அட்டை எத்தனை வீடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது?

(இ) இன்னும் வழங்கப்படாத மனுக்களுக்கு எப்போது அரசு அட்டை வழங்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) எடப்பாடி தொகுதியில் 2000-2001-ல் குடும்ப அட்டை வழங்கக் கோரி வந்துள்ள 4,252 மனுக்களில் 2,078 மனுக்களுக்கு புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 1,032 மனுக்கள் பரிந்துரை செய்யப்பட்டு சங்ககிரி கோட்டாட்சியரிடம் நிலுவையிலுள்ளன. அவற்றிற்கான குடும்ப அட்டைகள் இன்னும் ஒரு மாதத்திற்குள் வழங்கப்பட்டுவிடும். 200 மனுக்கள் விசாரணையிலுள்ளன. 942 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.



**74—**

## புதிய குடும்ப அட்டை

**வினா 4298—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டத்தில் 2000 ஆண்டு நவம்பர் முதல் 2001 மார்ச் மாதம் வரை புதிய குடும்ப அட்டை வேண்டி எவ்வளவு பேர் விண்ணப்பித்தார்கள்?

(ஆ) அவர்களில் எவ்வளவு பேருக்கு புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டத்தில் 2000 ஆண்டு நவம்பர் முதல் மார்ச் 2001 வரை புதிய குடும்ப அட்டை கோரி விண்ணப்பித்த 1,055 பேர்களில் 851 பேருக்கு புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 204 பேர்களின் மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

**75—**

## ரேஷன் விநியோகம்

**வினா 7884—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவுச் சங்கங்களில் 200 கார்டுகளுக்கு மேல் இருந்தால்தான் அங்கு போய் ரேஷன் விநியோகிக்கலாம் என்றபோதும் 100 கார்டுகள் இருந்தால் விநியோகிக்கலாம் என்பதற்கான திட்டம் அரசிடம் இருக்கிறதா?

(ஆ) ஆம் என்றால் எப்போது?

விடை—

[2002 மார்ச் 15

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 200 குடும்ப அட்டைகள் இருந்தால்தான் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க இயலும் என்ற நிபந்தனையை மாற்றி 100 அட்டைகள் இருந்தாலும் பகுதிநேரக் கடை திறக்கலாம் என்ற திட்டம் அரசிடம் இல்லை.

**76—**

## அடையாள அட்டை

**வினா 14309—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களில் ஆள் மாறாட்டத்தைத் தவிர்க்க அனைத்து உறுப்பினர்களுக்கும் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

நடைமுறையில் உள்ள 1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் 1988-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகளின்படி, கூட்டுறவுத் தேர்தல்களில் வாக்களிப்பவர்களுக்கு புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை வழங்க வேண்டியதில்லை. மேலும், கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தலில் வாக்களிப்பவர்களுக்கு புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை வழங்குவது சாத்தியமில்லை.



2002 மார்ச் 15]

**77—**

## ஏரிகள்

**வினா 3299—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி, ஆவுடையார்கோயில், மணமேல்குடி ஆகிய வட்டங்களிலுள்ள பொதுப் பணித் துறை ஏரிகள் எத்தனை? அவற்றில் அரசால் ஆழப்படுத்தப்பட்டவை எத்தனை? ஆழப்படுத்தப்பட வேண்டியவை எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

| | |
|---|---|
| பொதுப் பணித் துறை ஏரிகள் | **300** |
| அறந்தாங்கி | 102 |
| ஆவுடையார்கோயில் | 178 |
| மணமேல்குடி | 20 |
| ஆழப்படுத்தப்பட்ட ஏரிகள் | **52** |
| அறந்தாங்கி | 23 |
| ஆவுடையார்கோயில் | 21 |
| மணமேல்குடி | 8 |
| ஆழப்படுத்தப்பட வேண்டிய ஏரிகள் | **248** |
| அறந்தாங்கி | 79 |
| ஆவுடையார்கோயில் | 157 |
| மணமேல்குடி | 12 |

224483

**78—** [2002 மார்ச் 15

## பொறியாளர் பணியிடங்கள் நிரப்புதல்

**வினா 4826—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பொதுப் பணித் துறையில் 2000-2001-ஆம் ஆண்டு வரை காலியாக உள்ள பொறியாளர் பணியிடங்கள் எத்தனை?

(ஆ) அதை நிரப்ப அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு பொதுப் பணித் துறையில் 2000-2001-ஆம் ஆண்டு வரை மொத்தம் 580 உதவிப் பொறியாளர்/இளநிலை பொறியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளன.

(ஆ) 2000-2001-ஆம் ஆண்டு முடிய 369 உதவிப் பொறியாளர் பணியிடங்கள் நேரடி தெரிவு வாயிலாக நிரப்பிட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அறிவிக்கை வெளியிட்டுள்ளது. எஞ்சியுள்ள பணியிடங்கள் பதவி உயர்வு மற்றும் பணிமாற்றல் அடிப்படையில் இளம் பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் பணி நியமனத்திற்குத் தகுதி பெற்ற, துறையில் பணிபுரியும் கீழ்நிலை பதவியில் பணிபுரிபவர்களிலிருந்து நிரப்பப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது..

**79—**

## வனத் துறை திட்டம்

**வினா 3839—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம், பேச்சிப்பாறையில் குடியிருந்துவரும் மக்களை வெளியேற்ற வனத் துறை திட்டம் உருவாக்கியுள்ளது என்பதை அரசு அறியுமா?

(ஆ) அந்தத் திட்டத்திற்கான அடிப்படை என்ன?



2002 மார்ச் 15]

விடை—

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு, செய்தி, விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், தருணகோடு கிராம பழைய புல 'எண் 3074-க்கு உட்பட்ட வீரப்புலி காப்புக் காட்டின் ஒரு பகுதியே பேச்சிப்பாறை பகுதியாகும். இது சுமார் 23,000 ஏக்கர் பரப்பளவு உள்ளது. இங்கு 158 ஆக்கிரமிப்புகள் பல வருடங்களாக உள்ளன. அதில் 19 நபர்கள் வழக்கு தொடர்ந்து 18 வழக்குகள் முடிவுற்று, 12 வழக்குகள் மேல்முறையீடு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளன. முடிவுற்ற 6 வழக்குகளுக்கு சம்பந்தமான ஆக்கிரமிப்புகளை அகற்ற தமிழ்நாடு வனச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. மேலும் நிலுவை வழக்குகள் முடிந்த பின்னரே மற்ற ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும். உச்ச நீதிமன்றம், வழக்கு எண் ஐஏ.418 மற்றும் நீதிப்பேராணை எண் 202/95-ல் 7-5-1999-ல் வெளியிட்ட ஆணையில் வன நிலங்களுக்குப் பட்டா வழங்கவோ அல்லது ஆக்கிரமிப்பை வரன்முறைப்படுத்தவோ கூடாது என தெரிவித்துள்ளதன் அடிப்படையில் நிலுவை வழக்குகள் முடிவுபெற்றவுடன் ஆக்கிரமிப்பை அகற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே தற்போது குமரி மாவட்டம், பேச்சிப்பாறையில் குடியிருந்துவரும் மக்களை வெளியேற்ற வனத் துறை திட்டம் எதுவும் நடவடிக்கையில் இல்லை.

**80—**

## மரங்கள் நடுதல்

**வினா 2929—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகம் முழுவதுமாக கடந்த 2000-2001-ஆம் ஆண்டில் வேளாண்மைத் துறை மூலமாக நடப்பட்ட மரங்கள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் மற்றும் நவப்ரா திட்டத்தின்கீழ் 2000-2001-ஆம் ஆண்டில் கீழ்க்கண்டவாறு மரக்கன்றுகள் நடப்பட்டு செலவு செய்யப்பட்டுள்ளது:

| | திட்டத்தின் பெயர் | இனம் | பரப்பு | கன்றுகளின் எண்ணிக்கை | செலவழித்த தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1. | தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் | வேம்பு 400 கன்றுகள்/ எக்டர் | 249.16 எக்டர் | 99,664 | 3,622 |
| | | தைலம் 2500 கன்றுகள்/ எக்டர் | 1824.13 எக்டர் | 45,60,325 | 66.549 |
| | | சவுக்கு 10000 கன்றுகள்/ எக்டர் | 144.45 எக்டர் | 14,44,000 | 3,313 |
| | | | | 61,03,989 | 73,484 |

| | திட்டத்தின் பெயர் | இனம் | கன்றுகளின் எண்ணிக்கை | செலவழித்த தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 2. | நவப்ரா (இத்திட்டத்தில் தோப்பு நடவுக்கு அனுமதி இல்லை) | வேளாண் காடுகள் (வயலோர நடவுக்கு மட்டும்) 20 கன்றுகள் எக்டர் | 7,17,200 | 35.856 |
| | | பழமரக் கன்றுகள் 10 கன்றுகள் எக்டர் | 4,34,500 | 65.172 |



| திட்டத்தின் பெயர் | இனம் | பரப்பு | கன்றுகளின் எண்ணிக்கை | செலவழித்த தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| | சாகுபடிக்கு தகுதியற்ற நிலம் (வரிசை நடவாக துடை, குளம் சுற்றி) | 41347 எக்டேர் | 13,14,300 | 65.713 |
| | | | 24,66,000 | 166.741 |

81—

## கசிவு நீர்க் குட்டைகள்

**வினா 2932—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைத் துறையின் மூலம் சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் 2000-2001 ஆம் ஆண்டில் அமைக்கபபட்ட கசிவு நீர்க் குட்டைகள் எத்தனை?

(ஆ) அதற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(இ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) கசிவு நீர்க்குட்டைகளுக்காக 2000-2001 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படாததால், வேளாண்மைத் துறையின் மூலம் சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் 2000-2001 ஆம் ஆண்டில் கசிவு நீர்க் குட்டைகள் அமைக்கப்படவில்லை.

(ஆ) மற்றும் (இ) வினா எழவில்லை

[2002 மார்ச் 15

82—

## பாசனப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

**வினா 2936—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி, ஈரோடு, நாமக்கல், சேலம் மாவட்டங்களில் தருமபுரியைத் தவிர மத்திய, மாநில அரசுகளின் சமநிதி உதவியுடன் கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் பாசனப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் முடிக்கப்பட்ட வேலைகள் எத்தனை?

(ஆ) அதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி, ஈரோடு, நாமக்கல், சேலம் மாவட்டங்களில் தருமபுரியைத் தவிர மத்திய, மாநில அரசுகளின் சமநிதி உதவியுடன் கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் பாசனப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 47 பணிகள் முடிக்கப்பட்டன.

(ஆ) அப்பணிகளின் மதிப்பீட்டுத் தொகை ரூ.161.02 இலட்சம். அதன் விபரம் கீழ்வருமாறு:

| | |
|---|---|
| 1. சேலம் | - 11 வேலைகள் |
| 2. நாமக்கல் | - 17 வேலைகள் |
| 3. ஈரோடு | - 19 வேலைகள் |
| 4. தருமபுரி | - எதுவுமில்லை. |

(மதிப்பீட்டுத் தொகை ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. சேலம் | 11 வேலைகள் | ரூ.56.24 |
| 2. நாமக்கல் | 17 வேலைகள் | ரூ.46.55 |
| 3. ஈரோடு | 19 வேலைகள் | ரூ.58.23 |
| மொத்தம் | .. | **ரூ.161.02** |



2002 மார்ச் 15]

83—

## மணிலா விதை

**வினா 4057—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியத்தில் கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட மணிலா விதை எவ்வளவு?

(ஆ) தற்சமயம் கிடங்கிலுள்ள இருப்பு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியத்தில் 2000-2001 ஆம் ஆண்டு விவசாயிகளுக்குக் கீழ்க்கண்டவாறு மணிலா விதைகள் விநியோகம் செய்யப்பட்டன:—

| | | |
|---|---|---|
| 1. ஏ.எல்.ஆர்.3 | : | 80 கிலோ |
| 2. ட்டி.எம்.வி.7 | : | 13392 கிலோ |
| மொத்தம் | : | **13472** கிலோ |

(ஆ) தற்சமயம் 2413 கிலோ ட்டி.எம்.வி. 7 இரக மணிலா விதை இருப்பில் உள்ளது

84—

## மணிலா விதை இருப்பு

**வினா 4058—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி விவசாயக் கிடங்கிலிருந்து கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட மணிலா விதை எவ்வளவு?

(ஆ) தற்சமயம் கிடங்கிலுள்ள இருப்பு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றிய விவசாயக் கிடங்கின்மூலம் 2000-2001 ஆம் ஆண்டில் கீழ்க்கண்டவாறு மணிலா விதைகள் விநியோகம் செய்யப்பட்டன:—

| | | |
|---|---|---|
| 1. கோ.3 | : | 90 கிலோ |
| 2. ட்டி.எம்.வி.7 | : | 28965 கிலோ |
| மொத்தம் | : | **29055** கிலோ |

(ஆ) தற்சமயம் 5060 கிலோ ட்டி.எம்.வி 7 இரக மணிலா விதை இருப்பில் உள்ளது.

**85—**

## மணிலா விதை

**வினா 4060—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மணிலா விதை எவ்வளவு?

(ஆ) தற்சமயம் கிடங்கில் எவ்வளவு இருப்பு உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றிய வேளாண் கிடங்குகள் மூலம் 2000-2001 ஆம் ஆண்டு 26571 கிலோ ட்டி.எம்.வி.7 இரக மணிலா விதைகள் விநியோகம் செய்யப்பட்டன.

(ஆ) தற்போது இருப்பு ஏதுமில்லை. எனினும் விதைப் பண்ணையிலிருந்து விதைக் கொள்முதல் செய்யப்பட்டு இருப்பு வைக்கப்படும்.



**86—**

## நீர்வடிப் பகுதி

**வினா 4069—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் 2000-2001 ஆம் நிதியாண்டில் எத்தனை நீர்வடிப் பகுதி (Water shed) திட்டங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டன?

(ஆ) எந்தெந்த ஊராட்சி ஒன்றியங்களில் நீர்வடிப் பகுதி திட்டங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் நீர்வடிப் பகுதி திட்டங்கள் வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டத்தில் எதுவும் ஒப்பளிப்பு செய்யப்படவில்லை.

(ஆ) கீழ்க்கண்ட ஒன்றியங்களில் வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டத்தில் நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

| ஒன்றியத்தின் பெயர் | நான்காம் தொகுதி 1997-1998 முதல் 2000-2001 வரை. | ஐந்தாம் தொகுதி 1999-2000 முதல் 2002-2003 வரை. |
|---|---|---|
| 1. நங்கவள்ளி | 2 | 3 |
| 2. மேச்சேரி | 2 | 3 |
| 3. கொங்கணாபுரம் | 2 | 3 |
| 4. மகுடஞ்சாவடி | 2 | 3 |
| 5. காடையம்பட்டி | 2 | 3 |

[2002 மார்ச் 15

**87**

## உர விற்பனை

**வினா 4070—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* 2000-2001 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் உர விற்பனை உரிமம் பெறாமல் உரம் விற்பனை செய்தது எத்தனை பேர் என அரசு கண்டறிந்துள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எத்தனை பேர்மீது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* 2000-2001 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் உர விற்பனை உரிமம் பெறாமல் எவரும் உர விற்பனை மேற்கொள்ளவில்லை.

*(ஆ)* உரிமம் பெறாமல் எவரும் உர விற்பனை செய்யாததால் வினா எழவில்லை.

2000-2001 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து உர விற்பனை நிலையங்களிலும் உரிய காலத்தில் உர உரிமம் புதுப்பிக்கப்பட்டு, விற்பனை மேற்கொள்ளபபட்டு வருகிறது. மேலும், அந்தந்த வேளாண்மைக் கோட்டத்தில் உள்ள தரக் கட்டுப்பாடு வேளாண்மை அலுவலர்கள் தங்கள் பயணத்தின்போது இந்த உர விற்பனை நிலையங்களை ஆய்வு செய்து உரக் கட்டுப்பாட்டு ஆணை 1985-ன்படி விதிமுறைகளை மீறாமல் இந்த உர விற்பனை நிலையங்கள் செயல்படுகின்றனவா எனக் கண்காணித்து அறிக்கை அனுப்புகின்றனர். மேலும், அக்டோபர் 2000-ல் மாவட்டம் முழுவதும் சிறப்பு ஆய்வுக் குழு அமைத்து உரக்கடைகளை ஆய்வு மேற்கொண்டு அதன் அடிப்படையில் கண்டறியப்பட்ட குறைபாடுகளுக்கு உரக் கட்டுப்பாட்டு ஆணை 1985-ன்படி தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எனவே உர உரிமம் பெறாமல் எந்த ஒரு உர விற்பனையும் சேலம் மாவட்டத்தில் நடைபெறவில்லை.



2002 மார்ச் 15]

**88—**

## டிராக்டர்கள், பவர் டில்லர்கள்

**வினா 4071—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* 2000-2001 ஆம் ஆண்டு மானிய விலையில் டிராக்டர்கள் மற்றும் பவர் டில்லர்கள் வாங்க எத்தனை விவசாயிகள் விண்ணப்பித்துள்ளார்கள்?

*(ஆ)* அவர்களில் எத்தனை பேருக்கு மானிய விலையில் அரசு வழங்கியுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* 2000-2001 ஆம் ஆண்டில் மானிய விலையில் டிராக்டர்கள் வாங்க 9 விவசாயிகள் விண்ணப்பித்தனர். பவர் டில்லர் வாங்க 777 விவசாயிகள் விண்ணப்பித்தார்கள்.

*(ஆ)* விண்ணப்பித்த 9 விவசாயிகளுக்கும் டிராக்டர் மானிய விலையில் வழங்கப்பட்டுவிட்டது. பவர் டில்லருக்காக விண்ணப்பித்த 777 விவசாயிகளில் 31-3-2001 வரையில் 689 விவசாயிகளுக்கும், மீதம் உள்ளவர்களுக்கு 31-7-2001-க்குள்ளும் வழங்கப்பட்டுவிட்டது.

**89—**

## உர விற்பனை உரிமம்

**வினா 4073—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* 2000-2001 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் உர விற்பனை செய்ய உரிமம் வேண்டி யாராவது விண்ணப்பித்துள்ளார்களா?

*(ஆ)* ஏற்கெனவே உள்ள உரிமம் பெற்ற கடைக்காரர்கள் சரியான நேரத்தில் உரிமம் புதுப்பித்துள்ளார்களா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* சேலம் மாவட்டத்தில் 2000-2001-ஆம் ஆண்டில் பழைய உர விற்பனை உரிமத்தினைப் புதுப்பிக்க வேண்டி 87 விண்ணப்பங்களும்

[2002 மார்ச் 15

புதிய உர விற்பனை வேண்டி 99 விண்ணப்பங்களும் பெறப்பட்டன. இவை உரிய ஆய்வுக்குப் பின் விண்ணப்பித்த அனைத்து உர விற்பனையாளர்களுக்கும் உர உரிமம் வழங்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:

(1) புதுப்பிக்கப்பட்ட உரிமங்கள்

(அ) சில்லறை உர விற்பனை

| | | |
|---|---|---|
| தனியாருக்கு | .. | 55 எண்கள் |
| கூட்டுறவுத் துறையினருக்கு | .. | 11 எண்கள் |
| மொத்தம் | .. | 66 எண்கள் |

(ஆ) மொத்த உர உரிமம்

| | | |
|---|---|---|
| தனியாருக்கு | .. | 20 எண்கள் |
| கூட்டுறவுத் துறையினருக்கு | .. | 1 எண் |
| மொத்தம் | | 21 எண்கள் |
| ஆக மொத்தம் (அ) + (ஆ) | | 87 எண்கள் |

(2) புதிதாக வழங்கப்பட்ட உர உரிமங்கள்:—

சில்லறை உரிமம்:—

| | | |
|---|---|---|
| (அ) தனியாருக்கு | .. | 84 எண்கள் |
| கூட்டுறவுத் துறையினருக்கு | .. | 8 எண்கள் |
| மொத்தம் | | 92 எண்கள் |

(ஆ) மொத்த உரிமம்:—

| | | |
|---|---|---|
| தனியாருக்கு | .. | 7 எண்கள் |
| ஆக மொத்தம் | | |
| (அ) + (ஆ) | .. | 99 எண்கள் |



2002 மார்ச் 15]

(ஆ) உரிய காலக்கெடுவுக்குள் அனைத்து உர விற்பனையாளர்களும் தங்கள் உர உரிமத்தினைப் புதுப்பித்துள்ளனர்.

சேலம் மாவட்டத்திலுள்ள அனைத்து உர விற்பனை நிலையங்களும் கோட்டவாரியாக தரக் கட்டுப்பாட்டு அலுவலர்களால் உரக் கட்டுப்பாட்டு ஆணை 1985 விதிமுறைகளின்படி செயலாற்றுகின்றனவா எனக் கண்காணிக்கப்பட்டு வருகிறது. எனவே இம்மாவட்டத்தில் இயங்கும் மொத்த மற்றும் சில்லறை உர விற்பனை நிலையங்கள் உரிய உரிமம் பெற்று உர விற்பனை மேற்கொள்கின்றன.

**90—**

## விலை நிர்ணயம்

**வினா 5831—திருமதி காசாம்பு பூமாலை :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய விளைபொருட்களுக்கு கட்டுப்படியாகக்கூடிய விலை நிர்ணயம் செய்ய அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காரிப் மற்றும் ராபி பருவ விவசாய விளைபொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலை (Minimum Support Price) மத்திய அரசு விலை நிர்ணயக் குழுவினால் மாநில அரசுகளின் பரிந்துரைகளை கருத்திற்கொண்டு ஆண்டுதோறும் நிர்ணயிக்கப்படுகிறது.

**91—**

## தோட்டக்கலை

**வினா 6627—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தோட்டக்கலை துறையின் மூலம் புதுக்கோட்டை மாவட்டத்தில் 1999-2000 ஆண்டு செயல்படுத்திய திடடங்கள் என்ன?

(ஆ) அதனால் பயன் பெற்றவர்கள் எத்தனை பேர்?

(இ) 2000-2001 ஆம் ஆண்டு திட்டம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் விவரம்:

| வ.எண் | செயல்படுத்தப்படும் திட்டங்களின் பெயர்கள். | 1999-2000 ஆண்டு பயனாளிகள் எண்ணிக்கை. | 2000-2001ஆம் ஆண்டு பயனாளிகள் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| | *மாநில அரசுத் திட்டம்* | | |
| 1. | ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் | 1625 | 1789 |
| 2. | குளிர்கால காய்கறிகள் | - | 80 |
| 3. | ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் இயற்கை பண்ணையம் | 87 | 70 |
| 4. | ஊரகப் பகுதியில் ஊட்டமிகு பழத்தோட்டம் | 825 | 403 |
| 5. | தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் | 79 | 211 |
| | *மத்திய அரசுத் திட்டம்* | | |
| 1. | ஒருங்கிணைந்த முந்திரி அபிவிருத்தித் திட்டம் | 2,422 | 1,017 |
| 2. | ஒருங்கிணைந்த வெப்ப மண்டல பழ அபிவிருத்தித் திட்டம் | 789 | 182 |
| 3. | ஒருங்கிணைந்த வாசனை அபிவிருத்தித் திட்டம் | 941 | 921 |
| 4. | ஒருங்கிணைந்த வணிக மலர் அபிவிருத்தித் திட்டம் | 5 | 26 |





| | | | |
|---|---|---|---|
| 5. | ஒருங்கிணைந்த மூலிகை அபிவிருத்தித் திட்டம் | 100 | 47 |
| 6. | காளான் பயிற்சி | 40 | 30 |
| 7. | பாலிதீன் உபயோகம் | 50 | - |
| 8. | வேர் மற்றும் கிழங்கு வகைப் பயிர்களை உள்ளடக்கிய காய்கறி அபிவிருத்தித் திட்டம் | - | 45 |

**92—**

## கசிவு நீர்க்குட்டை பழுதுபார்த்தல்

**வினா 7360—திரு. வெ. கோவிந்தராஜ்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, நெடுஞ்சாலை கிராமத்தில் உள்ள தண்டபாணிகோயில் அருகில் உள்ள கசிவு நீர்க் குட்டையைப் பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) கசிவு நீர்க் குட்டையைப் பழுதுபார்க்கும் பணியை தற்போது வேளாண்மைப் பொறியியல் துறையில் செயல்படுத்துவதில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**93—**

## கல்வி உதவித்தொகை

**வினா 3431—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் கல்வி ஆண்டில் சேலம் மாவட்டத்தில் எத்தனை தாழ்த்தப்பட்ட பெண் குழந்தைகள் கல்வி தொடர ஆறாம் வகுப்பில் உதவித்தொகை பெற்றனர்?

(ஆ) இத்திட்டம் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கும் விரிவுபடுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் 6 ஆம் வகுப்பு படிக்கும் 600 தாழ்த்தப்பட்ட பெண் குழந்தைகளுக்கு தலா ரூ 1,000/- வீதம் ரூ.6,00,000 உதவித்தொகை அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இத்திட்டம் இதர வகையினருக்குப் பொருந்தாது.

**94—**

## தாட்கோ நிறுவனம்

**வினா 7530—திரு. கு. ஜெயக்குமார் :** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாட்கோ நிறுவனத்திற்கு மத்திய மற்றும் மாநில அரசுகளிலிருந்து மூலதனம் வருகிறதா?

(ஆ) ஆம் எனில் கடந்த மூன்றாண்டுகளில் வந்த தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தாட்கோ நிறுவனத்திற்கு மத்திய, மாநில அரசுகளிடமிருந்து மூலதனமாக முறையே 40% + 51% விகிதத்தில் பங்குத் தொகை ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. கடந்த மூன்றாண்டுகளில் தாட்கோவிற்கு வந்த பங்கு மூலதனம் விவரம்:-

(ரூ. இலட்சங்களில்)

| ஆண்டு | மத்திய அரசு | மாநில அரசு |
|---|---|---|
| 1998-1999 | 318.30 | 331.50 |
| 1999-2000 | 140.00 | 331.50 |
| 2000-2001 | .. | 331.50 |



ரூ.140 இலட்சம் முந்தைய ஆண்டிற்கான நிலுவை மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டது. 1999-2000 மற்றும் 2000-2001 ஆகிய ஆண்டுகளுக்கு மத்திய அரசிடமிருந்து வர வேண்டிய மூலதனம் தாட்கோவிற்கு வரவில்லை.

**95—**

## கைத்தறிக் கண்காட்சி

**வினா 3432—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000 ஆண்டு மே மாதம் சேலத்தில் கைத்தறிக் கண்காட்சி நடைபெற்றதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டன?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், கைத்தறி மற்றும் துணித் துறை தொழில் அமைச்சர்:**

(அ) ஆம். 2000 ஆண்டில் 28-4-2000 முதல் 14-5-2000 முடிய 17 நாட்களுக்கு சேலத்தில் 46-வது அகில இந்திய கைத்தறிக் கண்காட்சி நடைபெற்றது.

(ஆ) மேற்படி கண்காட்சியின்போது ரூ.70.55 இலட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டன.

**96—**

## ஆவின் பால் உபபொருள்கள் ஏற்றுமதி

**வினா 1378—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆவின் பால் உபபொருள்கள் வேறு மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு, பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம், அனுப்பப்படுகின்றன.

(ஆ) ஆவின் பால் உபபொருட்கள் வேறு மாநிலங்களுக்கு 12 இடங்களில் கிளைகள் மூலமாகவும், பிற ஒன்றியங்களுக்கும்/ இணையங்களுக்கும் மற்றும் தனியார்களுக்கும் இணையத்தினால் அங்கீகரிக்கப்பட்ட விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

**97—**

## கொள்கை விளக்கப் புத்தகங்கள்

**வினா 4183—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் பற்றிய கொள்கை விளக்கப் புத்தகங்கள் ஊராட்சி மன்ற அலுவலகங்களுக்கு இலவசமாக அனுப்பி வைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு, பால் வளத் துறை அமைச்சர்:**

கொள்கை விளக்கக் குறிப்பு ஆங்கிலம் மற்றும் தமிழில் தமிழ்நாடு அரசு இணையதளம் www.tn.gov.in-ல் உள்ளதால், இவற்றைத் தனியே ஊராட்சி மன்ற அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டிய அவசியம் எழாது.

**98—**

## பேருந்து வசதி

**வினா 2640—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சிப் பகுதியில் வசிக்கும் மக்கள் பேருந்து வசதி அதிகம் இல்லாததால் அவதிப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், சேலம் பஸ் நிலையத்திலிருந்து அதிகப்படியான பேருந்துகள் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சிப் பகுதியில் 11 அரசுப் பேருந்துகளும் (நடைகள் 79), 13 தனியார் பேருந்துகளும் (நடைகள் 68) இயங்கி வருகின்றன. இப்பேருந்துகள் மூலம் இடங்கணசாலைப் பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவை முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**99—**

## சிற்றுந்து

**வினா 4657—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் நிதியாண்டில் சேலம் மாவட்டத்தில் சிறு பேருந்து (மினி பஸ்) ஓட்டுவதற்கு அரசு அளித்த அனுமதி எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

2000-2001 ஆம் நிதியாண்டில், சேலம் மாவட்டத்தில் 189 சிற்றுந்து அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

**100—**

## மினி பஸ்

**வினா 8269—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டத்தில் தனியார் மினி பஸ் எத்தனை இயக்கப்படுகின்றன?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டத்தில் 1-10-2001 அன்றைய நிலவரப்படி 184 சிற்றுந்துகள் இயக்கப்படுகின்றன.

## மூன்றாம் பட்டியல்

1—

### முத்திரைத்தாள் விற்பனை

**வினா 4048—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் சென்ற நிதியாண்டில் முத்திரைத்தாள் விற்பனை மூலம் எவ்வளவு நிதி வருவாய் கிடைத்தது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர்:**

2000-2001 ஆம் நிதியாண்டில் சேலம் பதிவு மாவட்டத்தில் நீதிசாரா முத்திரைத்தாள்கள் விற்பனை மூலம் ரூ.28,85,68,173/-ம் நீதிமன்ற முத்திரைத்தாள்கள் விற்பனை மூலம் ரூ.2,08,18,229/-ம் அரசுக்கு வருவாய் கிடைத்துள்ளது.

2—

### செஞ்சி காவல் நிலைய வழக்குகள்

**வினா 5772—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியத்தில் கள்ளச் சாராய வியாபாரிகள்மீது இதுவரை செஞ்சி காவல் நிலையத்தில் எத்தனை வழக்குகள் போடப்பட்டுள்ளன என்று அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியத்தில், தொடர் மதுவிலக்கு வேட்டைகள் நடத்தப்பட்டு, 2001 ஆம் ஆண்டில் (16-11-2001 வரை) 445 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 411 மதுவிலக்கு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.



3—

### கஞ்சா செடிகள்

**வினா 6581—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பயிரிடப்பட்ட கஞ்சா செடிகள் கடந்த ஆண்டு எவ்வளவு அழிக்கப்பட்டன?

(ஆ) அதற்காக எத்தனை பேர்மீது வழக்குப் போடப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் பயிரிடப்பட்ட கஞ்சா செடிகள் 2000ஆம் ஆண்டில் 95,406 கிலோ கிராம் அளவு பறிமுதல் செய்து அழிக்கப்பட்டன. இதன் மொத்த மதிப்பு ரூ.19.08 கோடியாகும். அதேபோல் 2001 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் வரை 68,697.450 கிலோ கிராம் அளவுள்ள கஞ்சா செடிகள் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன. இதன் மொத்த மதிப்பு ரூ.13.74 கோடியாகும்.

(ஆ) கஞ்சா பயிரிட்ட குற்றங்களுக்காக 2000 ஆண்டில் 40 நபர்கள் மீதும் 2001 ஆம் ஆண்டில் (அக்டோபர் திங்கள் வரை) 38 நபர்கள் மீதும் குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

4—

### ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

**வினா 6586—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஒன்றியம், முள்ளிப்பள்ளம் ஊராட்சியில் பள்ளிக்கூடங்களுக்கு அருகில் உள்ள காலி இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி வழங்கப்பட்ட பட்டாவை இரத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர்:**

மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி வட்டம், முள்ளிப்பள்ளம் கிராமம், புல எண் 19/1, சாலைப் புறம்போக்கு நிலத்தில் 10 ஆண்டுகளுக்கு மேல் வீடுகட்டி குடியிருந்த நபர்களுக்கு பட்டா வழங்குவது தொடர்பாக மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் புலத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு, முடிவு செய்யப்பட்டு பட்டா வழங்கப்பட்டதை எதிர்த்து திரு எஸ். மார்நாகன் என்பவரால் சென்னை உயர் நீதிமன்றத்தில் டபிள்யு.ப்பி. எண். 10876/2001-ன்படி ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. எனவே சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ரிட் மனுவில் வழங்கப்படும் தீர்ப்பாணையின் அடிப்படையில் மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**5—**

## கணினி மென்பொருள் உற்பத்தி

**வினா 7269—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கணினி மென்பொருள் உற்பத்தியில் எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) மென்பொருள் உற்பத்தியை மேம்படுத்த அரசு எடுத்துவரும் நடவடிக்கை யாது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதல்மைச்சர்:**

(அ) தமிழகத்தில் சுமார் 35,000 மென்பொருள் பணியாளர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். மேலும் 1,000 நபர்களுக்கு மேல் தகவல் பதிவு (Data Entry) செய்யும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

(ஆ) சென்னையில் டைடல் பூங்கா-I ஒன்று அமைக்கப்பட்டு தற்போது செயல்பட்டு வருகிறது. டைடல் பூங்கா-II அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் தமிழ்நாடு மாநில தொழில் முன்னேற்றக் கழக நிறுவனம் மூலம் சென்னை கேளம்பாக்கம் சிறுசேரியில் ஒரு தகவல்



தொழில் நுட்பப் பூங்கா உருவாக்கப்பட்டு வருகிறது. தனியார் மென்பொருள் பூங்காக்களை ஊக்குவிக்கும்பொருட்டு மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்துடன் எல்காட் நிறுவனம் ஓர் ஒப்பந்தம் செய்துள்ளது. மேற்குறிப்பிட்ட திட்டங்கள் செயல்பட ஆரம்பித்த உடன் மென்பொருள் உற்பத்தியை மேம்படுத்த வாய்ப்புள்ளது.

**6—**

## ஏலம் மூலம் வருமானம்

**வினா 11427—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000 ஆண்டில் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் உள்ள பழைய தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரங்களை அரசு ஏலம் விட்டதா?

(ஆ) ஆம் எனில், இதன் மூலம் அரசுக்கு எவ்வளவு வருமானம் கிடைத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர்:**

(அ) பயனற்றதென கழிக்கப்பட்ட 123 தமிழ் மற்றும் 253 ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் 21-2-2000 முதல் 26-2-2000 வரை 6 நாட்கள் பொது ஏலத்தில் விடப்பட்டன.

(ஆ) இதன் மூலம் கிடைக்கப்பெற்ற வருவாய் ரூ. 3,06,150 அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

**7—**

## அச்சுத் துறை இயந்திரங்கள்

**வினா 11429—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை நீண்டகாலமாக பயன்படுத்திய இயந்திரங்களை அரசு ஏலம் விட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதன் மூலம் அரசுக்கு எவ்வளவு வருமானம் கிடைத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர்:**

*(அ) 2000-2001 ஆம் ஆண்டில் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் நீண்டகாலமாக பயன்படுத்திய இயந்திரங்கள் 26-4-2000 அன்று ஏலம் விடப்பட்டுள்ளன.*

*(ஆ) இதன் மூலம் அரசுக்கு ரூ.9,49,176/- வருமானம் கிடைத்துள்ளது.*

**8—**

## கண்காணிப்பு நடைமுறைகள்

**வினா 13738—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின்மூலம் அச்சிடப்படும் ரகசிய ஆவணங்கள், தேர்வு கேள்வித் தாள்கள் போன்றவை வெளியே வாராமல் தடுக்க, கண்காணிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர்:**

*(அ) எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் மூலம் அச்சிடப்படும் ரகசிய ஆவணங்கள், தேர்வு கேள்வித் தாள்கள் போன்றவை வெளியே வாராமல் தடுக்கவும், கண்காணிக்கவும் ஏற்கெனவே உரிய நடைமுறைகள் அமல்படுத்தப்பட்டு வருகின்றன.*

*(ஆ) இந்த நடவடிக்கை தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

**9—**

## கிளை அச்சகங்கள் நிறுவுதல்

**வினா 13745—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழகத்தில் மாவட்டந்தோறும் அரசிதழ்களை அச்சிட கிளை அச்சகங்களை நிறுவிட வேண்டிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா?*





*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர்:**

*(அ) சென்னையில் உள்ள அரசு மைய அச்சகம், உயர் நீதிமன்ற வளாகத்தினுள் கிளை அச்சகம் மற்றும் புதுக்கோட்டை, சேலம், திருச்சி, விருத்தாசலம் ஆகிய அரசு கிளை அச்சகங்கள் அரசிதழ்கள் அச்சிடுவதற்கு போதுமானதாக கருதப்படுவதால் தமிழகத்தில் மாவட்டந்தோறும் அரசிதழ்களை அச்சிட கிளை அச்சகங்களை நிறுவிட தேவையில்லை.*

*(ஆ) இக்கேள்வி எழவில்லை.*

**10—**

## மாலை நேரக் கல்லூரி

**வினா 2257—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு நிதி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*சட்டக் கல்வித் துறையில் மூன்று ஆண்டு மாலை நேரக் கல்லூரியை (இளங்கலை சட்டம்) மீண்டும் கொண்டுவர அரசு முயற்சி செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

*இல்லை.*

**11—**

## சிறைவாசிகளுக்கு படிப்புச் செலவு

**வினா 9568—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தமிழக சிறைச்சாலைகளில் உள்ளோர் படிப்புச் செலவிற்கு (அஞ்சல் வழி) அரசு 2000 ஆண்டில் எவ்வளவு நிதி ஒதுக்கியது?*

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

தமிழக சிறைச்சாலைகளில் 2000 ஆண்டில் 358 சிறைவாசிகளுக்கு திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் மற்றும் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் அஞ்சல் வழி இளங்கலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு மற்றும் இந்திரா காந்தி தேசிய திறந்த வெளி பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் அஞ்சல் வழி கணிப்பொறி டிப்ளமோ கல்வி பயில மொத்தம் ரூ.6,54,835 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**12—**

## வழக்கறிஞர்கள் சேமநல நிதி

**வினா 11670—திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு நிதி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வழக்கறிஞர்கள் சேமநல நிதிக்கான அரசின் பங்குத் தொகையை செலுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் நீதிமன்றங்களில் பணிபுரியும் வழக்குரைஞர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தாரின் நலனுக்காக 1987ஆம் ஆண்டு, தமிழ்நாடு வழக்கறிஞர்கள் நல நிதிச் சட்டம் ஏற்படுத்தப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இச்சட்டத்தின்கீழ் ஒரு 'நல நிதியம்' (Welfare Fund) ஏற்படுத்தப்பட்டுள்ளது. நல நிதியத்தில் உறுப்பினராக பதிவு செய்ய ஆண்டு சந்தாக் கட்டணம் ரூ.200-ம் ஆயுட்கால உறுப்பினர் சந்தா கட்டணம் ரூ.2,500-ம், முதுநிலை வழக்கறிஞர்கள் (Senior Advocates) ஆயுட்கால உறுப்பினராக பதிவு செய்ய வேண்டுமென்றால் கட்டணம் ரூ.10,000-ம் வசூலிக்கப்படுகின்றது. பதிவு செய்ய ஆண்டு சந்தா மூலம் வசூலிக்கப்படும் நிதி மற்றும் வக்காலத்து நாமாவில் ஒட்டப்படும் ரூ.10 பெறுமானமுள்ள, நல நிதி முத்திரைக் கட்டணமாக வசூலிக்கப்படும் தொகை ஆகியவை இந்த நல நிதியத்தில் சேர்க்கப்படுகிறது. வழக்கறிஞர்கள் சேமநல நிதிக்கான அரசின் பங்குத் தொகையை செலுத்தும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.



**13—**

## தனி சிறைச்சாலை உருவாக்குதல்

**வினா 12885—திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு நிதி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டத்திற்கான தனி சிறைச்சாலை உருவாக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டத்தின் தலைமையகமாக விளங்கும் திருவண்ணாமலையில் ஒரு கிளை சிறைச்சாலை ஏற்கெனவே இயங்கி வருகிறது. இங்கு அங்கீகரிக்கப்பட்ட அடைப்பு மற்றும் தினசரி அடைப்பினை நோக்குங்கால், அங்கீகரிக்கப்பட்ட அடைப்பை விட குறைவான எண்ணிக்கையில்தான் விசாரணை சிறைவாசிகள் அனுமதிக்கப்படுகின்றனர். ஆகவே திருவண்ணாமலை மாவட்டத்திற்காக தனி சிறைச்சாலை உருவாக்க நேர்வு எழவில்லை.

**14—**

## உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்

**வினா 2909—திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், கீழ்ப்பாடி கிராமத்திலுள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், கீழ்ப்பாடி கிராமத்திலுள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தக் கோரும் கருத்துரு 1999-2000 கல்வியாண்டில் பெறப்பட்டு

[2002 மார்ச் 15

குறைந்தபட்ச மாணவர் வருகைக் குறைவு, ஆய்வகம், நூலகம், விளையாடும் இடமின்மை காரணமாக 1999-2000 கல்வியாண்டில் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசின் உயர் மட்டக் குழுவால் தேர்வு செய்யப்படவில்லை. 2001-2002ஆம் கல்வியாண்டில் இப்பள்ளியைத் தரம் உயர்த்துவது சார்ந்து கருத்துரு ஏதும் பெறப்படவில்லை.

2. மேற்கண்ட பள்ளி குறித்து வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டு உயர் மட்டக் குழுவால் பரிந்துரைக்கப்படுமானால் அரசின் நிதி நிலைமைக்குட்பட்டு உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

**15—**

## தேசிய மாணவர் படை

**வினா 5566—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய மாணவர் படை (என்.சி.சி.) தமிழக மேல்நிலை/ உயர்நிலைப் பள்ளிகளில் இயங்கி வருகின்றனவா?

(ஆ) இல்லையெனில், இப்பயிற்சியை கட்டாயமாக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இப்பயிற்சி பற்றிய கொள்கை முடிவுகளை நடுவண் அரசுதான் எடுக்க வேண்டும். மாநில அரசுக்கு இது குறித்த தகவல் ஏதுமில்லை.

**16—**

## தனி அலுவலர் நியமனம்

**வினா 6955—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2002 மார்ச் 15]

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டையில் களம்பயம் முத்துமாரியம்மன் கோயிலுக்கு அங்கேயே தனி அலுவலர் நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

கந்தர்வக்கோட்டை அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலுக்கு பசலி 1410-ல் உண்டியல் மற்றும் அர்ச்சனை சீட்டு விற்பனை மூலம் ரூ. 24,326 வரவு வந்துள்ளது. மேற்படி பசலியில் மின் கட்டணம், இலாகா பாக்கி மற்றும் திருவிழா செலவுகள் ஆகியவைகட்கு ரூ. 24,323 செலவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆலய வருமானம் வரவுக்கும் செலவுக்கும் சரியாக உள்ள நிலையில், மேற்படி திருக்கோயிலுக்கு தனியாக செயல் அலுவலர் நியமனம் செய்தால் அவரது சம்பளம் திரும்பச் செலுத்த இயலாத நிலை ஏற்படுமாதலால் மேற்படி திருக்கோயிலுக்கு தனியாக செயல் அலுவலர் ஒருவரை நியமனம் செய்ய வேண்டிய அவசியமில்லை. புதுக்கோட்டை அருள்மிகு மனோன்மணியம்மன் திருக்கோயிலின் உபகோயிலாகவே வைத்து செம்மையாக நிர்வகிக்கப்படுகிறது.

**17—**

## திருக்கோயில்கள்

**வினா 8412—திரு. டி. மணி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தேவஸ்தானம் நிர்வாகத்தின் கீழ் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள் எத்தனை?

(ஆ) இவற்றைப் பராமரிக்க தேவஸ்தானம் எவ்வளவு நிதி செலவு செய்கிறது?

[2002 மார்ச் 15

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) சுசீந்திரம், இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள் மொத்தம் 490. அவற்றின் விவரம் வருமாறு:—

| | | |
|---|---|---|
| 1. இணைக்கப்பட்ட திருக்கோயில்கள் | .. | 458 |
| 2. இணைக்கப்படாத திருக்கோயில்கள் | .. | 18 |
| 3. சங்கேதம் திருக்கோயில்கள் | .. | 12 |
| 4. ஸ்ரீபாதம் திருக்கோயில்கள் | .. | 2 |
| மொத்தம் | .. | **490** |

(ஆ) சுசீந்திரம், இணைக்கப்படாத மற்றும் இணைக்கப்பட்ட திருக்கோயில்களின் 1410-ம் பசலி மொத்த பராமரிப்பு செலவு ரூ.2,58,80,154.80 ஆகும்.

**18—**

## திருக்கோயிலின் உண்டியல் மற்றும் சிறப்புக் கட்டணம்

**வினா 10151—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரை மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் உண்டியல் மற்றும் சிறப்புக் கட்டணம் மூலம் வசூலான தொகை எவ்வளவு?

(ஆ) இத்தொகை எவ்வகையில் செலவிடப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் முடிய உண்டியல் வருமானம் ரூ. 13,06,941.90.

2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் முடிய சிறப்பு நுழைவுக் கட்டணம் ரூ. 7,66,805.00.



2002 மார்ச் 15]

மேற்காணும் தொகை பணியாளர்கள் சம்பளம், அயல்பணியாளர் சம்பளம், பூஜை மற்றும் உற்சவம், இலவசப் பிரசாதம், கருணை இல்லம், முதியோர் இல்லம், சித்த வைத்தியசாலை, கால்நடைப் பராமரிப்பு (யானை), நிலவரி, கட்டட வரி, தண்ணீர் வரி, மின் கட்டணம், மின் சாமான்கள் கொள்முதல் மற்றும் பராமரிப்பு, தொலைபேசிக் கட்டணம், கார் பராமரிப்பு, இன்சூரன்ஸ் போன்றவற்றுக்காக செலவிடப்படுகிறது.

**19—**

## மீனாட்சி திருக்கோயிலின் உண்டியல் வசூல்

**வினா 10153—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரை மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயிலின் உண்டியல் மற்றும் சிறப்புக் கட்டணம் மூலம் வசூலான தொகை எவ்வளவு?

(ஆ) இத்தொகை எவ்வகையில் செலவிடப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரை மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயிலின் உண்டியல் மற்றும் சிறப்புக் கட்டணம் வசூல் கீழ்க்கண்டவாறு:—

| மாதம் | உண்டியல் வருமானம் | சிறப்புக் கட்டண வருமானம் |
|---|---|---|
| ஜனவரி, 2001 | 16,20,388.95 | 8,12,720.00 |
| பிப்ரவரி, 2001 | 10,47,598.85 | 4,10,620.00 |
| மார்ச், 2001 | 9,04,810.10 | 3,76,090.00 |
| ஏப்ரல், 2001 | 11,70,044.70 | 5,03,510.00 |
| மொத்தம் | **47,42,842.60** | **21,02,940.00** |

மேற்கண்ட வருமானங்கள் முழுவதும் திருக்கோயிலின் பொது நிதிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு திருக்கோயிலின் நிர்வாகச் செலவு, பூசை செலவுகளுக்கும், வளர்ச்சிப் பணிகளுக்கும் திருவிழாக்கால ஏற்பாடு செலவினங்களுக்கும், மேற்படி திருக்கோயிலின் 21 உபகோயில்களின் நிர்வாகம் மற்றும் பூசை செலவினங்களுக்கும், திருப்பணி, கும்பாபிஷேகம் போன்ற சமயப் பணிகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**20—**

## ஓமியோபதி மருத்துவர்கள்

**வினா 2397—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவமனைகளில் பணியாற்றும் ஓமியோபதி மருத்துவர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

| | அரசு மருத்துவமனையின் பெயர் | மருத்துவர்கள்/பணிபுரியும் ஓமியோபதி உதவி மருத்துவ அலுவலர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, திருமங்கலம், மதுரை | 10 +5 |
| 2. | அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை, சென்னை | 1 |
| 3. | அரசு தலைமை மருத்துவமனைகள் (மொத்தம்) | 25 |
| 4. | அரசு தாலுகா மருத்துவமனைகள் (மொத்தம்) | 10 |
| 5. | அரசு மருந்தகங்கள் | 5 |
| | மொத்த ஓமியோபதி உதவி மருத்துவ அலுவலர்கள் | 56 |



**21—**

## விழிப்புணர்வு இயக்கம்

**வினா 4011—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்த விழிப்புணர்வு இயக்கம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் அரசால் இயக்கப்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்த விழிப்புணர்வு இயக்கம் தொடங்கப்பட்டு, குடும்பநல விழிப்புணர்வு முகாம்கள் கிராமப்புறங்களில் இயங்கி வருகின்றன.

குடும்பநல விழிப்புணர்ச்சி முகாம்கள் கிராமப்புறங்களில் 185, நகர்புறங்களில் 10 ஆக மொத்தம் 195 முகாம்கள் நடத்த ரூ.2,24,867 காஞ்சிபுரம் மாவட்டத்திற்காக நிதி ஒதுக்கப்பட்டு 1-7-2001 முதல் 15-7-2001 வரை நடைபெற்றது. இம்முகாமில் ஆண்கள் 1,996, பெண்கள் 11,850 ஆக மொத்தம் 13,846 நபர்கள் பயன் பெற்றுள்ளனர்.

மேலும் காஞ்சிபுரம் குடிசைப் பகுதிகளில் எய்ட்ஸ்/ பால்வினை நோய் சம்பந்தமான விழிப்புணர்ச்சி முகாம்கள் 25 நடத்த நிதி ரூ.62,500 மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு செப்டம்பர் முடிய 6 மாதங்களுக்காக இம்முகாம்கள் நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. மற்றும் மாவட்ட அளவிலான பல்வேறு துறை அலுவலர்களுக்கு எய்ட்ஸ் விழிப்புணர்ச்சிப் பயிற்சி அளிக்கும்பொருட்டு, காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு ரூ. 25,000 நிதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் வழியாக மாவட்ட மகளிர் திட்ட அலுவலர், மாவட்ட பொதுச் சுகாதார செவிலியர், மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் தன்னார்வ நிறுவன மகளிர் திட்ட ஒருங்கிணைப்பாளர்

ஆகியோருக்கு, நமக்கு நாமே திட்டத்தின் மூலம் பயிற்சி அளிக்கும் பொருட்டு ரூ. 9,720 மாவட்டத் திட்ட அலுவலருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது தவிர, தமிழ்நாடு முழுவதும், எய்ட்ஸ் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் வகையில், வானொலியில் வர்த்தக விளம்பர நிகழ்ச்சிகளிலும் சினிமா பாடல் இடையேயும் ஒலி பரப்பப்பட்டு வருகிறது. தமிழகமெங்கும் உள்ள அனைத்து திரையரங்குகளிலும் சினிமா சிலைடு மூலமாக விளம்பரம் செய்யப்பட்டு வருகிறது. முக்கியமான இடங்களில் சுவர் விளம்பரங்கள் செய்யப்பட்டுள்ளன. கிராமப்புறங்களில் நாடகம், கலை நிகழ்ச்சிகள் மூலமாகவும் எய்ட்ஸ் பிரச்சார நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. ஆட்டோக்களிலும், பேருந்துகளிலும் தகரப் பலகைகள் மூலமாக (பேனர்ஸ்) எய்ட்ஸ் பற்றிய விளம்பரங்கள் செய்யப்பட்டு வருகின்றன. பொதுமக்களுக்கும், தொண்டு நிறுவனங்களுக்கும், அரசுப் பணியாளர்களுக்கும் எச்.ஐ.வி.-யால் பாதிக்கப்படும் அபாயத்தில் உள்ளோர்களுக்கும் எனப் பலதரப்பட்ட துண்டுப் பிரசுரங்கள், விளம்பரச் சுவரொட்டிகள், சிறு புத்தகங்கள், மடிப்புகள், கண்காட்சிப் பொருட்கள், ஸ்டிக்கர்கள், பேனர்கள் எனப் பல்வேறு விளம்பரப் பொருட்கள் அதிக அளவில் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன.

**22—**

## சித்த மருந்து வகைகள்

**வினா 4771—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டையுடன் இணைந்த மருந்துசெய் நிலையத்தில் தயாரிக்கப்படும் மருந்து வகைகள் என்ன?

(ஆ) அவற்றின் கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் விற்பனைத் தொகை எவ்வளவு?

(இ) அதில் மிக அதிக அளவிற்கு விற்பனை செய்யப்பட்ட மருந்து வகை என்ன?

(ஈ) அது எவ்வகை நோய் தீர்க்க உதவுகிறது?





விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டையுடன் இணைந்த மருந்துசெய் நிலையத்தில் மொத்தம் 105 மருந்து வகைகள் தயாரிக்கப்படுகின்றன.

(ஆ) கல்லூரி மற்றும் அரசு மருத்துவப் பிரிவுகளுக்கு (இலவசமாக பொது மக்களுக்கு வழங்க) வழங்கிய மருந்துகளின் மதிப்பு ரூ. 51,79,342.

(இ) 3843 லிட்டர் சிவப்பு குக்கில் தைலம் ரூ. 13,65,263-க்கும், 1328 லிட்டர் கற்பூராதி தைலம் ரூ.4,79,930-க்கும், 760 லிட்டர் விஷமுஷ்டி தைலம் ரூ.2,53,891-க்கும் விற்பனை செய்யப்பட்டது.

(ஈ) வாத சம்பந்தமான நோய்கள் (கீல்வாயு, பக்கவாதம்) தீர்க்க உதவுகிறது.

**23—**

## சித்த மருத்துவ மருந்துகள்

**வினா 4775—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் லட்சுமி சேவா சங்கம் காந்தி கிராமத்தில் தயாரிக்கப்படும் சித்த மருத்துவ மருந்துகள் என்ன?

(ஆ) கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் அவற்றின் விற்பனை எவ்வளவு?

(இ) அதில் அதிக அளவில் விற்பனையாகியுள்ள மருந்து வகைகள் என்ன?

(ஈ) அதில் குணப்படும் வியாதிகள் எவை?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) திண்டுக்கல் மாவட்டம், காந்தி கிராமம், லட்சுமி சேவா சங்கத்தில் சுமார் 250 வகை சித்த மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.

[2002 மார்ச் 15

(ஆ) கடந்த 2000-2001-ல் அரசுக்கு விநியோகம் செய்த மருந்துகளின் மொத்த மதிப்பு ரூ. 74,62,000.

(இ) லேகியங்கள், தைலங்கள், பற்பங்கள் மற்றும் செந்தூரங்கள், மாத்திரைகள், மெழுகு மற்றும் தலைவலி பசை அதிகம் விற்பனையாகியுள்ளன.

(ஈ) சித்த மருந்துகளினால் பெரும்பான்மையான நோய்கள் தீரும்.

**24—**

## எய்ட்ஸ் நோயாளிகள் எண்ணிக்கை

**வினா 8571—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999-2000 ஆண்டு முடிய சென்னையில் எய்ட்ஸ் நோயாளிகள் எண்ணிக்கை எவ்வளவு என்று அரசு கண்டறிந்துள்ளது?

(ஆ) தமிழ்நாட்டில் எய்ட்ஸ் நோயாளிகள் எண்ணிக்கை எவ்வளவு என்று கண்டறியப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) 1999-2000 ஆண்டு முடிய சென்னையில் எய்ட்ஸ் நோயாளிகள் எண்ணிக்கை:-

ஆண்கள்-1765

பெண்கள்-470

மொத்தம்-2235

(ஆ) தமிழ்நாட்டில் ஜூலை திங்கள் 2001 முடிய எய்ட்ஸ் நோயாளிகள் எண்ணிக்கை:—

ஆண்கள்-10488

பெண்கள்-3065

மொத்தம்-13553



2002 மார்ச் 15]

**25—**

## தார்ச் சாலையாக மாற்றுதல்

**வினா 90—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, காடையாம்பட்டி மண் சாலையை தார்ச்சாலையாக மாற்ற அரசு சிறப்பு நிதி வழங்குமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்த தகவல் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி காடையாம்பட்டி மண் சாலையை தார்ச் சாலையாக மாற்றுவதற்கு அரசின் நிதி நிலை நெருக்கடி காரணமாக சிறப்பு நிதி வழங்குவதற்கு வாய்ப்பில்லை.

**26—**

## தெருவிளக்கு அமைத்தல்

**வினா 108—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சிக்கு உட்பட்ட மோட்டூரில் உள்ள நாய்க்கர் தெரு, மற்றும் பகுதிகளில் தெருவிளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி நகராட்சிக்கு உட்பட்ட மோட்டூர் நாயக்கர் தெரு பகுதிக்கு புதியதாக தெருவிளக்குகள் அமைக்க ரூ.50,000/- செலவினம் ஆகும். 2001-2002 ஆம் ஆண்டு அடிப்படை வசதித் திட்டத்தில் தெருவிளக்கு அமைக்கும் பணி எடுத்து செயல்படுத்தப்படவுள்ளது.

27—

## தெருவிளக்குகள் அமைத்தல்

**வினா 611—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், லெவிஞ்சுபுரம் ஊராட்சி மாடன்பிள்ளை தர்மம் அம்மன் கோயிலுக்கு நேர்வடக்கு சாலையில் தெரு விளக்குகள் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், லெவிஞ்சுபுரம் ஊராட்சி மாடன்பிள்ளை தர்மம் அம்மன் கோயிலுக்கு நேர்வடக்கு சாலையில் இதற்குமுன் வீடுகள் இல்லை. தற்போதுதான் 15 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இவ்வூராட்சியில் தற்போது நிதி நிலைமை திருப்திகரமாக இல்லை. எனவே தற்போது அங்கு தெரு விளக்குகள் அமைக்க இயலாது.

28—

## குடிநீர் வசதி

**வினா 1036—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை கிழக்கு ஒன்றியம், இடையப்பட்டி பஞ்சாயத்து, வெள்ளிமலைப்பட்டிக்கு குடிநீர் வசதி செய்து தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மதுரை கிழக்கு ஒன்றியம், இடையப்பட்டி பஞ்சாயத்து வெள்ளிமலைப்பட்டியில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 30,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டு, குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது.



29—

## குடிதண்ணீர் வசதி

**வினா 1076—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், குறவகுடி பஞ்சாயத்து, வீரபாண்டி பகுதி மக்களுக்கு போதிய குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், குறவகுடி பஞ்சாயத்து, வீரபாண்டி பகுதிக்கு குடிநீர் வழங்க புதிய அடிபம்பு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

30—

## குடிதண்ணீர் வசதி

**வினா 1079—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், பானாமூப்பன்பட்டி பஞ்சாயத்து, கரட்டுப்பட்டிக்கு குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், பானாமூப்பன்பட்டி பஞ்சாயத்து, கரட்டுப்பட்டிக்கு குடிநீர் வழங்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2002 மார்ச் 15

31—

## குடிதண்ணீர் வசதி

**வினா 1080—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், பன்னியான் பஞ்சாயத்து, குமரன்கோவில்பட்டிக்கு போதிய குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், பன்னியான் பஞ்சாயத்து, குமரன்கோவில்பட்டிக்கு குடிதண்ணீர் வழங்க புதிய அடிகுழாய் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

32—

## குடிதண்ணீர் வசதி

**வினா 1081—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், பன்னியான் பஞ்சாயத்து, பன்னியான் பகுதிகளில் குடிதண்ணீர் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், பன்னியான் பஞ்சாயத்து, பன்னியான் பகுதிகளில் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது.

33—

## குடிதண்ணீர் வசதி

**வினா 1085—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2002 மார்ச் 15]

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், குறவகுடி பஞ்சாயத்து, சி. நாட்டாபட்டி பகுதியில் போதிய குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், குறவகுடி பஞ்சாயத்து, சி. நாட்டாபட்டி பகுதியில் குடிநீர் வழங்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

34—

## குடிதண்ணீர் வசதி

**வினா 1086—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், ஏ. புதுப்பட்டி பஞ்சாயத்து, கிருஷ்ணாபுரம் பகுதிக்கு போதிய குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன். ஏ. புதுப்பட்டி பஞ்சாயத்து, கிருஷ்ணாபுரம் பகுதிக்கு போதிய குடிநீருக்காக புதிய அடிகுழாய் அமைக்கப்பட்டுள்ளது.

35—

## பெருமாள்கோவில்பட்டிக்குக் குடிநீர்

**வினா 1087—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், தும்மகுண்டு பஞ்சாயத்து, பெருமாள்கோவில்பட்டி பகுதிக்கு போதிய குடிதண்ணீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், தும்மகுண்டு பஞ்சாயத்து, பெருமாள்கோவில்பட்டி பகுதிக்கு புதிய அடிகுழாய் அமைக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

36—

### உடையாம்பட்டிக்குக் குடிநீர்

**வினா 1088—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், தும்மகுண்டு பஞ்சாயத்து, உடையாம்பட்டி பகுதிக்கு போதிய குடிதண்ணீர் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், தும்மகுண்டு பஞ்சாயத்து, உடையாம்பட்டி பகுதிக்கு குடிநீர் வழங்க நடப்பாண்டில் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

37—

### பேயம்பட்டியில் குடிதண்ணீர்

**வினா 1089—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், தும்மகுண்டு பஞ்சாயத்து, பேயம்பட்டி பகுதியில் போதிய குடிதண்ணீர் வழங்க அரசு முன்வருமா?



விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், தும்மகுண்டு பஞ்சாயத்து, பேயம்பட்டி பகுதியில் குடிதண்ணீர் வழங்க புதிய அடிகுழாய் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

38—

### குடிதண்ணீர் வசதி

**வினா 1091—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், வேப்பனூத்து பஞ்சாயத்து, வேப்பனூத்தில் போதிய குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், வேப்பனூத்து பஞ்சாயத்து, வேப்பனூத்தில் கோடைகால குடிநீர் தட்டுப்பாடு திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

39—

### குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குதல்

**வினா 1092—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், அய்யனார்குளம் பஞ்சாயத்து, ஒய்யண்டாபட்டியின் குடிதண்ணீர்ப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி செல்லம்பட்டி யூனியன், அய்யனார்குளம் பஞ்சாயத்து, ஒய்யண்டாபட்டியில் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க புதிய அடிபம்பு ஒன்று இவ்வாண்டு திட்டத்தில் அமைக்கப்படும்.

40—

[2002 மார்ச் 15

## குடிதண்ணீர் வசதி

**வினா 1093—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், அய்யனார்குளம் பஞ்சாயத்து, கல்கொண்டன்பட்டிக்கு குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், அய்யனார்குளம் பஞ்சாயத்து, கல்கொண்டன்பட்டிக்கு குடிதண்ணீர் வழங்க இவ்வாண்டு திட்டத்தில் சேர்த்துக்கொள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

41—

## அழகாபுரிக்கு குடிதண்ணீர் வசதி

**வினா 1094—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், அய்யனார்குளம் பஞ்சாயத்து, அழகாபுரி பகுதிக்கு குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், அய்யனார்குளம் பஞ்சாயத்து, அழகாபுரி பகுதிக்கு கூடுதல் குடிதண்ணீர் வசதிக்காக புதிய அடிபம்பு திட்டத்தில் அடிபம்பு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



2002 மார்ச் 15]

42—

## அயன்கோவில்பட்டிக்கு குடிதண்ணீர் வசதி

**வினா 1095—திரு லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், அய்யனார்குளம் பஞ்சாயத்து, அயன்கோவில்பட்டியின் குடிதண்ணீர் பற்றாக்குறையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், அய்யனார்குளம் பஞ்சாயத்து, அயன்கோவில்பட்டியில் புதிதாக அடிகுழாய் அமைக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

43—

## வாழசமுத்திரப்பட்டிக்கு குடிநீர்

**வினா 1096—திரு லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், கண்ணனூர் பஞ்சாயத்து, வாழசமுத்திரப்பட்டி பகுதிக்கு போதிய குடிதண்ணீர் வசதி செய்து தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், கண்ணனூர் பஞ்சாயத்து, வாழசமுத்திரப்பட்டி பகுதியில் குடிநீர் வசதிக்காக புதிதாக அடிகுழாய் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2002 மார்ச் 15

**44—**

## குடிதண்ணீர் வசதி

**வினா 1097—திரு லா. சந்தானம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், கட்டக்கருப்பன்பட்டி பஞ்சாயத்து, ஆனையூர் பகுதி மக்களுக்குப் போதிய குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், கட்டக்கருப்பன்பட்டி பஞ்சாயத்து, ஆனையூர் பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக கைப்பம்பு அமைக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**45—**

## நரசிங்கபுரம் பகுதிக்கு குடிநீர்

**வினா 1098—திரு லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், கண்ணனூர் பஞ்சாயத்து, நரசிங்கபுரம் பகுதி பொதுமக்களுக்கு போதிய குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், கண்ணனூர் பஞ்சாயத்து, நரசிங்கபுரம் பகுதி மக்களுக்கு குடிநீர் வசதிக்காக புதிய கைப்பம்பு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



2002 மார்ச் 15]

**46—**

## குடிநீர் வசதி

**வினா 1099—திரு லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், கொடிக்குளம் பஞ்சாயத்து, ஜோதிமாணிக்கம் பகுதி மக்களுக்கு போதிய குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், கொடிக்குளம் பஞ்சாயத்து, ஜோதிமாணிக்கம் பகுதி மக்களுக்கு போதிய குடிதண்ணீர் கிடைக்கும்பொருட்டு புதிய அடிகுழாய்கள் அமைக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**47—**

## குடிதண்ணீர் வசதி

**வினா 1190—திரு லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், பொறுப்பு மேட்டுப்பட்டி பஞ்சாயத்து, தாழையூத்துப்பட்டிக்கு பகுதி குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், பொறுப்பு மேட்டுப்பட்டி பஞ்சாயத்து, தாழையூத்துப்பட்டிக்கு கைப்பம்பு திட்டத்தின் மூலம் குடிநீர் வசதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

48— [2002 மார்ச் 15

## குடிநீர் வசதி

**வினா 1191—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, திம்மநத்தம் பஞ்சாயத்து, எர்ரம்பட்டி பகுதி மக்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, திம்மநத்தம் பஞ்சாயத்து, எர்ரம்பட்டி பகுதி மக்களுக்கு குடிநீர் வசதி செய்ய குடிநீர் திட்டம் ஆய்வு செய்யப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

49—

## வையம்பட்டி பகுதிக்கு குடிநீர் வசதி

**வினா 1192—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், திம்மநத்தம் பஞ்சாயத்து, வையம்பட்டி பகுதிக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், திம்மநத்தம் பஞ்சாயத்து, வையம்பட்டி பகுதிக்கு புதிய ஆழ்குழாய் அமைத்து சின்டெக்ஸ் டேங்க் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது.



2002 மார்ச் 15]

50—

## கோப்பம்பட்டியில் குடிநீர் வசதி

**வினா 1193—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், திம்மநத்தம் பஞ்சாயத்து கோப்பம்பட்டி மக்களுக்கு குடிநீர் வசதி செய்துதர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், திம்மநத்தம் பஞ்சாயத்து கோப்பம்பட்டியில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் 7/2001-ல் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

51—

## குடிநீர் வசதி

**வினா 1201—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, அல்லிகுண்டம் பஞ்சாயத்து, பெருமாள் கோவில்பட்டிக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, அல்லிகுண்டம் பஞ்சாயத்து, பெருமாள் கோவில்பட்டிக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

52—

## குடிநீர் வழங்குதல்

**வினா 1202—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், தொட்டப்ப நாயக்கனூர் பஞ்சாயத்து (இ) புதுப்பட்டிக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், தொட்டப்ப நாயக்கனூர் பஞ்சாயத்து (இ) புதுப்பட்டிக்கு குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**53—**

## குடிநீர்

**வினா 1203—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், நடுப்பட்டி பஞ்சாயத்து, இடையப்பட்டிக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், நடுப்பட்டி பஞ்சாயத்து, இடையப்பட்டிக்கு குடிநீர் வசதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**54—**

## குடிநீர்

**வினா 1204—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், வடுகப்பட்டி பஞ்சாயத்து, புத்தூர் கிராமத்திற்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?



விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், வடுகப்பட்டி பஞ்சாயத்து புத்தூர் கிராமத்திற்கு குடிநீர் வசதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**55—**

## கொங்கப்பட்டிக்கு குடிநீர்

**வினா 1205—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், வடுகப்பட்டி பஞ்சாயத்து கொங்கப்பட்டிக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், வடுகப்பட்டி பஞ்சாயத்து கொங்கப்பட்டிக்கு புதிய ஆழ்குழாய் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**56—**

## குடிநீர் வசதி

**வினா 1206—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், வடுரணி பஞ்சாயத்து நாவார்பட்டிக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், வடுரணி பஞ்சாயத்து நாவார்பட்டிக்கு குடிநீர் வசதிக்காக புதிய ஆழ்துளைக் கிணறு 2001 ஆம் வருடம் ஜூலை மாதத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

[2002 மார்ச் 15

57—

## கண்ணாபுரத்திற்கு குடிநீர் வசதி

**வினா 1210—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி பஞ்சாயத்து யூனியன், கண்ணனூர் பஞ்சாயத்து, கண்ணாபுரத்திற்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி பஞ்சாயத்து யூனியன், கண்ணனூர் பஞ்சாயத்து, கண்ணாபுரத்திற்கு புதிய குடிநீர் பம்பு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

58—

## ஆழ்குழாய்க் கிணறு

**வினா 1262—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஞ்சல்நத்தம் ஊராட்சி, அண்ணாநகர் காலனிக்கு ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், அஞ்சல் நத்தம் ஊராட்சியைச் சார்ந்த அண்ணாநகர் காலனிக்கு 2001-2002 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து ஒரு ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.



2002 மார்ச் 15]

59—

## தெரு விளக்குகள்

**வினா 1272—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகராட்சியில் தெருவிளக்குகள் சரியாக எரியாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அதை நிவர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகராட்சிப் பகுதிக்குள் எரியாமல் இருந்த தெரு விளக்குகளை சரிசெய்யத் தேவையான மின் சாதனங்கள் வாங்கப்பட்டு, அனைத்து தெரு விளக்குகளும் நல்ல நிலையில் சீர் செய்யப்பட்டுள்ளன.

60—

## விவசாய மின் இணைப்பு

**வினா 1337—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் ஜீவன்தாரா கிணறுகளுக்கு சேலம் மாவட்டத்தில் வழங்கப்பட்ட விவசாய மின் இணைப்புகள் எத்தனை?

(ஆ) அதில் மலைவாழ் மக்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட பிற சமுதாய மக்களுக்கு வழங்கப்பட்டது எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் 28 ஜீவன்தாரா கிணறுகளுக்கு சேலம் மின் பகிர்மான வட்டத்தைச் சார்ந்த சேலம் மாவட்டப் பகுதிகளில் விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) மலைவாழ் மக்களுக்கு 18 கிணறுகளுக்கும் மற்றும் தாழ்த்தப்பட்ட பிற சமுதாய மக்களுக்கு 10 கிணறுகளுக்கும் விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**61—**

## சிமென்ட் சாலை அமைத்தல்

**வினா 1469—திரு. வெ. ஏழுமலை :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி பேரூராட்சி, சிறுகடம்பூர் காலனி 3-வது வார்டில் உள்ள தெருக்களுக்கு சிமென்ட் சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

*விடை—*

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செஞ்சி பேரூராட்சி, சிறுகடம்பூர் காலனி 3-வது வார்டில் உள்ள தெருக்களில் தற்போது 0.178 கி.மீ. நீளமுள்ள சாலையை தார்ச் சாலை அல்லது சிமென்ட் சாலையாக மாற்ற வேண்டியுள்ளது. இதனை தார்ச் சாலையாக மாற்றுவது என்றால் ரூபாய் 1.140 இலட்சமும், அல்லது சிமென்ட் சாலையாக மாற்றுவது என்றால் ரூபாய் 2.980 இலட்சமும் செலவாகும். இச்செலவினத்தை மேற்கொள்ள பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை.

**62—**

## கழிவுநீர்க் கால்வாய்

**வினா 2215—திரு மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் ஒன்றியம், துலுக்கர்பட்டி கிராமத்தில் கழிவுநீர்க் கால்வாய் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?



*விடை—*

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், ஆனைகுளம் ஊராட்சி, துலுக்கர்பட்டி கிராமத்தில் மெயின்தெருவில் ஏற்கெனவே கழிவுநீர்க் கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது. எல்லா தெருக்களிலும் கழிவுநீர்க் கால்வாய் அமைக்க ரூ.5.00 இலட்சம் நிதி தேவைப்படும். ஊராட்சியிலும் தற்போது போதுமான நிதி வசதி இல்லை.

**63—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா 2816—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், பண்ருட்டியிலுள்ள வெங்கிடாம் பேட்டையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*விடை—*

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஒன்றியத்தைத் சார்ந்த வெங்கிடாம் பேட்டை குடியிருப்பில் 1992-93 ஆம் ஆண்டு கட்டப்பட்ட ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போதுள்ள மக்கள் தொகைக்கு இந்த உயர்நிலைத் தொட்டியின் கொள்ளளவு போதுமானதாகும். இக்குடியிருப்பில் பகிர்மானக் குழாய்களில் அனுமதியின்றி பல இடங்களில் வீட்டு இணைப்புகள் எடுத்துள்ளதால் பல இடங்களில் போதிய அளவு நீர் அழுத்தமில்லாமல் சரிவர குடிநீர் வழங்க இயலவில்லை. இதனை சரி செய்வதற்கு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**64—**

## கழிவுநீர் வசதி

**வினா 2840—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, வரதராஜன்பேட்டை பேரூராட்சியில் பஸ் ஸ்டாண்டு முதல் மேட்டுக்குப்பம், மாதா கோயில் தெரு முதல் புதுத் தெரு, செங்கமேடு கீழத்தெரு முதல் மேட்டுக்குப்பம் ஆகிய இடங்களுக்கு கழிவுநீர் வசதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வரதராஜன்பேட்டை, ஆண்டிமடம் தொகுதி பேரூராட்சியில் பஸ் ஸ்டாண்டு முதல் மேட்டுக்குப்பம் வரை வடிகால் 3,200 மீட்டர் அமைக்க ரூபாய் 20 இலட்சம், மாதா கோயில் முதல் புதுத் தெரு வரை 1,150 மீட்டர் வடிகால் அமைக்க ரூபாய் 8 லட்சம் மற்றும் செங்கமேடு கீழத் தெருவில் 2,100 மீட்டர் வடிகால் அமைக்க ரூபாய் 14 இலட்சம், ஆக ரூபாய் 42 இலட்சம் வடிகால் அமைக்க தேவைப்படும். பேரூராட்சியில் நிதி ஆதாரம் சீராக இல்லை என்பதன் அடிப்படையில் கழிவு நீர் வடிகால் முழுமையாக அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**65—**

## குடிநீர்

**வினா 3418—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 வரை எடப்பாடி, இடங்கணசாலை பேரூராட்சிப் பகுதியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட மேல்நிலைத் தொட்டிகள் எத்தனை?

(ஆ) அதில் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்ட பகுதிகள் எத்தனை? அதனால் பலனடையும் மக்கள்தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 வரை எடப்பாடி தொகுதியைச் சேர்ந்த இடங்கணசாலை பேரூராட்சிப் பகுதியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட மேல்நிலைத் தொட்டிகள் 5 ஆகும்.





(ஆ) அதில் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்ட பகுதிகள் 8 ஆகும். அதனால் பயனடையும் மக்கள்தொகை சுமார் 11,775 ஆகும்.

**66—**

## திருவதிகையில் குடிநீர் வசதி

**வினா 3484—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டியிலுள்ள திருவதிகையில் போதுமான அளவிற்கு குடிநீர் வசதி செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவதிகை, பண்ருட்டி நகராட்சியின் ஒரு பகுதி ஆகும். இங்கு இரண்டு ஆழ்துளைக் கிணறுகளை நீராதாரமாகக் கொண்டு 4.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டியில் குடிநீர் ஏற்றப்பட்டு 700 வீட்டு இணைப்புகள் மற்றும் 47 பொதுக் குழாய்கள் மூலமாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் 15 குதிரைத் திறன் கொண்ட மின் இறைப்பான் மோட்டார் மூலமாகவும் நேரடியாக பகிர்மானக் குழாய்கள் இணைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இத்திருவதிகைப் பகுதியில் தற்போதைய குடிநீர் வசதி போதுமானதாக உள்ளது.

**67—**

## குடிநீர்த் திட்டம்

**வினா 3498—திரு தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டியிலுள்ள மேல்மேட்டுக்குப்பத்தில் என்.எல்.சி. நிறுவனத்தால் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டுள்ளதற்கு நீர்த்தேக்கத்

தொட்டி கட்டி புதிதாக 15 குதிரை சக்தி ஓட்ட இயக்கியை பயன்படுத்தி தண்ணீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி ஒன்றியம், வல்லம் ஊராட்சி, மேல்மேட்டுக்குப்பத்திற்கு நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் மூலம் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளைக் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு பயனாளிகளின் பங்கேற்புடன் கூடிய இராஜீவ்காந்தி தேசிய குடிநீர்த் திட்டத்தின் மூலம் புதிய விசைப்பம்புத் திட்டம் நிறைவேற்றிக்கொள்ள வல்லம் ஊராட்சியின் குழுமம் முன்வந்துள்ளது. பயனாளிகளின் பங்கேற்புத் தொகை பெறப்பட்டபின் குடிநீர்த் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**68—**

## ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

**வினா 3499—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டியிலுள்ள மாண்டிக்குப்பம் கிராமத்திற்கு ஆழ்குழாய்க் கிணறு அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி ஒன்றியத்தைச் சார்ந்த மாண்டிக்குப்பம் குடியிருப்பிற்கு தற்போது 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்குடியிருப்பில் மருங்கூரிலிருந்து முத்தாண்டிக்குப்பம் செல்லும் வழியில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் சரியாக கிடைக்காததால் இராஜீவ் காந்தி தேசிய குடிநீர்த் திட்டத்தின்கீழ் ரூ.4.46 இலட்சம் மதிப்பீட்டில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படவுள்ளது. தற்போது மக்களின்



பங்கேற்புத் தொகையான ரூ.20,000 பெறப்பட்டுள்ளது. தகுந்த நீராதாரம் கிடைத்தவுடன் திட்டம் விரைவில் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்படும்.

**69—**

## குடிநீர்

**வினா 4065—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சி ஊராட்சி, சேவான்வளவிற்கு குடிநீர் வசதியில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அங்கு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சி சேவான்வளவு குடியிருப்பு, காவிரி ஆற்று நீரை நீராதாரமாகக் கொண்டு செயலாக்கப்பட்டு வரும் இருப்பாளி மற்றும் 236 புளோரைடால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கான பெருங்கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் 549 வழியோரக் கிராமக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. தற்போது இருப்பாளி கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மார்ச் 2003-ல் இப்பணிகளை முடிக்க இலக்கிடப்பட்டுள்ளது. தற்பொழுது இக்குடியிருப்புக்கு ஒடப்பட்டி குடிநீர்த் திட்டத்திலிருந்து குழாய் நீட்டிப்பு மூலம் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 20 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**70—**

## பயணிகள் நிழற்குடை

**வினா 4838—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் தொகுதி, கணக்குப்பிள்ளைவலசை முக்கிய சாலை விலக்கில் பயணிகள் நிழற்குடைகள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தென்காசி ஊராட்சி ஒன்றியம், கணக்குப்பிள்ளைவலசை முக்கிய சாலை விலக்கில் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் ஒரு நிழற்குடை அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. எனவே மீண்டும் அங்கு நிழற்குடை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**71—**

## நிழற்குடை அமைத்தல்

**வினா 4883—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், கீழசட்டநாதபுரம் ஊராட்சி, நாராயணபுரம் கிராமத்திற்கு பயணிகள் நிழற்குடை அமைத்துத் தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**72—**

## கைபம்பு அமைத்தல்

**வினா 5676—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், அக்கரைகோட்டம் ஊராட்சி, சந்தனநல்லூர் கிராமத்தில் அப்பகுதி மக்களுக்கு கைபம்பு அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?



விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், அக்கரைகோட்டம் ஊராட்சி, சந்தனநல்லூர் கிராமத்தில் கைபம்பு அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

**73—**

## கைபம்பு அமைத்தல்

**வினா 5678—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், பைங்காட்டூர் ஊராட்சி, வடக்கு ஆதிதிராவிடர் தெருவிற்கு கைபம்பு அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், பைங்காட்டூர் ஊராட்சி, வடக்கு ஆதிதிராவிடர் தெருவிற்கு வறட்சி நிவாரணத் திட்டம் 2000-2001-ல் ஒரு கைபம்பு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

**74—**

## ஆழ்குழாய்க் கிணறு

**வினா 5957—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அச்சம்பாடு ஊராட்சி, அச்சம்பாடு கிராமத்தில் உள்ள ஆழ்குழாய்க் கிணற்றில் மரத்தின் வேர் சரிசெய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அச்சம்பாடு ஊராட்சி, [illegible]பாடு கிராமத்தில் உள்ள ஆழ்குழாய்க் கிணறு சரிசெய்ய முடியாத [illegible] பழுதுகள் உள்ளன.

**75—**

## பள்ளிக் கட்டடம் சீர் செய்தல்

**வினா 6715—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, கல்லூர் ஊராட்சி, செருகுடி கிராமத்திலுள்ள தொடக்கப் பள்ளியின் கட்டடம் பழுதடைந்துள்ளதால், அதனைச் சீர் செய்து தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பாபநாசம் தொகுதி, கல்லூர் ஊராட்சி, செருகுடி கிராமத்திலுள்ள தொடக்கப் பள்ளியின் கட்டடம் பழுதடைந்துள்ளதை, வரும் நிதியாண்டில் கும்பகோணம் ஊராட்சி ஒன்றிய கல்வி நிதியிலிருந்து ரூ.30,000 மதிப்பீட்டில் பழுது நீக்கம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**76—**

## கிணறு தூர்வாருதல்

**வினா 7020—திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழப்பாவூர் ஒன்றியம், கல்லூரணியில் உள்ள தண்ணீர்க் கிணற்றை தூர்வார அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கீழப்பாவூர் ஒன்றியம், கல்லூரணியில் உள்ள தண்ணீர்க் கிணற்றின் ஆழம் 45 அடி ஆகும். இந்தக் கிணற்றில் தற்போது தண்ணீரின் நீர் மட்டம் 10 அடியாக உள்ளது. இக்கிணற்று நீர் உவர்ப்புத் தன்மை வாய்ந்ததால் குடிப்பதற்கு உகந்ததல்ல. நிதிநிலை காரணமாக இவ்வூராட்சியில் தற்போது தூர்வார வாய்ப்பில்லை.

**77—**

## சமுதாயக் கூடம்

**வினா 7118—திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

லால்குடி தொகுதியில் உள்ள கிராமங்களுக்கு சமுதாயக் கூடம் கட்டித் தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

2001-2002 ஆம் ஆண்டில் சமுதாயக் கூடம் கட்ட நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லை.

**78—**

## நவீன கழிப்பிடம்

**வினா 7541—திருமதி செ. சுந்தராம்பாள்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் நகரத்தில், மேட்டூர் அணை கட்டியபோது கட்டப்பட்ட கழிவு அறைகள் பழுதடைந்துள்ளதால் அவை நவீன கழிப்பிடங்களாக அரசால் கட்டித் தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மேட்டூர் நகராட்சியில் மேட்டூர் அணை கட்டியபோது கட்டப்பட்ட கழிப்பிடங்கள் (1) கூலிலைன் (2) பிட்டர் மேன் குடியிருப்பு மற்றும் (3) சேலம் கேம்ப் மில் குடியிருப்பு ஆகிய இடங்களில் உள்ளன. மேற்கண்ட

3 இடங்களில் உள்ள கழிப்பிடங்களும் நவீன நீருற்று கழிப்பிடங்களாகத்தான் உள்ளன. மேலும், நகராட்சி மூலம் மேற்கண்ட 3 கழிப்பிடங்களும் சுத்தம் செய்யப்பட்டு வருகின்றன. மேற்படி கழிப்பிடங்களில் ஒன்றான சேலம் கேம்ப் கழிப்பிடம் என்பது மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் கம்பெனிக்கு சொந்தமான இடத்தில் உள்ளது. தனியார் இடத்தில் உள்ள கழிப்பறையை நகராட்சி நவீன கழிப்பிடமாக மேம்பாடு செய்து மாற்ற இயலாது. மற்ற இரண்டு கழிப்பிடங்கள் (கூலிலைன், பிட்டர்மேன் குடியிருப்பு) நவீன கழிப்பிடங்களாக உள்ளன.

**79—**

## சோடியம் ஆவிவிளக்கு அமைத்தல்

**வினா 9014—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சி, வைத்தி வடக்கு வீதி, வைத்தியநாதன் கோவில் சன்னதி தெரு, பள்ளிவாசல் சமூகம் ஆகிய இடங்களில் சோடியம் ஆவி தெரு விளக்கு அமைக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி பேரூராட்சி, வைத்தி வடக்கு வீதி, வைத்தியநாதன் கோவில் சன்னதி தெரு, பள்ளிவாசல் சமூகம் ஆகிய இடங்களில் சோடியம் ஆவி விளக்கு அமைக்கும் கருத்துரு ஏதும் இல்லை. மேலும், சேரன்மகாதேவி பேரூராட்சியில் ஏற்கெனவே 21 சோடியம் ஆவி விளக்குகள் உள்ளன. எனவே, சோடியம் ஆவி விளக்கு கூடுதலாக அமைக்கப்பட்டால் கூடுதல் மின் கட்டணம், அதற்கான உபகரணங்கள் மற்றும் தொடர் பராமரிப்புச் செலவினமும் அதிகமாகும். இக்கூடுதல் செலவினச் சுமையை ஏற்கும் வகையில் பேரூராட்சியின் நிதி வசதி இடங்கொடுக்கவில்லை என்பதாலும் எல்லா இடங்களிலும் சோடியம் ஆவி விளக்குகள் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.



**80—**

## சோடியம் லைட் அமைத்தல்

**வினா 9263—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி ஒன்றியப் பகுதிக்கு சோடியம் லைட் அமைக்கும் திட்டம் அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது செயல்படத் தொடங்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பூந்தவல்லி ஒன்றியப் பகுதிக்கு சோடியம் லைட் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**81—**

## தொடக்கப் பள்ளிக்கு புதிய கட்டிடம்

**வினா 9264—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி பெண்கள் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டுவது சம்பந்தமாக திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி பெண்கள் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டுவது சம்பந்தமாக திட்டம் ஏதும் இல்லை.

82— [2002 மார்ச் 15

## கிராம நிர்வாக அலுவலகம்

**வினா 12960—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையனஅள்ளி ஊராட்சியில் கிராம நிர்வாக அலுவலகம் இந்நிதியாண்டில் கட்டிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நடப்பு நிதியாண்டில் அனைத்து மாவட்டங்களிலும் தேவை அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்பட்டு 4,000 கிராம நிர்வாக அலுவலர்களுக்கான அலுவலகக் கட்டடங்கள் ரூ.60 ஆயிரம் மதிப்பீட்டில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர் கோரியுள்ள இடம் முன்னுரிமைக்குத் தகுதியுடையதாயின் நடப்பு நிதியாண்டில் அங்கு கிராம நிர்வாக அலுவலர்களுக்கான அலுவலகக் கட்டடம் கட்டித் தர பரிசீலிக்கப்படும்.

83—

## சோடியம் மின் விளக்கு

**வினா 14147—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பூங்குனம் ஊராட்சியிலுள்ள தெருக்களில் முக்கியமான சந்திப்பில் சோடியம் மின் விளக்கு பொருத்தித் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பூங்குனம் ஊராட்சியிலுள்ள தெருக்களில் முக்கியமான சந்திப்பில் சோடியம் மின் விளக்கு பொருத்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2002 மார்ச் 15]

84—

## அரசுப் பணியிலமர்த்துதல்

**வினா 5305—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 2000 ஆண்டு வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் எவ்வளவு பேர் அரசுப் பணிகளில் சேர்ந்தனர்?

(ஆ) எந்தத் துறையிலேனும் நேரடி நியமனம் நடைபெறுகிறதா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கடந்த 2000 ஆண்டில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் 12,969 பேர் பணியிலமர்த்தப்பட்டுள்ளனர்.

(ஆ) நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி, பல்வேறு துறைகளில் ஏற்படும் காலியிடங்கள், தமிழ்நாடு அரசு தேர்வாணையம், சீருடைப் பணியாளர்கள் வாரியம் ஆகியவற்றின் மூலம் செய்தித் தாள்களில் விளம்பரம் செய்யப்பட்டு நேரடி நியமனம் மேற்கொள்ளப்படுகிறது.

85—

## நியாயவிலைக் கடைக்குக் கட்டிடம்

**வினா 3810—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, சீரங்குப்பம் 32-வது வார்டிலுள்ள நியாயவிலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

[2002 மார்ச் 15

**மாண்புமிகு திரு. ப. தலபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி வட்டம், பண்ருட்டி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும் பண்ருட்டி நியாயவிலைக் கடை எண் 6-ன்கீழ் சீராங்குப்பம் என்ற பகுதிநேர நியாயவிலைக் கடை செயல்பட்டு வருகிறது. அரசாணை வரையறையின்படி பகுதிநேர அங்காடி அமைவதற்கு உள்ளூர் மக்களே வாடகை இல்லாமல் இலவசமாக கட்டட வசதி செய்து தர வேண்டும். முழுநேர நியாயவிலைக் கடைகளுக்கு மட்டுமே அரசால் கட்டட வசதி செய்து தரப்படுகின்றது.*

**86—**

## நியாயவிலைக் கடை

**வினா 5942—திரு. ப. வெ. தாமோதிரன்:** *மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, நியாயவிலைக் கடைகளில் பொருள்கள் சரியான முறையில் கிடைக்க அரசு உத்தரவு பிறப்பிக்குமா?*

*(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதியில் உள்ள அனைத்து நியாயவிலைக் கடைகளிலும், தேவையான அளவு பொருட்கள், குறித்த காலத்தில் நியாயவிலைக் கடையினரால் கூட்டுறவு மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு எவ்வித குறைபாடுகளுமின்றி பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.*



2002 மார்ச் 15]

**87—**

## நியாயவிலை கிளைக் கடை

**வினா 5962—திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், வடக்கன்குளம் ஊராட்சி, புதியம்புத்தூர் கிராமத்தில் நியாயவிலை கிளைக் கடை அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வடக்கன்குளம் ஊராட்சியைச் சேர்ந்த புதியம்புத்தூர் கிராமத்தின் குடும்ப அட்டைகள், பணகுடி பொது கூட்டுறவு பண்டகசாலையால் நடத்தப்படும் மாட நாடார் குடியிருப்பு நியாயவிலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளன. இக்கடையில் மொத்தம் 348 குடும்ப அட்டைகள் உள்ளன. புதியம்புத்தூர் கிராமத்தில் மொத்தம் 170 குடும்ப அட்டைகளே இருப்பதாலும், நியாயவிலைக் கடைக்கும், கிராமத்திற்குமிடையே 1 கிலோ மீட்டர் தொலைவே உள்ளதாலும், புதியம்புத்தூரில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.*

**88—**

## சாலை புதுப்பித்தல்

**வினா 2383—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் - இளம்பிள்ளை போகும் வழியில் காசக்காரனூர் - யேட்டுக்காடு இடைப்பட்ட அண்ணாநகரில் சாலை பழுதடைந்துள்ளதைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—                                                    [2002 மார்ச் 15

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இச்சாலையினைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நாமக்கல் (நெகிப) கோட்டத்தின் பராமரிப்பிலுள்ள கட்சுப்பள்ளி அழகப்பம்பாளையம் - இளம்பிள்ளை கி.மீ.0/0 13/0 என்ற சாலை இதர மாவட்டச் சாலையாகும். வினாவில் குறிப்பிட்டுள்ள இடம் கி.மீ. 9/0, 10/2 வரையிலான பகுதியாகும். இதனைப் புதுப்பிக்க ரூ.4.35 இலட்சம் மதிப்பீட்டில் 30-8-2001-ல் ஒப்பந்தப்புள்ளி அழைக்கப்பட்டுள்ளது. இப்பணி விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இருப்பினும் தற்சமயம் இச்சாலையில் ஏற்பட்டுள்ள பள்ளங்களை தார் நொடி போட்டு சாலைப் போக்குவரத்திற்கு ஏற்ற நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

89—

## நிதி ஒதுக்கீடு

**வினா 1727—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி, நாமக்கல், கோயம்புத்தூர், சேலம் மற்றும் ஈரோடு மாவட்டங்களுக்கு 2000-2001-ல் சமுதாய தரிசு நில மேம்பாட்டுத் திட்டப் பணிக்கான நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அது எந்தெந்தத் தொகுதிகளுக்கு செலவு செய்யப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



2002 மார்ச் 15]

90—

## கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவுதல்

**வினா 4061—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் உற்பத்தியாகும் கரும்பு, ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவ போதுமானதாக உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எடப்பாடி வட்டாரத்தில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவ அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்திலுள்ள சர்க்கரை ஆலைகளின் முழு அரவைத் திறனுக்கு ஆண்டுக்கு 12.90 இலட்சம் டன் கரும்பு தேவைப்படுகிறது.

(ஆ) இதற்கு மேலும் இப்பகுதியில் கரும்பு விளைய வாய்ப்பில்லை என்பதால் எடப்பாடி வட்டாரத்தில் ஒரு புதிய கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

91—

## சீத்தாப்பழம் கொள்முதல்

**வினா 11337—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதியில் பச்சூர், கொத்தூர் பகுதியில் விளையும் சீத்தாப் பழங்களை அரசே கொள்முதல் செய்ய முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி தொகுதியில் பச்சூர், கொத்தூர் பகுதியில் விளையும் சீத்தாப்பழங்களை கொள்முதல் செய்ய திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

92—

## ஆயில் இஞ்சின்

**வினா 11433—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் 2000-2001 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் உள்ள சிறு/மிகச் சிறு/தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு சிறுபாசன திட்டத்தின்கீழ் அக்ரோபெட் மூலம் மானியத்துடன் கூடிய ஆயில் இன்ஜின் வாங்க எத்தனை விவசாயிகளுக்கு கடன் வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் 2000-2001 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் மானியத்துடன் கூடிய ஆயில் இன்ஜின் வாங்க சிறு/மிகச்சிறு/தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்குக் கடன் ஏதும் வழங்கப்படவில்லை.

93—

## விசைத்தறிகள் அமைத்தல்

**வினா 1222—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் வகையில் விசைத்தறிகள் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ்.வி. சண்முகநாதன், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், தருமபுரி நகரில் ஒரு விசைத்தறி தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு மிகுந்த நட்டத்துடன் செயல்பட்டதால் தற்போது அச்சங்கம் செயலிழந்து உள்ளது. இந்நிலையில் புதிய விசைத்தறி தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பித்து தொழில் ரீதியாக லாபத்துடன் நடத்த சாத்தியக்கூறுகள் இல்லாத காரணத்தாலும் தமிழ்நாட்டில் ஏற்கெனவே தொழிலியல் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் நட்டத்தில் இயங்கியதால் தனது முதலீடு மற்றும் காசுக்கடன் முழுவதையும் இழந்து, கூட்டுறவு நூற்பாலைகளில் பெறப்பட்ட நூலுக்கான தொகையையும் திருப்பிச் செலுத்த முடியாத தேக்க நிலை ஏற்பட்டு செயலிழந்துள்ளன. இந்நிலையில், புதியதாக பெண்ணாகரம் தொகுதியில் அரசு சார்பில் விசைத்தறிக் கூடங்கள் தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இருப்பினும், கூட்டுறவு இயக்கத்தின்கீழ் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிப்பதற்கு உறுப்பினர்கள் மனு செய்யும் பட்சத்தில் வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கில் அம்மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



94—

## கதர்த் துணி விற்பனை

**வினா 335—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கதர் வாரியத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பல்வகை பொருள்கள் நமது நாட்டில் வெளி மாநிலங்களுக்கு விற்பனை செய்யப்படுகிறதா?

(ஆ) அவ்வாறு 2000-2001-ல் செய்த விற்பனை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் கதர்த் துணி இரகங்கள், சோப்பு ஆகியவை நமது நாட்டில் வெளி மாநிலங்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

(ஆ) 2000-2001 ஆம் ஆண்டில் இவ்வகை விற்பனை ரூ.16.02 இலட்சத்திற்கு நடைபெற்றுள்ளது.

95—

## மனுக்கள் விவரம்

**வினா 2955—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால்வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் கடன் வேண்டி 2000-2001 ஆம் ஆண்டில் ஈரோடு, தருமபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட மனுக்கள் எத்தனை?

(ஆ) அம்மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு?

விடை —

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு, பால்வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 2000-2001 ஆம் ஆண்டில் ஈரோடு, தருமபுரி மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட மனுக்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

*1. ஈரோடு மாவட்டம்:*

ஈரோடு மாவட்டத்திலிருந்து கூட்டுறவு வங்கிகள் மூலம் 420 நபர்களுக்கு ரூ.323.47 இலட்சத்திற்கு டாப்செட்கோ தனி நபர் கடன் வழங்கக் கோரி முன்மொழிவுகள் 2000-2001 ஆம் ஆண்டில் பெறப்பட்டுள்ளன. இவற்றில் 25 கூட்டுறவு வங்கிகள் மூலம் 100 நபர்களுக்கு ரூ.121.03 இலட்சம் தனி நபர் கடனாக வழங்கப்பட்டுள்ளது. இன்னும் 230 நபர்களுக்கு ரூ.202.44 இலட்சம் கடன் தொகை வழங்க வேண்டி பரிசீலனையில் உள்ளது. ஈரோடு மாவட்டத்தின் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் ஆவின் இணையத்தின் பரிந்துரையுடன் 100 பயனாளிகளுக்கு 200 கறவை மாடுகள் வாங்க ரூ.28.50 இலட்சம் கோரப்பட்டு அத்தொகை கடனாக வழங்கப்பட்டுள்ளது.



*2. தருமபுரி மாவட்டம்:*

தருமபுரி மாவட்டத்தில் 2000-2001-ஆம் ஆண்டில் 31 நபர்களுக்குக் கூட்டுறவு வங்கிகள் மூலம் தனி நபர் கடன் வழங்க ரூ.16.08 இலட்சம் தொகை கோரி முன்மொழிவு பெறப்பட்டு அவற்றில் 27 நபர்களுக்கு ரூ.13.90 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 4 நபர்களுக்கு ரூ.2.18 இலட்சம் கடன் தொகை வழங்க ஒப்பந்தம் மற்றும் தற்காலிக அனுமதி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

*3. சேலம் மாவட்டம்:*

இம்மாவட்டத்திலுள்ள கூட்டுறவு வங்கிகள் மற்றும் ஆவின் ஒன்றியம் மூலமாக தனி நபர் கடன் கோரி 461 நபர்களுக்கு ரூ.137.21 இலட்சத்திற்கு கடன் வழங்க பரிந்துரை செய்து முன்மொழிவுகள் பெறப்பட்டன. இவற்றில் 459 நபர்களுக்கு இதுகாறும் ரூ.135.31 இலட்சம் தொகை கடனாக வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 2 நபர்களுக்கு ரூ.1.90 இலட்சத்திற்கு கடன் வழங்க ஒப்பந்தம் மற்றும் தற்காலிக அனுமதி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1. ஈரோடு மாவட்டம் | : | ரூ. 149.53 இலட்சம் |
| | 2. தருமபுரி மாவட்டம் | : | ரூ. 13.90 இலட்சம் |
| | 3. சேலம் மாவட்டம் | : | ரூ. 135.31 இலட்சம் |

96—

## அடையாள அட்டை

**வினா 9795—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக வணிக நல வாரியத்தின் மூலம் வழங்கப்படும் அடையாள அட்டை லேமினேஷன் உறையிட்டதாக வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் ஆயுட்கால உறுப்பினர்களுக்கு லேமினேஷன் செய்யப்பட்ட அடையாள அட்டைகள்தான் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

[2002 மார்ச் 15

97—

## பணியாளர் சங்கங்கள்

**வினா 1372—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நகர்ப்புற மற்றும் பணியாளர் சங்கங்கள் எத்தனை உள்ளன? வட்டக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) அவற்றில் லாபத்தில் மற்றும் நட்டத்தில் இயங்கும் சங்கங்கள் எத்தனை?

(இ) அரசுக்கு 2000-2001-ல் ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ)

| | | |
|---|---|---|
| 1. | நகர்ப்புற சங்கங்கள் | 585 |
| 2. | பணியாளர் சங்கங்கள் | 252 |
| 3. | வட்டக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் | 196 |
| | மொத்தம் .. | 1033 |

(ஆ)

| சங்கங்கள் இயங்குபவை | இலாபத்தில் இயங்குபவை. | நட்டத்தில் இயங்குபவை. | மொத்தம். |
|---|---|---|---|
| 1. நகர்ப்புற சங்கங்கள் | 96 | 489 | 585 |
| 2. பணியாளர் சங்கங்கள் | 68 | 184 | 252 |
| 3. வட்டக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் | 7 | 189 | 196 |
| மொத்தம் .. | **171** | **862** | **1033** |

(இ) 862 கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் நஷ்டத்தில் இயங்கினாலும் அரசுக்கு எவ்வித இழப்பும் கிடையாது. எனவே 2000-2001 ஆம் ஆண்டில் அரசுக்கு நஷ்டம் எவ்வளவு என்ற கேள்விக்கே இடமில்லை.



2002 மார்ச் 15]

98—

## வீடு கட்ட நிதி ஒதுக்கீடு

**வினா 1374—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் நாமக்கல் மாவட்டத்திற்கு தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் மூலமாக எத்தனை வீடுகள்கட்ட ஒதுக்கீடு வழங்கப்பட்டது?

(ஆ) அதன் மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(இ) அதில் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) ஒவ்வோர் ஆண்டும் நகர்ப்புற சங்கங்களைப் பொறுத்தவரை வீடுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒதுக்கீடுகள் வழங்கப்படுவதில்லை. 2000-2001-ஆம் ஆண்டில் குறியீடு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. மாறாக அரசு பொறுப்புறுதியின் பேரில் நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படுகின்ற நிதி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதன் அடிப்படையில் 2000-2001 ஆம் ஆண்டிற்கு நாமக்கல் மாவட்டத்திற்கு ரூ.13.84 கோடி நிதி வழங்குவதற்கு குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் இம்மாவட்டத்திலுள்ள வட்டக் கூட்டுறவு சங்கங்களைப் பொறுத்தவரை அரசு பொறுப்புறுதி கிடைக்கப்பெறாததால் 2000-2001 ஆம் ஆண்டிற்கு குறியீடு ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை.

(ஆ) 2000-2001 ஆம் ஆண்டு நாமக்கல் மாவட்டத்திலுள்ள நகர்ப்புற சங்கங்களின் நிதியுதவி மூலம் கட்டப்பட்ட வீடுகளின் மொத்த மதிப்பீட்டுத்தொகை ரூ.8.88 கோடியாகும்.

(இ) 2000-2001 ஆம் ஆண்டு இணையம், நகர்ப்புற கூட்டுறவு சங்கங்களின் மூலம் நாமக்கல் மாவட்டத்திற்கு 647 வீடுகள் கட்டக் கடனுதவி வழங்கியுள்ளது. இவ்வீடுகள் கட்டுவதற்கு இதுவரை ரூ.6.51 கோடி அளவிற்கு கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. இந்த மாவட்டத்திலுள்ள வட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் 2,140 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இந்த வீடுகள் கட்டுவதற்கு ரூ.5.50 கோடி அளவிற்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி வட்டக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு

[2002 மார்ச் 15

வழங்கப்பட்ட தொகை முந்தைய ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்ட கடன் தொகையின் தொடர்ச்சியாக 2000-2001 ஆம் ஆண்டிலேயே வழங்கப்பட்டுள்ளது.

**99—**

## வீடு கட்ட ஒதுக்கீடு

**வினா 1375—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்திற்கு தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் மூலமாக எத்தனை வீடுகள்கட்ட ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

(ஆ) அதன் மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(இ) அதில் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) ஒவ்வோர் ஆண்டும் நகர்ப்புற சங்கங்களைப் பொறுத்தவரை வீடுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒதுக்கீடு வழங்கப்படுவதில்லை. மாறாக அரசு பொறுப்புறுதியின் பேரில் நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படுகின்ற நிதி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 2000-2001 ஆம் ஆண்டிற்கு தருமபுரி மாவட்டத்திற்கு ரூ.26.85 கோடி நிதி வழங்குவதற்கு குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் இம்மாவட்டத்திலுள்ள வட்டக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரை அரசு பொறுப்புறுதி கிடைக்கப் பெறாததால் 2000-2001 ஆம் ஆண்டிற்கு குறியீடு ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை.

(ஆ) 2000-2001 ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்திலுள்ள நகர்ப்புற சங்கங்களின் நிதியுதவி மூலம் கட்டப்பட்ட வீடுகளின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.35.80 கோடியாகும்.

(இ) 2000-2001 ஆம் ஆண்டில் இணையம், நகர்ப்புறச் சங்கங்களின் மூலம் தருமபுரி மாவட்டத்தில் 1,164 வீடுகள் கட்ட இதுவரை ரூபாய் 22.61 கோடி நிதியுதவி வழங்கியுள்ளது. இந்த மாவட்டத்தில் கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் கூட்டுறவு சங்கங்களின் மூலம் 3,180 வீடுகள்



2002 மார்ச் 15]

கட்டப்பட்டுள்ளன. இந்த வீடுகள் கட்டுவதற்கு ரூபாய் 8.64 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி வட்டக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட தொகை முந்தைய ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்ட கடன் தொகையின் தொடர்ச்சியாக 2000-2001 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

**100—**

## நிதி ஒதுக்கீடு

**வினா 1376—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001-ஆம் ஆண்டில் ஈரோடு மாவட்டத்திற்கு தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் மூலமாக எத்தனை வீடுகள் கட்ட ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

(ஆ) அதன் மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(இ) அதில் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) ஒவ்வோர் ஆண்டும் நகர்ப்புற சங்கங்களைப் பொறுத்தவரை வீடுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒதுக்கீடுகள் வழங்கப்படுவதில்லை. நிதி நிறுவனங்களிடமிருந்து அரசு பொறுப்புறுதியின் பேரில் பெறப்படுகின்ற நிதியுதவியின் அளவினைப் பொறுத்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நிதி ஒதுக்கீடு மட்டும் செய்யப்படுகிறது. இதன் அடிப்படையில் 2000-2001ஆம் ஆண்டிற்கு ஈரோடு மாவட்டத்திற்கு ரூ.23.99 கோடி நிதி வழங்குவதற்கு குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. வட்டக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரை அரசு பொறுப்புறுதி கிடைக்கப் பெறாததால் 2000-2001 ஆம் ஆண்டில் குறியீடு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை.

(ஆ) 2000-2001 ஆம் ஆண்டு நகர்ப்புற சங்கங்களின் வீடுகளின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ஈரோடு மாவட்டத்திற்கு ரூ.18.45 கோடியாகும்.

(இ) 2000-2001 ஆம் ஆண்டு இணையம் ரூ.13.84 கோடி நிதியுதவி வழங்கியுள்ளது. நகர்ப்புற கூட்டுறவு சங்கங்களின் மூலம் ஈரோடு மாவட்டத்தில் 681 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்த மாவட்டத்திலுள்ள வட்டக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 2,718 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதற்காக ரூ.6.73 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

[2002 மார்ச் 15

## நான்காம் பட்டியல்

1—

### இறந்தோர் விவரம்

**வினா 167 திரு ஐ. கணேசன்:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*2001 ஆம் ஆண்டு மே மாதம் கடும் வெயில் மற்றும் அனல் காற்றினால் தாங்க முடியாமல் இறந்தவர்கள் எவ்வளவு பேர்?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர்:** *எவரும் இல்லை.*

2—

### கையூட்டு

**வினா 2309—திரு. சி. ஞானசேகரன்:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அரசு அலுவலகங்களில் 2000-2001 ஆம் ஆண்டு கையூட்டு பெற்றதற்காக கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர்:**

*2000-2001 ஆம் ஆண்டில் அரசு அலுவலகங்களில் கையூட்டு பெற்றதற்காக 146 நபர்கள் பொறி வைத்து கைது செய்யப்பட்டார்கள்.*

3—

### இரவு விடுதிகள்

**வினா 5363—திரு. வெ. ஏழுமலை:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை நகரில் இரவு விடுதிகளில் ஆபாச நடனங்கள் நடைபெறுவது குறித்து அரசு அறியுமா?*



2002 மார்ச் 15]

*(ஆ) அவற்றை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர்:**

*(அ) சென்னை நகரில் விடுதிகளில் ஆபாச நடனங்கள் ஏதும் நடைபெறவில்லை.*

*(ஆ) விடுதிகளில் ஆபாச நடனங்கள் நடைபெற்றால் சம்பந்தப்பட்டவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

4—

### நிலுவைத் தொகை

**வினா 8912—திரு. கே.சி. கருணாகரன்:** *மாண்புமிகு நிதி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாடு முழுவதும் 3½ இலட்சம் ஓய்வூதியர்களின் பணிக்கொடை போன்ற சலுகைகளில் நிதித் தொகை மூன்றாண்டுகளுக்கு மேலாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது நடப்பு நிதியாண்டில் திருப்பி அளிக்கப்படுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு சி. பொன்னையன், நிதி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

*மீதமுள்ள 60% நிலுவைத் தொகையினை 2003-2004 நிதியாண்டில் வழங்க அரசு ஏற்கெனவே கொள்கை முடிவு எடுத்துள்ளது. தற்பொழுதுள்ள நிதி நிலையில் நடப்பு நிதியாண்டில் நிலுவைத் தொகையினை வழங்க இயலாது.*

5—

### பணியிடங்கள் நிரப்புதல்

**வினா 1288—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், கோனேரிப்பட்டி அரசினர் மேல்நிலைப் பள்ளியில் காலியாக உள்ள பணியிடங்கள் எத்தனை?*

*(ஆ) அவற்றை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். சேலம் மாவட்டம், கோனேரிப்பட்டி அரசினர் மேல்நிலைப் பள்ளியில் முதுகலை கணித பாட ஆசிரியர் பணியிடம் காலியாக உள்ளது. இப்பணியிடம் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தெரிவு செய்யப்படும் நபரைக் கொண்டு நிரப்பப்படும்.

**6—**

## அரசு / தனியார் பள்ளிகள்

**வினா 1316—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 முடிய தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் அரசு மேனிலைப் பள்ளிகள் எத்தனை? தனியார் பள்ளிகள் எத்தனை?

(ஆ) அவற்றில் மேனிலைப் பள்ளி கல்வியில் பிளஸ் 2 கற்கும் மாணாக்கர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2000-2001 முடிய தமிழ்நாட்டில் நடைபெற்றுவரும் அரசு மற்றும் தனியார் பள்ளிகள், அவற்றில் பிளஸ்-2 கற்கும் மாணவர்கள் விவரம்:

| பள்ளிகளின் எண்ணிக்கை. (1) | பிளஸ்-2 கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| அரசு மேனிலைப் பள்ளிகள் 1258 | 3,11,367 |
| நகராட்சி மேனிலைப் பள்ளிகள் 81 | 20,020 |
| உதவிபெறும் மேனிலைப் பள்ளிகள் 909 | 3,03,724 |
| உதவிபெறாத மேனிலைப் பள்ளிகள் 68 | 11,629 |



**7—**

## ஆசிரியர் பணி

**வினா 4119—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் கே.ஏ.நா. அரசு மேல்நிலைப் பள்ளியில் காலியாகவுள்ள அறிவியல் பி.டி. ஆசிரியர் பணியிடத்தில் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் உள்ள கொங்கணாபுரம் கே.ஏ.நா. அரசு மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் பணியிடம் தற்போது காலியாக இல்லை.

**8—**

## பணியிடங்களை நிரப்புதல்

**வினா 4139—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் கே.ஏ.நா.அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆய்வக உதவியாளர், பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

கொங்கணாபுரம் கே.ஏ.நா.அரசு மேல்நிலைப் பள்ளியிலுள்ள ஆய்வக உதவியாளர் பணியிடம் 5-7-2001-லும், பதிவறை எழுத்தர் பணியிடம் 29-6-2001-லும் நிரப்பப்பட்டுள்ளது. தற்போது தடையாணை அமலில் உள்ளதால், அலுவலக உதவியாளர் பணியிடம் நிரப்ப இயலாத் நிலை உள்ளது.

9—

## சுற்றுச் சுவர்

**வினா 6327—திரு. க. முருகவேல் ராஜன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் இடிந்து போன சுற்றுச் சுவர் கட்டப்படாததால் சமூக விரோதிகள் பள்ளிக்குள் புகுந்து சமூக விரோத செயல்கள் செய்வதைத் தடை செய்ய சுற்றுச் சுவர் கட்டப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் சுற்றுச் சுவர் வசதி கோரப்பட்டுள்ளது. அதன் சார்பாக நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லை. எனவே அரசாணை எண் 581, கல்வித் துறை, நாள் 14-7-1994-ன்படி பசுமை வேலி அமைப்பது தொடர்பாக வனத் துறை அலுவலருடன் தொடர்பு கொண்டு அதன் விவரத்தைத் தெரிவிக்குமாறு முதன்மைக் கல்வி அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், அரசு பள்ளிகளுக்கு சுற்றுச் சுவர் அமைப்பது அரசின் கொள்கையல்ல.

10—

## தடுப்புச் சுவர்

**வினா 7180—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், மிளிதேன் அரசு உயர்நிலைப் பள்ளி அருகே தடுப்புச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், மிளிதேன் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் வசதி கோரப்பட்டுள்ளது.





அதன் சார்பாக நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லை. எனவே அரசாணை எண் 581, கல்வித் துறை, நாள் 14-7-1994-ன்படி பசுமை வேலி அமைப்பது தொடர்பாக வனத் துறை அலுவலருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதன்மைக் கல்வி அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும், அரசுப் பள்ளிகளுக்கு சுற்றுச் சுவர் அமைப்பது அரசின் கொள்கையல்ல.

11—

## உயர்நிலைப் பள்ளியாக்குதல்

**வினா 10170—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, வண்டுவராயன்பட்டு கிராமத்தில் உள்ள ஆரம்பப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாக மாற்றும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளிகளை மட்டுமே உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த இயலும். ஆரம்பப் பள்ளியை நேரடியாக உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த விதிகளில் இடமில்லை. எனவே புவனகிரி தொகுதி, வண்டுவராயன்பட்டு கிராமத்தில் உள்ள ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திய பின்னரே உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலும்.

12—

## மின் இணைப்புகள்

**வினா 501—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மின் இணைப்புகள் எத்தனை?

(ஆ) வட்ட வாரியாக எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மின் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் 2,362 விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) வட்டம் வாரியாக மின் இணைப்பு வழங்கியவை:—

| | | |
|---|---|---|
| 1 | ஓமலூர் வட்டம் | 291 |
| 2 | மேட்டூர் வட்டம் | 215 |
| 3 | எடப்பாடி வட்டம் | 254 |
| 4 | சங்ககிரி வட்டம் | 150 |
| 5 | சேலம் வட்டம் | 268 |
| 6 | ஆத்தூர் வட்டம் | 554 |
| 7 | வாழப்பாடி வட்டம் | 629 |
| 8 | ஏற்காடு வட்டம் | 1 |
| | மொத்தம் .. | **2362** |

13—

## இலவச மின் இணைப்பு

**வினா 1300—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியைச் சேர்ந்த விவசாயிகள், விவசாயக் கிணறுகளுக்கு இலவச மின் இணைப்பு கோரி விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அதில் இணைப்பு பெற்றவர்கள் எத்தனை பேர்?



விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மின் துறை அமைச்சர்:**

(அ) இதுநாள் வரை சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியைச் சேர்ந்த விவசாயிகளில் விவசாயக் கிணறுகளுக்கு இலவச மின் இணைப்பு கோரி விண்ணப்பித்தவர்கள் 10,345 பேர்.

(ஆ) அதில் இலவச இணைப்பு பெற்றவர்கள் 6,774 பேர். 31-3-1988 வரை விண்ணப்பித்த விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

14—

## மின்மாற்றி அமைத்தல்

**வினா 2750—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், புலவன்குப்பம் கிராமத்தில் மின்னழுத்த மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மின் துறை அமைச்சர்:**

காடாம்புலியூர் பிரிவுக்குட்பட்ட புலவன்குப்பம் கிராமத்தில் தற்போது 150 வீடு மற்றும் கடை மின் இணைப்புகளும், 3 குடிநீர்த் தொட்டி மின் இணைப்புகளும், 20 தெரு விளக்குகளும் உள்ளன. இம்மின் இணைப்புகள் அனைத்தும் தற்போது இயக்கத்திலுள்ள புலவன்குப்பம் மின் மாற்றி 63 கே.வி.ஏ. 22 கே.வி.யிலிருந்து மின்னூட்டம் பெறுகின்றன. அண்மையில் 18-8-2001 அன்று விவசாய மின் இணைப்புக்கென புதியதாக ஒரு மின் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இக்கிராமத்திற்கு மேம்பாடு அடிப்படையில் புதியதாக மேலும் ஒரு மின்மாற்றி அமைத்து மின் பளுவை பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு பணியை விரைவில் முடித்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

**15—**

## மின் கம்பங்கள் மாற்றி அமைத்தல்

**வினா 3641—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், விக்கிரபாண்டியம் ஊராட்சியைச் சேர்ந்த காரியமங்கலம் கிராமத்தில் வயல் வழியாகச் செல்லும் மின்சாரக் கம்பங்களை சாலையில் மாற்றி அமைக்க அரசிடத்தில் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மின் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இது தொடர்பாக விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. ஆயினும், மின் கம்பங்களை மாற்றி அமைப்பதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகையை தாங்களே ஏற்றுக்கொள்கிறோம் என்று ஊராட்சியிலிருந்து ஒப்புதல் கடிதமும் பதிவுக் கட்டணம் ரூ.500-ம் செலுத்தினால் கம்பங்களை மாற்றி அமைப்பதற்கு உடன் விரைவு நடவடிக்கை எடுக்கப்படும்.

**16—**

## மின் விளக்கு

**வினா 3825—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி, ஆதிச்சபுரம், மேலத்தெரு ஆதிதிராவிடர் தெருவிற்கு மின் கம்பம் அமைத்து மின் விளக்கு அமைக்கும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மின் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஆதிச்சபுரம், மேலத்தெரு ஆதிதிராவிடர் தெருவிற்கு தெருவிளக்கு அமைக்க



அரசு குறியீடு ஏதும் இல்லை. மேலும், செலவுத் தொகையினை தாங்களே ஏற்றுக்கொண்டு ஊராட்சி செலவில் அமைத்துக் கொள்ளும் வகையிலான விண்ணப்பம் ஏதும் ஊராட்சியிலிருந்து பெறப்படவில்லை.

**17—**

## பணி நிரந்தரம்

**வினா 9059—திரு. அ. மில்லர்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், மசினகுடி மின்சார வாரியத்தில் பல வருடங்களாகப் பணியாற்றி வரும் தற்காலிகப் பணியாளர்களை நிரந்தரப் பணியாளர்களாக மாற்ற அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மின் துறை அமைச்சர்:**

மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தினால் அமைக்கப்பட்ட (வழக்கு எண் 1820/90) நீதிபதி கலீத் அவர்களது பரிந்துரையில் இடம் பெற்ற மின் பகிர்மான வட்டங்களில் பணியாற்றிய சுமார் 18,000 ஒப்பந்தப் பணியாளர்களில் தகுதியுள்ள 13,054 ஒப்பந்தப் பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டனர். இதனைத் தொடர்ந்து அனல், புனல் மின் நிலையங்களில் பணியாற்றும் ஒப்பந்தப் பணியாளர்களையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் எனத் தொழிற்சங்கங்கள் போராட்டங்கள் நடத்தின.

வாரியத்துக்கும் தொழிற்சங்கங்களுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து வாரிய நிலையாணை எண் 17, செயலகக் கிளை, நாள் 28-4-1999-ன்படி 4 அனல் மின் நிலையங்களில் பணியாற்றும் ஒப்பந்தப் பணியாளர்களில் தகுதியுள்ள நபர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டனர்.

மேலும், 4 புனல் மின் உற்பத்தி வட்டங்களில் பணியாற்றும் 849 ஒப்பந்தப் பணியாளர்களை நிரந்தரம் செய்ய சங்கங்கள் கோரிக்கை விடுத்தன. எனவே தகுதியுள்ள 500 ஒப்பந்தப் பணியாளர்கள் வாரியத்தின் தேவைக்கேற்றபடி வாரிய நிலையாணை எண் 3, நிர்வாகக் கிளை, நாள் 29-1-2001-ன்படி 4 உற்பத்தி வட்டங்களிலும் பணி நிரந்தரம்

செய்யப்பட்டனர். பணி நிரந்தரம் ஆகாதவர்கள் சார்பாக சங்கங்களால் தொடரப்பட்ட வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. மேலும், மின் பகிர்மான வட்டங்கள் உள்ளடங்கிய ஏனைய இதர வட்டங்களில் பணிபுரியும் சுமார் 12,000 ஒப்பந்தப் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்திடக் கோரி தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பினரால் தொடரப்பட்ட வழக்கு ஐ.டி.எண் 106/2000 நிலுவையில் உள்ளது. எனவே நீலகிரி மாவட்டம், மசினகுடி வட்டத்தில் பணியாற்றும் ஒப்பந்தப் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்வது தொடர்பாக மின் வாரியத்திடம் திட்டம் ஏதும் இல்லை.

**18—**

## வேலை வழங்கல்

**வினா 10092—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கல்பாக்கம் அணுமின் நிலையத்திற்கு நிலம் கொடுத்த குடும்பங்களின் 170 பிள்ளைகளுக்கு மட்டும் வேலை கொடுத்துள்ளதால், இனிவரும் காலங்களில் 25% வேலைவாய்ப்பை நிலம் கொடுத்தவர்களுக்கும், 25% படித்த சுற்றுப்புற கிராம இளைஞர்களுக்கும் வேலை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மின் துறை அமைச்சர்:**

170 நபர்கள் என்பது 1994 ஆம் ஆண்டு முதல் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்ட நபர்கள் ஆகும். நிலம் கையகப்படுத்தப்பட்டோருக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில் இல்லாமல் 1994-ஆம் ஆண்டுக்கு முன்னரும் கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் இந்தப் பகுதி மக்கள் நிறைய பேர் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அத்தகையோர் பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டபடியால் அவர்கள் பற்றிய விவரங்கள் இல்லை. வேலைவாய்ப்பில் 25 சதவீதம் நிலம் கொடுத்த வகையினருக்கும் 25 சதவிகிதம் சுற்றுப்புற கிராமங்களில் உள்ள படித்த இளைஞர்களுக்கும் அளிக்கப்பட வேண்டும் என்ற அரசாணை ஏதும் இல்லாத நிலையில் இக்கருத்து கல்பாக்கம் அணுமின் நிலையத்தால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எனினும் நல்லெண்ண அடிப்படையில் பிற தகுதிகள் இருக்கும்பட்சத்தில் நிலம் கொடுத்தோருக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகின்றது.



**19—**

## மின் இணைப்பு வழங்குதல்

**வினா 13607—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் புறம்போக்கு நிலங்களிலுள்ள கிணறுகளின் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு கோரி விண்ணப்பித்த அனைத்து விவசாயிகளுக்கும் உடனே மின் இணைப்பு வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மின் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் புறம்போக்கு நிலங்களிலுள்ள கிணறுகளில் உள்ள பம்பு செட்டுகளுக்கு மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து தடையில்லா சான்றிதழ் பெற்று விண்ணப்பித்திருந்தால், விண்ணப்பத்தின் பதிவு மூப்பு அடிப்படையில் அரசு நிர்ணயித்திருக்கும் வருடாந்திர குறியீட்டிற்குட்பட்டு மின் இணைப்புகள் கொடுக்கப்படும்.

**20—**

## விபத்துப் பிரிவு

**வினா 4495—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாமல்லபுரம்-கோவளம்-சென்னை, மாமல்லபுரம்-திருப்போரூர் - செங்கல்பட்டு, மாமல்லபுரம் - சென்னை, சென்னை-மாமல்லபுரம்-பாண்டிச்சேரி, மாமல்லபுரம் - செங்கற்பட்டு சாலைகளில் விபத்துப் பிரிவு மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மாமல்லபுரம்-கோவளம் - சென்னை, மாமல்லபுரம்-திருப்போரூர்- சென்னை, சென்னை-மாமல்லபுரம்-பாண்டிச்சேரி, மாமல்லபுரம் -

செங்கற்பட்டு சாலைகளில் விபத்துப் பிரிவு மருத்துவமனை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

21—

## சூரிய வெப்ப சுடுநீர்

**வினா 8601—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள வட்ட அளவிலான அரசு மருத்துவமனைகளில் சூரிய வெப்ப சுடுநீர் அமைப்பு ஏற்படுத்தலாம் என்ற செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு இவ்வமைப்பு ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் உள்ள வட்ட அளவிலான அரசு மருத்துவமனைகளில் சூரிய வெப்ப சுடுநீர் அமைப்பு ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) பதில் எழவில்லை.

22—

## மருத்துவ வசதி

**வினா 9431—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஊராட்சி ஒன்றியம், மேலப்பாளையூர் ஊராட்சிக்கு மருத்துவ வசதி அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஊராட்சி ஒன்றியம், மேலப்பாளையூர் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.





23—

## தார்ச் சாலை அமைத்தல்

**வினா 91—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகராட்சிக்கு உட்பட்ட 4-வது வார்டு மேட்டூர் சம்மன் குட்டையிலிருந்து பூலாம்பட்டி ரோடு (சந்தனமில்) வரை பாதை மிகவும் மோசமாக உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நல்ல தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி நகராட்சிக்குட்பட்ட 4-வது வார்டு மேட்டூர் சம்மன் குட்டையிலிருந்து சந்தனமில்வரை பாதை சரி செய்ய ரூ.10.00 இலட்சம் செலவாகும். நகராட்சியில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் இப்பணியைச் செய்ய இயலவில்லை.

24—

## சாலையைச் சீரமைத்தல்

**வினா 92—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ). சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சிக்கு உட்பட்ட 4-வது வார்டு மேட்டூரில் 3 வீதிகளில் சாலை மிகவும் மோசமான நிலையில் உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அச்சாலையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி நகராட்சிக்குட்பட்ட 4-வது வார்டில் உள்ள மேட்டூர் சாலையின் நீளம் 150 கி.மீ. ஆகும். இச்சாலையைச் சீரமைக்க ரூ.10.00 இலட்சம் செலவாகும். நகராட்சியில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் இப்பணியை உடனே செய்ய இயலவில்லை.

[2002 மார்ச் 15

25—

## சாலை வசதி

**வினா 93—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சிக்கு உட்பட்ட 4-வது வார்டு மேட்டூரில் புக்கன் நகருக்கு சரியான சாலை வசதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சிக்குட்பட்ட 4-வது வார்டு மேட்டூரில் புக்கன் நகருக்குரிய சாலையைச் சரி செய்ய ரூ.5/- லட்சம் செலவாகும். இதற்குப் போதிய நிதி ஆதாரம் இல்லாததால் நகராட்சியால் இப்பணியைச் செய்ய இயலவில்லை.

26—

## குடிநீர்ப் பிரச்சினை

**வினா 510—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள பேரூராட்சி குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க எத்தகைய உதவிகளை அரசு செய்கிறது?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொன்விழா ஆண்டு குடிநீர்த் திட்டத்தின்கீழ் 117 பேரூராட்சிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டு, குடிநீர் வழங்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சியர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து பேரூராட்சிகளுக்கு நிதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பகுதி-2 திட்டத்தின்கீழ் குடிநீர் வடிகால் வாரியம் சாராத சிறிய அளவிலான குடிநீர்த் திட்டம் செயல்படுத்த அரசு மானியம் பெற்று பேரூராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது. இது தவிர தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செப்டம்பர், அக்டோபரில் குடிநீர்ப் பிரச்சினை ஏற்படக்கூடிய பேரூராட்சிகளில் கை பம்பு, விசை பம்பு பழுதுபார்த்தல், பொதுக் குழாய் பழுது நீக்கம், மார்க் 2, 3, பம்புகள் நிறுவுதல் போன்ற பணிகளுக்கு பேரூராட்சிகளால் பட்டியல் தயாரிக்கப்பட்டு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், அடிப்படை வசதிகள் திட்ட நிதியிலிருந்தும் பொது நிதியிலிருந்தும் அவசிய, அவசர குடிநீர் திட்டப் பணிகள் எடுத்துச் செய்யப்படுகின்றன.



2002 மார்ச் 15]

27—

## குடிநீர் வழங்குதல்

**வினா 1078—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், முதலைக்குளம் பஞ்சாயத்து, ஒத்தவீட்டுபட்டிக்கு போதிய குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், முதலைக்குளம் பஞ்சாயத்து, ஒத்தவீட்டுபட்டிக்கு குடிநீர் வழங்க புதிய திட்டத்திற்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

28—

## குடிநீர்

**வினா 1075—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், குறவகுடி பஞ்சாயத்து, வின்னகுடி பகுதிக்கு போதிய குடிதண்ணீர் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், குறவகுடி பஞ்சாயத்து வின்னகுடி பகுதிக்கு போதிய குடிநீர் வழங்க, புதிய அடிகுழாய் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**29—**

## குடிதண்ணீர் வசதி

**வினா 1077—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், குறவகுடி பஞ்சாயத்து, பாண்டியன் நகர் பகுதியில் போதிய குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், குறவகுடி பஞ்சாயத்து, பாண்டியன் நகர் பகுதிக்கு குடிநீர் வசதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**30—**

## மின் விளக்குகள்

**வினா 1326—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சியில் தெருக்களுக்கு போதுமான மின் விளக்குகள் அமைக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக புதிதாக தெரு விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இடங்கணசாலை பேரூராட்சிப் பகுதியில் தற்போது 511 குழல் விளக்குகளும், 23 சோடியம் ஆவி விளக்குகளும், 8 மெர்குரி விளக்குகளும் பராமரிப்பில் உள்ளன. தற்போதுள்ள விளக்குகளே போதுமானவை.

**31—**

## கை பம்பு பழுதுபார்த்தல்

**வினா 6242—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி, ஏ. ஆண்டிக்குப்பம், 32-வது வார்டில் கை பம்பு பழுதடைந்துள்ளதை சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி, ஏ. ஆண்டிக்குப்பம், 32-வது வார்டில் இந்தியா மார்க் 2 கை பம்பு அமைக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

**32—**

## இலவச கிணறுகள்

**வினா 4727—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் முழுவதும் 1997-98, 2000-2001 ஆண்டுகளில் சிறிய விவசாயிகளுக்கு இலவசமாக ஜீவன்தாரா கிணறுகள் வெட்ட (மில்லியன் கிணறு திட்டம்) எத்தனை விவசாயிகளுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) முடிக்கப்படாத கிணறுகளுக்கு மீண்டும் ஆழப்படுத்த அரசு உதவிடுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தமிழகம் முழுவதும் 1997-98 ஆம் ஆண்டு 3626 விவசாயிகளுக்கும், 1998-99 ஆம் ஆண்டு 5,048 விவசாயிகளுக்கும் இலவசமாக ஜீவன்தாரா கிணறுகள் வழங்கப்பட்டுள்ளன. 1999-2000 ஆண்டு முதல் ஜீவன்தாரா கிணறுகள் திட்டம் நடைமுறையில் இல்லாததால் புதியதாக ஜீவன்தாரா கிணறுகள் எதுவும் வெட்டப்படவில்லை.

(ஆ) 1999-2000 ஆண்டு முதல் ஜீவன்தாரா கிணறுகள் திட்டம் நடைமுறையில் இல்லாததால் முடிக்கப்படாத கிணறுகளுக்கு மீண்டும் இலவசமாக ஆழப்படுத்த வாய்ப்புகள் இல்லை. ஆனால் எஸ்.ஜி.எஸ்.ஒய். திட்டத்தின்கீழ் வங்கிக் கடன் பெற்று இப்பணியை மேற்கொள்ள வாய்ப்புள்ளது.

**33—**

## தொலைக்காட்சிப் பெட்டி

**வினா 6446—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், வடக்கு அரியநாயகிபுரம் கிராமத்தில் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்று வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், வடக்கு அரியநாயகிபுரம் கிராமத்தில் மொத்தம் 4 தொலைக்காட்சிப் பெட்டிகள் ஏற்கெனவே இயங்கி வருகின்றன. ஊராட்சியில் தற்போது போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் புதியதாக தொலைக்காட்சிப் பெட்டி வாங்க இயலாது.





**34—**

## பணி நிரந்தரம்

**வினா 7563—திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி நகராட்சியில் 10 ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரிந்து வரும் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நகராட்சிகளில் 1-10-1998-க்கு முன்பிருந்து தினக் கூலியாக பணிபுரிந்து வருபவர்களை பட்டியலிட்டு அவர்களது தகுதிக்கேற்ப, அந்தந்த நகராட்சிகளில் அவ்வப்போது ஆரம்ப நிலையில் ஏற்படும் காலிப் பணியிடங்களில் முறையாக நியமனம் செய்துகொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் 27-5-1999 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 125-ல் உத்தரவிடப்பட்டுள்ளது. ஆரணி நகராட்சியில் பணியிடங்கள் காலி ஏற்படும்போது 10 ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரிந்து வரும் பணியாளர்கள் மேற்படி அரசாணைப்படி பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள்.

**35—**

## காலியிடங்கள்

**வினா 8258—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியத்தில் ஊராட்சி ஒன்றிய துவக்க, நடுநிலைப் பள்ளிகளில் துப்புரவுப் பணியாளர் காலியிடங்களை பூர்த்தி செய்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2002 மார்ச் 15

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**36—**

## நிழற்கூடம் அமைத்தல்

**வினா 11177—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, ஒட்டனூர் அடுத்துள்ள குண்டம்பட்டி முனியப்பன் கோவில் பேருந்து நிறுத்தத்தில் நிழற்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, ஒட்டனூர் அடுத்துள்ள குண்டம்பட்டியில் நிழற்குடை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**37—**

## தொழிற்சாலைகள்

**வினா 11573—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் மூடிய தொழிற்சாலைகள் எத்தனை?

(ஆ) அவற்றைத் திறக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?



2002 மார்ச் 15]

விடை—

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆறு தொழிற்சாலைகள். இவை யாவும் நிதி நெருக்கடி காரணமாகவே மூடப்பட்டன. தொழிலாளர் பிரச்சினை ஏதும் இல்லை.

(ஆ) தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டுள்ள இவ்வரசு மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளை மீண்டும் திறந்து இயக்குவது குறித்து பரிசீலிக்க மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்டும், மாவட்ட தொழிலாளர் நல அலுவலரை உறுப்பினர்-செயலராகக் கொண்டும், அந்தந்த மாவட்டத்தின் சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களையும், மூன்று நிருவாக பிரதிநிதிகளையும், மூன்று தொழிற்சங்க பிரதிநிதிகளையும், உறுப்பினராகக் கொண்ட குழு ஒன்றினை அமைப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

**38—**

## கருங்கல் குவாரிகள் ஏலம்

**வினா 4413—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001 ஆம் ஆண்டு தமிழகத்தில் சேலம் மாவட்டத்தில் கருங்கல் குவாரிகள் எவ்வளவு ஏலம் விடப்பட்டுள்ளது?

(ஆ) அதில் அரசுக்குக் கிடைத்த வருவாய் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) 2001 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் 5 கருங்கல் குவாரிகள் ஏலம் விடப்பட்டன.

(ஆ) இதில் இரண்டு குவாரிகளுக்கு ஏலம் உறுதி செய்யப்பட்டது. இதனால், அரசுக்குக் கிடைத்த வருவாய் ரூ. 4,52,000/- ஆகும்.

காலங்கடந்து ஏலத் தொகையைச் செலுத்தியதாலும், குறிப்பிட்ட காலத்தில் ஏலத் தொகை செலுத்தாததாலும், அரசு நிர்ணயித்த தொகைக்குக் (Up set price) குறைவாக குத்தகைத் தொகை ஏலம் மற்றும் டெண்டரில் கேட்டதாலும் ஏனைய மூன்று குவாரிகளுக்கு ஏலம் உறுதி செய்யப்படவில்லை.

[2002 மார்ச் 15

39—

## கல்குவாரிகளுக்கு உரிமம்

**வினா 5620—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் எத்தனை கல்குவாரிகளுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) உரிமம் கேட்ட விண்ணப்பங்களுக்கு உரிமம் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

(இ) இந்த கல்குவாரிகளில் எத்தனை தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள்? எத்தனை தொழிலாளர்கள் வேலை செய்ய அரசு உரிமம் வழங்கியுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் 27 புறம்போக்கு கல்குவாரிகளுக்கும் 44 பட்டா கல்குவாரிகளுக்கும் உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) கல்குவாரிகளுக்கு 25 விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன. அனைத்து விண்ணப்பங்களும் மலையகம் பாதுகாப்புக் குழுமத்தின் ஒப்புதல் பெற அறிக்கை வேண்டி நடவடிக்கையில் உள்ளது.

(இ) அனுமதி வழங்கப்பட்ட கல்குவாரிகளில் சுமார் 760 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் உரிமங்கள் வழங்கப்படுவதில்லை. குவாரி அமைந்துள்ள இடத்தின் பரப்பு மற்றும் கனிமத்தின் இருப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு உரிமங்கள் வழங்கப்படுகின்றன.

40—

## தொழில் முதலீட்டுக் கழகம்

**வினா 8239—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 மார்ச் 15]

(அ) தொழில் முதலீட்டுக் கழகத்தை வங்கியாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தினை ஒரு வர்த்தக வங்கியாக மாற்றக் கோரி அனுப்பிய செயற்குறிப்பினை அரசு ஆய்வு செய்தது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் நிதிச் செயல்பாடு சீரடைந்தபின் அதை வர்த்தக வங்கியாக மாற்றியமைப்பது குறித்து பரிசீலிக்கலாம் என அரசு முடிவு எடுத்துள்ளது.

41—

## மின் உற்பத்தி

**வினா 11674—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்திற்கு முழு அளவில் நிலம் கையகப்படுத்தப்பட்டபின் மின் உற்பத்தித் திட்டத்திற்கான கட்டுமானப் பணி தொடங்கப்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், தொழில் துறை அமைச்சர்:**

ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின் திட்டத்திற்கான நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. திட்டத்திற்கென கையகப்படுத்த உத்தேசித்துள்ள மொத்தம் 3616.84.5 ஹெக்டேர் நிலத்தில் 2759.34.0 ஹெக்டேர் நிலத்திற்கு அவார்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மீதி நிலத்திற்கான அவார்டு உத்தரவு பிறப்பிக்கும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தைச் செயல்படுத்த தேர்வு செய்யப்பட்டுள்ள திட்டமுனைவர்களுக்கும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குமிடையே மின்சாரம் வாங்குவதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானவுடன் இத்திட்டப் பணிகள் தொடங்கப்படும்.

42—

## விவசாயக் கடன்

**வினா 4054—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டு மே மாதம் முடிய விவசாயக் கடன் முழுமையாக செலுத்தும் விவசாயிகளுக்குக் கடன் வழங்கும் திட்டத்தில் எத்தனை விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள்?

(ஆ) சேலம் மாவட்டத்தில் எத்தனை விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் ஆண்டு மே மாதம் முடிய விவசாயக் கடன்களை முழுமையாகத் திருப்பிச் செலுத்தி, 7% வட்டி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் 2,17,981 விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள். இவர்களுக்கு ரூ.2287.41 இலட்சம் அளவிற்கு 7% வட்டி ஊக்குவிப்பு சலுகை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) சேலம் மாவட்டத்தில் 2000-2001 ஆம் ஆண்டு மே மாதம் முடிய மேற்படி 7% வட்டி ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் 40,149 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். இவர்களுக்காக 7% வட்டி ஊக்குவிப்பு சலுகைத் தொகையாக ரூ.436.84 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

43—

## கிராமக் கூட்டுறவு அங்காடி

**வினா 8366—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், பரவாக்கரை ஊராட்சியில் கிராம கூட்டுறவு அங்காடி அமைக்க அரசு உதவுமா?





விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், பரவாக்கரை ஊராட்சியில் (1) ஈஞ்சலடி (2) பூங்குடிகலை (3) பரவாக்கரை ஆதிதிராவிடர் தெரு (4) வெள்ளாளத் தெரு (5) கம்மாளத் தெரு (6) தாராசுரம் (7) அக்ரஹாரம் (8) அண்ணா நகர் (9) அம்பாக்கிபுரம் (10) குளத்துத் தெரு ஆகிய சிற்றூர்களை உள்ளடக்கி, 355 குடும்ப அட்டைகளுடன் ஒரு கூட்டுறவு அங்காடி செயல்பட்டு வருகிறது.

44—

## குடும்ப அட்டைகள்

**வினா 9200—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தற்போதுள்ள குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அவற்றிலுள்ள மொத்த குடும்ப உறுப்பினர்கள் எவ்வளவு?

(இ) இதுவரை புதிய குடும்ப அட்டைக்கு விண்ணப்பித்து நிலுவையில் உள்ள மனுக்கள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) தமிழ்நாட்டில் 30-9-2001 வரை 1,61,10,878 குடும்ப அட்டைகள் புழக்கத்திலுள்ளன. அவற்றில் 69,27,677 குடும்ப உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர். இதுவரை (30-9-2001) 26,374 மனுக்கள் விசாரணைக்காக நிலுவையிலுள்ளன.

[2002 மார்ச் 15

45—

## நியாயவிலை கிளைக் கடை

**வினா 9413—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், க. புதூர் ஊராட்சி, குடுஉயர்ந்தான்விளை கிராமத்தில் நியாயவிலை கிளைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், புலிமான்குளம் நியாயவிலைக் கடையைச் சேர்ந்த தோப்புவிளை பகுதிநேரக் கடையுடன் குடுஉயர்ந்தான்விளை குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. புலிமானகுளம் தாய்க்கடைக்கு, 356 குடும்ப அட்டைகளுடன் ஒரசாத்துப்புதூர் பகுதிநேரக் கடையும், 226 குடும்ப அட்டைகளுடன் தோப்புவிளை பகுதிநேரக் கடையும் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையில் குடுஉயர்ந்தான்விளை என்கிற சிற்றூரில் மூன்றாவது பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பு இல்லை.

46—

## குடும்ப அட்டை வழங்குதல்

**வினா 11272—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, வேகாக்கொல்லை கிராமத்தில் உள்ள பகுதி மக்களுக்கு சில குடும்ப அட்டை வழங்கப்படவில்லை. எனவே அவற்றை வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2002 மார்ச் 15]

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி வேகாக்கொல்லை கிராமத்திலுள்ள நியாயவிலைக் கடையில் 613 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டில் 24-10-2001 வரை புதிய குடும்ப அட்டை கோரி வரப்பெற்ற 32 விண்ணப்பங்களில் தகுதியானவை என்று கண்டறியப்பட்ட 9 விண்ணப்பதாரர்களுக்கு புதிய குடும்ப அட்டை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த 32 விண்ணப்பங்களைத் தவிர வேறு எவரும் புதிய குடும்ப அட்டை கோரவில்லை.

47—

## குடும்ப அட்டைகள் வழங்குதல்

**வினா 11273—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, புலியூர் அருந்ததியர் மக்கள் பலருக்கு வழங்கப்படாமல் உள்ள குடும்ப அட்டைகளை வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி வட்டம், புலியூர் காலனி மற்றும் அருந்ததியர் குடியிருப்புப் பகுதிகளிலுள்ள மக்களுக்கு 220 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு, அவற்றிற்கு புலியூர் கிராம நியாயவிலைக் கடை மூலமாக அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 24-10-2001 வரையில் புதிய குடும்ப அட்டை கோரி வரப்பெற்ற 6 மனுக்களில் தகுதியானவை எனக் கண்டறியப்பட்ட இரண்டு மனுக்களுக்கு புதிய குடும்ப அட்டை விரைவில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த ஆறு மனுக்கள் தவிர வேறு எவரும் புதிய குடும்ப அட்டை கோரி விண்ணப்பிக்கவில்லை.

48— [2002 மார்ச் 15

## சாலை செப்பனிடுதல்

**வினா 19—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், கட்டிநாயக்கன்பட்டி, மாணிக்கப்பட்டி சாலை 0/0-1/0 வரை மிகவும் பழுதடைந்துள்ளது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தச் சாலையைச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இப்பணி ஒப்புதல் அளிக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை. நிதி நிலைமைக்கேற்ப சாலையைச் செப்பனிட நடவடிக்கை எடுக்கப்படும்.

49—

## சாலையைப் புதுப்பித்தல்

**வினா 24—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், எல்லம்பாளையம்-எட்டிக்குட்டை மேடு சாலை 0/0-1/6 மிகவும் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தச் சாலையைப் புதுப்பித்து சரிசெய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இச்சாலையைப் புதுப்பிக்க தோராயமாக ரூ.8.80 இலட்சம் தேவைப்படும். இப்பணியை வரும் ஆண்டுகளில் அரசின்



2002 மார்ச் 15]

நிதிநிலைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் மேற்கொண்டு மேம்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். அதுவரையில் இச்சாலையில் ஏற்படும் பழுதுகளைச் சீர்செய்து போக்குவரத்திற்கு ஏற்ப நன்கு பராமரிக்கப்படும்.

50—

## சாலை பழுதுபார்த்தல்

**வினா 27—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், சவுரிபாளையம்-சின்னதாண்டனூர் சாலை 0/0 - 1/8 மிகவும் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தச் சாலையைப் பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இப்பணி அரசின் ஒப்புதலளிக்கப்பட்ட எந்த ஒரு திட்டத்திலும் இடம் பெறவில்லை. ஆதலால் நிதி நிலைமைக்கேற்ப இச்சாலையைப் பழுதுபார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

51—

## சாலை பழுதுபார்த்தல்

**வினா 28—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், சாணார்பட்டி-நாச்சியூர் சாலை 2/0-6/4 மிகவும் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தச் சாலையைப் பழுதுபார்த்து உதவ அரசு ஆவன செய்யுமா?

[2002 மார்ச் 15

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இப் பணி தற்போது செயல்படுத்தப்படும் எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை.

**52—**

## சாலைப் பராமரிப்பு

**வினா 29—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், வடுகப்பட்டி சாலை கி.மீ. 0/0-1/6 மிகவும் பழுதடைந்துள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தச் சாலையைச் செப்பனிட்டு சரிசெய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். நிதிநிலைமைக்கேற்ப இப்பணியினை எடுத்து முன்னுரிமை அளித்து செயல்படுத்தப்படும்.

இத்துறையின் பராமரிப்பிலுள்ள வடுகப்பட்டி சாலை கி.மீ.0/0-3/2 மாவட்ட இதர சாலைகள் வகையைச் சார்ந்த சாலையாகும். இச் சாலையில் கி.மீ. 1/6-3/2 வரை தார்த்தளம் புதுப்பிக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. மீதமுள்ள கி.மீ. 0/0-1/6 பகுதியினை தார்த்தளமாக அமைக்க ரூ.5.90 இலட்சம் தேவைப்படும். எதிர்வரும் ஆண்டுகளின் நிதிநிலைக்கேற்ப இப்பணியினை எடுத்துச் செய்ய முன்னுரிமை அளித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதுவரை அச்சாலையில் அவ்வப்பொழுது ஏற்படும் குழி, பள்ளங்களுக்கு ஒட்டுப் பணிகள் செய்து, சாலை வாகனப் போக்குவரத்திற்கு ஏற்ப பராமரிக்கப்பட்டு வருகின்றது.



2002 மார்ச் 15]

**53—**

## மலைப் பாதை

**வினா 981—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர்—திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை எண் 209-ல் உள்ள விருப்பாட்சி அருகில் மலைப் பாதையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பரிசீலிக்கப்படும்.

**54—**

## சாலை செப்பனிடல்

**வினா 2551—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி-பாலக்கோடு வரையிலான சாலை பழுதடைந்த நிலையில் உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[2002 மார்ச் 15

55—

## வனத் துறை மூலம் வருமானம்

**வினா 1590—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் 1999-2000 ஆண்டில் வனத் துறை மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு.எஸ்.எஸ். திருநாவுக்கரசு, செய்தி, விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில், புதுக்கோட்டை சமூகக் காடுகள் கோட்டம் மூலம் 1999-2000 ஆண்டில் பின்வரும் இனங்களில் வருவாய் கிடைக்கப்பெற்றுள்ளது:

| | | | |
|---|---|---|---|
| 1. | வனப் பண்ணை சமூகக் காடுகள் தோட்டங்கள் விற்பனை | .. | ரூ. 100.43 இலட்சம் |
| 2. | இதர வருவாய் (பல்வகை வரவுகள்) | .. | ரூ. 3.80 இலட்சம் |
| | மொத்தம் | .. | ரூ.104.23 இலட்சம் |

56—

## தீவனச் செலவு

**வினா 2220—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வண்டலூர் அண்ணா உயிரியல் பூங்காவில் புலி, சிங்கம் போன்ற விலங்குகளுக்குப் போதிய அளவு உணவு வழங்கப்படுகிறதா?

(ஆ) வன விலங்குகளின் எண்ணிக்கை மற்றும் அதற்காகும் தீவனச் செலவு எவ்வளவு?



2002 மார்ச் 15]

விடை—

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு, செய்தி, விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம். மருத்துவரின் ஆலோசனைப்படி ஒவ்வொரு விலங்கிற்கும் உணவுவகை நிர்ணயிக்கப்பட்டு போதிய அளவு உணவு வழங்கப்படுகிறது.

(ஆ) விலங்குகள், பறவைகள், ஊர்வன ஆகியனவெல்லாம் சேர்த்து மொத்தம் 2,009 எண்ணிக்கை விலங்குகள் உள்ளன. இவற்றிற்கு உணவுவகை செலவு ஆண்டுக்கு சுமார் ரூ.60.00 இலட்சம் ஆகிறது.

57—

## யானைகள் விவரம்

**வினா 2245—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முதுமலை சரணாலயத்தில் யானைகளின் எண்ணிக்கை எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு, செய்தி, விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

முதுமலை சரணாலயத்தில் மொத்தம் 830 யானைகள் உள்ளன.

வளர்ப்பு யானைகள் - 27

காட்டு யானைகள் - 803

58—

## முதலைப் பண்ணை

**வினா 8401—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு செய்தி, விளமபரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அருகேயுள்ள முட்டுக்காட்டில் முதலைப் பண்ணை உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அங்கு எத்தனை முதலைகள் உள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு, செய்தி, விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சென்னை அருகேயுள்ள முட்டுக்காட்டில் முதலைப் பண்ணை உள்ளது. அதில் 14 வகையான முதலை இனங்கள் உள்ளன. அவற்றில் மூன்று வகை அட்டவணை இனங்கள் மற்றும் 11 வகை அட்டவணையில்லாத இனங்கள். ஆக மொத்தம் 2,864 எண்ணிக்கையில் முதலைகள் உள்ளன.

**59—**

## நெல் சாகுபடி

**வினா 5844—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் நெல் சாகுபடி செய்வதில் அறுவடை செய்வதற்கும், நடுகை நடுவதற்கும் ஆள் கிடைக்காமல் விவசாயிகள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். இது குறித்து அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் நெல் சாகுபடி செய்வதில் அறுவடை செய்வதற்கும், நடுகை நடுவதற்கும் ஆள் பற்றாக்குறையினால் பாதிப்பு ஏற்படுவதைக் கருத்தில் கொண்டு, பண்ணை இயந்திரங்களை விவசாயிகளிடையே பரவலாக்கும் முயற்சியினை அரசு மேற்கொண்டு வருகிறது. இதன்படி, 1994-95 ஆம் ஆண்டில் 400 எண்கள் கதிர் அடிக்கும் இயந்திரங்கள் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு ரூ.12,000 மானிய விலையில் வழங்கப்பட்டன.



மேலும், 2000-2001 ஆம் ஆண்டில் மத்திய-மாநில அரசுகள் பங்கேற்கும் திட்டமான "வேளாண் இயந்திரமயமாக்கல்" திட்டத்தின்கீழ் 8 எண்கள் நெல் நாற்று நடும் இயந்திரங்கள் ரூ.30,000 மானிய விலையிலும், 22 எண்கள் நெற்கதிர் அடிக்கும் இயந்திரங்கள் ரூ.10,000 மானிய விலையிலும், விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் விவசாயிகளுக்கு 150 எண்கள் நெற்கதிர் அடிக்கும் இயந்திரங்கள் ரூ.10,000 மானிய விலையிலும் 25 எண்கள் நெல் நாற்று நடும் இயந்திரங்கள் ரூ.30,000 மானிய விலையிலும், 100 எண்கள் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக மாதிரியான நெல் அறுவடை செய்யும் கருவிகள் ரூ.10,000 மானிய விலையிலும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**60—**

## இயற்கைச் சீற்றம்

**வினா 5845—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள விவசாயிகள் இயற்கைச் சீற்றத்தினால் நஷ்டம் அடைவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நிரந்தரப் பாதுகாப்புக்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தெரியும்.

(ஆ) முன் அறிவிப்பு ஏதுமின்றி இயற்கைச் சீற்றங்கள் நிகழ்வதால், இயற்கைச் சீற்றத்திலிருந்து விவசாயிகளுக்கு நிரந்தரப் பாதுகாப்பு அளிப்பதென்பது இயலாது. ஆனால் பருவமழை தவறியதால் ஏற்படும் வறட்சியைத் தவிர்க்க பல்வேறு திட்டங்கள் மூலம் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (DPAP) பல்வேறு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், வெள்ளம் மற்றும் புயலால் பயிர்கள் பாதிக்கப்படும்போது, பயிர்கள் சேதமடைந்த விவரங்கள், மகசூல் பாதிப்பு பற்றிய விவரங்கள் மாவட்ட ஆட்சியர் மற்றும் வேளாண்மை இணை இயக்குநர்களிடமிருந்து பெறப்பட்டு, உரிய நிவாரணம், இயற்கை இடர்பாடுகள நிவாரண

நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. இது தவிர, தற்போது மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து பயிர்க் காப்பீட்டுத் திட்டம் மூலமாக நிரந்தர நிவாரணம் வழங்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. அதன்படி விவசாயிகள் பயனடையலாம்.

**61—**

## நெல் உற்பத்தி

**வினா 7853—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரி மற்றும் நல்லம்பள்ளி ஒன்றியங்களில் எவ்வளவு ஏக்கரில் நெல் உற்பத்தி செய்யப்படுகிறது?

(ஆ) அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் நெல்லின் மொத்த அளவு எவ்வளவு?

விடை —

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மற்றும் நல்லம்பள்ளி ஒன்றியங்களில் நெல் உற்பத்தி செய்யப்படும் பரப்பு விவரம்—

| வ.எண் | ஒன்றியம் | இயல்பான பரப்பு (எக்). | இயல்பான மகசூல் (மெ.டன்). | 2000-2001 ஆண்டு பரப்பு (எக்). | மகசூல் (அரிசி) (டன்) |
|---|---|---|---|---|---|
| 1. | தருமபுரி | 2,500 | 3,400 | 3,000 | 10,800 |
| 2. | நல்லம்பள்ளி | 3,000 | 3,420 | 3,024 | 10,886 |
| | **மொத்தம்** | **5500** | - | **6024** | **21,686** |

| | 2001-2002 ஆம் ஆண்டு செப்டம்பர் முடிய பரப்பு (எக்டர்). | எதிர்பார்க்கப்படும் மகசூல் (அரிசி) (டன்). |
|---|---|---|
| தருமபுரி | 1,290 | 4,644 |
| நல்லம்பள்ளி | 1,295 | 4,662 |
| **மொத்தம்** | **2,585** | **9,306** |



**62—**

## பாசன வசதி

**வினா 11363—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மொத்தமுள்ள பாசன வசதி பெறும் விளை நிலங்கள் எத்தனை ஹெக்டர் அளவு உள்ளது?

(ஆ) அதில் அரசு வாய்க்கால் பாசன வசதி பெறும் நில அளவு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் நிகர பாசனப் பரப்பு 1999-2000 ஆண்டு (பசலி) 1409-29,71,662 எக்டர்.

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1. அரசு வாய்க்கால் | - | 8,67,224 | எக்டர் |
| | 2. ஏரி குளங்கள் | - | 6,33,052 | எக்டர் |
| | 3. குழாய்க் கிணறுகள் | - | 2,22,131 | எக்டர் |
| | 4. இதர கிணறுகள் | - | 12,31,368 | எக்டர் |
| | 5. இதர நீர் நிலைகள் | - | 17,887 | எக்டர் |

**63—**

## பழக் கன்றுகள்

**வினா 12799—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக விவசாயிகளுக்குப் பழக் கன்றுகள் இலவசமாக வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

ஆம். தமிழக விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறையில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சேலம், விழுப்புரம், திருச்சி, தருமபுரி, வேலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் உயர் விளைச்சல் தரும் மா, சப்போட்டா, பலா, கொய்யா, மாதுளைச் செடிகள் மற்றும் அதற்குரிய இடுபொருட்கள், மொத்தம் 1,307 ஏக்கரில் ரூ.17.20 இலட்சத்தில் 2000-2001 ஆம் ஆண்டில் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. மேலும், 2001-2002 ஆம் ஆண்டிற்கு 2,265 ஏக்கரில் ரூ.48.20 இலட்சம் செலவில் இப்பணியை மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டு திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது.

**64—**

## வேளாண்மை விரிவாக்க மையம்

**வினா 14191—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியிலுள்ள வேளாண்மை விரிவாக்க மையத்திற்கு தார்பாய்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடையம் ஊராட்சி ஒன்றியம் பகுதிக்குட்பட்ட பகுதியிலுள்ள வேளாண்மை விரிவாக்க மையத்திற்கு தார்பாய்கள் தேவையின் அடிப்படையில் வழங்க அரசு ஆவன செய்யும். பகுதி-2 திட்டத்தின்கீழ், இந்நிதியாண்டில் வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு தார்பாய்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தார்பாய்கள் வழங்கும் பட்சத்தில் தேவையின் அடிப்படையில் கடையம் பகுதியிலுள்ள வேளாண்மை விரிவாக்க மையத்திற்கு வழங்கிட திருநெல்வேலி, வேளாண்மை இணை இயக்குநருக்கு அறிவுரைகள் வழங்கப்படும்.



**65—**

## சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகள்

**வினா 2653—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிநாட்டிலிருந்து தமிழகத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகள் மற்றும் உதவிகளை சுற்றுலாத் துறையே ஏற்று நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி இரா. சரோஜா, சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வெளிநாட்டிலிருந்து தமிழகத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகள் மற்றும் உதவிகளை சுற்றுலாத் துறையே ஏற்று நடத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டின் சுற்றுலாத் தலங்கள் குறித்து அறிய சுற்றுலாத் துறை 18 சுற்றுலா அலுவலகங்கள் (14 தமிழ்நாட்டிலும், 4 வெளி மாநிலங்களிலும் உள்ளன) மற்றும் 19 சுற்றுலாத் தகவல் மையங்கள் (16 தமிழ்நாட்டிலும், 3 வெளி மாநிலங்களிலும் உள்ளன) ஏற்படுத்தியுள்ளது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் தங்குவதற்கு ஏற்ற வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகள் (உணவகத்துடன்) தமிழ்நாட்டின் முக்கியமான சுற்றுலாத் தலங்களில் செயல்பட்டு வருகின்றன. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலாத் தலங்களைச் சுற்றிப்பார்க்க ஏதுவாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பேருந்துகள் மூலம் சிறப்பு சுற்றுலா நடத்தி வருகிறது.

**66—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா 4388—திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை ஒன்றியம், கொடிங்காயம் கிராமத்தில் ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட தேவையான இடத்தை உடனடியாக ஆர்ஜிதம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது இது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், கொடிங்காயம் கிராமம் க.ச.222/2சி சாலை 4.50 ஏக்கர் நிலம் ஆதிதிராவிடர் வீட்டுமனைக்கு ஏற்கெனவே ஆர்ஜிதம் செய்யப்பட்டு, 144 மனையிடங்கள் ஏற்படுத்தப்பட்டு, 122 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 22 மனையிடங்களுக்குத் தகுதியான நபர்களைத் தேர்வு செய்து வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

67—

## முன்னாள் படைவீரர்கள் கோரிக்கை மனு

**வினா 14231—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் முன்னாள் படைவீரர்கள் எவ்வளவு பேர் உள்ளனர்?

(ஆ) அவர்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் ஏதாவது அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், என்ன நடவடிக்கை அதன்மீது எடுக்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 30-9-2001 தேதிய நிலவரப்படி, தமிழ்நாட்டில் 1,07,977 முன்னாள் படைவீரர்களும், 37,881 முன்னாள் படைவீரர்களின் விதவையர்களும் உள்ளனர்.

(ஆ) ஆம். அரசுக்கு கோரிக்கை மனுக்கள் வந்துள்ளன.



(இ) வேலைவாய்ப்பு தொடர்பாகப் பெறப்படும் மனுக்களைப் பொறுத்தமட்டில் போரில் இறந்த/ஊனமுற்ற மற்றும் படைப் பணியின்போது உயிர் நீத்த படைவீரர்களின் வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் அவரவர் தகுதிக்கேற்ப அரசு அலுவலகங்களில் உள்ள காலியிடங்களில் பணி நியமனம் வழங்க பரிந்துரைக்கப்படுகின்றன. ஓய்வூதியம் தொடர்பான மனுக்கள் மத்திய அரசுக்கு பரிந்துரைக்கப்படுகின்றன. நிதியுதவி மற்றும் இதர சலுகைகளுக்கான மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதிக்கேற்ப நிதியுதவி/இதர சலுகைகள் வழங்கப்படுகின்றன.

68—

## தள்ளுபடி மானியம்

**வினா 1223—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித்தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி நெசவாளர்களுக்கு தள்ளுபடி மானியம் அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் விற்பனை செய்யப்படும் கைத்தறித் துணி வகைகளின் மொத்த மற்றும் சில்லறை விற்பனைகளுக்கு ஆண்டு முழுவதும் 20 விழுக்காடு தள்ளுபடி மானியம் அரசால் வழங்கப்படுகிறது. மேலும், 15-9-2001 முதல் 14-1-2002 (பொங்கல், 2002) வரை கோ-ஆப்டெக்ஸ் மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக உள்ள பழைய துணிகளுக்கு கூடுதலாக 10 விழுக்காடு தள்ளுபடி அளித்து அரசு ஆணையிட்டுள்ளது.

[2002 மார்ச் 15

69—

## எருமையினம்

**வினா 13266—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன் :** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதியில் எருமையினம் குறைந்து வருவதைத் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை —

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேரன்மகாதேவி தொகுதியில் எருமையினம் குறைந்து வருவதைத் தடுக்க எருமைகளில் செயற்கை முறைக் கருவூட்டல் செய்யப்படுகிறது. சேரன்மகாதேவி தொகுதியில் பயன்படுத்தப்படும் உறைவிந்துக் குச்சிகள் தயாரிக்க பகுதி-2 திட்டத்தின் மூலம் ரூ.6.00 இலட்சம் செலவில் உயர்தர முர்ரா பொலிகாளைகள் ஹரியானா மாநிலத்திலிருந்து வரவுள்ளன. மேலும், மக்கள் தொடர்பு முகாம் மூலம் இப்பகுதியில் எருமையினத்தைப் பெருக்க ஊக்குவிக்கப்படுகிறது.

70—

## விலை நிர்ணயம்

**வினா 1854—திரு. பி.ஆர். சுந்தரம் :** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்டத் தலைநகர்களில் அமைக்கப்படும் சிறு தொழில் வளாகத்திற்கு கையகப்படுத்தப்படும் நிலங்களின் உரிமையாளர்களுக்கு எந்த அடிப்படையில் அரசு விலை நிர்ணயம் செய்கிறது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

பொதுக் காரியங்களுக்கு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்குத் தேவைப்படும் நிலங்கள், நிலம் கையகப்படுத்துதல் சட்டம், 1894-ன்படி கையகப்படுத்தப்படுகின்றன. நில மதிப்பினைப் பொறுத்த அளவில் நிலம் கையகப்படுத்தும் சட்டம், 1894 பிரிவு 4(1)-ன்கீழ் விளம்பரத்திற்கு முந்தைய ஓராண்டிற்கான விற்பனைப் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு, அதனடிப்படையில் நில மதிப்பு நிர்ணயம் செய்யப்படும். சந்தை மதிப்பு தவிர 30% ஆறுதல் (Solatium) 4(1) விளம்பரத் தேதி முதல் நிலம் பெறப்படும் தேதி வரையில் 12% வட்டியும், அதற்கு அடுத்த வருடங்களுக்கு 15% வட்டியும் சேர்த்து விலை நிர்ணயம் செய்யப்படும்.



2002 மார்ச் 15]

71—

## பட்டு நூற்பாலை

**வினா 8906—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளி தொகுதியிலுள்ள மத்திய பட்டு நூற்பாலையில் எவ்வளவு தொழிலாளர்கள் பணியாற்றுகின்றார்கள்; வருடத்திற்கு அரசுக்கு எவ்வளவு வருவாய் வருகிறது என்பனவற்றை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

பட்டு வளர்ச்சித் துறையின்கீழ் செயல்பட்டு வரும் நாட்ராம்பள்ளி பட்டு நூற்பு தொழிற் கூட்டுறவுச் சங்கத்தில், பட்டு முறுக்கேற்றும் பிரிவில் பணி நடைபெற்று வருகிறது. அப்பிரிவில் 25 தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். தற்போது பட்டு நூற்புப் பணி நிறுத்தப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் (31-10-2001 முடிய) ரூ.1,90,202 நிகர நட்டம் ஏற்பட்டுள்ளது. அரசிற்கு இச்சங்கத்தால் வருவாய் ஏதுமில்லை.

72—

## பச்சைத் தேயிலை கொள்முதல்

**வினா 11365—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு நிறுவனமான இன்ட்கோசர்வ் மூலம் பச்சைத் தேயிலை, இதுவரை எவ்வளவு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது?

(ஆ) அதற்கு அரசு கிலோ 1-க்குக் கொடுத்த விலை எவ்வளவு?

(இ) அதனால் பலனடைந்த விவசாயிகள் எத்தனை பேர்? அதன் விவரத்தை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இன்ட்கோசர்வ் நிறுவனம் நேரடியாக பச்சைத் தேயிலையைக் கொள்முதல் செய்வதில்லை. அதன் கட்டுப்பாட்டிலுள்ள 15 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், தனது உறுப்பினர்களாகிய சிறு தேயிலை விவசாயிகளிடமிருந்து பச்சைத் தேயிலையைக் கொள்முதல் செய்கின்றன. இவ்வாறு தேயிலை தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கொள்முதல் செய்யப்பட்ட பச்சைத் தேயிலையின் அளவு 30-9-2001 அன்று வரை 2,93,00,000 கிலோ.

(ஆ) பச்சைத் தேயிலையை 'இன்ட்கோசர்வ்' நேரடியாகக் கொள்முதல் செய்யாத நிலையில் இவ் வினாவிற்கு இடமில்லை. எனினும், ஏப்ரல் 2001 முதல் செப்டம்பர் 2001 வரை நிலவிய பச்சைத் தேயிலையின் சராசரிக் கொள்முதல் விலை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| ஏப்ரல் 2001 | ரூ.7.39 கிலோ ஒன்றுக்கு |
| மே 2001 | ரூ.5.76 கிலோ ஒன்றுக்கு |
| ஜூன் 2001 | ரூ.4.83 கிலோ ஒன்றுக்கு |
| ஜூலை 2001 | ரூ.5.65 கிலோ ஒன்றுக்கு |
| ஆகஸ்ட் 2001 | ரூ.6.24 கிலோ ஒன்றுக்கு |
| செப்டம்பர் 2001 | ரூ.5.52 கிலோ ஒன்றுக்கு |

(இ) இன்ட்கோசர்வ்-ன் கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் உறுப்பினர்களாக உள்ள சுமார் 21,192 சிறு தேயிலை விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.



**73—**

## தொகுப்பு வீடுகள்

**வினா 928—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இ.கே.புதூர், குப்புசெட்டிபட்டி, கோணங்கிள அள்ளி, சின்னபங்குநத்தம், கானப்பட்டி, பாலவாடி, மூக்கனஅள்ளி, நெகுத்தி, அனுமந்தபுரம், பரப்பட்டி இராமர்கூடல், நல்லாம்பட்டி, ஒடி அள்ளி, ஆகிய கிராமங்களில் வாழும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கி தொகுப்பு வீடுகள் தனித்தனியே நடப்பாண்டில் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மூலம் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் இன மக்களுக்கு வீடுகள் தனித்தனியே கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. இருப்பினும், மாவட்ட அளவில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டத்தின்கீழ் தொகுப்பு வீடுகள் கட்டித்தரும்பொழுது தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும் என்பதின் அடிப்படையில், தாழ்த்தப்பட்ட பழங்குடியினர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கும்பொழுது மேற்படி கட்டப்படும் வீடுகளில் 5% முதல் 10% வரை பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் இன மக்களுக்கு அந்தந்த மாவட்டங்களில் உள்ள நடைமுறைகளுக்கு ஏற்ப மாவட்ட ஆட்சித் தலைவர்களால் வீடுகள் ஒதுக்கீடு செய்து தரப்படும் நடைமுறை வழக்கத்தில் உள்ளது. இதைத் தவிர, நடப்பு நிதியாண்டிலிருந்து ஏற்கெனவே நில எடுப்பு செய்து இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ள இடங்களில், அவசியத்தின் மற்றும் தகுதியின் அடிப்படையில், குடிதண்ணீர், தெருவிளக்கு, சாலை மற்றும் சாக்கடை வசதிகள் செய்து கொடுக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2002 மார்ச் 15

74—

## கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம்

**வினா 1354—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எத்தனை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் இயங்கி வருகின்றன?

(ஆ) அதில் எத்தனை ஒன்றியங்கள் லாபத்தில் இயங்குகின்றன?

(இ) அதில் நஷ்டத்தில் இயங்கும் கூட்டுறவு ஒன்றியங்களை மேம்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 17 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) அவற்றில் கன்னியாகுமரி, திருச்சி, கோவை மற்றும் புதுக்கோட்டை ஆகிய நான்கு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் திரண்ட நட்டத்திலும் (Cumulative Loss), ஆனால் நடப்பாண்டில் இலாபத்திலும் இயங்கி வருகின்றன.

(இ) நட்டத்தில் இயங்கிவரும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களை மேம்படுத்த மாதந்தோறும் நடைபெறுகின்ற திட்ட செயல்பாடு கூட்டத்தில் (Programme Action Committee) சிறப்பு ஆணையரால் ஆய்வு செய்யப்பட்டு அறிவுரைகள் வழங்கியும், நட்டத்தைக் குறைக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

75—

## இலவச வீட்டுமனைத் திட்டம்

**வினா 5981—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2002 மார்ச் 15]

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இலவச வீட்டுமனைத் திட்டத்தில் 2000ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட ரூ.18 கோடியில் எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:**

2000 ஆண்டில் (அதாவது 1999-2000-இல்) பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் இன மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.18 கோடியில் ரூ.12,71,89,000 (ரூபாய் பன்னிரண்டு கோடியே, எழுபத்தியொரு இலட்சத்து, எண்பத்து ஒன்பது ஆயிரம் மட்டும்) செலவு செய்யப்பட்டுள்ளது.

76—

## ஆண்கள் விடுதி

**வினா 7028—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, மூங்கில்துறைப்பட்டு கிராமத்திலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு ஆண்கள் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தனியார் கட்டடங்களில் இயங்கிவரும் விடுதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகளுடன் அரசின் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கும், அரசின் சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் விடுதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகள் செய்வதற்கும் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இப் பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும் என்பதாலும், தற்போதைய நிதிநிலையைக் கருத்திற்கொண்டும் விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் தொகுதி, மூங்கில்துறைப்பட்டு கிராமத்திலுள்ள மேல்நிலைப் பள்ளிக்குப் புதிய விடுதி தொடங்குவது குறித்து தீவிர பரிசீலனை செய்த பின்பே முடிவு எடுக்க இயலும்.

**77—**

## பால் பண பட்டுவாடா

**வினா 7031—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, மூங்கில்துறைப்பட்டு, பால் உற்பத்தியாளர்களுக்கு 8 வாரம் பால் பட்டுவாடா பாக்கி உள்ளதை உடனே வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சங்கராபுரம் தொகுதியில் உள்ள மூங்கில் துறைப்பட்டு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்திற்குப் பால் வழங்கிவரும் பால் உற்பத்தியாளர்களுக்கு பால் பண பட்டுவாடா வாராந்திர அடிப்படையில் வழங்குவது நடைமுறையில் உள்ளது. இச்சங்கத்திற்கு வாராந்திர பால் பண பட்டுவாடா வழங்கிவரும் நிலையில் 25-10-2001 வரையிலான காலஅளவிற்கு சங்கத்தில் பால் ஊற்றியுள்ள அனைத்து பால் உற்பத்தியாளர்களுக்கும் பால் பண பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. இச்சங்கத்திற்கு ஒன்றியம் 15-9-2001 வரையிலான காலத்திற்கு மட்டுமே பால் பண பட்டுவாடா செய்துள்ள நிலையிலும், சங்க நிதி ஆதாரங்களைக்கொண்டு பால் உற்பத்தியாளர்களுக்கு பால் பண பட்டுவாடா நிலுவையின்றி 25-10-2001 வரை வழங்கப்பட்டுள்ளது.

**78—**

## வீடு கட்ட ஒதுக்கீடு

**வினா 1377—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்திற்கு தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் மூலமாக எத்தனை வீடுகள் கட்ட ஒதுக்கீடு வழங்கப்பட்டது?



(ஆ) அதன் மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(இ) அதில் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) ஒவ்வோர் ஆண்டும் நகர்ப்புற சங்கங்களைப் பொறுத்தவரை, வீடுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒதுக்கீடு வழங்கப்படுவதில்லை. நிதி நிறுவனங்களிடமிருந்து அரசு பொறுப்புறுதியின் பேரில் பெறப்படுகின்ற நிதியுதவியின் அளவினைப் பொறுத்து ஒவ்வொரு மண்டலத்திற்கும் நிதி ஒதுக்கீடு மட்டும் செய்யப்படுகிறது. 2000-2001 ஆம் ஆண்டிற்கு சேலம் மாவட்டத்திற்கு ரூ.58.38 கோடி நிதி வழங்குவதற்கு குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. வட்டக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரை 2000-2001 ஆம் ஆண்டில் குறியீடு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை.

(ஆ) 2000-2001 ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்திலுள்ள நகர்ப்புற வீட்டுவசதித் திட்டத்தில் கட்டப்பட்ட மொத்த வீடுகளின் மதிப்பீட்டுத் தொகை ரூ.70.46 கோடியாகும்.

(இ) 2000-2001 ஆம் ஆண்டில் இணையம் நகர்ப்புறச் சங்கங்களின் மூலம் சேலம் மாவட்டத்திற்கு 2,111 வீடுகள் கட்டி முடிப்பதற்கு ரூ.52.85 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்த மாவட்டத்திலுள்ள வட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் 3,718 வீடுகள் கட்டி முடிப்பதற்கு ரூ.8.85 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**79—**

## தண்ணீர் விநியோகம்

**வினா 1386—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை, ஆனையூரில் வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ள செக்டார் 6 பகுதியில் உள்ள வீடுகளுக்கு தண்ணீர் விநியோகம் சரியாக இல்லையென்பதால் தண்ணீரின் வேகத்தை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

மதுரை, ஆனையூரில் வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ள செக்டார் 6 ஆம் பகுதியில் உள்ள வீடுகளுக்கு தண்ணீர் விநியோகம் இதுவரை முறையாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும், தற்போது தண்ணீர் வேகத்தை அதிகரிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**80—**

## பேருந்துகள்

**வினா 4683—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் கோட்டம்-1-லும் மற்றும் எடப்பாடியிலுள்ள தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனையிலும் எத்தனை பேருந்துகள் நல்ல முறையில் இயங்கி வருகின்றன?

(ஆ) மிக மோசமான பேருந்துகள் எத்தனை உள்ளன என்று அரசு கண்டறிந்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் கோட்டம்-1ல் மொத்தம் 944 பேருந்துகள் உள்ளன. இதில் 50 பேருந்துகள் எடப்பாடி பணிமனையில் உள்ளன. அனைத்துப் பேருந்துகளும் தடத்தில் இயங்கும் நல்ல நிலையில் உள்ளன.

(ஆ) மோசமான பேருந்துகள் எதுவுமில்லை. அனைத்துப் பேருந்துகளும் நல்ல நிலையில் உள்ளன.

**81—**

## புதிய வழித்தடங்கள்

**வினா 4685—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் கோட்டம்-1ல் 2000-2001 ஆம் ஆண்டு மே மாதம் வரை எத்தனை புதிய வழித்தடங்களை உருவாக்கி புதிதாகப் பேருந்துகள் விடப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் கோட்டம் 1-ல் ஏப்ரல் 2000 முதல் மே 2001 முடிய எந்தப் புதிய வழித்தடங்களையும் உருவாக்கி பேருந்துகள் விடப்படவில்லை.

**82—**

## பேருந்து வசதி

**வினா 5411—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அருகே அந்தியூரில் தினமும் அதிகாலை 4 மணியிலிருந்து 6 மணி வரை பேருந்து நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டைக்கும் பொள்ளாச்சிக்கும் இடையில் உள்ள அந்தியூர் என்ற கிராமம் புறநகர் மற்றும் நகரப் பேருந்துகளுக்கு (ஸ்டேஜ்) நிலையாகும். இவ்வழித்தடத்தில் இயங்கும் அனைத்துப் புறநகர் மற்றும் நகரப் பேருந்துகளும் அந்தியூரில் அனைத்து நேரங்களிலும் நிறுத்தப்பட்டு பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்கிறது.

**83—**

## பேருந்து இயக்குதல்

**வினா 5412—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 மார்ச் 15

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி கிராம பஞ்சாயத்து, ஜல்லிப்பட்டி வரும் எண் 1 பேருந்தை லிங்கமாவூரில் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை நகர வழித்தட எண் 1, உடுமலைப்பேட்டையில் இருந்து ஜல்லிப்பட்டி வரை 2 நடைகளும், ஜல்லிப்பட்டி-சடையகவுண்டன்புதூர் வரை 4 நடைகளும், ஜல்லிப்பட்டி-கோமங்களம்புதூர் வரை 8 நடைகளும், ஜல்லிப்பட்டி-கெடிமேடு வரை 2 நடைகளும் என பல்திசை வழித்தடமாக இயக்கப்படுகிறது. ஜல்லிப்பட்டி முதல் லிங்கமாவூர் வரை சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் வரை சாலை சரியில்லாததால், தற்போது உடுமலைப்பேட்டை வழித்தட எண் 1-ஐ ஜல்லிப்பட்டியிலிருந்து லிங்கமாவூர் வரை வழித்தட நீட்டிப்பு செய்து இயக்க இயலாத நிலை உள்ளது.

**84—**

## பேருந்து

**வினா 5413—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆனைமலைச் சாலையில் போகும் 1 ஏ பேருந்தை உடுமலைப்பேட்டை தொகுதி, ஜல்லிப்பட்டி கிராமம் வந்து திரும்பிச் செல்லும்படி இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) உடுமலைப்பேட்டை நகர வழித்தட பேருந்து எண் 1ஏ, உடுமலை-கோமங்கலம்புதூர்/ சடையகவுண்டன்புதூர்/தளி/திருமூர்த்திமலை என பல்திசை வழித்தடப் பேருந்தாக இயக்கப்பட்டு வருகிறது. உடுமலையிலிருந்து திருமூர்த்திமலைக்குச் செல்லும் பேருந்துகள் அனைத்தும் ஜல்லிப்பட்டி பிரிவு வழியாக இயக்கப்படுகிறது. ஜல்லிப்பட்டி பிரிவு முதல் ஜல்லிப்பட்டி ஊர் வரை உள்ள வழித்தட தூரம் 0.5 கி.மீ. மட்டுமே ஆகும். இது நடந்து செல்லக்கூடிய தூரத்தில் இருப்பதால் வழித்தட பேருந்து எண் 1ஏ-ஐ நீட்டித்து இயக்க வேண்டிய அவசியமில்லை.



2002 மார்ச் 15]

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**85—**

## பேருந்து வழித்தடம்

**வினா 5850—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி-ஓரத்தி செல்லும் பேருந்து மூடூர் கிராமம் வழியாகச் செல்ல அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வந்தவாசி-ஓரத்தி (வழி) மூடூர் என்பது ஒரு சுற்று வழித்தடமாகும். இவ்வழித்தடத்தில் பேருந்தை இயக்கினால் நேரடிப் பயணிகள் பெரிதும் பாதிப்படைவார்கள். மேலும், தெள்ளார்-வெண்மந்தை (வழி) மூடூர் தடத்தில் மினி பேருந்துகள் தினசரி 12 நடைகள் இயக்கப்படுகின்றன. இம்மினி பேருந்துகள் மூலம் மூடூர் கிராம மக்கள் பேருந்து வசதி பெற்றுள்ளனர். எனவே மூடூர் கிராமம் வழியாகப் பேருந்து இயக்க சாத்தியமில்லை.

**86—**

## பேருந்து இயக்கம்

**வினா 5851—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி-ஓரத்தி செல்லும் பேருந்து வெண்மந்தை, செம்பேடு, அடுமூர் வழியாகச் செல்ல அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், வேலூர் தடம் எண் டபிள்யூ 10/ஏ மூலம் வந்தவாசி-ஒரத்தி (வழி) வெண்மந்தை, கீழ்செம்பேடு, அடுமூர் தடத்தில் தினசரி 2 நடைகள் காலையிலும் மாலையிலும் பள்ளி மாணவ மாணவியரும் பயன்பெறும் வகையில் இயக்கப்படுகிறது.

**87—**

## பேருந்து நடைகள்

**வினா 5853—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி கீழ்செம்பேடு செல்லும் பேருந்து டபிள்யூ 8 பேருந்து கீழ்செம்பேடு கிராமம் வழியாக அனைத்து நடைகள் சென்று வர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

நகரத் தடம் எண் டபிள்யூ 8 வந்தவாசி-ஒரத்தி (வழி) கீழ்செம்பேடு என தினசரி 2 நடைகள் இயக்கப்படுகிறது. மேலும் இந்நகரப் பேருந்து வந்தவாசி-குறிப்பேடு 4 நடைகளும், வந்தவாசி-ஒரத்தி 8 நடைகளும், நேர்வழியில் பலமுனை வழித்தடத்தில் இயக்கப்படுகின்றன. கோரிக்கையின்படி அனைத்து நடைகளும் கீழ்செம்பேடு கிராமம் வழியாக இயக்கினால் ஏற்கெனவே இப்பேருந்துகளினால் பயன் பெற்றுவரும் மற்ற கிராமத்து மக்கள் பெரிதும் பாதிப்படைவார்கள். எனவே இந்நகரப் பேருந்தின் அனைத்து நடைகளையும் கீழ்செம்பேடு கிராமம் வழியாக இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**88—**

## நகரப் பேருந்து

**வினா 5064—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அச்சம்பாடு ஊராட்சி, புதுக்குடியிருப்பு கிராமத்தின் வழியாக நகரப் பேருந்து தடம் எண் 8-ஐ தொடர்ந்து ஐந்து முறையும் இயக்கிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

புதுக்குடியிருப்பு என்ற கிராமமானது சுமார் 40 வீடுகளையும் 200 மக்கள்தொகையையும் கொண்டதாகும். தற்போது திருநெல்வேலி போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து தடம் எண் 8 வாயிலாக வள்ளியூரிலிருந்து 8.35 மணிக்கு கிளம்பி கண்ணநல்லூர் வழியாக வள்ளியூருக்கு இயக்கப்படும் வட்டச் சுற்றிலும், வள்ளியூரில் 13.05 மணிக்கு கிளம்பி கண்ணநல்லூர் வழியாக நாங்குநேரிக்கு இயக்கப்படும் சுற்றிலும் புதுக்குடியிருப்பு கிராமத்தை தொட்டுச் செல்லும்படியாக பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. இந்தச் சுற்றுக்களில் தற்போது 6 முதல் 7 பயணிகளே புதுக்குடியிருப்பு சென்று வருகின்றனர். எனவே புதுக்குடியிருப்புக்கு கூடுதல் சுற்றுப் பேருந்து இயக்கிடத் தேவையில்லை.

**89—**

## பேருந்து வசதி

**வினா 5977—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வேப்பியான்குளம் ஊராட்சி, சுண்டவிளை கிராம மாணவ மாணவியர் பள்ளி செல்லவும் திரும்பி வரவும் காலை மாலை நேரங்களில் சரியான பேருந்து வசதி இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பணகுடியிலிருந்து வடக்கன்குளம் செல்லும் சாலையில் சுண்டவிளை எனும் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் சுமார் 150 வீடுகளும், மக்கள்தொகை சுமார் 700-ம் உள்ளது. இவ்வூரிலிருந்து சுமார் 25 முதல் 30 மாணவ/மாணவியர்கள் பணகுடி மற்றும் வடக்கன்குளம் ஆகிய இடங்களுக்குச் சென்று கல்வி பயின்று வருகின்றனர். இவர்களில்

[2002 மார்ச் 15

பெரும்பாலான மாணவ/மாணவியர்கள் பணகுடிக்குச் சென்றே கல்வி பயின்று வருகின்றனர். தற்போது தடம் எண் 4-ல் வள்ளியூர் மதகனேரி என இயக்கப்பட்டு வரும் திருநெல்வேலி அரசுப் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்தை காலையில் சுமார் 8.00 மணிக்கும் மாலையில் 17.15 மணிக்கும் இதற்கென பயன்படுத்தி வருகின்றனர். வடக்கன்குளம் சென்று வரும் மற்ற பள்ளி மாணவ மாணவியர் புறநகர் பேருந்தைப் பயன்படுத்தி வருகின்றனர். எனவே பள்ளி நேரத்தில் இக்கிராமத்திற்கு தற்போதுள்ள பேருந்துகளே போதுமானதாகும்.

**90—**

## கூடுதல் நடைகள் பேருந்து

**வினா 5985—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அரசுப் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த நகரப் பேருந்து தட எண் 37 பஸ் நாள் ஒன்றுக்கு மூன்று முறை மட்டும் உடுமலையிலிருந்து ஜக்கம்பாளையம் வந்து செல்வதை ஆறு முறை ஆக்க அரசு முன்வருமா?*

*விடை.—*

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

உடுமலைப்பேட்டையிலிருந்து நகரப் பேருந்து தட எண் 37/40 ஜக்கம்பாளையத்திற்கு நாளொன்றுக்கு தற்போது நான்கு நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்து பல்திசை வழித்தடத்தில் இயக்கப்பட்டு வருவதால், ஜக்கம்பாளையத்திற்கு மேலும் கூடுதல் நடைகள் இயக்க இயலாத நிலை உள்ளது.

**91—**

## பேருந்து வசதி

**வினா 6649—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 மார்ச் 15]

*(அ) கடையம்-முக்கூடல் வழித்தடம் 9 (வழி) பொட்டல்புதூர், காவூர், சங்கரலிங்கபுரம், சொக்கலிங்கபுரம், சிவநாடானூர், ஏ.பி. நாடானூர், தீர்த்தரப்புரம் வழியாகச் செல்ல அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது தடம் எண் 9 பல்முனை வழித்தடத்தில் கீழ்க்கண்டவாறு இயக்கப்பட்டு வருகிறது:—

| | | |
|---|---|---|
| (1) | கடையம்-முக்கூடல் (வழி) பொட்டல்புதூர், வெள்ளிகுளம், ஏ.பி. நாடானூர், தீர்த்தரப்புரம் | 3 சுற்றுக்கள் |
| (2) | முக்கூடல்-ஆலங்குளம் (வழி) பனையங்குறிச்சி | 4 சுற்றுக்கள் |
| (3) | முக்கூடல்-ஆலங்குளம் (வழி) ஓ. துலுக்கப்பட்டி | 3 சுற்றுக்கள் |
| (4) | முக்கூடல்-தெ. மாயமான்குறிச்சி (வழி) பனையங்குறிச்சி | 2 சுற்றுக்கள் |
| (5) | அம்பாசமுத்திரம்-பாபநாசம் | 1 சுற்று |
| (6) | பாபநாசம்-ஆலங்குளம் | 1 சுற்று |
| (7) | ஆலங்குளம்-ஆலடிப்பட்டி | 2 சுற்றுக்கள் |
| (8) | கடையம்-அம்பாசமுத்திரம் | 1 சுற்று |

இதில் கடையத்திலிருந்து பொட்டல்புதூர், வெள்ளிகுளம் வழியாக முக்கூடலுக்கு இயக்கப்படும் வழித்தடத்தின் தூரம் 30 கி.மீ. ஆகும். இதனைச் சட்டமன்ற வினாவில் கேட்டுள்ளபடி காவூர், சங்கரலிங்கபுரம், சொக்கலிங்கபுரம், சிவநாடானூர் வழியாக மாற்று வழித்தடத்தில் இயக்கினால் மேற்படி சுற்றுக்களின் வழித்தட தூரம் 30.0 கிலோ மீட்டருக்கு மேல் அதிகரிக்கும். அரசு விதிகளின்படி நகரப் பேருந்தினை 30 கிலோ மீட்டருக்கு மேல் இயக்க இயலாது. மேலும் வழித்தடம் 9 பல்முனை வழித்தடப் பேருந்தாக இருப்பதால் தற்போதைய சுற்றுக்களில் மாற்றம் செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே கடையத்திலிருந்து பொட்டல்புதூர், வெள்ளிகுளம் வழியாக முக்கூடலுக்கு இயக்கப்படும் வழித்தடம் எண் 9-ஐ காவூர், சங்கரலிங்கபுரம், சொக்கலிங்கபுரம், சிவநாடானூர் வழியாக மாற்றுவது பற்றிய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

92—

## பேருந்து இயக்குதல்

**வினா 6651—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானியன்குளம் வழியாக செல்லக்கூடிய தடம் எண் 14ஏ-ஐ சரியான நேரத்தில் இயக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தடம் எண் 14 ஏ நகரப் பேருந்து திருநெல்வேலி நகரத்திலிருந்து குறுக்குத்துறை, மேலப்பாளையம், தருவை, கோபாலசமுத்திரம், மேலச்செவல், வானியன்குளம் வழியாக கரிசல்பட்டி வரை தினசரி 4 சுற்றுக்கள் உரிய நேரத்தில் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்து உரிய நேரத்தில் முறையாக இயக்கப்பட்டு வருகிறதா என அவ்வப்போது கண்காணிக்கப்பட்டும் வருகிறது.

93—

## புதிய பேருந்துகள்

**வினா 7120—திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி தொகுதியில் இயங்கிக்கொண்டிருக்கும் பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகள் இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த நகரப் பேருந்துகள் லால்குடி தொகுதியில் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகளின் சராசரி வயது 4½ ஆண்டுகள் ஆகும். தற்போது 6 வருடங்கள் அல்லது 7 லட்சம் கி.மீ. தூரம் இயக்கப்பட்ட பேருந்துகள் கழிவு செய்யப்பட்டு புதிய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. புதிய பேருந்துகள் அறிமுகப்படுத்தப்படும்பொழுது நடைமுறையில் உள்ள விதிகளின்படி பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகள் அறிமுகம் செய்யும் செயற்குறிப்பு அரசால் பரிசீலனை செய்யப்படும்.



94—

## பேருந்து

**வினா 7121—திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

லால்குடி தொகுதியில் உள்ள குக்கிராமங்களுக்கு அரசுப் பேருந்து இயக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருச்சி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த 31 நகரப் பேருந்துகள் மற்றும் தனியாருக்குச் சொந்தமான 8 நகரப் பேருந்துகள் லால்குடி தொகுதியிலுள்ள கிராமங்கள் மற்றும் குக்கிராமங்களுக்கு இயக்கப்பட்டு வருகின்றன. இவை தவிர அரியலூர், ஜெயங்கொண்டம், சிதம்பரம், நெய்வேலி, கடலூர், தஞ்சாவூர் போன்ற இடங்களுக்கும் ஒவ்வொரு 10 நிமிட இடைவெளியிலும் புறநகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அனைத்து குக்கிராமங்களுக்கும் பேருந்துகள் இயக்குவது இயலாத காரியம். எனினும் பொதுமக்கள் பயன்பாடு கருதி அனைத்து முக்கியமான வழித்தடங்களிலும் போதிய அளவில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

95—

## தனியார் பேருந்து

**வினா 8268—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2002 மார்ச் 15

திருநெல்வேலி மாவட்டத்தில் தனியார் நகரப் பேருந்துகள் எத்தனை இயக்கப்படுகின்றன?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டத்தில் 84 தனியார் நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

**96—**

## நகரப் பேருந்து வசதி

**வினா 8479—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி-கோனேரிப்பட்டி செல்லும் 2ஏ நகரப் பேருந்தை பழுதுபார்த்து நல்ல முறையில் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் எடப்பாடியிலிருந்து கோனேரிப்பட்டி வழித்தடத்தில் செல்லும் 2ஏ நகரப் பேருந்து பழுது ஏதுமின்றி நல்ல முறையில் தற்பொழுது இயக்கப்பட்டு வருகின்றது.

**97—**

## நகரப் பேருந்து

**வினா 8756—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி, கொங்கணாபுரம் ஒன்றியம் மலையனூரிலிருந்து அம்மன்காட்டூர் வழியாக கொங்கணாபுரம் செல்லும் நகரப் பேருந்தை மேலும் மூன்று நடைகள் அவ்வழித்தடத்தின் வழியாக விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



2002 மார்ச் 15]

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி கொங்கணாபுரம் ஒன்றியம், மலையனூரிலிருந்து அம்மன்காட்டூர் வழியாக கொங்கணாபுரம் செல்லும் நகரப் பேருந்தை, மேலும் மூன்று நடைகள் அவ்வழித்தடத்தில் இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**98—**

## அரசுப் பேருந்து

**வினா 9633—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர்-நொய்யல் வழித்தடத்தில் தமிழ்நாடு அரசுப் பேருந்து நாள் ஒன்றுக்கு ஒருமுறை இயக்கப்படுவதை பல முறை இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கரூர்-நொய்யல் (வழி) மன்மங்கலம், வேலாயுதம்பாளையம், சேமங்கி வழித்தட நீளம் 27.0 கி.மீ. தூரம் ஆகும். இவ்வழித்தடத்தில் திருச்சி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து ஒன்றின் மூலம் பல்வழித் திட்டத்தின்கீழ் தினசரி 2 நடைகளும், தனியார் துறை நகரப் பேருந்து ஒன்றின் மூலம் தினசரி 16 நடைகளும் இயக்கப்படுகின்றன. மேலும், கொடுமுடி-வேலூர் (வழி) நொய்யல், சேமங்கி வழித்தடத்தில் ஈரோடு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் மற்றும் தனியார் துறை பேருந்துகள் மூலம் தினசரி 104 நடைகள் இயக்கப்படுகின்றன. கரூர்-நொய்யல் (வழி) புன்னம்சத்திரம் நேர்வழியில் வழித்தட நீளம் 21.0 கி.மீ. ஆகும். இவ்வழித்தடத்தில் ஒவ்வொரு ஐந்து நிமிட இடைவெளியில், கரூர்-ஈரோடு வழித்தடப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இது தவிர ஒவ்வொரு பத்து நிமிட இடைவெளியில் கொடுமுடிக்கு நொய்யல் வழியாக நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேலும், கரூர்-வேலாயுதம்பாளையம் வரை உள்ள 19.0 கி.மீ. வழித்தடம், கரூர்-வேலூர் வழித்தடப் பேருந்துகள் இயங்கும் பிரதான சாலையாகும். இவ்வழித்தடத்தில் ஒவ்வொரு ஐந்து நிமிட இடைவெளியில் நகர மற்றும்

[2002 மார்ச் 15

புறநகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எனவே கரூர்-நொய்யல் வழித்தடத்தில் நகர மற்றும் புறநகரப் பேருந்துகள் மூலம் நேரடியாகவும், பகுதி பகுதியாகவும் போதிய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

99 —

## புதிய பேருந்து

**வினா 11320—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் தொகுதியில் இயங்கும் வழித்தடம் எண் 07, 03, 08, 011, 04, 010 வழித்தடங்களில் உள்ள பேருந்துகளை மாற்றி புதிய பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் தொகுதியில் இயங்கிக்கொண்டிருக்கும் பேருந்துகளின் விவரம் வருமாறு:

| தடம் எண் | பேருந்து எண் | ஆக்க ஆண்டு (மாடல்) |
|---|---|---|
| ஓ7 | டிஎன் 27/என்0511 | 1994 |
| ஓ3 | டிஎன் 27/என்0264 | 1992 |
| ஓ8 | டிஎன் 27/என்0363 | 1992 |
| ஓ11 | டிஎன் 27/என்0628 | 1995 |
| ஓ4 | டிஎன் 27/என்0671 | 1995 |
| ஓ4 | டிஎன் 27/என்0659 | 1995 |
| ஓ10 | டிஎன் 27/என்8730 | 1997 |



2002 மார்ச் 15]

மேலே குறிப்பிட்டுள்ள பேருந்துகள் அனைத்தும் வழித்தடங்களில் தற்போது நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. வயது மூப்பின் அடிப்படையில் பழைய பேருந்துகள் கழிவு செய்யப்பட்டு நிதிநிலைக்கேற்ப புதிய பேருந்துகள் உரிய நேரத்தில் இத்தடங்களில் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

100—

## பேருந்துகள் இயக்குதல்

**வினா 11416—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், நாமக்கல் நகரிலிருந்து மோகனூர் செல்ல இரவு 9.15 முதல் 10.30 வரை பேருந்துகள் இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல்லிலிருந்து மோகனூருக்கு தற்போது இரவு 09.15 மணிக்கு கே.ஜி.ஆர். என்ற தனியார் பேருந்து இயக்கப்படுகிறது. இதற்கடுத்து இரவு 10.30 மணிக்கு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் கோட்டம்-1-ன் மூலமாக ஒரு பேருந்து மோகனூருக்கு இயக்கப்படுகிறது. இரவு 10.30 மணிக்கு இயக்கப்படுகின்ற நடையில் பயணிகள் அடர்வு 47% மட்டுமே உள்ளது. எனவே நாமக்கல் மோகனூரிடையே தற்போதுள்ள இரவு நேரப் பேருந்து வசதியே பொதுமக்களின் போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்வதாக உள்ளது.

(ஆ) இக்கேள்வி எழாது.

---

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

53-572—18

## 2. அறிக்கை அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிக்கை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 19 முதல் 23 வரையிலான ஐந்து அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதமும் பதிலுரையும்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதமும் பதிலுரையும். திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாமன்றத்திலே ஆளுநர் அவர்கள் வாசித்தளித்த உரையின்மீது பேசுவதற்கு வாய்ப்பினை அளித்த தங்களுக்கு முதலிலே என்னுடைய அன்பு கலந்த வணக்கத்தைத் தெரிவித்து, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஐந்து மாத இடைவெளிக்குப் பிறகு மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்று இம்மாமன்றத்திலே அமர்ந்து பணியாற்றுவதை, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே முதலிலே நான் மனதார வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போலவே மேதகு ஆளுநர் அவர்கள் தமிழகத்திற்கு ஆளுநராகப் பொறுப்பேற்று முதலாவது முறையாக இம்மாமன்றத்திலே உரை நிகழ்த்தி இந்த நாட்டிற்கு நல்ல திட்டங்களை எல்லாம் அளித்ததற்காக பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே அவரையும் நான் மனதார வருக, வருக என வரவேற்கிறேன். அதே நேரத்திலே இந்த மாநிலத்தினுடைய மக்களுக்காக, மக்களின் [illegible]மைக்காக, மாநிலத்தினுடைய வளர்ச்சிக்காக அவர் ஆக்கபூர்வமான





பணிகளைச் செய்வார், நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையோடு அவரை வரவேற்கிறேன். அதே நேரத்திலே மாநில வளர்ச்சிக்காக அவர் உரையில் ஆற்றிய வளர்ச்சித் திட்டங்களைப்பற்றிப் படித்து நன்கு உணர்ந்து அவருக்கு நான், இந்த நேரத்திலே நன்றி தெரிவிக்கவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய இந்திய நாடாளுமன்றத்தின்மீது ஏற்பட்ட வன்முறைத் தாக்குதலை இந்த மாமன்றத்தின் வாயிலாக பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வன்மையாகக் கண்டிக்கிறேன். அதே நேரத்திலே, குஜராத் மாநிலத்தில் நடந்த அசம்பாவிதத்திலே அப்பாவி மக்கள் ஏராளமான பேர் உயிரிழந்திருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஆழ்ந்த இரங்கலை இந்த நேரத்திலே வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆளுநர் உரையிலே ஆக்கபூர்வமான கருத்துகளைச் சொல்லியிருப்பதை பாட்டாளி மக்கள் கட்சி நிச்சயமாக வரவேற்கத் தவறாது. இந்த அரசாங்கத்தினுடைய நல்ல திட்டங்களை வரவேற்கக்கூடிய அதே நேரத்திலே, சிறப்பான ஆலோசனைகளையும் சொல்வதற்குத் தவறமாட்டோம் என்பதையும் இந்த நேரத்திலே நான் முதலிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த வகையிலே, ஆளுநர் உரையிலே இந்த ஆண்டு சொல்லியிருக்கக்கூடிய திட்டங்களைப்பற்றிச் சொல்கின்ற அதே நேரத்திலே, தமிழகத்தினுடைய இன்றைய சமூகப் பொருளாதார நிலை எந்த அளவிலே இருக்கிறது என்பதைக் கோடிட்டுக் காட்டிவிட்டு அதற்குப் பிறகு தொடர்ச்சியாகச் சொல்வதுதான் பயனுள்ளதாகவும், பொருத்தமாகவும் இருக்கும் என்று நான் கருதுகிறேன். கடந்த ஆண்டு ஆளுநர் உரையைப் படித்துப் பார்த்தேன். அதிலே 40 வாக்குறுதிகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அந்த 40 வாக்குறுதிகளிலே கடந்த ஆண்டு 4 மட்டுமே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அந்த 4 கூட என்னவென்று என்னாலே சொல்ல முடியும். காலத்தினுடைய அருமை கருதி உள்ளே நான் ஆழமாகப் போக விரும்பவில்லை. 4 அறிவிப்புகளை நிறைவேற்றிவிட்டு மற்ற 36 அறிவிப்புகளும் அப்படியே இருக்கின்றன. ஆகவே அந்த அறிவிப்புகளைத் தொடர்ந்து நிறைவேற்ற வேண்டும். அதைப்போலவே நடப்பாண்டிலே அறிவித்திருக்கக்கூடிய இந்தத் திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கு முன்வர வேண்டும் என்று நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அறிவிப்பிலே கூட்டுறவுத் தேர்தல் நடத்துவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே மாறுபாடு இல்லை. நடத்தவிருக்கக்கூடிய கூட்டுறவுத் தேர்தலை நியாயமாகவும்,

நேர்மையாகவும் நடத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்திலே, மற்ற தேர்தல்களுக்கு ஆணையம் இருப்பதைப்போல கூட்டுறவுத் தேர்தல் நடத்துவதற்கும் கூட்டுறவுக்கு ஒரு ஆணையம் நிறுவ வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-05*

அதைப்போலவே, பத்தி 11-லே ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசு தமிழகத்திற்கு நிதியினைக் குறைவாக வழங்கியிருக்கிறது என்றும், நிதியைக் குறைத்துவிட்டதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் மத்திய அரசினுடைய வரி வருவாயிலே 29 சதவிகிதம் மாநிலங்களுக்கு வழங்க வேண்டும் என்று மத்திய அரசு சொல்லியிருக்கிறது. அதுமாத்திரமல்ல, மத்திய அரசு அரசியல் திருத்தச் சட்டமும் கொண்டுவந்திருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலையிலே மற்ற மாநிலங்கள் எல்லாம் கூடுதலாக நிதி பெறக்கூடிய இந்தச் சூழ்நிலையிலே, நம்முடைய அரசுக்கு மத்திய அரசு கூடுதலாக நிதி தரத் தவறிவிட்டது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதற்காக இம்மாமன்றத்தில் தமிழகத்தினுடைய பொருளாதார நிலையை மனதிலே வைத்து நிதி நெருக்கடியையும் சுட்டிக்காட்டி, கூடுதலாக மத்திய அரசு நிதி வழங்க வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்திலே, மத்திய அரசு வருமான வரிக்கு 5 சதவிகிதம் கூடுதல் வரி, அதாவது சர்-சார்ஜ் வரி விதிக்கிறது. அதை மாநில அரசு வரி வசூலிக்கக்கூடிய அளவிலே, சர்-சார்ஜ் வரியிலே 5 சதவிகிதம் மாநில அரசுகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது, அதையும் நாம் கேட்டுப் பெறவில்லை. அதே நேரத்திலே, மத்திய அரசு பொருளாதாரச் சீர்திருத்தத்தை ஒவ்வொரு மாநிலமும் கொண்டுவர வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. ஆனால் நம்முடைய அரசு மற்ற மாநிலங்களைப் போல் பொருளாதாரத்திலே சீர்திருத்தம் கொண்டுவரவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது எந்த வகையில் என்று சொன்னால்—உதாரணத்திற்குக்கூட என்னாலே ஒன்றைச் சொல்ல முடியும்—மின் துறையிலே மராட்டிய மாநிலம் போன்ற பல்வேறு மாநிலங்களிலே எல்லாம், 6, 7 ஆண்டுகளுக்கு முன்பே பொருளாதாரச் சீர்திருத்தத்தைக் கொண்டுவந்து, கையொப்பம் இட்டிருக்கிறது. ஆனால் நம்முடைய அரசு. மின் துறையிலே பொருளாதாரச் சீர்திருத்தத்திலே சமீபத்திலேதான் கையொப்பம் இட்டிருக்கிறது. ஆகவே இப்படி மத்திய அரசோடு இணக்கமான ஒரு சூழ்நிலையை வகுத்து, கூடுதலான நிதியைப்



பெறுவதற்கு ஆக்கபூர்வமான நல்ல திட்டங்களை, நல்ல வழிமுறைகளை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய தமிழக அரசு செலவு சீர்திருத்தக் குழு ஒன்றை அமைத்திருக்கிறது. அதை நான் மனதார வரவேற்கிறேன். ஒரு நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் இருக்கின்றன. அதைப்போல, செலவு சீர்த்திருத்தக் குழு அமைக்கக்கூடிய அதேநேரத்திலே, வருவாய்ப் பெருக்கத்திற்காக வருவாய் சீர்திருத்தக் குழு ஒன்றை அமைக்க வேண்டுமென்று இங்கே நான் அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இந்தியாவிலேயே முதன்மையான மாநிலமாகக் கொண்டுவருவேன் என்று சொல்கிறார்கள், அதை நாங்கள் மனதார வரவேற்கிறோம். முதன்மை மாநிலம் என்று சொன்னால், தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அத்தனை தமிழர்களுக்கும் பெருமை சேர்க்கக்கூடிய ஒன்று. இதை கடந்த 1991 ஆம் ஆண்டிலேகூட, அரசு நலத் திட்டங்களை வழங்கக்கூடிய விழாவிலேகூடச் சொல்லியிருக்கிறார்கள். தொடர்ந்து சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அப்படி நிறைவேற்றுகின்ற அந்த எண்ணம் இருக்கின்ற நேரத்திலே, நம்முடைய ஆளுநர் உரையிலே திட்டச் செலவினை 6,040 கோடி ரூபாயிலிருந்து, 5,200 கோடி ரூபாயாகக் குறைத்திருப்பது, எந்த வகையிலே தமிழகத்தினுடைய முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்? ஒட்டுமொத்தமாக வளர்ச்சியைக் குறைப்பதற்கும், தமிழகத்தை முன்னோடி மாநிலமாகக் கொண்டுவருவதற்கும் இது தடையாக இருக்கும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்படித் திட்டச் செலவைக் குறைத்துவிட்டு, முதன்மை மாநிலம் என்று சொல்வது, கனவுத் திட்டமாக, கற்பனைத் திட்டமாக நிச்சயமாக அமைந்து விடக்கூடாது என்ற காரணத்தால், மாநிலங்களுக்கு கூடுதல் வருவாய் ஆதாரங்களைத் திரட்டுவதற்கான வழிவகைகளை மேற்கொண்டு, திட்டச் செலவினைக் கூடுதலாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி வருவாய் ஆதாரங்களைப் பெருக்குவதற்கு ஆலோசனை என்று சொன்னால், இன்று இருக்கக்கூடிய விற்பனை வரி பாக்கி இருக்கிறதே, அதிலே 10-ல் ஒரு பங்கு வசூலித்தாலே போதுமானதாக இருக்கும். ஆகவே இதுபோன்ற கூடுதல் வருமானங்களைப் பெருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10-10*

அதேநேரத்திலே— என்னுடைய ஆலோசனையாக மாத்திரம் அல்ல— நம்முடைய மாநிலத்தை முதன்மை மாநிலமாக மாற்றுவதற்கு அறிஞர்கள் எல்லாம் இங்கே அரிய கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலே கடந்த நான்கு நாட்களுக்கு முன்பு, ஆந்திர மாநிலத்தினுடைய தலைமைச் செயலாளராக இருந்த, மரியாதைக்குரிய ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. துரைசாமி ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அது 'இந்து' நாளிதழிலே வந்திருக்கிறது. உங்களுக்கெல்லாம்கூடத் தெரியும். அதிலே அவர் சொல்வது, 'நமது மாநிலத்தை நாட்டிலேயே முதல் மாநிலமாக மாற்றுவது குறிக்கோள்' என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதில் வெற்றியடையவும் நான் வாழ்த்துகிறேன். அதை என்னுடைய கருத்தாக நான் சொல்லவில்லை. அதற்கு என்ன செய்ய வேண்டுமென்று சொன்னால், இங்கே மாநில நலனிலே அக்கறை கொண்ட பல அறிஞர்கள், ஓய்வுபெற்ற முன்னாள் அதிகாரிகள், தொழிலதிபர்கள் எல்லாம் கூறக்கூடிய கருத்தோடு, இந்த ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியினுடைய கருத்தையும் இங்கே இணைத்து நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே அவர் சொல்லியிருப்பது, "உன்னால் முடியும் தம்பி" என்று சொல்வார்களே அதைப்போல, நம்முடைய முதலமைச்சரால் இது சாத்தியம்தான் என்று குறிப்பிட்டிருக்கிறார். இதற்கு, முதல்வருக்கு உள்ள சாதக அம்சங்களைப் பட்டியல் போட்டு அதிலே காட்டியிருக்கிறார். அவற்றைச் சொல்கின்ற நேரத்திலே ஒன்றையும் இங்கே சொல்கிறார். அவர் குறிப்பிட்டுள்ள பகுதி, "அரசியல் பழிவாங்கும் நோக்கில் யாருக்கும் பாடம் புகட்ட வேண்டுமென்று நினைத்து அரசு இயந்திரத்தைப் பயன்படுத்திச் செயல்படுத்தக் கூடாது. முழு கவனத்தையும் அதிலே செலவிடக்கூடாது. கடந்த காலத்திலிருந்து பாடம் கற்றுக்கொண்டு செயல்பட வேண்டும்" என்று மாநில நலனிலே அக்கறையுள்ள அந்த முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி சிறப்பாகக் குறிப்பிட்டிருக்கிறார். இப்படி திறமையான அதிகாரிகள், துடிப்பும் வேகமும் உள்ள அதிகாரிகள் நிறையபேர் இருந்துகொண்டுதான் இருக்கிறார்கள். ஆகவே இவர்களைச் சுதந்திரமாகச் செயலாற்ற விடவேண்டும். அதைப்போல, அரசியல் குறுக்கீட்டால் அவர்கள் கைகளையெல்லாம் கட்டிப்போடக்கூடாது என்ற ஆலோசனையையும் அவர் வழங்கி இருக்கிறார். ஆகவே அவர் ஆலோசனையோடு என்னுடைய கருத்தையும் இதிலே நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதுமட்டுமல்ல, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் *1991*-லே முன்பு முதலமைச்சராகப் பொறுப்பேற்று, சுதந்திர தின கொடியேற்று விழா நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு ஒரு கருத்தை இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார். கோட்டைக் கொத்தளத்திலே கொடியேற்றிவிட்டு அவர் சொன்ன கருத்து, "நாளை காலை முதல் நமது தவறுகளுக்காக நாம் வெள்ளைக்காரர்களைக் குறை கூற முடியாது என்று தத்துவ மேதை டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் முதலாவது சுதந்திர தினத்தன்று தெரிவித்த கருத்தை இங்கே சுட்டிக்காட்டுகிறேன்" என்று சொல்லி, "அதேநேரத்திலே ஆழமான அர்த்தமுள்ள இந்தக் கருத்து கடமையையும் பொறுப்பையும் உணர்த்தும்" என்ற வாசகங்களை முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவே அப்படி இருக்கின்ற நேரத்திலே, அரசு கடந்தகால அனுபவங்களையெல்லாம் பல்வேறு கசப்பான அனுபவங்கள், சாதக பாதகங்கள், நிறை குறைகள் எதுவாக இருந்தாலும்கூட, அவற்றையெல்லாம் சற்று தாங்கிக்கொண்டு இங்கே பணியாற்றுவதுதான் பொருத்தமாக இருக்கும் என்பதற்காக நான் இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதிகாரிகளாக இருந்தாலும் அல்லது ஆட்சியாளர்களாக இருந்தாலும்கூட, நமக்கு ஒவ்வொரு நாளும் மிக முக்கியமான நாட்களே. அந்த அடிப்படையிலே இது என் நாடு, இது என் மக்கள், என் மக்களுக்காக என் நாட்டிற்காக நான் பணியாற்றுகிறேன் என்ற சேவை உணர்வு எல்லோருக்கும் வந்தாக வேண்டும் என்று அதிகாரிகள் முதலாக எல்லோரையும் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கேகூட சட்டமன்றத்தைக் கூட்டாமல் விலை உயர்வு போன்ற அம்சங்களையெல்லாம் பல ஆயிரக்கணக்கான கோடிக்கு அறிவித்திருக்கிறீர்கள். அதற்கு அண்ணா அவர்கள் ஒரு நேரத்திலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். வரி விதிக்கப்பட்ட நேரத்திலே பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை இங்கே நான் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். புதிய வரி விதிப்புகளைக் கண்டித்து அண்ணா அவர்கள் சொன்னது—"புதிய வரி விதிப்புகளைப் பார்க்கும்போது, உடனே ஏற்படுகின்ற எண்ணம் என்னவென்றால், தற்போதுள்ள சர்க்கார் தங்களது தோல்விகளால் திகைத்துப்போய் பொதுமக்களைத் தேவையற்ற பளுவைச் சுமக்கும்படி கேட்கிறது" என்று அண்ணா அவர்கள் கூறியிருக்கிறார்கள். அது பொருத்தமாக இருக்கும் என்று நினைத்தாலும்கூட, நான் அதைத் தோல்வி என்று சொல்லவில்லை. அப்படிப்பட்ட அந்த வார்த்தைகளைக்கூட நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்பவில்லை. ஆட்சிக்கு வந்த *9* மாத காலத்திலே இப்படி பால் விலை உயர்வு, பஸ்

கட்டண உயர்வு, மின் கட்டண உயர்வு, மண்ணெண்ணெய் விலை உயர்வு போன்ற பல்வேறு கட்டண உயர்வுகளெல்லாம் பொதுமக்களை மிகக் கடுமையாகப் பாதித்திருக்கிறது. ஆகவே பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன அந்த தாரக மந்திரத்தை மனதிலேகொண்டு, இந்த மக்கள்மீது சுமத்தப்பட்டு இருக்கக்கூடிய பளுவை நீங்கள் நிச்சயமாக மாற்றியமைக்க வேண்டும். அந்தக் கட்டண உயர்வு, விலைவாசி உயர்வுகளையெல்லாம் இரத்துச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-15*

இன்னொன்று, நம்முடைய முதலமைச்சரவர்கள் *1991*-லே முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது முதலாவதாக ஓர் உத்தரவைப் பிறப்பித்து, நாட்டு மக்களுக்கு ஒரு நல்ல காரியத்தைச் செய்தார்கள். அவர் சொன்னது, பெண்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக மலிவு விலை மதுவை இரத்துச் செய்கிறேன். அடியோடு நீக்குகிறேன் என்று சொல்லி உத்தரவிட்டார்கள். பெண்கள் எல்லாம் மகிழ்ச்சியடைந்தார்கள். ஆனால் இந்த ஆண்டு பெண்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக மலிவு விலை மதுவை அறிமுகம் செய்கிறேன், தொடங்கி வைக்கிறேன் என்று சொன்னது பெண்கள் மத்தியிலே மிகப் பெரிய கொந்தளிப்பை, மிகப் பெரிய ஒரு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கக்கூடிய செய்தியாக அமைந்திருக்கிறது. ஆகவே அந்த மலிவு விலை மதுவினாலே எத்தனை குடும்பங்கள் இன்று சீரழிக்கப்பட்டிருக்கின்றன என்பதெல்லாம் இங்கே வீற்றிருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் தெரிகிறது. படித்த இளைஞர்கள், வேலையில்லாத் திண்டாட்டத்திலே அவதிப்பட்டுக் கொண்டிருக்கக்கூடியவர்கள் எல்லாம் இன்று குடித்துவிட்டு, வாழ்க்கையைச் சீரழித்துக் கொண்டிருக்கக்கூடிய நிலையெல்லாம் இருக்கின்ற காரணத்தினாலேதான், அதை நிச்சயமாக, அந்த உத்தரவைத் திரும்பப்பெற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மலிவு விலை மதுவைப்பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். நான் ஏற்கெனவே இந்த அவையில் விரிவான விளக்கத்தினைத் தந்திருக்கின்றேன். தமிழ்நாட்டில், கள்ளத்தனமாக சாராயம் காய்ச்சுவதனாலும், மெத்தனால் போன்ற கெமிக்கல்களைப் பயன்படுத்தி கிராமப்புறங்களிலே இருக்கின்ற மக்களுக்கு அதிக அளவில் விற்பனை செய்வதாலும் சாவு ஏற்படுகிறது என்பதனைச்



சுட்டிக்காட்டியும் பலதரப்பட்ட மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து அரசுக்கு வேண்டுகோள் வந்தது. ஏற்கெனவே மது தமிழ்நாட்டில் அனுமதிக்கப்பட்டு, விற்றுக்கொண்டிருக்கின்ற ஒன்று. ஏதோ புதியதாக நம்முடைய அரசுதான் இந்த மதுவை இப்பொழுது இங்கே கொண்டு வந்ததுபோல் ஒரு தோற்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். கிராமப்புறங்களில் இருக்கின்ற மக்கள் சாதாரணமாக அந்த *100* எம்.எல். என்று விற்கப்படுகின்ற மதுவின் விலை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், கள்ள மது குறைந்த விலைக்குக் கிடைப்பதினால், அதை வாங்கிப் பருகுகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது. *100* எம்.எல். அதிகமாகப் பயன்படுத்துபவர்கள் கிராமப்புறங்களில் இருக்கின்ற மக்கள். அதனுடைய விலை குறைவாக இருந்தால் இந்த மாதிரியாகக் கள்ளத்தனமாக விற்கப்படுகின்ற சாராயத்தினை நாடி மக்கள் போக மாட்டார்கள் என்ற கருத்து பரவலாகப் பேசப்பட்டு, பத்திரிகைகளில் எழுதப்பட்டுவந்த காரணத்தினால்தான் அரசு, அரசுக்கு வர வேண்டிய வருவாயைக்கூட பொருட்படுத்தாமல் அந்தக் குறைந்த விலை மதுவின், மலிவு விலை மது என்றல்ல— விலையைக் குறைத்து அதே தரத்தில் நம்முடைய அரசு கொடுக்க முன்வந்தது. முன்னால் கொடுக்கப்பட்ட அந்த *100* மி.லி. மதுவில் அரசினுடைய வருவாய் ஒரு பெட்டிக்கு ரூ. *1754.13* பைசாவாக இருந்தது. அதை அரசு *864.83* ரூபாய் என்ற அளவிற்குக் குறைத்து, கிட்டத்தட்ட *900* ரூபாய் ஒரு பெட்டிக்கு அரசினுடைய வருவாயைக் குறைத்து நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இதுதான் உண்மையான நிலை என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முன்னாள் முதலமைச்சர், பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் இங்கே ஒரு விளக்கத்தைச் சொன்னார்கள். அந்த விளக்கத்திலே அரசுக்கு வருமானம் வர வேண்டுமென்ற நோக்கத்தோடு அல்லாமல் இதை நடைமுறைப்படுத்தியதாகச் சொன்னார்கள். ஆகவே அரசுக்கு வருவாய் இல்லையென்று சொன்னாலும்கூட, இந்த நாட்டு மக்கள் எப்படி எல்லாம் சீரழிக்கப்படுகிறார்கள். கிராமத்திலே சொல்வார்கள். ஒரு குடும்பம் கெட்டுப் போக வேண்டுமென்று சொன்னால், அந்தக் குடும்பத்திலே ஒருவன் குடிகாரனாக இருந்தால் போதும் என்று சொல்வார்கள். இது சாதாரணமாக கிராமத்திலே பேசுவது. ஆகவே ஒரு குடும்பம் கெட்டுப் போவதற்கு குடிப்பழக்கம் காரணம் என்று சொன்னால், ஒரு நாடு கெட்டுப் போவதற்கு அதனைக் காரணமாக

எடுத்துக்கொள்ள முடியுமா, முடியாதா. ஆகவே அந்த வகையில்தான், ஏதோ உள்நோக்கம் கற்பிப்பதற்காகச் சொல்லவில்லை. இப்படி இந்தக் குடிப்பழக்கம் என்பது ஒரு தனி மனிதனுக்கு ஒரு குடும்பத்திற்கும், ஒரு நாட்டிற்கும் அழிவைத் தேடித் தரக்கூடிய ஒன்று. அதனை அரசு அறிவிக்கக் கூடாது என்ற நோக்கத்தோடு சொன்னேன் என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படி அதிலேயும்கூட, ஆந்திர மாநிலத்திலே இருக்கிற வியாபாரிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இங்கேகூட கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலே சொல்கிறார்கள். மொலாசஸ் எல்லாம் தேங்கிக் கிடக்கிறது. எங்களுக்குக் கொடுத்தால் 100 மி.லி. 4 ரூபாய், 5 ரூபாய்க்குள்ளாகக் கொடுப்போம் என்று சொல்கிறார்கள். அதேநேரத்திலே, ஆந்திர மாநிலத்திலே இந்த 100 மி.லி.னுடைய விலை 8 ரூபாய்தான். நாம் கூடுதலாக விலை கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதற்காக நான் ஆதரவாகப் பேசவில்லை. இருந்தாலும்கூட, இருக்கக்கூடிய நிலைமையினை எடுத்துச் சொல்வதற்காக இதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

*முற்பகல் 10-20*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே, 15 அம்சத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறீர்கள். அதை நாங்கள் மனதார வரவேற்கிறோம். அது ஏற்புடைய திட்டம். அந்தத் திட்டத்தை முழுமையாக அமலாக்க வேண்டுமென்று சொல்கிறோம். அதே நேரத்திலே, இந்தத் திட்டத்தைப்பற்றி விவசாய விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள், 2-12-2001 அன்று ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். இந்து நாளிதழிலேகூட வந்திருக்கிறது. இந்த 15 அம்சத் திட்டத்தைப் பற்றி அவர் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். நான்கூட என்னுடைய தொகுதியிலே, அவரை அழைத்து, ஒரு குழுவை அழைத்துச் சென்று, அதற்கான ஒரு கருத்தரங்கையும் நடத்தினேன். இந்தத் திட்டத்தைச் சொன்னார். அதைக் கட்டுரையாகவும் எழுதியிருக்கிறார். ஆகவே அதை வரவேற்கிறேன். அதே நேரத்திலே, அவர் சொன்ன சில அம்சங்கள் விடுபட்டிருக்கின்றன. என்னவென்று சொன்னால், அதிலே முதலாவதாக அவர் சொல்லியிருப்பது, accountability. அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார். பொறுப்பு உத்தரவாதம்; அது மிக முக்கியமானது. அது விடுபட்டிருக்கிறது.

இரண்டாவதாக, அவர் சொல்லியிருப்பது, freedom from corruption ஊழலற்ற நிர்வாகம்; அது ஒரு மாநிலத்திற்கு மிக முக்கியமான அம்சம். அதுவும் விடுபட்டிருக்கிறது. அதில் அடுத்ததாக அவர் சொல்லியிருப்பது, efficiency and transparency. ஆகவே இப்படி நல்ல அம்சங்கள் எல்லாம்



விடுபட்டிருக்கின்றன. அவற்றையும் சேர்த்திருந்தால், பொருத்தமாக இருக்கும் என்று என்னுடைய கருத்தாக நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆக, இப்படி நல்ல திட்டங்களையெல்லாம் சொல்லியிருக்கக்கூடிய இந்த அறிக்கையிலே, ஏழாவது பக்கத்திலே 10-வது பத்தியிலே ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. மக்களாட்சி முறையில், அதிகாரம் பரவலாக்கப்படும் என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால் 53-வது பக்கத்தில், 58-வது பத்தியில், இதற்கு நேர்மாறான— ஒரு நிர்வாகத் திறனை மேம்படுத்துவதாகக் கூறி, அதிலும் குறிப்பாக, வேதனையோடு சொல்கிறேன்; ஒரு பகுதியிலே பெரும்பான்மையான மக்கள் வாழக்கூடிய, ஒரு சாதிக்காக, பெரம்பலூர் மாவட்டம், அரியலூரைத் தலைநகராகக் கொண்டு ஒரு மாவட்டம் பிரிக்கப்பட்டது என்ற— ஓர் அறிவிப்பை முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது எவ்வளவு புண்படுத்தியிருக்கும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அதே நேரத்தில், இப்போது அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் என்று சொல்லக்கூடிய அந்தக் கருத்தின் அடிப்படையிலே, பிரிக்கப்பட்ட ஒரு மாவட்டத்தை.......... (குறுக்கீடு)

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் எந்த இடத்திலும் ஒரு சாதிக்காக ஒரு மாவட்டத்தை உருவாக்குவதாகச் சொல்லவில்லை. அவர்கள் சொன்னது, பொருளாதாரச் சூழ்நிலையின் காரணமாக..... (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எந்தக் காலகட்டத்திலும் சாதி என்ற சொல்லை அவர்கள் பயன்படுத்தவில்லை. சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகளை எடுத்துப் பார்த்தால்கூடத் தெரியும். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பெரும்பாலும் அதிகமாக இருக்கும் மாவட்டம் என்றுதான் சொன்னார்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே சொல்லப்பட்டிருக்கக்கூடிய வார்த்தை, வாசகம் என்பது பெரும்பான்மையாக வாழக்கூடிய ஓர் இனத்திற்காகப் பிரிக்கப்பட்டிருக்கிறது என்ற குறிப்பை எடுத்துப் பார்த்துக்கொள்ளலாம். பெரும்பான்மையாக வாழக்கூடிய மக்களைக் கொண்ட ஓர் இனத்திற்காகப் பிரிக்கப்பட்டது என்று சொல்கிறார். அப்படி என்று சொன்னால், அந்த இனத்திற்காகப் பிரிக்கப்பட்டதை உங்களுடைய கருத்தாக வைத்துக்கொண்டு இணைக்கப்படுகிறது என்று சொன்னால், அப்போது அந்த இணைப்பு என்பது, ஓர் இனத்திற்காக, அந்த சாதிக்காக நடைபெறக்கூடிய இணைப்பா என்பதை இங்கே பணிவோடு நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இது எவ்வளவு வேதனையாக இருக்கிறது? ஒரு சமூகத்தின் பெயரைச் சொல்லி, ஓர் இனத்தின் பெயரைச் சொல்லி, அதற்காக நான் இணைக்கிறேன் என்று சொன்னால், அந்த மக்கள் எல்லாம் இந்த அரசாங்கத்திற்கு, முதலமைச்சர் அவர்களுக்கு வேண்டாதவர்களா? எதிரிகளா? இல்லையே? ஆட்சிக்கு எவ்வளவு உறுதுணையாக இருந்தார்கள்; எண்ணிப் பார்க்க வேண்டாமா? (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** ஆண்டிப்பட்டி தேர்தலிலேகூட புரட்சித் தலைவி அவர்கள், மிகத் தெளிவாகச் சொன்னார்கள்; அவர்கள் எந்தச் சாதிக்கும், மதத்திற்கும் சம்பந்தப்பட்டவர்கள் அல்ல; அப்பாற்பட்டவர்கள்; அனைவருக்கும் வேண்டியவர்கள் என்றுதான் சொல்லியிருக்கிறார்களே தவிர, அவர் ஒரு சாதி மேலே எதுவும் சொன்னது கிடையாது. ஆனால் நீங்கள் சொல்கிற கருத்துக்கும், அதற்கும் வித்தியாசம் இருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைக் குற்றச்சாட்டுக்காகச் சொல்லவில்லை. எவ்வளவு புண்பட்டு இருக்கும்? சொன்ன வார்த்தை அப்படியே இருக்கிறது. இதைச் சொல்லிவிட்டு, அடுத்து பேசக்கூடிய நேரத்திலே, சாதி மத பேதமற்ற சமுதாயத்தை உருவாக்குவதாகச் சொல்கிறார்கள். இப்படியும் சொல்லி, அப்படியும் சொன்னால்— அந்தச் சமுதாயத்திற்குப் பெரும்பான்மையான மக்கள்தொகை என்று சொல்கிறார்கள்; உண்மை.— இந்த நாட்டிலே மூன்றில் ஒரு பகுதி மக்களாக வாழக்கூடிய அந்த இனத்திற்கு அந்தச் சாதிக்கு, இது எதிரான நடவடிக்கையாக இருக்காதா என்பதைத்தான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இன்னும் ஆழமாக நான் போக விரும்பவில்லை. ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலையிலே, இந்த மக்கள் எப்போதும் விசுவாசமாக இருக்கக்கூடியவர்கள். அதிலே எதிரான நடவடிக்கைகளில் நிச்சயமாக ஈடுபட வேண்டாம் என்ற அந்தக் கருத்தை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.



முற்பகல் 10-25

பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழ்நாடு முழுவதும் வறட்சி நிலவுகிறது. ஒரு பக்கம் வெள்ளத்தால் பாதிப்பும், இன்னொரு பக்கம் கடுமையான வறட்சியினால் பாதிப்பும் ஏற்பட்டிருக்கிறது. இந்த நேரத்திலே சென்னைக்கு புதிய வீராணம் திட்டம் கொண்டுவருவதாகச் சொல்லப்படுகிறது. இந்தப் புதிய வீராணம் திட்டம் வல்லுநர் குழுவாலே கைவிடப்பட்டது. கடந்த கால அரசும் கொண்டுவந்து கைவிட்டது. ஆகவே அதைவிட சென்னை குடிநீருக்கு கிருஷ்ணாவிலிருந்து வரக்கூடிய அந்த நீரே போதுமானதாக இருக்கும். அதை விரைவுபடுத்தினால் போதும். இந்த வீராணம் திட்டத்தை அந்தப் பகுதியிலுள்ள மக்கள் எல்லாம் எதிர்க்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட நிலையிலே வீராணம் திட்டத்தைக் கைவிட வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல கிராமப்புற மாணவர்களுக்கு 25 சதவிகித இட ஒதுக்கீடு என்பது சிறப்பான அம்சம்; வரவேற்கிறோம்; உங்களையெல்லாம் பாராட்டினோம். ஆனால் வரவேற்று பாராட்டக்கூடிய அதேநேரத்திலே, மறைமுகமாக இன்று வழக்கு தொடரப்பட்டு, அது நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே உண்மையிலேயே இந்த அரசுக்கு அக்கறை இருக்குமென்று சொன்னால், அதிலே மீண்டும் அதிகக் கவனம் செலுத்தி, அந்த 25 சதவிகித இட ஒதுக்கீடு வருவதற்கு . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு தவறான கருத்தைத் தருகிறார். ஏதோ இந்த அரசு 25 சதவிகித இட ஒதுக்கீட்டைச் செயல்படுத்தக்கூடாது என்பதற்காக மறைமுகமாக அந்த வழக்கைத் தொடர்ந்ததாக ஒரு பொருள்படப் பேசுகிறார். இந்த அரசுக்கும் அதற்கும் சம்பந்தம் கிடையாது. ஏதோ தனிப்பட்டவர்கள் தொடர்ந்து இருக்கிறார்கள். (குறுக்கீடு) நீங்கள் சொல்கிற கருத்து, அப்படிச் சொல்கிறீர்கள்; மறைமுகமாகக் கொண்டுவந்து செயல்படுத்தவில்லை என்று சொல்கிறீர்கள்; (குறுக்கீடு) அரசுதான் செய்யும்; பின்பு வேறு யார் செய்வது என்று அர்த்தம்.

**திரு. ஜி.கே. மணி:** நான் அரசாங்கத்தைக் குற்றம் சொல்லவில்லை. அரசு கொண்டு வந்ததை வரவேற்கிறோம்; பாராட்டுகிறோம் என்று சொன்னேன். அதை யாரோ சிலர் மறைமுகமாகச் செய்து இருக்கிறார்கள். ஆகவே அதற்கு உள்நோக்கம் கற்பிக்காமல் மீண்டும் அதைப் பெற்றுத்தருவதற்கு அரசு முயற்சிக்க வேண்டுமென்றுதான் நான் இங்கு கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல. . . .

[2002 மார்ச் 15

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து உச்ச நீதிமன்றத்திலே மேல்முறையீடு செய்யப்பட்டு இருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** அடுத்து இன்னுமொரு மிக முக்கியமான பிரச்சினை. கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே கடுமையாக விவாதிக்கப்பட்டது சிமெண்ட் விலை உயர்வு பற்றி சிமெண்ட் விலை உயர்வைக் குறைப்பீர்கள் என்று நிச்சயமாக எதிர்பார்த்தோம். இன்று கடுமையாக உயர்ந்து இருக்கிறது. அதைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல இன்று இந்த ஆளுநர் உரையிலே தொழில் வளர்ச்சி பெறுவதற்காக பல்வேறு அம்சங்களைச் சொல்லியிருக்கிறீர்கள். இருந்தாலும்கூட, மூடிய ஆலைகளைத் திறப்பதைப்பற்றிச் சொல்லவில்லை. பல்வேறு ஆலைகள், பஞ்சாலைகள், நெசவாலைகள், சர்க்கரை ஆலைகள் எல்லாம் மூடியும், இன்னும் மூடக்கூடிய நிலையிலும் இருந்துகொண்டிருக்கின்றன. இந்த மூடிய ஆலைகளைத் திறப்பதனால் நிச்சயமாக தொழில் வளர்ச்சி பெறும். அதற்கும் நீங்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கரும்பு விவசாயிகள் பிரச்சினை. கரும்பு விவசாயிகளுக்கு டன்னுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்று சொல்லி, கடந்த காலங்களில் நாம் எல்லோரும் சேர்ந்துதான் போராடினோம்; இன்னும் அது நிலுவையிலே இருக்கிறது. அதையும் நிறைவேற்றித்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, போக்குவரத்துக் கழக ஊழியர்கள் பிரச்சினை. தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறோம். போக்குவரத்துக் கழக ஊழியர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள்; கடந்த காலங்களில் நாம் எல்லோரும் சேர்ந்து அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவோம் என்று சொன்னோம். அவ்வாறு சொல்லிவிட்டு, இப்போது செய்திருப்பது நேர்மாறாக இருக்கிறது. மீண்டும் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக்கூடிய அதேநேரத்தில், இன்று போக்குவரத்துக் கழகங்கள் படிப்படியாகத் தனியார்மயமாக்கப்படும் என்ற வார்த்தைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. தனியார்மயம் என்பது பொது மக்களின் சேவைக்காக நிச்சயமாகப் பயன்படாது. ஆகவே இந்த தனியார்மயக் கொள்கையில், அது அ.தி.மு.க.வாக இருந்தாலும் மற்ற கட்சியினராக இருந்தாலும் அது ஏற்புடைய கருத்து அல்ல. தனியார்மயம் நிச்சயமாக



2002 மார்ச் 15] [திரு. ஜி.கே. மணி]

வரக்கூடாது. அரசுக்கு நட்டம் என்று சொன்னாலும்கூட—, இப்போது கர்நாடகத்திலே போக்குவரத்துக் கழகத்தில் மிகப் பெரிய நட்டம். ஆனால் அந்த நட்டத்தை எல்லாம் சமாளித்துக்கொண்டு, இப்போது இலாபகரமாக இயக்குவதற்கு அவர்கள் முன்வந்திருக்கிறார்கள். ஆகவே அவர்களைப்போல— நம்முடைய தமிழக அரசு அவர்களைவிட சாமர்த்தியமான அரசு; எந்தவகையிலும் தமிழர்கள் அவர்களைவிட குறைவானவர்கள் அல்ல;— அவற்றையெல்லாம் மனதிலே கொண்டு படிப்படியாகத் தனியாருக்கு நிச்சயமாகக் கொடுக்கக்கூடாது என்று இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பலமுறை புரட்சித் தலைவி அவர்கள் இங்கு தெளிவாக விளக்கி இருக்கிறார்கள். அதற்குப்பின்பு ஒருசில நேரங்களில் நானும் மற்ற அமைச்சர்களும் விளக்கி இருக்கிறோம். பொதுத் துறை அறவே இல்லை; தனியார் துறை மட்டுந்தான் இயங்கும் என்ற தோற்றத்தை ஏற்படுத்துவதுபோல தொடர்ந்து இங்கு பேசிக்கொண்டிருக்கிறார்கள். பொதுத் துறையும் இயங்கும்; தனியார் துறையும் இயங்கும். பொதுத் துறையும் தனியார் துறையும் இயங்கும்பொழுதுதான் ஓர் ஆரோக்கியமான போட்டி இங்கு ஏற்படும்; அதன்மூலமாக பொதுமக்களுக்குக் கூடுதல் வசதிகள் எல்லாம் கிடைக்கும் என்ற காரணத்தால், இரண்டு துறைகளும் இயங்கும் என்பதை பல முறை தெளிவுபடுத்தியிருக்கிறோம். இருந்தாலும், பொதுத் துறை அறவே இல்லாததுபோல ஒரு தோற்றத்தை ஏற்படுத்துகின்ற முயற்சி வேண்டாம் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-30*

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறமாதிரி, கொஞ்சம் தனியார்மயம் என்று உள்ளே வந்துவிட்டால் பிறகு படிப்படியாக காலப்போக்கில் அவர்களுக்குப் போய்விடும். அதற்காகத்தான் சொல்கிறேனேதவிர வேறு நோக்கத்தோடு அல்ல.

அடுத்து, ஜெயங்கொண்டம் பிரச்சினை; இது நீண்ட நாளைய பிரச்சினை, நேற்றுகூட இங்கு பேசப்பட்டது. ஒரு ஏக்கருக்கு 22,000 ரூபாய் என்று சொன்னால், நீங்கள் நினைத்துப் பாருங்கள், எவ்வளவு வேதனைப்படுவார்கள்? ஆண்டாண்டு காலமாக, இரண்டு, மூன்று தலைமுறையாக அந்த நிலத்தைக் கட்டிக் காத்தவர்கள். 'கோழி முட்டையை அடை காப்பதுபோல' பூமிக்கு அடியிலே இருக்கக்கூடிய அந்தக் கருப்புத்

தங்கம் என்று சொல்லக்கூடிய நிலக்கரியைக் காத்து வைத்தவர்கள். இன்று 22,000 ரூபாய் கொடுத்து வெளியேற்றினால் நிச்சயமாக அவர்களுடைய வாழ்க்கை கேள்விக்குரியதாகிவிடும். அவர்களுக்கு நிறைய பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டும்; வீடு கட்டிக் கொடுக்கப்பட வேண்டும், குடிநீர் கொடுக்கப்பட வேண்டும், பள்ளிக்கூடம், சாலை வசதி மற்ற எல்லா வசதிகளையும் செய்து கொடுப்பதோடு அங்கே இருக்கக்கூடிய—மார்க்கெட் வேல்யூ என்று சொல்கிறார்களே, அங்கே ஏக்கர் ரூ.5 இலட்சத்திற்கு எல்லாம் கூடப் போய் இருக்கிறது. ஆகவே இதைத் தனியாருக்குக் கொடுக்கிறோம்; இலாபகரமான தொழில். அந்த வகையிலே குறைந்தபட்சம் ஏக்கருக்கு ரூ.5 இலட்சம் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்சினை, தமிழர்களுடைய கலாச்சாரம், பண்பாடு, பெண்களுடைய தனித் தன்மை, தமிழகத்தினுடைய நீதியை நிலைநாட்டக்கூடிய மிகப் பெரிய சின்னம் கண்ணகி சிலை. அந்த கண்ணகி சிலை பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினை. நான் ஏதோ தவறாகச் சொல்கிறேன் என்று சொல்ல வேண்டாம். அந்தச் சிலை உடைபட்டு இருக்கிறது என்ற தகவல் எங்களுக்கு வந்ததால் சொல்கிறோம். நிச்சயமாக அப்படி கணணகி சிலை உடைபட்டிருக்கிறது என்று சொன்னால், அது எவ்வளவு பெரிய சாபக்கேடான செய்தி என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். அதற்குள் நாம் போகக்கூடாது. இன்னொன்றுகூட . . .

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் கூறுவதில் உண்மை இல்லை. அது பாதுகாப்பாகத்தான் இருக்கிறது. உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பையொட்டி அது உங்களுக்கெல்லாம் மகிழ்ச்சி தரக்கூடிய முறையில் நிறுவப்படும்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவரவர்களே, அந்த கண்ணகி சிலை குறித்து சொல்கிற மாதிரியே அதே நேரத்திலே புத்தர் சிலை. பத்திரிகையில் ஒருநாள் மட்டும் செய்தி வந்தது. பின்னர் பத்திரிகையில் அந்தச் செய்தியே இல்லாமல் போய்விட்டது. புத்தர் சிலை உடைபட்டது . . .

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** புத்தர் சிலை உடைபடவும் இல்லை, ஒன்றும் கிடையாது. புத்தர் சிலை படத்திலே காண்பித்தது—Headless Buddha என்றே அந்த Statue-க்குப் பெயர். அந்தச் சிலையானது தலையில்லா புத்தர் சிலையே தவிர, அந்தச் சிலை அங்கேதான் இருக்கிறது.





அந்தப் படத்திற்கும்— ஏதோ ஒரு சிறிய சிலையானது தலையோடு இருந்தது. . . . (குறுக்கீடு) ஆமாம். அந்தச் சிலை பெயரே அதுதான். (குறுக்கீடு) No, அது தவறு, தவறாகச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு தவறான தகவலை பத்திரிகைகள் எல்லாம் வெளியிட்டிருந்தன. காண்பிக்கப்பட்ட அந்தச் சிலையில் ஏதோ புத்தருடைய தலையை வெட்டி எடுத்துச் சென்றதுபோலவும், அது காணாமல் போனது போலவும் செய்தி வந்தது தவறு. அங்கு இருக்கும் சிலை, இப்போது எப்படி தலையில்லாமல் இருக்கிறதோ அதுதான் உண்மையான சிலை. அப்படி இருந்துகொண்டு இருந்தது. அதற்கும் மேல் ஒரு சின்ன சிலை, தலைப்பகுதியானது வேறு சிலையிலிருந்து எடுக்கப்பட்டு அதில் வைக்கப்பட்டிருந்தது. அதுதான் காணாமல் போனதேயொழிய ஏதோ மியூசியத்தில் வந்து அந்தச் சிலையை உடைத்து தலையை எடுத்ததுபோன்று எல்லாப் பத்திரிகைகளிலும் தவறான செய்தி வந்தது. அதற்கு விளக்கமும் நான் பத்திரிகையாளர்களை அழைத்துத் தந்தேன். இப்போது காணாமல் போன சிலை வந்துவிட்டது; இப்போது கிடைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. பரிதி இளம்வழுதி:** குப்பையில் இருந்து சிலை கண்டுபிடிக்கப்பட்டதாகச் சொல்கிறார்களே!

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** குப்பையில் எவனோ போட்டு வைத்திருக்கிறான். என்ன செய்வது? அதைக் கொண்டுவந்து இப்போது வைத்திருக்கிறோம். சிலையைக் கொண்டுவந்து சேர்த்தாகிவிட்டது. சிலை பத்திரமாக இருக்கிறது. காணாமல்போன ஒரு சிலையைக் கண்டுபிடித்தது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒன்றுதான். இதுவரையிலே யாரும் இந்தமாதிரி செய்தது கிடையாது. காணாமல் போனது காணாமல் போனதாகவே இருந்தது. ஆனால் அந்தச் சிலையைக் கொண்டுவந்து மீண்டும் காண்பித்தது இந்த அரசுதான். (சிரிப்பு)

***திரு. துரைமுருகன்:** காணாமல் போன புத்தர் சிலையைக் கண்டுபிடித்ததற்குப் பாராட்டு. ஆனால் இதேபோல காணாமல் போன நடராஜருடைய சிலையை மறுபடியும் கண்டுபிடித்துக் கொண்டு வந்து வைத்ததும் திராவிட முன்னேற்றக் கழக அரசு. அதையும் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மிக முக்கியமான பிரச்சினை. இங்கே இருக்கக்கூடிய படித்த இளைஞர்களுக்கு, பெண்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கித் தருவதாக ஆளுநர்

உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. இன்று, மகளிர் 16 இலட்சம் பேர், அவர்கள் உட்பட 50 இலட்சம் பேர் படித்துவிட்டு வேலைவாய்ப்பில்லாமல் பதிவுசெய்துகொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையிலே தமிழக அரசுப் பணிகளில் நியமனம் இல்லை என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. இப்படி உத்தரவிட்டுக் கொண்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை எப்படி உருவாக்கித் தர முடியும்? ஆகவே இது மிகப் பெரிய பாதிப்பு. பழைய காலத்திலே சொன்னமாதிரி, பெற்றோர்கள் என்ன தொழில் செய்தார்களோ, அந்தத் தொழிலுக்குத்தான் படித்த அந்த இளைஞர்கள் எல்லாம் போக வேண்டும். ஆகவே அப்படிப்பட்ட நிலையை நிச்சயமாக உருவாக்கி விடக்கூடாது; அந்த உத்தரவினைத் திரும்பப்பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

அடுத்து, 5-வது வகுப்பிலிருந்து 9 ஆம் வகுப்பு வரைக்கும் பொதுத் தேர்வு. அரசு இப்போது தற்காலிகமாக இதை நிறுத்திவைத்திருக்கிறது. ஆகவே நிறுத்திவைத்த உத்தரவை நாங்கள் மனதார வரவேற்கிறோம். ஆண்டுதோறும் அரசு புள்ளிவிவரம் சொல்கிறது. 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் பரவலாக ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்ச்சி விகிதம் என்பது 32 சதவிகிதம், 42 சதவிகிதம், 48 சதவிகிதம் என்று இப்படித்தான் சொல்கிறது. ஆக இப்படி 10 ஆம் வகுப்பிலே தேர்வு விகிதாச்சாரம் இவ்வளவு என்று சொன்னால், 5 ஆம் வகுப்பு மாணவர்கள், 6 ஆம் வகுப்பு மாணவர்கள் எப்படி தேர்ச்சி பெறுவார்கள்? பிறகு இதற்கிடையிலே drop-outs இடைவிலகலைப்பற்றி அரசாங்கம் புள்ளிவிவரம் சொல்கிறது. ஏராளமான குழந்தைகள் ஆண்டுதோறும் இடைவிலகல் செய்கின்றனர். இவற்றையெல்லாம் மனதிலே வைத்துக்கொள்ளாமல், இந்தத் தேர்வு முறையைக் கொண்டு வருவீர்கள் என்று சொன்னால், கிராமப்புற மாணவர்கள், சாதாரண ஏழை-எளிய, தாழ்த்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட குடும்பத்தைச் சார்ந்த மாணவர்கள் எல்லாம் படிக்கவே போகமாட்டார்கள். ஒரு தடவை fail ஆகிவிட்டால் அதோடு நின்றுவிடுவார்கள். மீண்டும் அப்பா, அம்மா தொழிலைத்தான் செய்யவேண்டும். ஆகவே இப்படிப்பட்ட நிலை இருக்கின்ற காரணத்தாலே, அந்தப் பொதுத் தேர்வு முறையைத் தற்காலிகம் என்று உத்தரவிட்டிருப்பதை மீண்டும் நீங்கள் நிரந்தரமாக நிறுத்திவைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

***(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)***



அதுமாத்திரமல்ல. காவல் துறையில் நீண்ட நாளாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். காவல் துறைப் பணி என்பதற்கு இரவு, பகல் என்ற நேரம் காலமே கிடையாது. அவர்களுக்கு மற்ற துறையினரைக் காட்டிலும் மிகக் குறைவான சம்பளம். பணி நேரத்தில் கால வரம்பு கிடையாது. ஆகவே அவற்றையெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு காவல் துறையினருக்குத் தற்போதிருக்கக்கூடிய சம்பளத்தைவிட இரட்டிப்பு மடங்காக, கூடுதலாக்க வேண்டும். அவர்களுக்குப் பணி நேரம் என்பது 8 மணி நேரமாக நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று இங்கே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல இன்னொன்று. மிக முக்கியமான பிரச்சினை. இந்தக் காவல் துறையினருக்கு ஆதரவாகப் பேசுகின்ற அதேநேரத்தில், வேறொரு கருத்தையும் கூற விரும்புகிறேன். இப்போது காவல் துறையினர் அரசியல் கட்சிகளை மற்றும் யாரை வேண்டுமானாலும் பழிவாங்கும் நோக்கத்தோடு செயல்படுகிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். இங்கேகூட சென்னையிலே, எங்களுடைய செங்கற்பட்டு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஏ.கே. மூர்த்தி இருக்கிறார். தவறாக, எந்த ஒரு வழக்கிலும் சம்பந்தப்படாதவர் மீது அவதூறான வழக்கு சித்தரிக்கப்பட்டு, பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. அந்த வழக்கிலே எங்கள் கட்சியைச் சேர்ந்த இளைஞர்கள் எல்லாம் மாட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி அவர் பேசிக்கொண்டிருக்கிறார். காவல் துறையிலே, பெயரைச் சொல்ல வேண்டுமென்றால்கூட சொல்ல முடியும். முதலமைச்சர் பெயரைச் சொல்கிறார், அமைச்சர் பெயரைச் சொல்கிறார் ஓர் ஆய்வாளர். அவர்கள் பெயரைச் சொல்லிக்கொண்டு நேரே ஜீப்பிலே வந்து எம்.பி.ஆபீஸுக்கு முன்னால் நிற்கிறார். எம்.பி.-யைப் பார்க்க வேண்டும் என்று சொல்கிறார். எம்.பி. உடனே வெளியிலே வருகிறார். 'ஏய்யா, நீ என்ன பெரிய கொம்பனா, உன்னைப் பிடித்து உள்ளே போட்டுவிடுவேன் ஜாக்கிரதையாக இரு' என்று ஒருமையிலே, தரக்குறைவாக, ஒரு எம்.பி. எதிலேயும் சம்பந்தப்படவில்லை, 'உன்னைப் பிடித்து உள்ளே போட்டுவிடுவேன், ஜாக்கிரதையாக இரு, முட்டிக்கு முட்டி தட்டுவேன், எனக்கு முதலமைச்சரே சொல்லியிருக்கிறார்கள், அமைச்சர் சொல்லியிருக்கிறார்' என்று சொல்லி இப்படி காவல் துறையினர் ஒரு எம்.பி.-யை மிரட்டுகிறார்கள் என்று சொன்னால், சாதாரண மக்களுடைய நிலை என்ன? இப்படி காவல் துறையினர் இன்று கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறார்கள். இது மாதிரி பரவலாக நடந்துகொண்டிருக்கிறது.

எனக்குக்கூட ஒரு சம்பவம் நினைவிற்கு வருகிறது. நான் தொழிலாளர்களுக்காக 10 ஆண்டுகளுக்கு முன்பு போராடிய ஒரு போராட்டம். அந்தப் போராட்ட வழக்கு இருக்கிறது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ் பிரச்சினை. அந்தப் போராட்ட வழக்கை இப்போது கையிலே எடுத்துக்கொண்டு என்னுடைய பாஸ்போர்ட்டை கேன்சல் செய்யவேண்டுமென்று உத்தரவு. இது சரியானதாக இருக்காது. இவற்றையெல்லாம் அரசுப் பொறுப்பிலே இருக்கக்கூடியவர்கள் கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

சட்டக் கல்லூரி மாணவர்கள் பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினை. இதை கௌரவப் பிரச்சினையாக எடுத்துக்கொள்ளக்கூடாது. முதலமைச்சர் அவர்களும், சட்டத் துறை அமைச்சர் அவர்களும் அந்த மாணவர்களை அழைத்துப் பேசவேண்டும். நான்கூட நேற்று போய்ப் பார்த்துவிட்டு வந்தேன். 22 பேர் மருத்துவமனையிலே இருக்கிறார்கள். 4 பேர் படுத்துக் கிடக்கிறார்கள். பார்த்துவிட்டு வந்தேன். ஆகவே அவற்றையெல்லாம் நீங்கள் கௌரவப் பிரச்சினையாக எடுத்துக்கொள்ளாமல், அவர்களை அழைத்துப் பேசி, அதற்கு ஒரு விடிவு காலத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாதிக்கப்பட்ட இடைநிலை ஆசிரியர்கள் 25 ஆயிரம் பேர் என்று கணக்கெடுத்தோம். இப்போது அதில் என்ன பிரச்சினை என்று சொன்னால் 45 சதவிகிதத்திற்குக் குறைவான மதிப்பெண் பெற்றவர்கள் சேர்க்கப்படுவதில்லை. இது ஒன்று. அடுத்தது, இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை என்று சொல்லப்படுகிறது. அதுமாத்திரமல்லாமல், குறைவான மதிப்பெண்ணைப் பெற்றவர்கள், அவர்களுடைய சொந்தக்காரர்களே குறைவான மதிப்பெண்ணைப் பெற்றவர்கள் பயிற்சியிலே சேர்ந்திருக்கிறார்கள்; ஆனால் அதிக மதிப்பெண் பெற்ற அவர்களுடைய உறவினர், அதே ஊரைச் சேர்ந்தவர்கள் அங்கே சேர்வதற்கு கவுன்சிலிங்கிலே இடம் கிடைக்கவில்லை. இப்படிப்பட்ட குறைகள் எல்லாம் இருக்கின்ற காரணத்தினாலே, அவற்றையும் நிவர்த்தி செய்து எல்லோருக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கும்மிடிப்பூண்டி பக்கத்திலே மிகப் பெரிய ஒரு பிரச்சினை. இன்றைக்கு 3 பேர் இறந்திருக்கிறார்கள். மர்ம நோய் என்று சொல்லி, இன்னும் 20, 25 பேர்களுக்கு மேற்பட்டவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கு உடனடியாக அரசு சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)*





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** முடித்துவிடுகிறேன். திண்டுக்கல்லிலே நேற்று மிகப்பெரிய தீ விபத்து ஏற்பட்டு, 3, 4 கோடி ரூபாய்க்குச் சேதம் ஏற்பட்டிருக்கிறது. அதிலும் அரசு தனிக் கவனம் செலுத்தவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல என்னுடைய தொகுதிப் பிரச்சினை, முக்கியமான பிரச்சினை. என்னுடைய தொகுதி மிக மிகப் பின்தங்கிய தொகுதி. வறட்சியான மாவட்டத்திலே இருக்கக்கூடிய பகுதி. குடிநீருக்கு ரொம்பக் கஷ்டம். இதிலே சிறப்புக் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக்கூடிய அதேநேரத்திலே, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள், அதை விரைவிலே நிறைவேற்ற வேண்டும். போர்க்கால அடிப்படையிலே குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-40*

என்னுடைய தொகுதியிலே பாப்பாரப்பட்டியை அடுத்து, சொரக்காப்பட்டி என்ற ஊர் இருக்கிறது. காட்டு யானை கிராமத்திற்கு வந்து ஊரில் இருந்த கோவிந்தன் என்ற ஒருவரை மிதித்து சாகடித்துச் சென்றுவிட்டது. இதைப் பற்றி எடுத்துச்சொல்லியும்கூட, நிவாரண நிதியோ, அதிகாரிகள் பார்வையிடவோ வாய்ப்பில்லாமல் போய்விட்டது. இதில் இறந்தவரின் குடும்பத்திற்கு உதவித்தொகை வழங்கவேண்டும். அதேநேரத்திலே இன்று வரையிலே காட்டு யானையின் அட்டகாசம் அதிகமாக இருக்கிறது. அங்கு பாதுகாப்பில்லாத நிலையிருக்கிறது. அதற்கு ஒரு பாதுகாப்பான நிலையை எடுத்து அரசு அதிகாரிகள் தலையிடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கக்கூடியவர்கள் நிலைமை அதிக மோசமாகப் போய்க்கொண்டிருக்கிறது. என்னுடைய தொகுதியில் ஜங்கமயனூர் என்ற ஊர். பத்திரிகையிலே மூன்று நாட்களுக்கு முன்பு செய்தி வந்திருக்கிறது. உடல் ஊனமுற்ற ஒருவர் சந்திரன் என்பவர், தன்னுடைய குடும்பத்தோடு 5 பேர் விஷம் குடித்து தற்கொலை செய்துகொண்டு இருக்கிறார்கள். ஆக இப்படிப்பட்ட நிகழ்வுகள் எல்லாம் நிச்சயமாக வரக்கூடாது. அந்தக் குடும்பத்திற்கு உதவித்தொகை, நிவாரண நிதி வழங்க வேண்டுமென்று இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சருக்கு முக்கியமான ஒரு வேண்டுகோள். என்னுடைய தொகுதியில் ஏரிகள் இருக்கின்றன. பாப்பாரப்பட்டியைச் சுற்றி ஏரிகள் இருக்கின்றன. வரத்து வாய்க்கால்களெல்லாம் அடைபட்டுவிட்டன. மழைக்காலங்களில் உபரி நீர் வேறு வழியாகச் சென்று வீணாகிறது. அந்த ஏரிகளுக்கு பாசனத்திற்கு என்று இல்லையென்று சொன்னாலும்கூட, நீர் நிரம்புவதற்கு வாய்ப்பாக பஞ்சப்பள்ளி வாய்க்காலை இணைக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்து திட்ட மதிப்பீடு செய்து, டெண்டர் விடும் நிலையில் இருக்கிறது. டெண்டர் விடவேண்டும். வேறு ஒன்றுமில்லை. ஆகவே அதற்கு இந்த ஆண்டே நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதைப்போல மத்தளப்பள்ளம் பாசன அணைத் திட்டம் நிலுவையில் இருக்கிறது. அதையும் நிறைவேற்றித்தர வேண்டும். ஆசாரிகிணத்துப்பள்ளம் என்று சிறிய ஏரி. அந்த ஏரியைக் கட்டுவதற்கு டெண்டர் விடப்பட்டு, ஒருவர் தடை வாங்கினார் என்று சொல்லி, அப்படியே நிற்கிறது. Compulsory acquisition கூடச் செய்யலாம், வாய்ப்பு இருக்கிறது. அதற்கும் நீங்கள் வாய்ப்பளிக்க வேண்டுமென்று சொல்லி, அந்த ஏரியை மீண்டும் கட்டுவதற்கு நல்ல நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பழங்கள், பூக்கள் அதிகமாகப் பயிரிடப்படுகின்றன. அதை விற்பனை செய்வதற்கு, ஏற்றுமதி செய்வதற்கு, அவற்றைப் பாதுகாப்பதற்கு எல்லா நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முக்கியமான பிரச்சினை. நேற்றையதினம்கூட விவாதம் செய்தார்கள். தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர், புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளுடைய பிரச்சினை. தனிக் கவனம் செலுத்தி அவர்களுடைய கூட்டுறவுக் கடன்கள் முதலான அந்தக் கடன்களையெல்லாம் தள்ளுபடி செய்ய வேண்டும். நிலவரியைத் தள்ளுபடி செய்ய வேண்டும். அதன் இழப்பீட்டுத் தொகை, நிவாரணத் தொகை 2500 ரூபாய் என்பது மத்திய அரசு நிர்ணயித்த தொகை. மாநில அரசு அதிலே சிறப்புக் கவனம் செலுத்தி, அந்தத் தொகையைக் கூடுதலாக்குவதற்கு எல்லா வகையிலும் முயற்சிகளை மேற்கொள்ள





வேண்டும். விதைநெல் கூட அவர்களுக்கு வழங்குவது கிடையாது. விதை நெல், இடுபொருட்கள் அனைத்தும் இலவசமாக அவர்களுக்கு வழங்குவதற்கு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று முக்கியமான பிரச்சினை. வேலைவாய்ப்பில்லாமல் போய்க்கொண்டிருக்கிறது. அரசுத் துறைகளில் வேலைவாய்ப்பு இல்லை. மத்திய அரசுப் பணிகளில் 3%, மாநில அரசுப் பணிகளில் 1% என்று தொடர்ந்து சொல்கிறோம். இந்த 4% போக, தற்போது இருக்கக்கூடிய வேலைவாய்ப்பு, தனியார் நிறுவனங்களிலேதான். இந்தத் தனியார் நிறுவனங்களிலே தாழ்த்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் வேலைக்குப் போவது என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. ஆகவே. இவற்றையெல்லாம் கவனத்திலே கொண்டு தனியார் நிறுவனங்களிலேயும் இடஒதுக்கீடு வந்தால்தான் இந்த நாட்டில் இருக்கக்கூடிய அனைத்துத் தரப்பு மக்களுக்கும் வாய்ப்பாக இருக்கும். ஆகவே அதிலே அக்கறை கொண்டு, தனியார் துறையிலும் இடஒதுக்கீட்டைக் கொண்டுவர வேண்டுமென்று நான் மீண்டும் இங்கே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சுய வேலைவாய்ப்பை ஊக்குவிப்பதாகச் சொல்கிறீர்கள். நாங்கள் வரவேற்கிறோம். இப்படி சுயவேலைவாய்ப்பை ஊக்குவிக்கிற நேரத்திலே, கடன் கொடுக்கக்கூடிய நேரத்திலே, உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களுக்கு மார்க்கெட்டிங் செய்வது மிகப் பெரிய கேள்விக்குறியாக இருக்கிறது. ஆகவே அந்தப் பொருட்களை தமிழகத்திலே விற்பனை செய்வதற்கும், வேறு மாநிலங்களுக்கு, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். இப்போது மகளிர் சுய உதவிக் குழுக்கள் அதிலே அதிகமாக ஈடுபட்டிருக்கிறார்கள். அதிலேயும் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களுடைய கபிலர்மலை தொகுதியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினரின் நீண்ட நாளைய கோரிக்கை. நாமக்கல் மாவட்டத்தையும், கரூர் மாவட்டத்தையும் இணைக்கக்கூடிய காவிரி ஆற்றின் குறுக்கே மிகப் பெரிய பாலம் அமைப்பது பற்றியதாகும். அந்தப் பாலத்தை அமைத்துத் தருவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பத்தூர் தொகுதியில் எங்கள் நாட்ராம்பள்ளி சட்டமன்ற உறுப்பினர், திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர், அரசு மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனையாக உயர்த்த வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதற்கு எல்லாத் தகுதிகளும் இருக்கின்றன. அதையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் இங்கே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு இன்னொரு பிரச்சினை. ஆசிரியர்கள் பிரச்சினை மாதிரியே, சத்துணவுப் பணியாளர்கள் பிரச்சினை. இந்த சத்துணவுப் பணியாளர்களில் பட்டதாரிகளும் ஆசிரியர் பட்டதாரிகளும் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் கவனத்தில்கொண்டு அவர்கள் கல்வித் தகுதிக்கு ஏற்ப வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும். அவர்கள் சம்பளம் மிகக் குறைவாக இருக்கிறது. அதிலேயும் நீங்கள் அதிகக் கவனம் செலுத்தி அவர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-45*

இறுதியாக நம்முடைய அரசுக்கு கோரிக்கையாக நான் வைக்க விரும்புவது, மலிவு விலை மதுவை நிச்சயமாக இரத்துச் செய்ய வேண்டும். பால் விலை உயர்வு, மண்ணெண்ணெய் விலை உயர்வு, ரேஷன் அரிசி விலை உயர்வு, இவற்றையெல்லாம் நீங்கள் நிச்சயமாக செயல்படுத்தக்கூடாது. மீண்டும் பழைய நிலைக்கே வர வேண்டும். மின் கட்டண உயர்வு, பஸ் கட்டண உயர்வு என்பது மிகப் பெரிய சுமை. இது ஒவ்வொரு தனி மனிதனையும், ஒவ்வொரு குடும்பத்தையும் பாதித்துக்கொண்டிருக்கிறது. எல்லோரும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பாதிக்கப்படாதவர்களே கிடையாது. ஆகவே இவற்றையெல்லாம் மனதிலே கொண்டு அந்தக் கட்டண உயர்வை, விலை உயர்வை முழுமையாக நீங்கள் இரத்து செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி அடிக்காமலேயே மணி முடித்துவிடுவார் என்று எதிர்பார்த்தேன். (சிரிப்பு)

**திரு. ஜி.கே. மணி:** இன்னும் நிறைய விஷயங்கள் பேசுவதற்கு இருந்தாலும்கூட, நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னமாதிரி, இந்த அளவிலே முடித்துக்கொண்டு இந்த அரசு ஆக்கபூர்வமாக எடுக்கக்கூடிய நல்ல காரியங்களுக்கு ஆதரவு



கொடுக்கக்கூடிய அதேநேரத்திலே, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சொன்ன ஆலோசனைகளை ஏற்று இன்னும் நல்ல திட்டங்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள். (குறுக்கீடு) அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே எடுத்தியம்பியதைப்போல மலிவு விலை மது என்பதை நாம் தற்போது அறிமுகப்படுத்தவில்லை. ஏற்கெனவே 100 மி.லி. 28 ரூபாய் என்ற விலையிலே விற்றுக்கொண்டு இருந்தது. அந்த விலை 28 ரூபாய் 15 ரூபாயாக தற்போது குறைக்கப்பட்டிருக்கிறது. மலிவு விலை மது என்பதை நீங்கள் சொல்வதுபோல் புதிதாக ஒன்றும் அறிமுகப்படுத்தவில்லை. ஏற்கெனவே இருந்த மதுவினுடைய விலையைத்தான் குறைத்திருக்கிறோம். ஏற்கெனவே விற்ற கடைகளில்தான் அது விற்கப்படுகிறது.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நான்காவது நாளாகத் தொடர்ந்து ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது இங்கே விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இறுதியாக இன்றையதினம் விவாதம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரைக்குப் பிறகு நிறைவு பெற இருக்கிறது. ஆளுநர் உரையின்மீது தமிழ் மாநில காங்கிரசின் சார்பில் கருத்துகளைத் தொகுத்துச் சொல்ல நான் விழைகிறேன்.

மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றியுள்ள முதலாவது உரை என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும் இதில் அவருடைய அனுபவ முத்திரையும், ஆழ்ந்த அரசியல் சிந்தனையும் பொதிந்து கிடப்பதைக் காண முடிகிறது. தமிழக அமைச்சரவை தயாரித்து அளித்த உரையாக இருந்தாலும்கூட தனிப்பட்ட முறையில் அவருக்கும் உடன்பாடான கருத்துகளைத்தான் அவருடைய உரை வெளிப்படுத்த முடியும். தமிழகத்தில் வறுமையை ஒழிப்பதற்கும், தொழில் . வளத்தைப் பெருக்குவதற்கும், இந்த அரசு முனைப்புடன் செயல்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. அத்தனை அடையும்பொருட்டு 15 அம்சத் திட்டமும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் கடந்து வந்த பாதை எவ்வளவு கடினமாக இருந்தது என்பதைக் குறிப்பிடுவதற்காக ஆங்கிலத்தில் Turbulent என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதனை தமிழில் 'கொந்தளிப்பான' என்று மொழிபெயர்த்திருப்பதால் அதைப் பற்றிய சர்ச்சை ஒன்று இங்கே

கிளம்பியது. உண்மையில் அவர் தேர்தலில் நிற்க முடியாமல் போனது, முதலமைச்சர் பொறுப்பிலிருந்து விலக நேரிட்டது போன்ற நிகழ்ச்சிகள் அவர்களுக்கு உள்ளக் குமுறலை ஏற்படுத்தியது உண்மைதான். ஆயினும், கொந்தளிப்பான நிகழ்வுகளை உருவாக்கிவிட்டதாக மொழிபெயர்த்திருப்பதால் பொருள் சரியாக வரவில்லை. அதனால் சர்ச்சை ஏற்பட்டது. இப்போது குமுறல் அடங்கி சுமூகமான சூழல் நிலவுகிறது. இதனைப் பயன்படுத்தி நாட்டிலேயே முதல் மாநிலமாக நமது மாநிலத்தை மாற்றியமைப்பதற்கு அரசு பல திட்டங்களையும் அறிவித்திருக்கிறது. அவற்றை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளையும் வழங்கி, நிர்வாக நடவடிக்கைகளை முடிக்கிவிடும்போதுதான் எதிர்பார்க்கும் பலனை அடைய முடியும்.

'எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்'

என்பதற்கு ஏற்ப இந்த அரசு எண்ணியுள்ள இலக்கை அடைவதற்கும், நாங்களும் எங்களுடைய பங்கினை ஆற்றுவோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-50*

இந்தியா விரிந்து பரந்து கிடக்கிற நாடு. இங்கே பல மொழியினர், பல மதத்தினர், பல இனத்தவர் வாழ்கிறார்கள். பல்வேறு கலாச்சாரங்கள், பல்வேறு வாழ்க்கை முறைகள், இத்தனையும் கொண்ட நாடாகத்தான் இந்தியா இருக்கிறது. ஆனால் இத்தனை இருந்தும்கூட நாம் அனைவரும் ஒரே நாட்டினர் என்பதை மறுக்க இயலாது என்பதை ஆளுநர் உரை தெளிவுபடுத்தியிருக்கிறது. வேற்றுமையில் ஒற்றுமை காண்பதிலேதான் நம்முடைய பெருமையே அடங்கியிருக்கிறது. இப்படிப்பட்ட சிறப்புள்ள நாடு உலகிலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடாகவும் விளங்குகிறது. இந்த நாட்டினுடைய இறையாண்மைக்கும், ஜனநாயகத்திற்கும் சவால் விடுகிற வகையில், சவாலாக அமைகிற வகையில் நாடாளுமன்ற வளாகம் தாக்குதலுக்கு இலக்காகியிருக்கிறது, டிசம்பர் மாதம் 13 ஆம் தேதி. அந்தச் செயல் அனைத்துத் தரப்பினராலும் வன்மையாகக் கண்டிக்கப்பட்டிருக்கிறது. நாங்களும் கண்டித்திருக்கிறோம். நான் மீண்டும் கண்டிக்கிறேன். அதற்கு யார் பொறுப்பானவர்களாக இருந்தாலும், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிலே சம்பந்தப்பட்டவர்கள் யார்? பின்னாலே இருந்து இயக்கியவர்கள் யார்? யார் அதனுடைய உண்மையான கர்த்தாக்கள் என்று கண்டறிந்து





அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் மீண்டும் இந்த நேரத்திலே கோரிக்கை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இந்த பயங்கரவாதத்தைத் தடுப்பதற்கு, மத்திய அரசு கொண்டுவர உத்தேசித்துள்ள சட்டத்திற்கு, இந்த அரசு தன்னுடைய ஆதரவைக் கொடுக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது. அதை என்னாலே ஏற்றுக்கொள்ள முடியவில்லை. 'போடோ சட்டம்' அதாவது Prevention of Terrorism Ordinance இன்றையதினம் அது சட்டமாக ஆகுமேயானால் Prevention of Terriorism Act ஆகும். ஜனநாயகத்தின் குரல்வளையை நசுக்கும் சட்டமாக, தனி மனித உரிமைகளைப் பிடுங்கும் சட்டமாக அந்தச் சட்டம் இருக்கிறது. ஒரு ஜனநாயக நாட்டிலே அப்படி ஒரு சட்டம் இருக்கமுடியுமா என்பது ஏற்றுக்கொள்ள இயலாத ஒன்று. அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தால்தான் பயங்கரவாதத்தைத் தடுக்க முடியும் என்கிற வாதத்தையும் நான் ஏற்றுக்கொள்ளவில்லை. காரணம் இங்கு ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. கொலை செய்தால் ஐ.பி.சி. 302-வது செக்ஷன்படி மரண தண்டனை என்று விதிக்கப்பட்டிருக்கிறது. அப்போதும் கொலை நடைபெறுகிறது. அப்படியானால் அந்தச் சட்டத்தையே எடுத்து விடலாமா? இல்லை அந்த செக்ஷனையே எடுத்து விடலாமா என்ற கேள்வி கேட்டார்கள். இந்திய தண்டனைச் சட்டம், Indian Penal Code என்பது இழைக்கப்பட்ட குற்றத்திற்குத் தண்டனை வழங்குகிற சட்டம். It is both reformative as well as deterrent அந்தச் சட்டம் யார் குற்றம் இழைத்தார்களோ அவர்களுக்குத் தண்டனை வழங்குகிறது. தண்டனை வழங்குவதன் விதமாக அவர்கள் செய்த செயலுக்குத் தண்டனை, ஒருவேளை திருந்த முடியும் என்றால் திருத்திக்கொள்வதற்கு ஒரு வாய்ப்பு. மற்றவர்கள் அதைச் செய்யாமல் இருக்க வேண்டும். இந்தத் தண்டனையைப் பார்த்து இதுபோன்று மீண்டும் குற்றங்கள் நிகழக்கூடாது என்பதற்காக அந்தத் தண்டனை இங்கே வழங்கப்படுகிறது. ஆனால் Prevention of Terrorism Act என்பது பயங்கரவாதம் நிகழவொண்ணாமல் பார்த்துக்கொள்கிற சட்டம். பயங்கரவாதத்தைத் தடை செய்கிற சட்டம். பிறகு பயங்கரவாதம் நிகழக்கூடாது, தீவிரவாதிகளால் பயங்கரவாத நடவடிக்கைகள் இருக்கக்கூடாது என்று சொல்கிற சட்டம். அப்படி ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து அனைவரும் ஏற்றுக்கொள்ளாத நிலையிலே கொண்டுவந்து அவசரச் சட்டமாகப் பிரகடனப்படுத்தி, சகல தரப்பினராலும் கண்டிக்கப்பட்டு, குறிப்பாக அரசியல்வாதிகள் மட்டும் அல்ல, பல பெரிய பெரிய நீதிபதிகள், முன்னாள் நீதிபதிகள், இன்றையதினம் சட்ட உலகிலே ஜாம்பவான்களாக விளங்கும் பெரிய பெரிய வழக்குரைஞர்கள் Jurists அத்தனை பேரும் இந்தச் சட்டம் பாதகமான சட்டம் என்று சொன்னதற்குப் பின்னாலே அந்தச் சட்டம்

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2002 மார்ச் 15

அமலில் இருக்கிற நேரத்திலேதான் பாராளுமன்ற வளாகம் தாக்குதலுக்கு இலக்காகியது. அதுவும் சாதாரண தாக்குதல் அல்ல. அவர்கள் எந்த வழியிலே வந்தார்கள் என்றே தெரியாத அளவிற்கு அவர்கள் தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு அந்தத் தாக்குதல் நடைபெற்றிருக்கிறது. எனவே இந்த வாதம் எடுபடக்கூடிய வாதம் அல்ல. அதனால் அரசு இதைக் கைவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்த நிலையை என்னாலே ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல குஜராத் படுகொலை. நம்மை எல்லாம் வெட்கித் தலைகுனிய வைக்கக்கூடிய படுகொலையாக குஜராத் படுகொலை நிகழ்ந்திருக்கிறது. குறிப்பாக *கரசேவைக்குச் சென்றுவிட்டு வந்தவர்கள் வந்த இரயிலை கோத்ரா ஸ்டேஷனிலே தடுத்து நிறுத்தி அதைத் தாக்குதலுக்கு இலக்காக்கியிருக்கிறார்கள். முதலிலே கல்லால் அடித்தார்கள். பிறகு அந்த ஒரு பெட்டிக்கே நெருப்பு வைத்திருக்கிறார்கள். அதிலே அந்தச் செயல் எந்த மனிதநேயமுள்ள மனிதனாலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. வன்மையாக நான் கண்டிக்கிறேன். நாங்கள் ஏற்கெனவே கண்டித்திருக்கிறோம். மீண்டும் வன்மையாக நான் கண்டிக்கிறேன். அதற்கு யார் பொறுப்பானவர்களோ அவர்களைக் கண்டறிந்து அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அது மட்டுமல்ல, யார் பொறுப்பாளர்களாக இருந்தாலும் அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. அதனைத் தொடர்ந்து அடுத்த 4 நாட்கள் குஜராத் ஒரு காடாக மாறிவிட்டது. ஒரு Jungle போல ஆகிவிட்டது. அங்கே சட்டம் கிடையாது, நிர்வாகம் கிடையாது, ஒழுங்கும் கிடையாது. அங்கே பார்த்தால் யாரை வேண்டுமானாலும் யார் வேண்டுமானாலும் வெட்டிக் கொல்லலாம். வெட்டிக் கொல்வது மட்டுமல்ல 30, 40 பேரை ஒரு கட்டடத்திற்குள்ளே தள்ளி அந்தக் கட்டடத்திற்கே நெருப்பு வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட பாதகச் செயல்கள் தட்டிக் கேட்க முடியாமல் அடுத்து 4 நாட்கள் அங்கே நடைபெற்றிருக்கின்றன. குறிப்பாக ஒரு சிறுபான்மை சமுதாயத்தின்மீது இந்த வன்முறை அவிழ்த்து விடப்பட்டிருக்கிறது. பல நூற்றுக்கணக்கான பேர்—1,000 பேர் என்று பத்திரிகைகள் சொல்கின்றன—கொல்லப்பட்டிருக்கிறார்கள். இதற்குப் பொறுப்பானவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மேலேயும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். என்று இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்கிறேன் ...

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2002 மார்ச் 15]

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா, அவர் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. சிறுபான்மைச் சமூகம் தாக்கப்பட்டு இருக்கிறது என்றுதான் சொன்னார்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** I am not yielding, Sir.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா உட்காருங்கள், உட்காருங்கள் முடிந்த பிறகு கேளுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** I am not yielding Sir, I am not yielding.
மகாத்மா காந்தி பிறந்த மண்ணில், **மதவெறியர்கள் நடத்தும் ரத்தக்
களரியை பாரதிய ஜனதா அரசு இரும்புக்கரம் கொண்டு அடக்க
வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

சமூக நல்லிணக்கம் அங்கே மட்டுமல்ல, நம்முடைய நாட்டிலேயே
காக்கப்பட வேண்டும். அயோத்தியிலே பூமி பூஜையை நிறுத்த
வேண்டுமென்று Supreme Court தடை செய்திருக்கிறது. இதிலே என்ன
வேடிக்கை என்று சொன்னால், அனைத்துத் தரப்பினருமே இருக்கின்ற
நிலையில் எந்த மாற்றமும் வரக்கூடாது. அந்த 67.703 ஏக்கரில் யாரும்
நுழையக் கூடாது. எந்தக் காரியத்தையும் செய்யக் கூடாது. பிறருடைய
மனம் புண்படும்படி நடக்கக் கூடாது, பிறர் உரிமையைப் பறிக்கக் கூடாது
என்றெல்லாம் சொல்லிவிட்டு, அங்கே பூமி பூஜை நடத்தலாம் என்பதிலே
ஆளும் கட்சியிலே ஆளுக்கு ஒரு கருத்து, நாளுக்கு ஒரு கருத்து, கட்சிக்கு
ஒரு கருத்து. ஒரு நாள் சொல்கிறார்கள், அது எங்களுடைய கருத்து
அல்ல, அது Attorney-General அவர்கள் 'தன்னுடைய சொந்தக் கருத்து'
என்று சொல்கிறார்கள். மறுநாள் பத்திரிகையில் வருகிறது. அது Attor-
ney-General உடைய சொந்தக் கருத்து அல்ல, எங்களுடைய கருத்தைச்
சரியாகத்தான் பிரதிபலித்திருக்கிறார் என்று வேறு யாரும் சொல்லவில்லை.
பாரதத்தினுடைய பிரதமர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்து
பத்திரிகையிலே முதல் பக்கத்திலே It would not have been a violation.
The Prime Minister Atal Behari Vajpayee, today made it very clear that
"the Attorney-General Soli Sorabjee, had presented the Government's views

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

in the Supreme Court in the matter of allowing a symbolic puja on the acquired land in Ayodhya.

அது மட்டுமல்ல, பின்னாலேயும் சொல்லியிருக்கிறார். The status quo of the acquired land would not have been disturbed by a symbolic puja என்றும் சொல்லியிருக்கிறார். ஆக, வாஜ்பாய்க்கு உடன்பாடான கருத்தைத்தான் சொல்லியிருக்கிறார் என்று நான் சொல்லவில்லை, வாஜ்பாயே சொல்லியிருக்கிறார். அந்த அளவிற்கு ஆளுக்கு ஒரு கருத்து, கட்சிக்கு ஒரு கருத்து. இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்து இந்த நாட்டிலே இரத்தக் களறி மீண்டும் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டிய கடமை மத்தியிலே இருக்கின்ற ஆட்சிக்கும் உண்டு, அரசுக்கும் உண்டு என்பதை நான் மீண்டும் இந்த நேரத்திலே வலியுறுத்துகின்றேன்.

அதேபோல, எல்.டி.டி.ஈ.-யைப் பொறுத்தவரை, ஆளுநர் உரையில் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள். பேச்சுவார்த்தை நடத்துவதற்கு பொதுவாக தமிழ்நாட்டிலே எல்.டி.டி.ஈ.-யைச் சேர்ந்த சிலரை இருக்க அனுமதிக்க வேண்டுமென்கிற செய்தி பத்திரிகையில் வந்தது. அதை இங்கேயிருக்கின்ற பலரும், நானும் கண்டித்தேன். முதலமைச்சர் அவர்கள் முதல் நாளே கண்டித்தார். கண்டித்தது மட்டுமல்ல மத்திய அரசுக்கு எழுதியும் இருக்கிறார், கண்டிப்பாக தமிழ்நாட்டிலே அனுமதிக்கக்கூடாது என்று. தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, இந்தியாவின் எந்தப் பகுதியிலேயும் எல்.டி.டி.ஈ. தங்கியிருந்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நாம் நிச்சயமாக அனுமதிக்கக் கூடாது. இலங்கையிலே அமைதி திரும்ப வேண்டும். தமிழர்கள் உரிமையைப் பெற வேண்டும். சகஜ வாழ்க்கை வாழ வேண்டும் என்பதிலே எங்களுக்குக் கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால், எல்.டி.டி.ஈ.-யைப் பொறுத்தவரையில் இந்த நாட்டிலே தடை செய்யப்பட்ட இயக்கம் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. இங்கே பல வன்முறை வெறியாட்டங்களை நிகழ்த்திக் காட்டியிருக்கிறார்கள். அவ்வளவு சுலபமாக அவர்களை ஏற்றுக்கொள்ள முடியாது. எதை வேண்டுமானாலும்— சில விஷயங்களை நிமிர்த்தவே முடியாது, திருத்தவே முடியாது, அப்படி திருத்தவே முடியாத ஒரு இயக்கமாக எல்.டி.டி.ஈ. இருந்திருக்கிறது. யாரை வேண்டுமானாலும் கொல்வார்கள். எப்போது வேண்டுமானாலும் கொல்வார்கள். ராஜீவ்காந்தியை கொன்று விட்டார்கள் என்பது ஒன்று மட்டுமல்ல. எங்களுடைய தலைவர் இந்த மண்ணிலே சாக நேரிட்டது, இரத்தம் சிந்த நேரிட்டது. அதுமட்டுமே அல்ல காரணம். எத்தனையோ பேரை— அத்தனை பேரையும் கணக்கு எடுத்துப் பார்த்தால் அத்தனை பேரும் தமிழர்கள்தான். சிங்களவர்களைக் கொல்லவில்லை வேறு. யாரைக்





கொன்றார்கள்? அவர்களுக்கு உதவிகரமாக இருந்த பிரேமதாசா, இந்தியாவுக்கு எதிராக, எல்.டி.டி.ஈ.-க்கு ஆதரவாகச் செயல்பட்ட, ஆயுதங்கள் வழங்கிய பிரேமதாசா அவர்களுக்கு மனித வெடிகுண்டு. யாரை விட்டு வைத்தார்கள்? அத்தனை பேரும் ஒன்றாகச் சேர்ந்துதானே இயக்கத்தை ஆரம்பித்தார்கள். ஸ்ரீசபாரத்தினமும், பத்மனாபாவும், முகுந்தனும், உமாமகேஸ்வரனும், அத்தனைபேரும் யார்? அத்தனை பேரும் இவர்களோடு இருந்து ஒன்றாக இயக்கத்தை ஆரம்பித்தவர்கள். அவருக்கு இரண்டாவது இடத்திலே இருந்த மாத்தையா இன்று எங்கே? யாரையும் விட்டு வைக்கமாட்டார்கள்.

பேசுவோம், பேச்சுவார்த்தை நடத்துவோம். அதற்குப் பரிகாரம் காண்போம் வா என்று அழைத்து வீட்டிலே உணவு பரிமாறுவதற்காக அவருடைய மனைவி உணவு தயாரித்துக்கொண்டிருந்த நேரத்திலே அமிர்தலிங்கத்தைக் கொல்கிறார்கள். அவரோடு இருந்த யோகேஸ்வரனைக் கொல்கிறார்கள். ஆலால சுந்தரத்தைக் காணோம். யார் இருக்கிறார்கள்? ஒருவரும் இல்லை. அத்தனை பேரையும் முடித்து வைத்துவிட்டார்கள். அதனால்தான் அவர்களுக்கு இதிலே நம்பிக்கை கிடையாது. சட்டத்தின்படி ஆட்சி நடத்த வேண்டுமென்பதிலே அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. நிரந்தரமாக ஒரு யுத்தம் நடந்துகொண்டிருக்க வேண்டும். ஒரு போர் நடந்து கொண்டிருக்க வேண்டும். எப்போதெல்லாம் சந்தர்ப்பம் கிடைக்கிறதோ அப்போதெல்லாம் மிரட்டி காரியங்களைச் சாதித்துக்கொள்ள வேண்டும் என்கிற எண்ணம்தான் அவர்களுக்கு இருந்து வருகிறதே தவிர வேறல்ல. ஆகவே எந்தக் காரணத்தைக் கொண்டும் அவர்களை இங்கே அனுமதிக்கக் கூடாது. தமிழகத்தில் எடுத்திருக்கிற சரியான நிலையை நான் முழுமையாக ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்களுடைய ஆதரவு முழுக்க முழுக்க அதற்கு உண்டு என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை, திருவாரூர், நாகை, புதுக்கோட்டை, கடலூர், திருச்சி மாவட்டங்களில் சமீபத்தில் பெய்த பெருமழையால் விவசாயிகளின் விளை நிலங்கள் பாதிப்புக்கு இலக்காகின. பயிர்கள் எல்லாம் நாசமாகிவிட்டன. அறுவடை செய்ய முடியவில்லை. பலருக்கு இந்த வருடம் எந்த வெள்ளாமையும் இல்லாமல் போய்விட்டது. அவர்களுக்கெல்லாம் நஷ்ட ஈடு வழங்க வேண்டும். நஷ்டஈடு வழங்க இருக்கிறோம் என்று ஆளுநர் உரையிலேயும் இருக்கிறது. இங்கே அமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு குறிப்பிட்டார்கள். அந்த நஷ்டஈடு போதாது என்பதை அரசு ஏற்றுக்கொள்கிறது. 44 கோடியாக இருந்தாலும்சரி, 49 கோடியாக

இருந்தாலும் சரி, அந்தத் தொகை போதாது. இன்னும் போதுமான நஷ்ட ஈடு வாங்கி அவர்களுக்கு எல்லாம் வழங்க வேண்டும். இங்கே பழனிசாமி அவர்கள் கோரிக்கை வைத்ததுபோல நில வரியை இரத்து செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சம்பா அறுவடை பெரிதும் அங்கே பாதிக்கப்பட்டிருக்கிறது. நெல் கொள்முதலை அரசு முறையாக நடைமுறைப்படுத்தாததனாலே அம்பாரம் அம்பாரமாக நெல் மூட்டைகள் சாலை ஓரங்களிலே குவிந்து கிடக்கின்றன. 2000-2001-ல் திறக்கப்பட்ட அளவிற்கு தற்போது நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படாததே இதற்குக் காரணம் என்று சொல்கிறார்கள். எனவே நெல் கொள்முதல்-அது மட்டுமல்ல, நீங்கள் நிர்ணயித்திருக்கிற தரம் இருக்கிறதல்லவா, தர நிர்ணயம், கிரேட் கட், சென்ற ஆண்டு கிரேட் கட் 8 சதவிகிதம். இந்த ஆண்டு கிரேட் கட் 4 சதவிகிதம். ஆக சென்ற ஆண்டில் கொஞ்சம் தாராளமாக இருந்தது. இந்த ஆண்டு அந்தத் தாராளம் இல்லை. 22 சதவிகிதம் ஈரப்பதம் இருந்தாலும் வாங்கலாம் என்கிற ஆணையை கொஞ்சம் முன்பே நீங்கள் அறிவித்திருப்பீர்களேயானால், பிறப்பித்திருப்பீர்களேயானால் நலமாக இருந்திருக்கும் என்றாலும்கூட, better late than never என்பதைப் போல இப்போது பிறப்பித்திருக்கிறீர்கள். அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-00*

அதுமட்டுமல்ல, ஒவ்வொரு தாலுகாவிலும் அதற்குக் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். சிதம்பரம், காட்டுமன்னார்குடி தாலுகாவில் 2000-2001 ஆம் ஆண்டிலே 93 கடைகள் இருந்தன. 2001-2002-லே 75 கடைகள்தான் இருக்கின்றன. இங்கே சென்ற ஆண்டு கொள்முதல் செய்யப்பட்ட நெல்லினுடைய அளவு 66,000 டன். இந்த ஆண்டு 31,000 டன்தான் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல, தஞ்சை, நாகை மாவட்டங்களில் நேரடிக் கொள்முதல் மையங்களில் கூடுதலாக கொள்முதல் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். இப்போது முதல் வாரம் 36 மையங்களுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் கொடுத்தீர்கள். இரண்டாவது வாரம் ஒரு இலட்சம் ரூபாய்தான் கொடுத்திருக்கிறீர்கள். தற்போது 50,000 ரூபாய், இந்தத் தொகை கொஞ்சம் கூடப் போதாது. இப்போது தஞ்சை மாவட்டத்திலே 95 கொள்முதல் நிலையங்கள் இருக்கின்றன. ஆக, இந்தத் தொகை போதாது. தொகையை அதிகரிக்க வேண்டும். அனைவருடைய நெல்லையும் கொள்முதல் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.





அதேபோல, இன்னொரு பிரச்சினை, கொப்பரைத் தேங்காய் கொள்முதல். மூன்று, நான்கு ஆண்டுகளுக்கு முன்பு தேங்காய் 7 ரூபாய்க்கு விற்றது. 1998-லேகூட தோட்டத்திலிருந்து, தோப்பிலிருந்து ரூ.6.95 பைசாவுக்கு வாங்கிக் கொள்வார்கள். அது கீழே வந்தது. பிறகு நாம் பலமுறை எடுத்துச் சொன்னோம், நானும் டெல்லிக்குப் போய் பேசிவிட்டு வந்தேன். மூப்பனார் அவர்களும் என்னுடன் வந்தார்கள். நாங்கள் இருவருமாகச் சேர்ந்து ஜனாதிபதியைச் சந்தித்தோம். பிறகு வாங்கிக் கொள்ள ஒப்புக்கொண்டார்கள். பிறகு கொள்முதல் செய்ய ஒப்புக்கொண்டார்கள். 33 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்யப்பட்டது. கேரளாவில் 35 ரூபாய் என்றால் அது Coconut ball அந்த மாதிரி நம் ஊரில் கிடைக்காது. பெரும்பாலும் அங்கு வெட்ட மாட்டார்கள் அதை வெட்டினால் இரண்டு வெட்டுதான் விழும். மீதியெல்லாம் தானாகவே விழும். அந்தத் தேங்காயை சேகரம் செய்து வைப்பார்கள். அதிலே தண்ணீர் இருக்காது. அந்தத் தேங்காயை உடைத்தால் அதிலிருந்து பந்து மாதிரி அப்படியே வெளியே வந்துவிடும். கொப்பரை மட்டும் தனியாக வந்துவிடும். அதனால் அங்கு 35 ரூபாய், அது தவறு இல்லை. ஆனால் இங்கே கொஞ்சம் சிரமங்கள் இருக்கின்றன.

உதாரணமாக, என்னுடைய தாலுகாவை எடுத்துக்கொண்டால், பல்லடத்திலேகூட இந்த 10,12 நாட்களிலே ஒரே ஒரு முறைதான் அங்கே கொள்முதல் நடைபெற்று இருக்கிறது. அதற்கு மாநில அரசு காரணம் என்று நான் சொல்லவில்லை. இதை நேபெட்-க்காக டேன்பெட் வாங்குகிறது. மத்திய நேபெட்-க்காக தமிழ்நாடு அரசு நிறுவனம் டேன்பெட் வாங்குகிறது. டேன்பெட்-க்கு—அதற்கு கமிஷன்தான் கொடுக்கிறார்கள். ஆனால் டேன்பெட்-லே ஏன் வாங்கவில்லை என்றால் நேபெட் பிரதிநிதி வரவில்லை. நேற்றைக்கு முன்தினம், இரண்டு நாட்களுக்கு முன்தினம், நேபெட்-னுடைய பிராந்திய மேலாளரிடம் நான் பேசினேன், நாங்கள் அவர்களுக்குத் தெளிவாக அறிவுறுத்தியிருக்கிறோம். எங்களுடைய பிரதிநிதி வராவிட்டாலும் நிர்ணயிக்கப்பட்ட தரத்தில் நீங்கள் வாங்கலாம் என்று கூறியிருக்கிறார்கள். எனவே, தங்குதடையின்றி கொள்முதல் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். குறைந்தபட்சம் வாரத்தில் மூன்று நாட்கள் என்று அங்கே அறிவித்திருக்கிறார்கள். இரண்டு வாரத்திற்கு ஒரு நாள்தான் இப்போது கொள்முதல் செய்கிறார்கள். குறைந்தபட்சம் அந்த மூன்று நாட்களுமாவது காலம் கடத்தாமல், இழுத்தடிக்காமல், கொண்டுபோய் அங்கு வைத்தால், இன்றைக்கு வா, நாளைக்கு வா, இல்லை நான்கு நாள் கழித்து வா, ஏழு நாள் கழித்து வா, ஒன்பது நாள் கழித்து வா என்று ஒரு மாதம் வரை

இழுத்தடிக்கிறார்கள். என்னால் ஒரு கொப்பரையைக்கூட அங்கே கொண்டுபோய் விற்க முடியவில்லை. காரணம், அந்த அளவுக்கு அங்கே கெடுபிடி செய்து கொண்டிருக்கிறார்கள். அது நல்லதல்ல, எனவே தாராளமாக கொப்பரைக் கொள்முதல் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

காவிரி நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பைப் பொறுத்தவரை, இந்த இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்துவதற்கு, இந்த அரசாங்கம் எடுக்கின்ற அனைத்து நடவடிக்கைகளுக்கும் நாங்கள் உறுதுணையாக இருப்போம் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் எடுக்கின்ற அனைத்து நடவடிக்கைகளுக்கும், மத்திய அரசை நிர்பந்திப்பதாக இருந்தாலும் சரி அல்லது உச்ச நீதிமன்றத்தின் முன்னாலே நாம் போய் நின்று இதற்குப் பரிகாரம் காண வேண்டுமென்ற நிலை ஏற்பட்டாலும் சரி, நீங்கள் எடுக்கின்ற அனைத்து நடவடிக்கைகளுக்கும் நாங்கள் உறுதுணையாக இருப்போம். நீங்கள் இன்னும் முனைந்து செயல்பட்டு எப்படியாவது அந்த இடைக்காலத் தீர்ப்பை, இடைக்கால ஆணையை நிறைவேற்றுவதற்கு வழிகாண வேண்டும். ஒவ்வோர் ஆண்டும் இதேபோன்று நாம் சண்டை போட்டுக்கொண்டிருக்க முடியாது என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல முல்லைப் பெரியாறை பொறுத்தவரையில் முன்பு 152 அடி தண்ணீர் தேக்கப்பட்டு இருந்தது. இப்போது 136 அடியாகக் குறைந்துவிட்டது. அதற்குக் காரணம், கேரளாவினுடைய ஆட்சேபனைகள். அந்த ஆட்சேபனைகள் எல்லாம் இன்று விசாரிக்கப்பட்டு, நாம் அந்த dam-ஐ இரண்டு அணைகளாக மாற்றிவிட்டோம். அவ்வளவு பெரிதாகக் கட்டியிருக்கிறோம். நான் அங்கு சமீபத்தில் போகவில்லை. முன்பு போகும்போது கட்டிக்கொண்டிருந்தார்கள். இப்போது முடித்திருப்பார்கள். அதில் ஒன்றும் எனக்குச் சந்தேகமில்லை அவர்கள் ஏன் வேண்டாம் என்று சொல்கிறார்கள் என்றால் இங்கே தண்ணீரை நிறைய தேக்காமல் அங்கு விட்டு விட்டால், 20 வருடங்களாக அது நடைபெறுகிறது. தென் மாவட்டங்கள் முழுவதும் வேளாண்மை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. பழைய மதுரை மாவட்டம், பழைய இராமநாதபுரம் மாவட்டம் முழுவதுமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. அங்கே இப்பொழுது dam கட்டியிருப்பதால்— அங்கே போக வேண்டிய தண்ணீர் எல்லாம் மேற்கே போகிறது. அதாவது ஏதாவது ஒரு தடையைப் போட்டுக்கொண்டே இருக்கிறார்கள். இப்போது என்ன? சுப்ரீம் கோர்ட்டும் சரி, மத்திய அரசும் சரி, வல்லுநர் குழுவை நியமித்தார்கள். அந்த வல்லுநர் குழு இப்போதைக்கு





142 அடி நிறுத்தலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த 142 அடி நிறுத்துவதற்கு நாம் உடனடியாக முனைந்து செயல்பட்டு அதற்கு உரிய நிலையைப் பெற வேண்டும். அதேபோல, பின்னர் அதை 152 அடியாக உயர்த்த வேண்டியது மிகவும் அவசியம் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

இந்த இரண்டு திட்டங்களைப் போல, மிகப் பெரிய திட்டங்களில் ஒன்று தமிழ்நாட்டிலே 'பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டம்' P.A.P. அந்த பாசனத் திட்டத்தைப் பொறுத்தவரையில் முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் என் பின்னாலேயே உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அவருக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். பெரிய திட்டம். காமராஜர் காலத்தில் நிறைவேற்றப்பட்ட மிகப் பெரிய திட்டங்களில் ஒரு திட்டம் அது. இந்தத் திட்டம் வெள்ளைக்காரப் பொறியாளர்களாலேயே முடியாது என்று கைடவிடப்பட்ட திட்டம். முடியாது, சாத்தியமே இல்லை, மலைக்கு மேலே சுரங்கம், சுரங்கத்திற்குள்ளே மட்டுமல்லாமல் tunnel-லே போக வேண்டும். இவை எல்லாம் நடப்பவை அல்ல. குழாயிலே கொண்டு போக வேண்டும் என்று சொன்னார்கள். ஓர் அணைக்கு மேலே இன்னோர் அணையினுடைய தண்ணீரை குழாயிலே கொண்டு போக வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள். பரம்பிக்குளம் எங்கே இருக்கிறது; திருமூர்த்தி அணை எங்கே இருக்கிறது? இவை எல்லாம் சாத்தியமே இல்லை என்று சொன்னார்கள். எனவே, அதை நிறைவேற்றிக் கொடுத்த நம்முடைய பொறியியல் வல்லுநர்கள் பாராட்டுதலுக்கு உரியவர்கள். அன்றையதினம் நாம் எதிர்பார்த்தது 2.4 இலட்சம் ஏக்கர்தான். பாசனத்திற்கு 2.4 இலட்சம் ஏக்கர்தான் வரும் என்று எதிர்பார்த்தோம். இன்றைக்கு அது $4\frac{1}{2}$ இலட்சம் ஏக்கராக வந்திருக்கிறது. ரொம்ப மகிழ்ச்சி. இன்னும் ஜாஸ்தி பண்ண வேண்டும் என்பது என்னுடைய அபிப்ராயம். குறையக் கூடாது. $4\frac{1}{2}$ என்பதை நீங்கள் 6 ஆக ஆக்கினால் ரொம்ப மகிழ்ச்சி அடைவேன். எல்லோருக்கும் தண்ணீர் கிடைக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் இந்த வருடம் சிலருக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. அதற்குக் காரணம், நான்காவது Zone, போன தடவை இரண்டாவது Zone-ஆக இருந்தது. நான்காவது Zone-ஆக மாறிய இடங்களுக்கு எல்லாம் இப்போதுதான் தண்ணீர் அதுவும் வெறும் உயிர்த் தண்ணீர்தான் போய்க்கொண்டிருக்கிறது. அங்கே எல்லாம் தென்னை மரமே பட்டுப்போய்விட்டது. அதற்கு எல்லாம் நிவாரணம் என்ன என்று

கேட்டீர்கள் என்றால்—அதை நிறைவேற்றியிருக்கிறோம். மேலே அங்கே பரம்பிக்குளத்திலே அணை இருக்கிறது. பெருவாரி பள்ளத்திலே அணை இருக்கிறது. திருமூர்த்தி அணை இருக்கிறது. இவை தவிர இடையிலே சர்க்கார் பதி அணை இருக்கிறது. தூணைக்கடவு அணை இருக்கிறது. ஆழியாறு அணை இருக்கிறது. மேல்ஆழியாறு அணை இருக்கிறது. நீராறு அணை இருக்கிறது. மேல்நீராறு அணை இருக்கிறது. இத்தனையும் கட்டப்பட்டுவிட்டன. இன்னும் இரண்டு அணைகள் கட்டிவிட்டீர்கள் என்றால் இந்தப் பிரச்சினை இருக்காது என்பது என்னுடைய அபிப்ராயம்.

ஆனைமலை ஆறு ஒன்று; இன்னொன்று, நல்லாறு, ஆனைமலை ஆறு அணையிலே 2.5 டி.எம்.சி. தண்ணீர் கிடைக்கிறது. catchment area நீர்ப்பிடிப்புப் பகுதி - இருக்கிறது. ஆனால், நல்லாறைப் பொறுத்தவரையிலே 7 டி.எம்.சி. தண்ணீரை அங்கே தேக்கலாம். ஆனால் அந்த catchment area-விலே தண்ணீரைத் தேக்க இடமே கிடையாது. ஏன் என்று சொன்னால், அது இருந்தால்தான் மேலே பாயச் செய்ய முடியும். இப்போது மேல்நீராறு அணையை நாம் கட்டியிருக்கிறோம். அது அணை இல்லை; வெறும் தடுப்பணைதான். அந்தத் தடுப்பணையிலேயிருந்து தண்ணீர் மேற்கே போய்விடும். பல நூறு கிலோமீட்டர் தூரத்திற்குப் போய் திரும்பி வருகிறது. இங்கேயிருந்து சோலையாறு போய், சோலையாற்றிலே கொள்ளவில்லை என்றால் அப்படியே விட்டுவிடுகிறார்கள். நேராக ஆற்றிலே போய்விடுகிறது. ஒரு பிரயோஜனமும் யாருக்கும் கிடையாது. ஏனென்றால் மழைக் காலம் இரண்டுக்கும் ஒரே நேரத்தில்தான். அந்த அணை நிறைந்திருக்கும்போது இந்தத் தண்ணீர் போகிறது என்றால் இதனால் எந்தப் பிரயோஜனமும் இல்லாமல் போய்விடும். பரம்பிக்குளத்திலே அந்த நேரத்திலே நிறைந்திருந்தால் பிரயோஜனமில்லாமல் 7-லேயிருந்து 10 டி.எம்.சி. வரை தண்ணீர் வீணாகும். அந்த மேல்நீராற்றில் இருக்கிற தண்ணீரையும், நீராற்றிலே இருக்கிற தண்ணீரையும் இந்த ஆனைமலையாறு தண்ணீரையும் கொண்டுவந்து, நல்லாறு அணையிலே விட்டுவிட்டீர்கள் என்றால், அதாவது ஆனைமலை ஆற்றுத் தண்ணீரைக் கொண்டு வந்து நல்லாற்றிலே விட்டுவிட்டீர்கள் என்றால் அந்த 7 டி.எம்.சி. தண்ணீரையும் நேராகக் கீழே கொண்டுவந்து விடலாம். திருமூர்த்திக்குக் கொண்டு வந்துவிடலாம். மேற்கே போக வேண்டிய அவசியமே இல்லை. நேராக திருமூர்த்திக்கு வந்துவிடும். திருமூர்த்தியிலேயிருந்து பாயும். நிச்சயமாக இன்னும் பாசனப் பரப்பை அதிகப்படுத்தலாம். சொல்லப் போனால் இப்போது என்னுடைய வட்டாரத்தை எடுத்துக்கொண்டீர்கள் என்றால் என்னுடைய ஊரிலேயிருந்து கிழக்குப் பகுதிக்குத்தான் பாயும். என்னுடைய ஊருக்கு



வடக்கேயும் பாயாது. மேற்கேயும் பாயாது. ஆனால், இந்தத் திட்டம் வருமேயானால் சுல்தான்பேட்டை வட்டாரத்தினுடைய வடக்கு, மேற்குப் பகுதிகள், பல்லடம் தாலுகாவினுடைய வடக்குப் பகுதிகள், முடிந்தால் திருப்பூர் தாலுகாவினுடைய ஒரு பகுதி இன்னும் அடிஷனலாக, அதிகமாகப் பாசன வசதி பெறும் வாய்ப்பு இருக்கிறது. அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் நான் இங்கே கோரிக்கை வைத்திருக்கிறேன். இங்கே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். 1,000 ஏக்கரா என்றால்தான் ஒரு மடை விட்டு ஒரு மடை என்பதை மாற்றி 1,000 ஏக்காவிற்குக் கீழே இருந்தாலும் அந்தப் பாசனத்திற்கு அனுமதிக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டோம். நீங்கள், இந்த ஒரு சுற்று முடியட்டும் பார்க்கலாம் என்று சொன்னீர்கள். ஒரு சுற்று முடிந்துவிட்டது. இதோடு ஒரு சுற்று முடிந்துவிட்டு மீண்டும் முதல் Zone-க்குப் போகப் போகிறது. எனவே, இப்போது அதைப் பரிசீலித்து, எல்லோருக்கும் தண்ணீர் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்த வேண்டும். இத்தேர்தலை மத்திய மாதிரிச் சட்டத்தை அடிப்படையாக வைத்து நடத்த வேண்டும். வீடு கட்டும் சங்கங்களுக்குத் தேர்தல் என்றால் வீடு கட்ட கடன் பெற்றவர்கள் மட்டும் வாக்களிக்க வேண்டும். தேர்தல் நேரத்தில் அவசர, அவசரமாக உறுப்பினர்களைச் சேர்த்து, அதன் அடிப்படையில் தேர்தல் நடத்தக்கூடாது. சென்ற ஆளுநர் உரையில் உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. உள்ளாட்சித் தேர்தல் நடத்தியாகிவிட்டது. உள்ளாட்சி அமைப்புகளுக்கு எந்த ஒரு காலாண்டிற்கும் ஒதுக்க வேண்டிய தேவையான நிதியை ஒதுக்கவில்லை. இதனால் கடந்த ஓர் ஆண்டு காலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் முடங்கிக் கிடக்கின்றன. அவற்றிற்கு நிதி ஒதுக்குவது தொடர்பாக ஒரு குழு அமைக்கப்பட்டு பரிந்துரைகளும் பெறப்பட்டு விட்டன. அவற்றின்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது வரவேற்கத்தக்கது.

அதேபோல் கூட்டுறவு அமைப்புகளுக்கும் தேர்தல்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதையும் நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், தொழிற் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தப்படுவது பற்றி எந்த அறிவிப்பும் இடம்பெறவில்லை. கடந்த காலத்தில் எல்லாக் கட்சிகளின்

சார்பிலும் வலியுறுத்தப்பட்டது. அதற்குரிய வரைவு மசோதாவும் தயார் செய்யப்பட்டது. ஆனால் அமைச்சரவையில் வைத்து அனுமதி பெறாததால் சட்டமன்றத்தில் அந்த மசோதா கொண்டு வரப்படவில்லை. ஆண்டுதோறும் தொழிற்சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பது விதி - bye-law அந்த விதி இருக்கிறது. அந்த விதிகளை அமல்படுத்துவதாக ஒப்புக்கொள்ளும் சங்கங்களைத்தான் பதிவு செய்ய முடியும். ஆனால், இந்த விதிகளின்படி எந்தப் பெரிய சங்கங்களும் தேர்தலை நடத்துவதே இல்லை. இதனால்தான் தேர்தலை நடத்தச் சொல்லி பல்வேறு போராட்டங்கள் நடைபெறுகின்றன. அதனால் தொழில் அமைதியும் கெடுகிறது; உற்பத்தியும் பாதிக்கப்படுகிறது. இவற்றைத் தவிர்ப்பதற்காக தொழிற்சங்கங்களுக்குத் தேர்தல் நடத்துவதை முறைப்படுத்தும் வகையில் பல மாநிலங்களில் தனியாக சட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. மேற்கு வங்கம், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், கேரளா போன்ற மாநிலங்களிலே அத்தகைய சட்டங்கள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. தமிழகத்தில் மிகப் பெரிய தொழில் நிறுவனமான சிம்சன் குரூப் கம்பெனிகளிலே பல பெரிய போராட்டங்கள் நடக்கும். தகராறுகள் நடந்து, கொலைகள் எல்லாம் நடந்தன. அதற்கு காரணம் என்னவென்றால் ஒழுங்காகத் தேர்தல் நடத்தாததினால்தான். இத்தனைக்கும் அதிலே பெரிய, பெரிய ஜாம்பவான்கள் எல்லாம், பெரிய, பெரிய தலைவர்கள் எல்லாம் தலைவர்களாக இருந்திருக்கிறார்கள். குருமூர்த்தி, ஆர். வெங்கட்ராமன், குசேலர், காட்டூர் கோபால், என்.வி.என். சோமு, வி.பி. சிந்தன் போன்றவர்கள் எல்லாம் அதிலே தலைவர்களாக இருந்திருக்கிறார்கள். இப்போது 6 வருடங்களில் இரண்டு முறைதான் தேர்தல் நடைபெற்றிருக்கிறது. அங்கே மட்டும் என்று நினைக்காதீர்கள். திருவள்ளூரில் உள்ள இந்துஸ்தான் மோட்டார் நிறுவனத்தில்கூட தேர்தல் நடத்தப்படவில்லை. பல போராட்டங்கள் நடைபெற்று இருக்கின்றன. இப்போது உயர் நீதிமன்றமே அங்கே தேர்தலை நடத்தச்சொல்லி தொழிலாளர் நலத் துறைக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதுமாதிரி சில இடங்களில் நிர்வாகத்தோடு கை கோர்த்துக் கொண்டு தொழிற் சங்கத் தலைவர்கள் முறைப்படி தேர்தலை நடத்தாமல் தொழிற்சங்க ஜனநாயகத்தைக் கேலிக்கூத்து ஆக்கிவருகிறார்கள். எனவே, உள்ளாட்சிகளுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேர்தல் நடத்துவதைப்போல, தொழிற் சங்கங்களுக்கும் தேர்தலை நடத்த வகை செய்யும் சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். முதலாளிகளின் நிர்பந்தங்களுக்கோ, அல்லது அவர்களுடைய கைப்பாவைகளாகச் செயல்படும் தொழிற்சங்கத்





தலைவர்களுக்கோ செவி சாய்க்காமல் தொழிற்சங்க ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் வகையில் இந்த அரசு உரிய நடவடிக்கையை எடுக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

*முற்பகல் 11-10*

பதினோராவது நிதிக் குழுவினுடைய பரிந்துரைகளை அமல்படுத்துகின்ற நேரத்தில் நமக்கு வரவேண்டிய தொகை 3000 கோடி ரூபாய் குறைந்திருக்கிறது. அதேமாதிரி மாநிலங்களுக்கான நிதிப் பகிர்வில் மத்திய பாரதிய ஜனதா அரசு தமிழகத்தை வஞ்சித்திருக்கிறது. வரிகளில் நமக்குக் கிடைக்க வேண்டிய பங்கில் ரூபாய் 512 கோடி வரை குறைய வாய்ப்புள்ளது. உரிய பங்கைப் பெற நீங்கள் கடும் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

திட்ட அளவு ரூ.6040 கோடியிலிருந்து ரூ.5200 கோடியாகக் குறைந்த பின்பு மாநிலத்தின் வளர்ச்சி முதன்மை இடத்தில் இருக்காது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள். முதலீடுகளைத் திரட்ட, உலகின் பிற நாடுகளிலிருந்து புதிய முதலீடுகளைக் கொண்டுவர என்ன திட்டங்களை இந்த அரசு மேற்கொள்ள இருக்கிறது என்பதை அவைக்கு அறிவிக்க வேண்டியது அரசின் கடமையாகும்.

வணிக வரி வசூல் குறைந்துள்ளது. மத்திய வரி வருவாயும் குறைந்துள்ளது. திட்ட அளவும் குறைந்துள்ளது. அப்படியென்றால் அரசு செய்யப்போவதுதான் என்ன? விழிப்போடு நாம் செயல்படுவோமேயானால் நிச்சயமாக மீண்டுகொள்ளலாம் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

அதேபோல அறிவித்திருக்கின்ற திட்டங்களில் பசுமைப் புரட்சித் திட்டத்தை நான் வரவேற்கிறேன். முதன்முதலாக பசுமைப் புரட்சிக்கு வித்திட்டவர் எங்கள் பகுதியைச் சேர்ந்த. திரு. சி.எஸ். அவர்கள்தான் அதில் வெற்றியும் பெற்றார். இன்றைக்கு உணவு விஷயத்தில் நாம் தன்னிறைவு பெற்றிருக்கிறோம். நீங்களும் வெற்றிபெற என்னுடைய வாழ்த்துக்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தரிசு நில மேம்பாட்டுக்காக கோடிக் கணக்கில் செலவிடுகிறோம். ஆனால் ஒருபுறம் நன்செய் நிலங்கள் வீட்டு மனைகளாக மாற்றப்படுகின்றன. அதனைத் தடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2002 மார்ச் 15

இந்தியாவில் உள்ள மொத்த பஞ்சாலைகளிலே 53 சதவிகிதம் தமிழ்நாட்டில்தான் உள்ளன. ஆனால் பருத்திக்காக பஞ்சாப் செல்ல வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். எங்கள் பகுதியிலே எல்லாம் முன்பு ஏராளமான பருத்தி விளையும். இந்த மாதிரி காலகட்டங்களில் அங்கே வந்தீர்கள் என்றால் எங்கே பார்த்தாலும் பருத்தி லாரிகள் வரும், பருத்தி வண்டிகள் வரும், ஆட்கள் பருத்தியை எடுத்துக்கொண்டு வருவதைப் பார்க்கலாம். இப்போது அங்கே பருத்தியே கிடையாது. அந்த அளவுக்கு நிலைமை ஏற்பட்டுவிட்டது. அதை மாற்றியமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனவே புதிய பருத்தி வேளாண் கொள்கையை தமிழகத்தில் கொண்டுவர எம்.எஸ். சுவாமிநாதன் போன்ற விஞ்ஞானிகளின் துணையை தமிழக அரசு நாட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே மிகவும் பெரிய சர்ச்சைக்குரிய ஒரு பிரச்சினையாக விவாதிக்கப்பட்டது, போக்குவரத்தைத் தனியாருக்குக் கொடுப்பதா என்று கேட்டார்கள். போக்குவரத்தைப் பொறுத்தவரையில், பெரும் நட்டத்தில் நாம் இயங்குகின்றோம் என்பதை யாரும் மறுக்க முடியாது. 18 போக்குவரத்துக் கழகங்கள் இருக்கின்றன. 20 ஆயிரம் பேருந்துகள் இருக்கின்றன. அதிலே 6000 பஸ்கள் நிற்கின்றன என்று அமைச்சர் சொன்னார். ஒத்துக்கொள்ளப்பட்ட, கொடுக்கப்பட்ட கணக்கிலேயே 812 பேருந்துகள் நின்றிருக்கின்றன. மற்ற பஸ்கள் எல்லாம் எப்படி நின்றிருக்கின்றன என்றால் உதிரி பாகங்கள் கிடையாது. இந்த உதிரி பாகத்தைக் கழட்டி இன்னொன்றுக்குப் போட்டுவிடுவார்கள். ஏனென்றால் உதிரி பாகங்கள் வாங்க முடியவில்லை. உதிரி பாகங்கள் வாங்கியதற்காக நாம் பாக்கி தர வேண்டும்; கடன் வைத்திருக்கிறோம். அது 73 கோடி ரூபாய் என்று நினைக்கிறேன். 73 கோடி என்று எனக்கு ஞாபகம், இதுபோல ஒவ்வொன்றிலும் கடன், எண்ணெய் வாங்குகிற இடத்தில் கடன், உதிரி பாகங்கள் வாங்கியதில் கடன், இப்படி எல்லாவற்றிலும் கடன். 2100 கோடி ரூபாய் அளவுக்குக் கடன், மறுபடியும் Transport Development Corporation-க்குப் போனால் கடன் கொடுக்கமாட்டார்கள். கொடுக்கமாட்டோம் என்று வெளிப்படையாகவே அறிவித்துவிட்டார்கள். ஆகையினால் பணம் வரப்போவதில்லை. அதனால் அரசுத் துறையோடு தனியார் துறையும் இருக்கும், இரண்டும் ஒரு ஆரோக்கியமான போட்டியிலே ஈடுபடும் என்பதை நான் வரவேற்கிறேன். ஆரோக்கியமான போட்டி அங்கே இருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேநேரத்திலே, சில வழித்தடங்களை, தேர்ந்தெடுத்த வழித்தடங்களைத் தனியாருக்கு நாங்கள்



2002 மார்ச் 15] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

தருவோம் என்று சொன்னீர்கள். எந்தெந்த வழித்தடங்களை, எத்தகைய வழித்தடங்களைத் தரப்போகிறீர்கள்? அதற்கு என்ன கட்டுப்பாடு இருக்கிறது? என்ன நார்ம்ஸ், எப்படி நிர்ணயிக்கப் போகிறீர்கள் என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஒரு முக்கியமான பிரச்சினை என்னவென்றால் இதில் தொழிலாளர்கள் பாதிக்கப்படக்கூடாது. தொழிலாளர்களின் வேலைவாய்ப்பிலே எந்தவிதமான பாதகமும் இல்லாமல் இதை நீங்கள் செய்வீர்களானால் நிச்சயமாக நான் முழுமனதுடன் இதை வரவேற்கிறேன்.

அடுத்து 14 வயதுக்கு உட்பட்ட அனைவருக்கும் கட்டாய இலவச தொடக்கக் கல்வி என்ற இலட்சியத்தை நான் வரவேற்கிறேன். இதில் எந்தவிதத் தவறும் இல்லை. எல்லோருக்கும் கல்வி கொடுக்க வேண்டும். காமராஜர் கூட மதிய உணவுத் திட்டத்தை ஏன் அறிமுகப்படுத்தினார் என்றால், பள்ளிக்கூடங்கள் திறந்தும் பிள்ளைகள் பள்ளிக்கு வரவில்லை. அதனால்தான் மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டுவந்தார். அதையேதான் எம்ஜி.ஆர். சத்துணவுத் திட்டமாக மாற்றினார். ஏனென்றால் கல்வி வேண்டும். அத்தனை பேருக்கும் கல்வி கொடுக்க வேண்டுமென்று சொன்னால், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நிறைய தேவைப்படுகிறார்கள். இப்போது நிலைமை என்னவென்றால், B.Ed., படிப்பதற்கு தனியார் நடத்துகின்ற கல்லூரிகளில் இடம் பெற முடியவில்லை. அவர்கள் கேட்கின்ற தொகையை சாதாரண மக்களால் கொடுக்க முடியவில்லை. அதனாலே correspondence course ஆரம்பிக்கலாம். அது எங்கேயும் இல்லை என்று நீங்கள் சொல்லலாம். இருக்கிறது. இந்திராகாந்தி open university-லே அங்கே ஒரு correspondence course வைத்திருக்கிறார்கள். அங்கேயும் பயிற்சி வேண்டுமென்று சொல்கிறார்கள், திறமை வேண்டுமென்று சொல்கிறார்கள். அந்தமாதிரி, அந்த அடிப்படையிலே, இங்கேயும் correspondence course கொண்டுவந்து சில நாட்கள், அல்லது சில வாரங்கள் எங்கே பயிற்சி அளிக்க வேண்டுமென்று நினைக்கிறீர்களோ அங்கே அந்தப் பயிற்சியை அளிக்கலாம். எனவே இதைப்பற்றி நீங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11.15*

அடுத்து, சட்டக் கல்லூரிபற்றி எல்லோருமே பேசினார்கள். தயவு செய்து எப்படியாவது அந்தப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வாருங்கள். நான் அதை வரவேற்கிறேன். அதாவது மாணவர்கள் நீண்ட நாட்கள் போராடிக் கொண்டிருப்பது நல்லதல்ல. இது மாணவர்களுடைய பிரச்சினை. அதனால் கொஞ்சம் அனுதாபத்துடன், பரிதாபத்துடன்

பரிசீலித்துப் பார்த்து அதைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆனால், அதிலே ஒரு முக்கியமான பிரச்சினை என்னவென்றால் இருக்கிற சட்டக் கல்லூரிகள் நான்கோ, ஐந்தோ, இந்த 5 சட்டக் கல்லூரிகளுக்கும் ஒரு பல்கலைக்கழகம். அது ஆரம்பித்து 5 ஆண்டுகள் ஆயிற்று. இதுவரை எந்த வளர்ச்சியும் கிடையாது; அப்படியே இருக்கிறது. இதிலே ஒரு Vice Chancellor இருக்கிறார் ஒருபக்கம். இன்னொரு பக்கம் Director of Legal Studies. முன்பு நான் படித்தபோது ஒரே கல்லூரிதான் இருந்தது. அப்போதும் ஒரு Director of Legal Studies. இப்போது 4,5 கல்லூரிகளுக்கும் அந்த ஒரு Director of Legal studies தான். இவர்கள் இரண்டு பேருக்கும், அதிகாரங்கள், வரம்பு என்ன, எல்லை என்ன என்பதே கிடையாது. இரண்டு பேருக்கும் எப்போது பார்த்தாலும் சண்டை. எப்போது பார்த்தாலும் Director of Legal Studies-க்கும் Vice Chancellor-க்கும் சண்டை. Director of Legal Studies எல்லா பல்கலைக்கழகங்களிலும் அவர் சிண்டிகேட் மெம்பர். எல்லாவற்றுக்கும் போகிறார். இவருக்கும் மருத்துவப் பல்கலைக்கழகத்திற்கும் என்ன சம்பந்தம்? அவசியமே இல்லை. அதனால், இதற்கு ஒரு தனிப் பல்கலைக்கழகம் தேவைதானா? இப்போது சென்னையிலே சென்னைப் பல்கலைக்கழகம், சட்டப் பல்கலைக்கழகம் மற்றும் அம்பேத்கர் சட்டக் கல்லூரி ஆகியவை இருக்கின்றன. இந்தச் சட்டக் கல்லூரியை சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கலாம். அதுபோல், கோவையிலே ஒரு சட்டக் கல்லூரி இருக்கிறது. அதை பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைத்துவிடலாம். அவ்வாறு எங்கேயிருந்தாலும், மதுரையிலே இருந்தால் மதுரை காமராஜ் யூனிவர்சிட்டியுடன் இணைத்துவிடலாம். அதற்கென ஒரு தனிப் பல்கலைக்கழகம் தேவைதானா? இவ்வளவு செலவு செய்ய வேண்டுமா என்பதை நீங்கள் பரிசீலிக்க வேண்டும். முடிந்தவரையில் அதற்கு ஒரு பல்கலைக்கழகம் தனியாகத் தேவையில்லை என்ற ஒரு கருத்து இருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரி மாணவர்கள் ஏற்கெனவே நடத்திக்கொண்டிருக்கும் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். இப்போது, அந்தப் பல்கலைக்கழகத்தை மூடச் சொல்லி இன்னொரு போராட்டத்திற்கு அவரே வித்திடுவது நியாயமா என்று கேட்க விரும்புகிறேன்.





**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் இன்னொரு போராட்டத்திற்கு வழி சொல்லவில்லை. நல்லதற்கு வழி சொல்கிறேன். முயன்று பேசிப் பார்க்கலாம், தேவையா என்று. இத்தனைப் பல்கலைக்கழகங்கள் எதற்கு? அதற்காகத்தான் நான் சொல்கிறேன். அதுமட்டுமல்ல, ஒரு சின்ன உதாரணத்தைச் சொல்கிறேன். அவினாசிலிங்கம், Deemed university இருக்கிறது. அது பெண்களுக்காகவே தனியாக இயங்குகிற ஒரு நிறுவனம். அங்கே அவர்கள் ஒரு சட்டக் கல்லூரியைப் பெண்களுக்காகத் தொடங்க வேண்டும் என்று அனுமதி கேட்டார்கள். முடியாது என்று சொல்லிவிட்டார்கள். ஏன் என்றால் இன்னொரு யூனிவர்சிட்டியிலே சட்டக் கல்லூரி இருக்கிறது, அனுமதிக்க மாட்டோம்; தமிழ்நாட்டிலே சட்டக் கல்லூரி என்று சொன்னால் அது சட்டப் பல்கலைக்கழகத்துடன் உட்பட்டுத்தான் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அவர்களை விட்டால் அவர்கள் அதை நன்றாகவும் நடத்துவார்கள். பெண்களுக்குத் தனியாக ஒரு கல்லூரியும் கிடைக்கும். அந்த மாதிரி இருப்பதனாலே, இந்த மாதிரி பிரச்சினைகள் எல்லாம் இருப்பதாலே நீங்கள் அழைத்துப் பேசினால் Director of Legal Studies இருக்கட்டும்; ஒரு Vice Chancellor Post வேண்டியதில்லை. அவருடைய பதவிக் காலம் எப்போது முடிகிறதோ, அப்போது அதனை முடிவுக்குக் கொண்டுவரலாம் என்று நான் நினைக்கிறேன். அதை நீங்கள் பரிசீலனை செய்யுங்கள். அப்படிப் பரிசீலிக்கும்போது ஏதாவது என்னுடைய உதவி தேவைப்படுமானால் நிச்சயமாக என்னாலான உதவியை நான் செய்வேன், அதற்கு உறுதுணையாக நிற்பேன் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்கள் ஒன்றாக இணைக்கப்படுவதுபற்றி ஒரு பெரிய சர்ச்சை வந்தது. ஆனால் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், சின்ன மாவட்டங்கள் இரண்டு மாவட்டங்கள் வேண்டுமா? அதற்காகிற செலவு, இப்போது நிதிப் பற்றாக்குறை இருக்கிறது. நிதி நெருக்கடி இருக்கிறது. இந்தமாதிரி நேரத்திலே மீண்டும் ஒரு மாவட்டத்தை உருவாக்கி பல கோடி ரூபாயை இதிலே கொண்டுபோய், கொட்ட வேண்டுமா என்றெல்லாம் கேட்டார்கள். அதுதான் காரணம் என்று சொன்னால் ஒரே மாவட்டமாக இருப்பதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் நான் சொல்ல விரும்புவது. மாவட்டத்தினுடைய தலைநகரால்தான் அங்கே பிரச்சினை. நான் விசாரித்த வரைக்கும் நடுநிலைமையிலே இருந்து சொல்லக்கூடியவர்கள் எல்லாம் என்னிடம் சொல்வது, பெரம்பலூர் என்பது மாவட்டத்தினுடைய ஒரு ஓரப் பகுதியிலே இருக்கிறது. ஒரு பக்கத்திலே தென்னாற்காடு

மாவட்டம், 10 மைல்கூட கிடையாது. இன்னொரு பக்கத்திலே திருச்சி மாவட்டம், அதுவும் பக்கத்திலேயே இருக்கிறது. ஆனால், அரியலூர் என்பது மையப் பகுதியிலே இருக்கிறது. எனவே அரியலூரை மாவட்டத் தலைநகராக அறிவிப்பீர்களேயானால் நிச்சயமாக அங்கே எதிர்ப்புகள் இருக்காது; போராட்டங்கள் வெடிக்காது என்று சொன்னார்கள். அதை நான் நம்புகிறேன். அதையும் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தொழிற்சாலைகள். தொழில்கள் நசிந்து வருகின்றன என்று எல்லோரும் பேசிவிட்டார்கள். பல தொழிற்சாலைகள் மூடப்பட்டு இருக்கின்றன. பஞ்சாலைகள் அனைத்தும் மூடப்பட்டு வருகின்றன. ஓடிக்கொண்டிருக்கின்ற பஞ்சாலைகளைவிட மூடப்பட்டுள்ள பஞ்சாலைகளின் எண்ணிக்கைதான் அதிகம். அதனால், எத்தனை பஞ்சாலைகள் மூடிக்கிடக்கின்றன என்று கேட்கலாம். அந்த அளவுக்கு நிலைமைகள் வந்துவிட்டன. எங்கள் மாவட்டத்திலே இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையில்லாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்திலே இஞ்ஜினீயரிங் தொழிற்சாலைகளை மூடிக்கொண்டு வருகிறார்கள். குறிப்பாக...

**திரு. இரா. திருமாவளவன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிடட்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** குறிப்பாக என்னுடைய தொகுதியிலே இருக்கிற டெக்ஸ்டூல் மிகப் பெரிய தொழிற்சாலை. ரொம்ப காலமாக இருக்கிற தொழிற்சாலை. பல சிறிய தொழிற்சாலைகளை உருவாக்குவதற்குக் காரணமாக இருந்த முதல் தொழிற்சாலை எது என்றால் அது டெக்ஸ்டூல்தான். அந்த டெக்ஸ்டூல் தொழிற்சாலை இன்றைக்கு மூடியாகிவிட்டது தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள்.

*முற்பகல் 11-20*

அதுபோல இன்னும் பல தொழிற்சாலைகள், அந்த மேட்டுப்பாளையம் ரோட்டை எடுத்துக்கொண்டால் எல்லாத் தொழிற்சாலைகளையும் மூடிக்கொண்டிருக்கிறார்கள். நன்றாக இயங்கிக்கொண்டிருந்த பிரிகால் இன்று கொஞ்சம் தத்தளித்துக்கொண்டிருக்கிறது என்று கேள்விப்படுகிறேன். எல்.எம்.டபிள்யு. கூட lay off கொடுக்கிறார்கள். இராமகிருஷ்ணா ஸ்டீல்ஸ் மூடியாயிற்று ஃபோர்ஜிங்ஸ் மூடியாயிற்று. இராஜேஷ் மில்ஸ் மூடியாயிற்று.



இன்னும் இருப்பது South India Viscose அது நன்றாக இயங்கிக்கொண்டிருந்தது. 3,000, 4000 தொழிலாளர்களுக்கு வேலை கிடைத்துக்கொண்டிருந்தது. அதை இப்போது மூடியிருக்கிறார்கள். சம்பளம் கொடுக்கவில்லை. நவம்பரிலிருந்து கொடுக்கவில்லை. . பிறகு தொழிலாளர்களோடு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். 3 தவணைகளில் அந்த இரண்டு மாதச் சம்பளத்தைக் கொடுத்துவிடுகிறோம் என்று சொன்னார்கள். 2 தவணைகள் கொடுத்து விட்டார்கள். டிசம்பருக்கான இன்னொரு தவணை பாக்கியை இன்றுவரைக்கும் கொடுக்கவில்லை. அதைக் கொடுக்க வேண்டும். அதுமட்டுமல்ல, ஜனவரி, பிப்ரவரிக்கு இன்னும் சம்பளமே கொடுக்கவில்லை. அந்தத் தொழிற்சாலையை மூடிவிட்டால் அந்த ஊருடைய பொருளாதாரம் மட்டுமல்ல, அந்த வட்டாரத்தினுடைய பொருளாதாரம், அந்தத் தாலுக்காவினுடைய பொருளாதாரம் முழுமையாகப் பாதிக்கப்படும். அதுதான் உண்மையான நிலைமை. வேறு தொழிற்சாலையே அங்கு இயங்கவில்லை. ஆகவே, எப்படியாவது அந்தத் தொழிற்சாலையினைத் தொடர்ந்து இயக்குவதற்கு நீங்கள் வழி காண வேண்டும். சென்ற ஆண்டு, நான் அறிந்த வரையில் அவர்களுக்கு நஷ்டம் கிடையாது. அந்த South India Viscose-க்கு சென்ற ஆண்டு 8 கோடி ரூபாய் இலாபம். இலாபம் ஈட்டியதற்குப் பின்னாலே அவர்கள் மின்சாரத்திற்கு பணம் 8 கோடி ரூபாய் கட்டவில்லை. அதனால் மின்சாரம் கொடுக்கவில்லை. இப்போது நிலைமை என்ன என்றால்— 7 தொழிற்சாலைகளில்— அந்த ரேயான் உற்பத்தி செய்கிற 7 தொழிற்சாலைகளில் நான்கு மூடியிருக்கிறது. இன்றைக்கு அது நல்ல முறையில் ஓடிக் கொண்டிருந்தால் அதற்கு டிமாண்ட் கிடைக்கும். 6,000 டன் Pulp இருக்கிறது என்று சொல்கிறார்கள். சில பேர் அதை எடுத்து விற்கலாம் என்கிறார்கள். சிலபேர் அதை முழுவதும் விற்றுவிட்டால் ஓட்ட முடியாது என்று சொல்கிறார்கள். எதுவாக இருந்தாலும் அதை விற்றால் அந்தத் தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்கலாம். அது ஒன்று. இப்போது அவர்கள் அரசை அணுகியிருக்கிறார்கள். எதற்கு? Lay off கொடுப்பதற்கு அனுமதி கேட்டிருக்கிறார்கள். நீங்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் lay off கொடுப்பதற்கு அனுமதி கொடுக்கக் கூடாது. இப்போது உள்ளே போகிறார்கள். தொழிலாளர்கள் உள்ளே போய் சும்மாவே வெளியே வந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் உள்ளேயாவது போகிறார்கள், அங்கே ஒன்றும் பெரிய வேலை இல்லை. அது முழுமையாக இயங்க வேண்டும். அதிலே நஷ்டம் என்பதை ஏற்றுகொள்ள முடியாது. சாதாரணமாக சிறிய தொகைக்கு வாங்கிய அந்தத் தொழிற்சாலை இன்றைக்கு பல கோடி ரூபாய் இலாபம் ஈட்டுகின்ற தொழிற்சாலை.

அதனால் B.I.F.R/-க்கு முன்னாலே இருக்கிறது. ஒருவேளை அவர்கள் நடத்த முடியவில்லை என்றால், அதை எப்படி இலாபகரமாக நடத்துவது என்பதை நிர்ணயம் செய்து நீங்கள் நடத்த வேண்டும். நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல அண்மையிலே ஈரோட்டிலே நடைபெற்ற தென் மண்டல ஜவுளி உற்பத்தியாளர்கள் மாநாட்டில் சில தீர்மானங்கள் இயற்றப்பட்டுள்ளன. முக்கியமாக மத்திய அரசு அறிவித்துள்ள சிட்டா நூலுக்கான hankyarn உற்பத்தி வரியை திரும்பப்பெற வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. இந்த வரி விதிப்பால் பாதிக்கப்படும் கைத்தறி, விசைத்தறி நெசவாளர்கள், வர்த்தகர்கள், நூல் வியாபாரிகள் போன்றவர்களின் அவல நிலையை தமிழக அரசு மத்திய அரசுக்கு எடுத்துரைத்து வரி விதிப்பைத் திரும்பப் பெற வற்புறுத்த வேண்டுமென்று நம் மாநிலத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பிரதமரிடம் வற்புறுத்த வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மத்திய மாநில அரசுகளுடைய கவனத்தை ஈர்ப்பதற்காக மார்ச் மாதம் 22 ஆம் தேதி மாநிலம் தழுவிய பந்த் போராட்டம் நடத்துவது என முடிவு செய்திருக்கிறார்கள். நாமும் மத்திய அரசுக்குச் சொல்வோம். அந்தச் சிட்டா நூல்தான் கைத்தறிக்குப் போகிறது. இத்தனை நாள் வரை சிட்டாநூலுக்கு வரியே கிடையாது. இப்பொழுது திடீரென்று சிட்டா நூலுக்கு வரி போட்டால்— கைத்தறி நெசவாளர்கள் எல்லாம் இப்போதே தத்தளித்துக்கொண்டிருக்கிறார்கள்— அவர்களுக்கு மிகவும் சிரமம் ஏற்படும். ஆதலால் சிட்டா நூலுக்கு வரி என்பதை நீக்குவதற்கு மத்திய அரசுக்கு நாமும் பரிந்துரை செய்ய வேண்டும். இந்த அரசும் பரிந்துரை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒரு முக்கியமான பிரச்சினை. இந்த ஆண்டு காமராஜருடைய நூற்றாண்டு விழா ஆண்டு. இந்த மாநிலத்திலே 10 ஆண்டு காலம் மிகச் சிறந்த முதலமைச்சராக விளங்கியவர். கல்வி அறிவே இல்லாதவர். படிக்காத மேதை என்று பெயர். கல்வி அறிவே இல்லை. தனக்குக் கிடைக்காத கல்வி அத்தனை பேருக்கும் கிடைக்க வேண்டுமென்று நினைத்தவர். அவர் காலத்திலேதான் பல தொழில்கள் பல அணைகள் நான் சொன்னதுபோல பரம்பிக்குளம் ஆழியாறு போன்ற பல அணைகள் எல்லாம் கட்டினார்கள். அப்படிப்பட்ட ஒரு மாமனிதருக்கு கர்மவீரர் என்று கருதப்படுகிற மாமனிதருக்கு நூற்றாண்டு விழா வருகிறது. அந்த நூற்றாண்டு விழாவை பாத்தியப்பட்டவர்கள் கொண்டாடுவது என்பது வேறு அதைக்கொண்டாடுவோம். ஆனால், அரசே கொண்டாட





வேண்டும். குறிப்பாக அவர் பிறந்த மண்ணில், விருதுநகரில் விழா ஏற்பாடு செய்து சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று தமிழக அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு வர வேண்டிய வரிப் பங்கீடு குறைந்திருப்பதோடு பல்வேறு நிதிகளும் குறைந்துவிட்டன. எனவே, ஆண்டு திட்டத்தின் அளவும் ரூ.6040 கோடியிலிருந்து ரூ.5200 கோடியாகக் குறைக்கப்பட்டுவிட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நிதி நெருக்கடி இன்னும் தீர்ந்தபாடில்லை. முழுமையாகத் தீர்க்கவில்லை, தீர்ந்தபாடில்லை. இந்நிலையிலே உயர்ந்த குறிக்கோள்களை அடைந்தே தீருவோம் என்று இந்த அரசு உறுதி பூண்டிருக்கிறது.

அஸ்ஸாம் மாநிலத்திலே நிதிப் பற்றாக்குறை அதிகமாக இருந்தும் அதை எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்று கூறாமலே அந்த அரசு தவிர்த்து இருக்கிறது. மத்திய அரசைப் பொறுத்தவரையில் இலாபத்தில் இயங்கும் பொதுத் துறை நிறுவனங்களைக் கூட தனியாரிடம் ஒப்டைத்து ரூ.12,000 கோடி வருவாயை ஈட்டுவோம் என்று கூறி இருக்கிறது. 42,000 அரசு ஊழியர்களைப் படிப்படியாகக் குறைப்போம் என்றும் கூறியிருக்கிறது. ஆனால், நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில் நிதி நெருக்கடி கடுமையாக இருந்தாலும் அதை நெஞ்சுறுதியுடன் சமாளிப்போம் என்றும் நிதி நிலை அறிக்கையில் அதற்குரிய அறிவிப்புகளை வெளியிடுவோம் என்றும் ஆளுநர் உரையிலே கூறப்பட்டிருக்கிறது. 'நாளை நமதே இந்த நாளும் நமதே' என்ற நம்பிக்கையில் செயல்பட்டு வரும் இந்த அரசு 'நாளை நமதே' என்பதை நிலைநாட்டும் வகையில் எடுக்கும் நல்ல நடவடிக்கைகளுக்கு நேசக் கரம் நீட்டுவோம் என்று கூறி, நன்றி தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** எனக்கு ஒரு நிமிடம் போதும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதச் சார்பின்மை என்கின்ற கொள்கை அனைத்து மதத்தினரையும் சம கண்ணோடு பார்ப்பது என்பது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, குஜராத்திலே கோத்ராவிலே யாரோ விஷமிகள், இரயிலில் பயணம் செய்தவர்களை கல்லால் அடித்தார்கள். தீயிட்டுக் கொளுத்தினார்கள் என்றார்கள். அதைப்போல் பின்னால் நடந்த கலவரத்திலும் பலர் கொல்லப்பட்டார்கள் என்று அவர் சொல்லியிருந்து கண்டித்திருந்தால் சரியான சம நோக்காக அது இருந்திருக்கும். ஆனால்

[திரு. எச். ராஜா] [2002 மார்ச் 15

அங்கு சொல்லும்போது மாத்திரம் சிறுபான்மை சமுதாயத்தினர் என்று சொன்னார். ** கொலை செய்யப்பட்டவர்கள் என்று சொல்லவில்லை. இங்கு மாத்திரம் சிறுபான்மையினர் என்று சொன்னார். இம்மாதிரியாக நாம் இரட்டை அளவுகோல் வைக்கின்ற காரணத்தினால்தான் மதச் சார்பின்மையே வலுவிழக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பெரும்பான்மை சமுதாயத்திற்கு எதிரான குற்றமும் குற்றம் என்று கண்டித்த காரணத்தினால்தான் பாரதிய ஜனதா கட்சி சம நோக்காகக் கருதி அதை வரவேற்றது.

முற்பகல் 11-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா அவர்கள் சொன்னதிலே **என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதையும் நான் சொல்லியிருக்கிறேன். கரசேவைக்குச் சென்றுவிட்டு வந்தவர்கள் என்று வேண்டுமானால் சேர்த்துக்கொள்ளுங்கள். பூஜைக்குச் சென்றுவிட்டு வந்தவர்கள் என்று சேர்த்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்கள் விரும்புகிற வகையிலே அந்த வாக்கியம் திருத்தப்படுகிறது. திரு. திருமாவளவன்.

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் உரையாற்றுகிற போது, அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களை இணைப்பது சம்பந்தமாக தலைநகரத்தை மாற்றியமைத்தால் சிறப்பாக இருக்கும் என்ற ஒரு கருத்தைக் குறிப்பிட்டார். அது ஒரு ஓரத்திலே அமைந்திருக்கிற காரணத்தால் அந்த மாவட்டத்தின் தலைநகரமாக அரியலூரை மாற்றி விடலாமா என்கிற அந்த யோசனையைக் குறிப்பிட்டார். இந்த இடத்திலே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். முன்னாள் முதல்வர் மரியாதைக்குரிய எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழ்நாட்டின் தலைநகரத்தை திருச்சிக்கு மாற்றிவிடலாம் என்று ஒரு யோசனையைச் சொன்னார். அப்படியென்றால்....

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2002 மார்ச் 15]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமாவளவன், அவருடைய கருத்தைச் சொன்னார். முடியுங்கள், பெரிய பிரச்சினையில் கொண்டு போய் விட்டுவிடாதீர்கள்.

**திரு. இரா. திருமாவளவன்:** தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையும் ஒரு ஓரத்திலே இருக்கிறது. அப்படியென்றால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமாவளவன், உறுப்பினர் அவருடைய கருத்தைச் சொன்னார் (குறுக்கீடு) அவர் அவருடைய கருத்தைச் சொன்னார். பெரம்பலூர் மாவட்டம் சம்பந்தமாக அவருடைய கருத்தைச் சொன்னார்.

**திரு. இரா. திருமாவளவன்:** அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்கள் இணைப்பை விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு ஏற்கவில்லை. அதிலே எங்களுக்கு உடன்பாடு இல்லை. Decentralisation என்பதுதான் ஒரு ஜனநாயக நாட்டிலே அதிகாரத்தினை பரவலாக்க ஏதுவாக இருக்கும். பிரிந்த காதலர்களை இணைக்கலாம்; பிரிந்த குடும்பத்தை இணைக்கலாம். ஆனால் பிரிக்கப்பட்ட மாவட்டத்தை இணைக்கக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய கருத்து ஏற்கப்படுகிறது. திரு. துரைமுருகன். மன்னிக்க வேண்டும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், துரைமுருகன். (குறுக்கீடு) துணைத் தலைவர். (சிரிப்பு)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநரால் இந்த மாமன்றத்தில் படிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையின் மீது (குறுக்கீடு) ஆளுநர் உரை... (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், என்ன இன்றைக்கு ரொம்ப குழம்பிப் போயிருக்கிறீர்கள். (சிரிப்பு)

**திரு. துரைமுருகன்:** இல்லை, நான் சொல்வதை . . .

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அவரை எதிர்க்கட்சித் தலைவர் என்று குறிப்பிட்டுவிட்டதால், புரமோஷன் கிடைத்துவிட்டதே என்ற பரவசத்தில் அவர் ஏதேதோ பேசிக்கொண்டிருக்கிறார். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், இப்போது பதவியிறக்கம் செய்யப்பட்டாகிவிட்டது, எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. துரைமுருகன்:** அப்படியல்ல, நான் சொல்வதையெல்லாம் என்ன சொன்னாலும் கேட்டுக்கொண்டிருக்கிறீர்களா அல்லது உஷாராக இருக்கிறீர்களா என்பதற்காக நான் சொல்லிப் பார்த்தேன் *(சிரிப்பு)* அவ்வளவுதான், வேறொன்றுமல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், இதிலிருந்தே தெரிகிறது, என்ன சொன்னாலும் கேட்டுக்கொண்டிருக்க மாட்டார்கள் என்று தெரிகிறது. *(சிரிப்பு).*

**திரு. துரைமுருகன்:** அது இரு பக்கத்திலும் சரியாக இருக்க வேண்டும். கரெக்ட்தான். நியாயம்.

ஆளுநருடைய உரையின்மீது நான் சார்ந்திருக்கிற கட்சியின் சார்பில் சில கருத்துகளை இந்த மாமன்றத்திலே வைக்க விரும்புகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இது கன்னிப் பேச்சு என்றால் ஆச்சரியமாக இருக்கும்? இந்த மாமன்றத்தில் நான் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சியிலே உறுப்பினராக இருந்திருக்கின்றேன். அமைச்சராக இருந்திருக்கிறேன். அப்போதெல்லாம் பேசியிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் சொன்னதைப்போல் ஒரு பிரதான எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவராக இருந்து பேசுகிற காரணத்தால் இது எனக்கு கன்னிப் பேச்சு. ஏனென்றால், கடந்த மூன்று நாட்களாக நான் இந்தச் சபையில் பார்க்கிறேன். முதன்முறையாக யார் பேசினாலும் அது கன்னிப்பேச்சு என்கிறார்கள். கன்னிப் பேச்சு என்றால், அதற்கு என்ன பொருள் என்றால், முதன்முதலாக இந்த மாமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர் உரையாற்றுகிறபோது பேசினால் அது கன்னிப் பேச்சு. ஆனால், சான்ஸ் கிடைக்காமல் இருந்து, நாம் இரண்டாவது முறை, மூன்றாவது முறை தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த பிறகு பேசும் பேச்சை கன்னிப் பேச்சு என்கிறார்கள். ஆனால் எது எப்படியிருந்தாலும் எனக்கு ஒரு வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி.

ஒரு கஷ்டம் இப்போதுதான் எனக்குப் புரிகிறது. அது என்னவென்றால், கூட்டத்திலே, மாநாட்டிலே எல்லாம் கடைசியாகப் பேசினால், எல்லா பாயிண்டுகளையும் எக்சாஸ்ட் பண்ணிவிடுவோம். அதற்குப் பிறகு பேச





வேண்டியது வந்தால், 'என்னுடைய நண்பர் சொன்னதைப்போல, அவர் சொன்னதைப் போல' என்று சொல்லி பேசுவதைப்போல, அந்தக் கதைக்கு இப்போது வந்துவிட்டேன் நான். எல்லோரும் இந்த நிதிநிலை அறிக்கையில வரி— மன்னிக்க வேண்டும். ஆளுநர் உரையில்—இரண்டாவது முறை டெஸ்ட் பண்ணிப் பார்த்தேன். *(சிரிப்பு)*

*முற்பகல் 11-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டாவது முறையும் விழிப்பாக இருக்கிறார்கள். *(சிரிப்பு)*

**திரு. துரைமுருகன்:** ஆளுநர் உரையில் ஒவ்வொரு வரியையும் எழுத்தையும் பற்றிப் பேசியிருக்கிறார்கள். ஆகையினால் என்னைப் பொறுத்தவரையில் அவர்கள் active voice-ல் சொன்னதை நான் passive voice-ல் சொல்லலாம். அவ்வளவுதான். இருந்தாலும், ஒரு நிகழ்ச்சியை நான் உங்கள் முன்னால் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நீண்ட நாட்களுக்குப் பிறகு இந்த அவையில் நாம் கூடியிருக்கிறோம். பொதுவாக மாரிக்கால தொடர் கூட்டம் என்று ஒரு கூட்டம் ஒரு குறுகிய காலத்திலே நடைபெறுவது உண்டு. ஆனால் இந்த முறை மாரிக்கால தொடர் கூட்டம் நடைபெறவில்லை. மாரிக்காலத்தை மறந்து நாம் கோடைக்கால தொடர் கூட்டத்திற்கு வந்திருக்கிறோம். ஒரு ஜனநாயக அமைப்பு முறையை ஏற்றுக்கொண்ட ஆட்சி முறையில், சட்டமன்றம் ஒரு இருதயம் போன்றது. அதனால்தான் இந்த மன்றத்திற்கு அதிகமான அதிகாரம் உண்டு, பாராளுமன்றமானாலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற சட்டமன்றமானாலும். எனவே இந்த மன்றம்— இப்படிப்பட்ட மன்றங்கள் ஆண்டுக்கு எத்தனை முறைகூட வேண்டும். எவ்வளவு இடைவெளிக்குள்ளே கூடவேண்டும் என்று நம்முடைய அரசியல் மேதைகள் நியதிகளை வகுத்திருக்கிறார்கள். அடிக்கடி கூடினால்தான், பேசினால்தான் மக்களுடைய பிரச்சினைகளை இங்கே வாதிக்க முடியும். இந்த மன்றம் எல்லாவற்றிலும் உயர்ந்தது. பெரும்பான்மையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிற உங்களுக்கு ஆளுகிற அதிகாரத்தையும், வரி விதிக்கிற அதிகாரத்தையும், வசூலிக்கின்ற அதிகாரத்தையும் Command of Sovereign என்று ஆஸ்டின் சொன்னதைப்போல்—இந்த ஆஸ்டின் அல்ல, Jurisprudence ஆஸ்டின் சொன்னதைப்போல் உங்களுக்கு அந்த அதிகாரத்தை வழங்கியிருக்கிறது. இதே மன்றம்தான் எதிர்க்கட்சியிலே அமர்ந்திருக்கிற எங்களுக்கு, ஆளும் கட்சி நன்மை செய்தால் பாராட்டி ஊக்குவிக்கவும், தவறு இழைத்தால் சுட்டிக்காட்டவும் எதிர்க்கட்சிகளுக்கு அந்த உரிமையையும் வழங்கியிருக்கிறது. எனவே இந்த மன்றத்தை அடிக்கடி

கூட்ட வேண்டிய அந்த மரபை இந்த அரசு மீறியிருக்கிறது அல்லது மறந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டுவதோடு, இனியும் அப்படிப்பட்ட நிலைமை உருவாகக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது, சென்ற தொடர் கூட்டத்திற்கும் இந்தத் தொடர் கூட்டத்திற்கும் இடையில் ஒரு முக்கியமான பிரச்சினை இல்லையே, கூடிப் பேசலாம் என்பதற்கு மிகப் பெரிய பிரச்சினை ஒன்றும் உதயமாகவில்லையே என்று சொல்ல முடியாது. காரணம் சென்ற தொடர் கூட்டத்திற்கும் இந்தத் தொடர் கூட்டத்திற்கும் இடையில் சுமார் 4,000 கோடி ரூபாய்க்கு வரிவிதிப்பு, சில கொள்கை முடிவுகளை இந்த அரசு எடுத்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 4,000 கோடி ரூபாய் என்பது சாதாரணமான தொகை அல்ல. எனவே இந்த மன்றத்தைக் கூட்டி அதிலே அறிவித்திருக்க வேண்டும். நீங்கள் கேட்கலாம், மன்றம் இல்லாத நேரத்தில் Ordinance போட்டு செய்ய முடியாதா? அதற்கு விதி இருக்கிறதே என்று. விதி விலக்கே விதியாகி விடாது. ஆபத்துக்குத்தான் ஆக்ஸிஜன் வைப்பார்கள். அதையே ஆயுள் பூராவும் வைத்துக்கொள்ள முடியாது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு தனக்குள்ள அதிகாரங்களுக்குட்பட்டுத்தான் நடவடிக்கை எடுத்திருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவருடைய கட்சி மத்திய அரசில் அங்கம் வகிக்கிறது. அடிக்கடி அங்கே பெட்ரோல், டீசல் விலையை உயர்த்துகிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அப்பொழுதெல்லாம் நாடாளுமன்றத்தைக் கூட்டி அனுமதியைப் பெற்றுத்தான் அந்த விலை உயர்வைச்செய்கிறார்களா?

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பொறுத்தவரையில், மத்திய அரசா, மாநில அரசா என்று சொல்லவில்லை. ஒரு ஜனநாயக நெறிமுறையைச் சொல்லுகிறேன். அவ்வளவுதான். இதுதான் நெறிமுறை என்று சொல்லுகிறேன். ஆகையினால் என்னென்ன வரிகளை விதித்தீர்கள் என்பதை நான் நீண்ட நேரம் இங்கே பேச விரும்புவில்லை. (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியென்றால் நீங்கள் அதைக் கண்டித்திருக்க வேண்டாமா?

**திரு. துரைமுருகன்:** நண்பர் திரு. ஹேமச்சந்திரனுக்கு அதிலே தமது பேச்சைப் பொருத்திக்கொள்ள வேண்டுமானால் ஆட்சேபணை இல்லை. (குறுக்கீடு)



முற்பகல் 11-35

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. துரைமுருகன்:** ஆனால் பேருந்துக் கட்டண உயர்வு..

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி நீங்கள் உட்காருங்கள். துரைமுருகன் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) துணைத் தலைவர் பேசிக்கொண்டிருக்கிறார், அவர் இப்போது பதில் சொல்வார். திரு. துரைமுருகன், நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேருந்துக் கட்டண உயர்வு— ஏனென்றால் எல்லாவற்றையும் படிப்பதற்கு நேரமாகும். எனவே தலைப்புச் செய்திகளை மாத்திரம் வாசிக்கிறேன். பேருந்துக் கட்டண உயர்வு, மின் கட்டண உயர்வு, பால் விலை உயர்வு, சமையல் எண்ணெய் விலை உயர்வு, யூரியா விலை உயர்வு, பருத்தி பின்னலாடை வரி உயர்வு, படிப்புக் கட்டண உயர்வு, வாகனங்களுக்கு கூடுதல் கட்டணம், அரசு அலுவலர், ஆசிரியர் மற்றும் பல்வேறு தொழிலாளர்கள் பெற்று வந்த சலுகைகள் ரத்து, சிமெண்டிற்கு நுழைவு வரி, அரசு அலுவலர்களுக்கு சரண்டர் லீவில் சலுகை ஒத்திவைப்பு, பணியாளர்களின் ஏண்ணிக்கையில் 30 சதவிகிதம் . . .

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில பொருட்களுக்கு நுழைவு வரி விதிக்கப்படும் என்று கடந்த ஆண்டு இதே அவையில் தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையிலேயே தெளிவாக உள்ளது என்பதை அவருக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போன கூட்டத்தொடரிலேயே நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு விண்ணப்பம் வைத்தேன். அதை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். எனக்குத் திருப்பி அதைச் சொல்வதிலே ஒன்றும் கஷ்டம் இல்லை. முதலமைச்சர் அவர்கள் நல்ல விஷயத்தோடு உள்ளவர்தான், deep-ஆகப் படித்துவிட்டு வருகிறார்கள். பட்டு பட்டென்று பாயிண்டைச் சொல்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு அதிலே ஒன்றும் மாறுபட்ட கருத்து அல்ல. ஆனால் நான் அப்போதே சொன்னேன், தாங்கள் அதைக் குறித்துக் கொள்ளுங்கள், அண்ணா அவர்கள் பார்லிமெண்ட்டிலே சொன்னது மாதிரி. 'Correct me if I am erroneous.

[திரு. துரைமுருகன்] [2002 மார்ச் 15

Convince me if you have solid facts. அதிலே எனக்கு மாறுபட்ட கருத்து அல்ல. பின்னர் சொல்லுங்கள் என்று கேட்டேன். போன முறை ஒத்துக்கொண்டு போனீர்கள். போன தடவை, இந்த தடவை என்றல்ல, திரும்பவும் renewal பண்ணுகிறேன். ஐந்து வருடத்திற்கு நமக்குள் இது ஒப்பந்தம். நாங்கள் பேசியதற்குப் பிறகு நீங்கள் என்ன பதில் சொன்னாலும் அதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேராசிரியருக்குப் பக்கத்திலே இருக்கிற காரணத்தால் ரொம்ப பக்குவப்பட்டுவிட்டீர்கள் என்று கருதுகிறேன். (சிரிப்பு)

**திரு. துரைமுருகன்:** எனக்கு பக்குவம் அல்ல. காரணம், ஆளுங்கட்சியிலே உள்ள அமைச்சர்கள்தான் அதிகமாகக் குறுக்கிடுவார்கள், எதிர்க்கட்சி வரிசையிலே இருப்பவர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குறுக்கிட்டுவிட்டால் விளக்கங்கள் பெறமுடியாது. அதற்காகத்தான் சொல்கிறேன். முதலமைச்சரைக் கேட்டு அவர்கள் பின்னாலே சொல்லலாம். எனவே இப்படி பணியாளர்களின் எண்ணிக்கையிலே 30 சதவிகிதம் குறைப்பது என்ற முடிவு. இப்படி ஒரு மினி-பட்ஜெட்டையே இந்த மாமன்றத்திலே உள்ள உறுப்பினர்களைக் கலக்காமல் நீங்கள் படைத்திருப்பது, இது ஜனநாயக நெறிமுறைக்கு எதிரானது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இது மிகப் பெரிய பிரச்சினை. சரி, இவ்வளவு பெரிய பிரச்சினையிலேதான் நீங்கள் எங்களைக் கலக்கவில்லை. பாராளுமன்றத்தைப் பார்த்தீர்களா என்று எல்லாம் கூடச் சொன்னீர்கள். ஒரு சின்ன பிரச்சினையிலாவது இந்த மாமன்ற உறுப்பினர்களைக் கொஞ்சம் மதிக்க வேண்டாமா? அமைச்சர்களுக்கு எம்.எல்.ஏக்களுக்கு சம்பளத்திலே ஒரு 4,000, 3,000 ரூபாய் ஏற்றிக் கொடுத்தீர்கள், நாங்கள் வேண்டாமென்று சொல்லவில்லை, கொடுத்தால் கொடுங்கள். கொடுக்கவில்லையென்றால் விட்டுவிடுங்கள், கஷ்டம் என்றால் எடுத்து விடுங்கள், அதிலே எனக்கு மாறுபட்ட கருத்து அல்ல. இந்த மன்றத்தில் அறிவித்த அந்தச் செயலை மீண்டும் இந்த மன்றம் கூடுகிறபோது, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எழுந்து நின்று, அரசுபெரும் நிதி நெருக்கடியில் இருக்கிறது, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே உயர்த்தப்பட்ட சம்பளத்தை நாங்கள் நிறுத்தி வைத்திருக்கிறோம். அல்லது நாங்கள் தரப்போவதில்லை என்று சொல்லி இருந்தால், எங்களுக்கு மரியாதை இருந்திருக்கும்.



2002 மார்ச் 15]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், அது தலைவர்களுக்கு இல்லை, உறுப்பினர்களுக்கு என்று சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** உறுப்பினர்களைத்தான் சொல்கிறேன். இருந்தாலும் பரவாயில்லை; ஆனால் அதை விட்டுவிட்டு, ஒரு கிராமப்புற பாஷையிலே சொல்ல வேண்டுமென்றால், ஒரு கடுதாசி போட்டு விட்டீர்கள். (சிரிப்பு) இந்த attitude இருக்கிறதே, மன்ற உறுப்பினர்களை, அந்தச் செயல் insult பண்ணுகிற மாதிரி இருக்கிறது. நீங்கள் பணம் கொடுங்கள், கொடுக்காமல் போங்கள், வைத்துக்கொள்ளுங்கள், கஷ்டம் இருந்தால் சம்பளமே இல்லை என்றுகூடச் சொல்லுங்கள், நாங்கள் பணி செய்கிறோம், எங்களுக்கு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் அவர்களே, அதற்கு நான் ஒரு விளக்கத்தைச் சொல்லிவிடுகிறேன். அதாவது நல்ல செய்தியாக இருந்தால் சொல்லிவிடலாம். அரசு மன வருத்தத்தோடு இப்படி நிறுத்தி வைக்க வேண்டிய நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிவிக்க வேண்டிய சூழ்நிலையில் இருந்த காரணத்தினால்தான் கடுதாசி மூலமாகத் தெரிவிக்க வேண்டியதாகி விட்டது. (சிரிப்பு)

**திரு. துரைமுருகன்:** நல்ல வக்கீல், நமது சபாநாயகர் இந்த ஆட்சிக்கு, (சிரிப்பு) எனவே அதைப்போல, பெரிய விஷயத்திலேயும் எங்களை நீங்கள் கலக்கவில்லை. ஒரு சிறிய விஷயத்திலேயும் இந்த மன்றத்திற்கு நீங்கள் உரிய மரியாதையைத் தரவில்லை என்பதை வருத்தத்துடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன். தலைவர் அவர்களே, இனி இந்த நிலை வராமல் இந்த மன்றத்திற்குரிய கௌரவத்தை அளியுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-40*

இரண்டாவது, ஆளுநர் உரை. ஆளுநர் உரை என்பது அடுத்து வரப்போகும் நிதிநிலை அறிக்கை என்கின்ற வரவு-செலவுத் திட்டக் காவியத்திற்கு எழுதப்பட்டிருக்கும் பாயிரம் போன்றது. ஒ[illegible] நூலின் கருத்தை பாயிரத்தைப் படித்தாலே புரியும். சிலப்பதிகாரக் [illegible]யத்தில் முதலில் இருக்கிற பாயிரம் மூலக் கருத்தை மூன்று வா[illegible]லேயே சொல்லிவிடுகிறது.

[திரு. துரைமுருகன்] [2002 மார்ச் 15

"அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவதும்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏற்றுதலும்
ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும் என்பதும்
சூழ்வினை சிலம்பு காரணமாக சிலப்பதிகாரம் என்னும் பெயரால் நாட்டும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்'' என்று பாயிரம் தெரிவித்திருக்கிறது. எனவே, பின்னாலே வரப்போகிற நிதிநிலை அறிக்கையிலே இருக்கின்ற பெரிய திட்டங்கள் இவற்றையெல்லாம் முன்னாலே சுட்டிக்காட்டுகிற ஓர் உரையாகத்தான் ஆளுநர் உரை அமைந்திருக்க வேண்டும். இந்த ஆளுநர் உரையில் காணப்படும் திட்டங்கள், யோசனைகளையெல்லாம் எல்லோரும் பாராட்டினார்கள். படிப்பதற்கு நன்றாக இருக்கிறது. நினைத்துப் பார்ப்பதற்குக்கூட பரவாயில்லையே என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனால் அது நடைமுறைக்கு வருகிறபோதுதான் ஏக்கமாக இருக்கிறது. ஐயோ, ஒன்றும் நடக்காமல் போய்விட்டதே என்று. ஏன், நீங்கள் கேட்கலாம், இப்போதுதானே இதிலே விவாதமே நடக்கிறது; அதற்குள்ளே எப்படி நடைமுறைக்கு இது வரவில்லை என்று நீங்கள் கேட்கலாம். இப்போது இந்த ஆளுநர் உரைமீது விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இதேபோன்று சென்ற ஆண்டு ஓர் ஆளுநர் உரை இந்த மாமன்றத்திலே படிக்கப்பட்டது. அப்போதும் பல திட்டங்களைச் சொன்னார்கள். படிக்க நன்றாக இருந்தது. நினைக்க இனிமையாக இருந்தது. ஆனால் அது நடைமுறையில் இல்லாமல் போகிறபோது, நான் சொன்ன அந்த ஏக்கம் வருகிறது. சென்ற ஆண்டு இந்த ஆட்சியில் அந்த ஆளுநர் உரையில், "இவ்வரசு மின்னணு வாக்குப் பதிவுச் சாதனங்களைப் பயன்படுத்துவதை எதிர்க்கிறது. இதனை இந்தியத் தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்லும். தகுதி வாய்ந்த ஒரு கோடிக்கு மேற்பட்ட வாக்காளர்கள் புகைப்பட அடையாள அட்டைகள் இருந்தும், அவர்களுடைய பெயர் வாக்காளர் பட்டியலிலிருந்து அகற்றப்பட்டுவிட்டதால் வாக்களிக்காமல் தடுக்கப்பட்டனர். இவ்வரசு இதனையும் தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்று, உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறுவதற்கு முன்பாகவே, underline முன்பாகவே, இந்த முரண்பாடுகளை நீக்க ஏற்பாடு செய்யும்" என்று சென்ற முறை ஆளுநர் உரையிலே நீங்கள் குறிப்பிட்டீர்கள். ஆனால் அந்த மின்னணு வாக்குப்பதிவு முறை நீக்கப்பட்டதா என்றால், இல்லை. அதைச் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை. அதேபோன்றுதான் சமீபத்திலே நடந்த இடைத்தேர்தல் வரையில்...



2002 மார்ச் 15]

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Electronic Voting Machines பயன்படுத்த வேண்டும் என்று கூறுவது, அதற்கான ஆணை பிறப்பிப்பது மத்திய தேர்தல் ஆணையம். இந்தக் கருவிகள் வேண்டாம் என்று மத்திய தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்கிறோம் என்றுதான் சொன்னோம். அதைப் பயன்படுத்தக்கூடாது என்று சொல்கின்ற அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை. அது மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரியாதா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் தெரியும். நீங்கள் அதைச் சொல்லியிருக்கிறீர்கள். இவ்வரசு இதனையும் தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்லும் என்று சொல்லியிருந்தால், கொண்டு போனார்கள்; அவர்கள் கவனிக்கவில்லை என்று சொல்லலாம். ஆனால் அதற்கு அவர்கள் அடுத்து சொல்வது, உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறுவதற்கு முன்பாகவே இந்த முரண்பாடுகளை நீக்க ஏற்பாடு செய்யும் இந்த அரசு என்று சொல்லியிருக்கிறீர்கள். செய்யவில்லை என்று சொல்கிறேன்: அவ்வளவுதான்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாக்காளர் பட்டியலில் காணப்பட்ட முரண்பாடுகளை நீக்குவது குறித்து இந்தியத் தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்கு எடுத்துச் செல்வோம் என்றுதான் கூறினோம். அதைச் செய்திருக்கிறோம். அந்த முரண்பாடுகளை அவர்கள் களையவில்லை என்றால் அது மாநில அரசின் குற்றமல்ல.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, புகைப்படம் மட்டுமல்ல; இவ்வரசு மின்னணு வாக்குப் பதிவு சாதனங்களைப் பயன்படுத்துவதை எதிர்க்கிறது. இதனை இந்தியத் தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்லும். நம்பர் ஒன். இரண்டாவது, தகுதிவாய்ந்த ஒரு கோடிக்கும் மேற்பட்ட வாக்காளர்கள், புகைப்பட அடையாள அட்டைகள் இருந்தும், அவர்களுடைய பெயர் வாக்காளர் பட்டியலிருந்து அகற்றப்பட்டுவிட்டதால் வாக்காளர் தடுக்கப்படுகிறார்கள். எனவே இவ்வரசு இதனையும், இரண்டாவது சொன்ன அந்தக் கருத்தையும் சேர்த்து தேர்தல் ஆணையத்திற்குக் கொண்டு போகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். இரண்டையும்தான் கொண்டு போகிறோம் என்று

சொல்லியிருக்கிறீர்கள். இரண்டையும் செய்கிறோம் என்றுதான் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் தேர்தல் ஆணையம் செய்யவில்லை என்று சொல்லியிருக்கிறீர்கள். பரவாயில்லை. அடுத்து (குறுக்கீடு) சொன்னீர்கள் செய்யவில்லை என்று சொல்கிறேன்.

*முற்பகல் 11-45*

அடுத்த பாயிண்ட் சென்ற முறை சொன்னது காவல் படையை உலக அளவில் தலைசிறந்த படைகளுக்கு ஈடாக, சட்டத்தைச் செயலாக்கும், தகுதி வாய்ந்த, திறமையான அமைப்பாக மாற்ற இவ்வரசு அதிக முக்கியத்துவம் அளிக்கும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதைத்தான் இங்கே பேசிய நம்முடைய மாண்புமிகு மணி அவர்கள்கூடச் சொன்னார்கள். இதுவரையிலே என்ன செய்திருக்கிறீர்கள் என்று கேட்டார். எங்களுக்குத் தெரிந்து இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் பதிலிலே சொன்னால் நான் அதை ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மூன்றாவதாக, நீங்கள் சென்றமுறை சொன்னதில், 'ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்பதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு இவ்வரசு செயல்பட்டு, அதே நேரத்தில் அதே நோக்கத்தை எய்தும் வகையில் வீட்டுமனை விரைவு ஒதுக்கீடு திட்டம் ஒன்றை வகுக்கும்' என்று சொல்லி இருக்கிறீர்கள், போன ஆளுநர் உரையில். நான் தெரிந்துகொள்ள விரும்புவது, அப்படி ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்பதை, அந்தத் திட்டத்தை விரைவுபடுத்தி எவ்வளவு பேருக்கு அப்படி வழங்கியிருக்கிறீர்கள் என்ற புள்ளிவிவரங்களை நீங்கள் தெரிவித்தால் அது நாட்டிற்கும் நல்லதாக இருக்கும். எனக்கும் தெரிவித்ததைப் போல இருக்கும்.

நான்காவது, 'ஒன்றியங்களின் தலைவர்களை மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்க வழிவகை செய்வதற்கும் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்த நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசு வற்புறுத்தப்படும்.' அது நல்ல திட்டம்தான். வற்புறுத்தினீர்களா, எழுதினீர்களா என்பதுதான் கேள்வி. எழுதியிருந்தால் பரவாயில்லை. அதைக்கொண்டு வந்தால் நல்லது.

அடுத்து கூட்டுறவுத் தேர்தல். 2001 செப்டம்பர் திங்களில் நடத்தப்படவிருக்கும் தேர்தல் மூலம் இந்த மாநிலத்திலுள்ள கூட்டுறவு நிறுவனங்களில் உண்மையான ஜனநாயக உணர்வையூட்ட இவ்வரசு விழைகிறது என்று சொன்னீர்கள். 2001 செப்டம்பரிலேயே கூட்டுறவுத்





தேர்தல் நடக்கும் என்று சொன்னீர்கள். நடக்கவில்லை. போன முறை சொன்னீர்கள். ஏமாற்றம் அவ்வளவுதான். அதேபோன்று பொது விநியோக முறையைச் சீரமைக்கவும் மாற்றியமைக்கவும் இவ்வரசு உயர் முன்னுரிமை அளிக்கும். தொழிற்சாலைகளை ஏற்படுத்த, ஆய்வு செய்ய, வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்படும். வெளிநாட்டு முதலீடுகளைப் பெறுவதற்கு ஒரு கன்சார்ட்டியம் அமைக்கப்படும். தொழில் முனைவோர்கள் பன்னாட்டு சந்தைகளை எளிதில் அணுக மாவட்டங்களில் செயற்கைக்கோள் தரை நிலையங்கள் அமைக்கப்படும் என்று சொன்னதோடு, திருமுல்லைவாயிலில் ஆயிரம் ஏக்கரில் சிறுதொழிற்பேட்டை அமைக்கப்படும். தக்கதோர் இடத்தில் மகளிருக்கென ஒரு தொழிற்பேட்டை அமைக்க முனைப்பான நடவடிக்கை எடுக்கப்படும். தக்கதோர் இடத்தை முதல்வர் தேர்ந்தெடுத்து அதற்காக ஒதுக்கீடு செய்யப்படும். முந்தைய அரசால் கைவிடப்பட்ட அனல் மின் நிலையத் திட்டங்கள் இம்மாநிலத்தின் மொத்த மின்சக்தியின் தேவைகளைக் கருத்தில்கொண்டு மீண்டும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் மகளிருக்கு 33 சதவிகித இடஒதுக்கீடு அளிப்பதற்காக வகை செய்யும் சட்டம் இயற்ற நடவடிக்கை எடுக்கப்படும்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது இன்னோர் ஆளுநர் உரை மாதிரி இருக்கிறது.

**திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை, சொன்னார்கள். படித்துவிடுகிறேன். சீக்கிரத்தில் சொல்லிவிட்டுப் போய் விடுகிறேன்: 5 இலட்சம் பெண்களுக்கு தொழில்முனைவோர் பயிற்சி அளிக்கும் திட்டம், வறிய குடும்பங்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு இன்னல்தரும் கள்ளச்சாராய அவலத்தைப் போக்க இவ்வரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும். கச்சத் தீவை மீட்க நடவடிக்கை எடுக்கும் என்று இவ்வளவு திட்டங்களை போன முறை சொன்னீர்கள். இந்தத் திட்டங்களிலே எத்தனை நிறைவேற்றி இருக்கிறீர்கள். எத்தனை நடைமுறையில் இருக்கிறது. எத்தனை முனைப்பாக இருக்கிறது என்பதைத் தெரிவித்தால் நன்றாக இருக்கும். ஆகையினால் நாங்கள் சொல்கிறோம். இத்தனைத் திட்டங்களை அறிவித்தீர்கள். வாக்குறுதிகளைத் தந்தீர்கள். ஆனால் நடைமுறைப்படுத்தாத பொழுதுதான் ஏமாற்றம் அளிக்கிறது. ஆகையினாலேதான் இந்த கவர்னர் உரையிலேயும் நீங்கள் சொன்னதை நிறைவேற்றுவீர்களா என்கின்ற ஓர் நிலைமை எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதிலேகூட, இங்கே பார்த்தால் நான் முன்பு சொன்னேன். போன முறை சொன்னதைப் போலவே, வளமான வாக்குறுதிகளை இந்த ஆளுநர்

உரையிலும் நீங்கள் தெரிவித்திருக்கிறீர்கள். அப்படிப்பட்ட திட்டங்களிலே ஒன்று. இங்கே நான் சற்றுமுன் குறிப்பிட்டதைப்போல, 'தொழில், வணிக, வேளாண்மை ஆகியவற்றின் நீடித்த வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும், மின் உற்பத்தி அதிகரிக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்' என்று இந்த ஆளுநர் உரையிலே சொல்லியிருக்கிறீர்கள். நியாயம்தான். அதைத்தான் நான் திருப்பிக் கேட்டேன். தேவை மின் சக்தி; அதற்காக, மின் திட்டங்களை, முந்தைய அரசால் கைவிடப்பட்ட அனல் மின் நிலைய திட்டங்கள் தற்போது மீண்டும் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொன்னீர்களே, அதுமாதிரி எத்தனை அனல் மின் திட்டங்களை நீங்கள் எடுத்திருக்கிறீர்கள் என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் *11-50*

போன முறை சொன்னதுதான். முல்லை-பெரியார் அணையின் உயரத்தை *152* அடியாக உயர்த்திட கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவோம் என்று சொன்னீர்கள். அதை அன்றைக்கே பேசினோம். இந்த முறை என்ன சொல்லியிருக்கிறீர்கள்? மத்திய அரசு ஏற்படுத்திய ஒரு வல்லுநர் குழு தெரிவித்த முடிவுகளுக்கிணங்க முல்லை-பெரியார் அணையின் உயரத்தை முதற்கண் *142* அடியாகவும், பின்னர் *152* அடியாகவும் உயர்த்த அனுமதி கோரி, உச்சநீதிமன்றத்தில் இந்த அரசு முறையீடு செய்யும் என்று தெரிவித்திருக்கிறீர்கள் இந்த முறை. ஆக, போன முறை கேரள அரசோடு பேசுவோம் என்று சொன்னீர்கள். பேசுவதற்கே நேரம் கேட்டோம். கிடைக்கவில்லை என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் இப்போது உச்ச நீதிமன்றத்திற்குச் செல்வோம் என்கிறீர்கள். ஏற்கெனவே ஒரு வழக்கு உச்ச நீதிமன்றத்தில் இருக்கிறது. கேரளா ஹைகோர்ட்டில் சில வழக்குகள் போட்டார்கள். நம்முடைய ஊரிலேயும் போட்டார்கள். இரண்டும் உச்சநீதிமன்றத்திலே இருக்கிறது. அதிலே, தமிழக அரசு. தம்மையும் இணைத்துக் கொண்டோ அல்லது வேறுவிதமாக செய்தாலோ எது எப்படியோ, *142* அடிக்கு தண்ணீரைக் கொண்டு வந்து நிறுத்தினால், அது பாராட்டுக்குரியதாக அமையும் என்பதிலே எனக்கு என்று மாறுபட்ட கருத்து கிடையாது, ஆனால் அதை விரைவுபடுத்திச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்..

பிறகு, காவிரிப் பிரச்சினை. நீண்ட காலமாகத் தீர்வு காணப்படாமல் உள்ள காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதில் இவ்வரசு கர்நாடக அரசின் ஒத்துழைப்பை நாடும் என்று சென்ற முறை ஆளுநர் உரையிலே தெரிவித்துள்ளீர்கள். நான் அப்போதே



ஆச்சரியப்பட்டேன். ஏனென்று கேட்டால், கர்நாடகத்தின் ஒத்துழைப்பைப் பார்த்துப் பார்த்து முடியாமல்தான் நாம் டிரிப்யூனலுக்குப் போனோம். ஆனால் இப்போது டிரிப்யூனலிலிருந்து interim order— எல்லாம் பெற்றிருக்கிறோம். ஆனால் இந்த முறை என்ன சொல்லியிருக்கிறீர்கள்? நடுவர்மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை செயல்படுத்தி, அதனைக் கண்காணிப்பதற்கு ஏதுவாக உரிய அதிகாரங்களுடன் கூடிய தொழில்நுட்பக் குழு ஒன்றை ஏற்படுத்துமாறு தொடர்ந்து இவ்வரசு வலியுறுத்தும் என்கிறீர்கள். நான் இதிலேபோய் நீண்ட நேரம் விவாதத்தை வளர்க்க விரும்பவில்லை. எது எப்படியோ என்ன ஒரு குழுவோ போட்டு தண்ணீரை நாம் பெறுவதற்கு வழி செய்தால், அது போதும் என்ற முடிவோடு விட்டுவிடுகிறேன். காரணம், இதிலே எவ்வளவுக்கெவ்வளவு அடக்கி வாசிக்கிறோமோ அதுதான் நாட்டுக்கு நல்லது என்பது என்னுடைய எண்ணம்.

முற்பகல் *11-55*

அடுத்ததாக சென்ற முறை கிருஷ்ணா தண்ணீரைக் குறித்து, ஆளுநர் உரையிலே சொன்னீர்கள். கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்தை விரைந்து முடிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி இவ்வரசு ஆந்திர அரசை வற்புறுத்தும்; கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்தின்கீழ் ஸ்ரீசைலம், சோமசீலா பகுதிகளில் எஞ்சியுள்ள கால்வாய் வெட்டும் பணியை உடனடியாக முடிக்க ஆந்திரப் அரசை இம்மாநில அரசு வலியுறுத்தும் என்று சென்ற ஆண்டு ஆளுநர் உரையிலே தெரிவித்தீர்கள். இந்த ஆண்டு, ஆளுநர் உரையிலே, ஆந்திரப் பிரதேச அரசின் ஒத்துழைப்புடன் கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் விரைவில் நிறைவேற்றி முடிக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறீர்கள். நீங்கள் சென்ற ஆண்டு சொன்னீர்களே, ஸ்ரீசைலம், சோமசீலா பகுதிகளில் எஞ்சியுள்ள கால்வாய் வெட்டும் பணியை உடனடியாக முடிக்க ஆந்திர அரசை, இம்மாநில அரசு வற்புறுத்தும் என்று வற்புறுத்தி இருக்கிறீர்களா? எத்தனை முறை அமைச்சர் அளவிலே சென்று, பேசியிருக்கிறீர்கள்? எத்தனைக் கடிதங்களை எழுதியிருக்கிறீர்கள்? அதை ஆந்திர அரசு ஏற்றுக்கொண்டதா? வெட்டப்படாமல் இருக்கிற *13* கிலோ மீட்டர் தூரம், சோமசீலாவுக்கு மேலே அதை வெட்டி முடித்துவிட்டார்களா என்பதை நான் இந்த ஆட்சியிடமிருந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

காரணம் சென்ற முறை, *2001* ஜூன் மாதம் *28* ஆம் தேதி தினமணியை எடுத்துப் பார்த்தால், முதல் பக்கத்திலேயே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய படத்தைப் போட்டு. கிருஷ்ணா தண்ணீர்

வருகிற வழிகளை எல்லாம் மேப் வரைந்து, ஒரு பேராசிரியரைப் போல பத்திரிகை நிருபர்களுக்கு நம்முடைய முதலமைச்சர் ஒரு ஸ்கேலை வைத்து எப்படி எப்படியெல்லாம் வருகிறது என்ற படத்தை முதல் பக்கத்திலே போட்டு, செய்தியை 5 ஆம் பக்கம் பார்க்க என்று போட்டு இருந்தார்கள். அப்போது நம்முடைய முதலமைச்சரை பத்திரிகை நிருபர்கள் ஒரு கேள்வி கேட்டார்கள். நீங்கள் குறிப்பிட்டுள்ள 13.81 கிலோமீட்டர் தூரத்தை பலர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் கால்வாய் வெட்டவில்லை என்று முன்னாள் அமைச்சர் துரைமுருகன் கூறி உள்ளாரே என்று கேட்டார்கள். நம்முடைய முதலமைச்சர் அதற்கு சொன்ன பதில், நீதிமன்றத்தில் தடை இருக்கலாம்; அந்தத் தடைகளை நீக்க அவர்கள் முயற்சி எடுக்காதது ஏன்? கருணாநிதி அங்கு செல்லாதது ஏன்? இதற்கு அவர்கள் பதில் கூறட்டும் என்று தெரிவித்து இருந்தார்கள். ஆனால் இன்றைக்கு ஆளுகிற பொறுப்பு மாண்புமிகு முதலமைச்சர் கையில் இருக்கிறது. அந்தத் தடையாணையை நீக்குவதற்கு நீங்கள் முயற்சி எடுத்து இருக்கிறீர்களா? தடையாணை நீக்கப்பட்டதா? கால்வாய் வெட்டப்பட்டதா என்பதை நான் முதலமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விழைகின்றேன். ஆனால் இன்றைக்கு கிருஷ்ணா தண்ணீர் பூண்டிக்கு வந்து இருக்கிறது; 800 கியூசெக்ஸ் விடப்பட்டு இருக்கிறது, பூண்டிக்கு இவ்வளவு வருகிறது என்றெல்லாம் செய்திகள் வருகின்றன. நான் அதைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறேனே தவிர, வருத்தப்படுகிறவன் அல்ல; ஆனால் எனக்கு என்ன ஒரு மகிழ்ச்சி என்றால், நாங்கள் கொண்டுவந்து தண்ணீர் கொடுத்தபோதெல்லாம், இது கிருஷ்ணா நீரே அல்ல; இது ராமன் நீர், இது லட்சுமணன் நீர், சத்துருக்கணன் நீர், பரதன் நீர், வாடு நீர், வீலு நீர், இங்கு இருக்கிற குட்டையிலே வருகிற தண்ணீர் என்று சொன்னீர்கள். ஆனால் இன்றைக்கு நீங்களே அதை கிருஷ்ணா தண்ணீர் என்று சொல்கிறீர்கள். ஏன் நாங்கள் சொன்னபோது கிருஷ்ணா தண்ணீர் இல்லை என்று சொன்னீர்கள்? கால்வாயே வெட்டாமல் எப்படி கிருஷ்ணா தண்ணீர் வரும் என்று கேட்டீர்கள். இப்போது கால்வாய் வெட்டிவிட்டு, மடை திறந்த வெள்ளம் போல அங்கிருந்து நேராக போத்திரெட்டிபட்டியிலிருந்து பனகசாலா, பனகசாலாவிலிருந்து வெளுகோடு, வெளுகோடு ரிசர்வாயரிலிருந்து சென்னமுகப்பள்ளி, சென்னமுகப் பள்ளியிலிருந்து சோமசிலா, சோமசிலாவிலிருந்து கண்டலேறு, கண்டலேறுவிலிருந்து பூண்டி, அப்படியே தண்ணீர் பாய்ந்து, அதோ உழவ ரோதை, மதகோதை என்று சிலப்பதிகாரத்திலே ஓசை எழுப்புவது போல் ஓசை எழுப்புகிறதா? பத்திரிகைகள் வேறு, அன்று கண்டலேறு தண்ணீர் வந்தது என்று எழுதியது; ஆனால் இன்றைக்கு இந்து பத்திரிகை



ஒரு நாள் எழுதுகிறது, Krishna water from Kandaleru River, என்று. என்னையா இது? பெரியவர்கள் செய்தால் பெருமாள் செய்த மாதிரி; நாங்கள் செய்தால் வேறுமாதிரியா? நாங்கள் கொண்டுவந்தால் கண்டலேறு தண்ணீர்; நீங்கள் கொண்டுவந்ததுதான் கிருஷ்ணா தண்ணீரா? நான் அந்த பேதத்திற்கு வரவில்லை; எப்படியோ வருவது கிருஷ்ணா தண்ணீர் என்று நீங்கள் ஒத்துக்கொண்டதற்கு நன்றி; சென்னைக்கு வருவதிலே எனக்கு ஒரு மகிழ்ச்சி; ஆகையினாலே இது ஒரு தேர் இழுக்கிறமாதிரி. இந்தப் பிரச்சினைகள் தமிழ்நாட்டு பிரச்சினைகள். நாங்கள் கொஞ்சம் தேர் இழுத்துவிட்டுப் போவோம்; நீங்கள் இழுப்பீர்கள்—பிறகு இன்னொருவர் வந்து இழுப்பார்கள், எப்படியோ தேர் போய்ச் சேருவதுபோல, மக்களுக்குத் தண்ணீர் வந்தால் போதும் என்று நான் கருதக்கூடியவன்.

அடுத்து, ஆளுநர் உரையில் இன்னும் சில புதிய அறிவிப்புகளைச் செய்து இருக்கிறீர்கள். அதிலே ஒன்று, "கூவம் ஆற்றைத் தூர் வாரி, ஆழப்படுத்தி, தடையின்றி தண்ணீர் செல்லும் வகையில் மாற்றி அமைக்க வேண்டியுள்ளது;" சரி; "இரு கரைகளிலும் பூந்தோட்டங்கள் அமையப்பெற்று மாசுக்கேடின்றி உள்நாட்டு படகுப் போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் இதை மாற்றி அமைப்பதற்கு விரிவான திட்டம் ஒன்று வகுக்கப்படும்" என்று இந்த ஆளுநர் உரையிலே தெரிவித்து இருக்கிறீர்கள். நான் இந்த அவைக்கு ஒன்றைத் தெரிவிக்கிறேன். சென்னை மாநகரத்தில் நீர்வழிப் போக்குகள் பல இருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித்துளியில் முடித்துவிடுங்கள்.

**திரு. துரைமுருகன்:** ஒரு மணித்துளியா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு (சிரிப்பு).

**திரு. துரைமுருகன்:** நீங்கள் எப்போது முடிக்கச் சொன்னாலும் முடித்துவிடுகிறேன். நான் the most obedient servant ஆக இருப்பதற்காகக்கூட உட்கார்ந்து விடுகிறேன்.

சென்னை மாநகரத்து நீர்வழிகளை சீரமைத்தாலொழிய, வெள்ளச் சேதத்திலிருந்து சென்னையைக் காப்பாற்ற முடியாது என்றுதான் நாங்கள் ஆட்சியிலிருந்தபோது முடிவு எடுத்து, பிறகு மாநகராட்சியோடு கலந்து, மாநகராட்சியும் தமிழக அரசும் நீர்வழிப் பாதைகளைத் தூர் வாரி, ஆழப்படுத்திச் செப்பனிட முடிவு எடுக்கப்பட்டது. முக்கியமாக நமக்கு

பக்கிங்காம் கனால், அடையாறு, கூவம்-இந்த மூன்றையும் எப்படிச் சீரமைக்கலாம் நீங்கள் சொல்லி இருக்கிறீர்களே, பூந்தோட்டங்களை அமைக்கலாம் என்று, எப்படி இதை பொழுதுபோக்கு இடங்களாக மாற்றலாம், எப்படி படகு விடலாம் என்பதற்கு ஒரு கன்சல்டன்சி, டெக்னிகல் கம்பெனி, அது இங்கிலாந்து கம்பெனி, அவர்கள் கொடுத்த அறிவுரைகளை ஏற்ற பிறகு, ஹட்கோவிடத்திலே லோன் வாங்கி இந்த மூன்று ஆறுகளைச் சீரமைக்கும் பணி நடைபெற்றது. அதிலே பக்கிங்காம் கால்வாய், Larsen and Toubro செய்தார்கள். அடையாறு, ஒரு மலேசியன் கம்பெனி, international Company-க்கு விட்டது. அதுபோன்று இந்தச் சென்னை கூவத்திற்கும் டெண்டர் விடப்பட்டு அன்றைக்கு டெண்டரை எடுத்தவர்கள் வேலை செய்ய வருகிறபோது ஒரு சின்ன சிக்கல் ஏற்பட்டது. கூவத்தைச் சீரமைத்த பிறகும்கூட டிரைனேஜ் வாட்டர் கலந்துகொண்டே இருக்கும். அந்த டிரைனேஜ் வாட்டரை அரெஸ்ட் செய்து அதைத் தனியாகக் கொண்டுபோகாவிட்டால் மீண்டும் என்னதான் நீங்கள் செப்பனிட்டாலும் மறுபடியும் டிரைனேஜ் வாட்டர் கலந்துவிடும். எனவே டிரைனேஜ் வாட்டர் கலக்காமல் பார்க்க வேண்டிய பொறுப்பு...

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதோடு உரையை முடித்து விடுங்கள். இந்தப் பாயிண்ட்டோடு உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. துரைமுருகன்:** முடித்து விடுகிறேன். அந்த டிரைனேஜ் வாட்டரை நிறுத்தி அரெஸ்ட் பண்ணுவது யார் என்றால் Local Administration Department செய்ய வேண்டிய பணி. எனவே இது ஒரு மலேசியன் கம்பெனி என்று கருதுகிறேன். யாருக்கோ டெண்டர் விட்டவர்களை, உடனடியாக வேலை எடுக்க முடியாது, 18 மாதங்களில் R.D. Department அந்த வேலையைச் செய்யும். ஆக, அதைச் செய்த பிறகு நீங்கள் இந்த டெண்டரைத் தொடங்கலாம் என்று சொன்னார்கள். பிறகு, அது என்னவாயிற்று என்று எனக்குத் தெரியாது. ஆக, கூவத்தை இப்படிச் சீரமைக்க, பூந்தோட்டங்களை அமைக்க, மற்ற பணிகளைச் செய்வதற்காக ஏற்கெனவே டெண்டர் விடப்பட்டு இருக்கிறது, கழகத்தினுடைய ஆட்சியில் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். கடைசியாக ஒன்று. சார், நேயர் விருப்பம். சிலர் கொடுத்திருக்கிறார்கள். அது, 2, 3 இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத் தனியாக பிறகு வைத்துக்கொள்ளலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)





**திரு. துரைமுருகன்:** தலைப்புச் செய்தியைச் சொல்லிவிட்டுப் போய்விடுகிறேன். நான் மீண்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்; நெய்வேலி நிறுவனத்தில் இருக்கிற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒரு வழி செய்யுங்கள் என்று மட்டும்தான் நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மாமன்றத்திலே ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தாலும் திராவிட முன்னேற்றக் கழகம் அதை ஆதரிப்பதற்குத் தயாராக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டக் கல்லூரி மாணவர்கள் சம்பந்தமான பிரச்சினை குறித்து திரும்பத் திரும்பச் சொல்லப்படுகிறது. நேற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாணவர்கள் வழக்கு போட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள், அவர்கள் படிக்கிறவர்கள்.

'சிறியோர் செய்த சிறுபிழை எல்லாம்
பெரியோர் ஆயினும் பொறுப்பது கடனே'

என்று கருதி அந்தப் பிள்ளைகளுக்கு வழி வகுக்க வேண்டும் என்று நான் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மூன்றாவதாக, பெரம்பலூர் மாவட்டத்தை நீங்கள் பிரிப்பது என்பது அவ்வளவு உசிதமாக இருக்காது. காரணம், நேற்று முதலமைச்சர் அவர்கள் படித்த அறிக்கையைப் பார்த்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'இணைப்பது என்பது' என்று சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** இணைப்பது என்பது அவ்வளவு நன்றாக இருக்காது என்று நான் கருதுகிறேன். காரணம் அவர்கள் சில கருத்துகளைச் சொன்னார்கள், அந்த அலுவலர்களுக்கு வீடு இல்லை, அலுவலகம் இல்லை, அந்த ஆபிசுக்கு இல்லை, இந்த ஆபிசுக்கு இல்லை என்று சொன்னார்கள். இது ஒரு நிர்வாகத்திலே உள்ளதுதான். நாங்கள் ஆட்சியில் இருக்கும்போது, 4 மாதமோ, 5 மாதமோ இருந்தோம். முன்னால் இருந்த முதலமைச்சர், மாண்புமிகு மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள், நாகப்பட்டினம் மாவட்டத்தைக்கூட பிரித்தபோது கலெக்டர் ஆபிஸ் இல்லை, இப்போதுதான் கட்டியிருக்கிறோம். அதுபோலத்தான் அவர்கள் சொன்ன திருவண்ணாமலைக்கு நாங்கள் கட்டியிருக்கிறோம். நாங்கள் பிரித்த மாவட்டத்திற்கும் கலெக்டர் ஆபிஸ், மற்ற ஆபிஸ்களை கட்டியிருக்கிறோம். ஆபிஸ்கள் என்பது பெரிய பிரச்சினை அல்ல. ஆனால்

[திரு. துரைமுருகன்] [2002 மார்ச் 15

மக்களுடைய எண்ணங்கள்தான் ஒரு முக்கியமான பிரச்சினை. ஆனால் அறிக்கைகூட, பாண்டியன் அறிக்கையை மீறி நீங்கள் செய்திருக்கிறீர்கள். அதிகாரிகள் அறிக்கை முக்கியமா? மக்களுடைய உணர்வு முக்கியமா என்றால் மக்களுடைய உணர்வுக்கு மதிப்பளிப்பதுதான் ஜனநாயகம். எனவே அந்த வகையிலே நீங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக இந்த அறிக்கையைப் பொறுத்தவரையில்,என்னைப் பொறுத்தவரையில், இந்த நிதிநிலை அறிக்கை என்பது-(குறுக்கீடு) மன்னிக்க வேண்டும். மன்னிக்க வேண்டும். I am sorry, extremely sorry, இந்த ஆளுநர் உரை என்பது ஒரு மணக்காத காகிதப் பூ, பட்டினத்தார் கையிலே இருக்கிற இனிக்காத கரும்பு என்று கூறி அமர்கிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் பத்திரிகைக்கு தலைப்புச் செய்தி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பிற்குரிய தமிழக மக்களுடைய நல்லெண்ணத்தின் ஓர் அங்கமாகத் திகழும் ஆண்டிப்பட்டி தொகுதியைச் சார்ந்த வணக்கத்திற்குரிய பெரியோர்களும், என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களும் (மேசையைத் தட்டும் ஒலி) எனது உயிரினும் மேலான எனது அருமை உடன்பிறப்புகளும் மற்றும் ஏனைய வாக்காளப் பெருமக்களும் தங்களது அமோக ஆதரவை எனக்கு நல்கி ஆண்டிப்பட்டி சட்டமன்ற இடைத் தேர்தலில் என்னை மகத்தான வெற்றி பெறச் செய்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து இந்த அவையில் தமிழகத்தின் முதலமைச்சராக வீற்றிருக்கச் செய்ததற்காக (மேசையைத் தட்டும் ஒலி) முதற்கண் தமிழக மக்களுக்கு இந்த நேரத்தில் எனது நெஞ்சார்ந்த, உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-05*

*6-3-1967* அன்று தமிழக முதல்வர் பதவியை ஏற்றுக்கொண்டபின் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரையின் சில பகுதிகளை இங்கே நினைவுகூர்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்—

"இந்நாட்டு மன்னர்களாகிய நீங்கள் பிறப்பித்த ஆணையினை ஏற்றுக்கொண்டு அவர்கள் சட்டமன்றத்தில் அமர்ந்துள்ளனர். அவர்களின் துணையுடன் நானும், என்னுடன் உள்ள மற்ற அமைச்சர்களும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளோம். மன்னர்களாகிய உங்களிடம் எமது வணக்கத்தையும், நன்றியறிதலையும் தெரிவித்துக்கொள்கிறோம்.



2002 மார்ச் 15] [செல்வி ஜெ ஜெயலலிதா]

நான் பொறுப்பு ஏற்றுக் கொண்டிருப்பது தமிழ்நாட்டில்; வழி வழி வந்த வல்லவர்கள், வித்தகர்கள் நிரம்பிய தமிழ்நாட்டில்; காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வைகை போன்ற ஆறுகளும், அருவிகளும் பண் பாடி வளமளித்திடும் தமிழ்நாட்டில்; பாட்டு மொழியாம் தமிழ் மொழியுடன் இழைந்துள்ள பண்பாடு சிறந்திடும் தமிழ்நாட்டில்; 'பாருக்குள்ளே நல்ல நாடு' என்று பாவலர் கொண்டாடிடும் தமிழ்நாட்டில்; 'உங்களுக்காக நான்' என்பது மட்டுமல்ல நண்பர்களே, உண்மையைச் சொல்லுவதானால், 'உங்களால் நான்' அதனை உணர்கிறேன். மறந்திடுபவனும் அல்ல நான்" என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். அண்ணா அன்று சொன்னதையே இன்று நான் தமிழக மக்களுக்குக் கூற விரும்புகிறேன்.

உங்களுக்காக நான் என்பது மட்டுமல்ல, என் ஆருயிர் தமிழக மக்களே, உண்மையைச் சொல்லுவதானால் 'உங்களால் நான்' (மேசையைத் தட்டும் ஒலி) அதனை உணர்கிறேன். மறந்திடுபவளும் அல்ல நான் என்று இந்தப் பேரவையின் வாயிலாக தமிழக மக்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நான் தேர்தல் பிரச்சாரத்தின்போது, ஜாதி, மத, வேறுபாடுகளையெல்லாம் கடந்து, தமிழகத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்காக உழைப்பேன் என்று சூளுரைத்திருந்தேன். தமிழகத்தை இந்தியாவின் முதன்மை மாநிலமாக ஆக்குவேன் என்று உறுதி கூறியிருந்தேன். அந்த வகையில் அமைந்ததுதான் மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் இந்த உரை. ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு எனது பதிலுரையைத் துவங்கும் இந்த வேளையில், ஆயிரமாயிரம் எண்ண அலைகள் என் மனதில் அலைமோதுகின்றன.

இந்த உரை, இதற்குக் காரணமான தேர்தல் வெற்றி, அதற்குக் காரணமான என் அன்புக்குரிய தமிழினம், இவற்றை நினைக்கிற இதேவேளையில், வஞ்சகர்களின் சூழ்ச்சிகள், பழிகாரர்கள் வெட்டிய படுகுழிகள், கொச்சை மனிதர்கள் கூறிய அவதூறுகள், வீணர்கள் ஏற்படுத்திய அவமானங்கள், கோயபல்ஸ்களின் அவதூறு பிரச்சாரங்கள், சகுனிகளின் ஜோடிக்கப்பட்ட வழக்குகள் ஆகியவையும் என் மனக் கண்ணில் நிழலாடுகின்றன.

எந்த அரசியல் தலைவரும் சந்தித்திராத, (மேசையைத் தட்டும் ஒலி) எந்த அரசியல் தலைவரும் சந்தித்திராத துன்பங்களையும், துயரங்களையும், சோதனைகளையும் (மேசையைத் தட்டும் ஒலி) வேதனைகளையும், போராட்டங்களையும் நான் சந்தித்த பின், மீண்டும் இந்தச் சட்டமன்றத்தில் நின்று கொண்டிருக்கிறேன்.

“எந்த நாட்டிலும் இந்த அநீதிகள்
ஏற்குமோ?-தெய்வம் பார்க்குமோ?”

என்று பாரதியார் பாடினார். நான் பட்ட பாடுகளை நினைத்தே பாடப்பட்ட வரிகளாக இந்த வரிகள் எனக்குத் தோன்றுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) நாளொரு வஞ்சனை, பொழுதொரு சூழ்ச்சி என்று வாழ்ந்தவர்கள் ஜோடித்த வழக்குகள்தான் எத்தனை எத்தனை. (மேசையைத் தட்டும் ஒலி).

புளுகும், புனைசுருட்டுமே கைவசமாய்க் கொண்டவர்கள், என்னை ஒவ்வொரு நீதிமன்றமாய் அலைக்கழித்தார்கள். தாங்கள் ஆட்சிக்கு வந்ததே அதற்காகத்தான் என்பதைப்போல் அதிகார துஷ்பிரயோகத்தால் என்னைச் சிறைக்கு அனுப்பினார்கள். நான் அதிர்ச்சியடையவில்லை. கலங்கவில்லை. அரசியல் காழ்ப்புணர்ச்சி எந்த அளவுக்கு இவர்களின் ஆன்மாவை விகாரப்படுத்தி விட்டது என்றுதான் வியப்படைந்தேன். தேர்தல் வந்தது. நான் திரும்பவும் தேர்ந்தெடுக்கப்பட்டு விடக்கூடாது என்பதில் தீர்மானமாய் இருந்தார்கள். எட்டுத்திசையில், நான் எந்தத் திசை சென்றாலும், முட்டுக்கட்டை போடுவதே அவர்களுக்கு வாடிக்கையாயிற்று. என்னைத் தேர்தலில் நிற்க விடாமல் செய்வதன் மூலம் அனைந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை மாலுமி இல்லாத கப்பலாக்கி விடலாம் என்று கனவு கண்டார்கள். நடந்தது என்ன? கனவு கண்டவர்கள் காணாமல் போனார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கரை சேர்கிற கப்பல் மட்டுமல்ல (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நாட்டு மக்களைக் கரை சேர்க்கிற கப்பலும்கூட (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நாடு கண்டு கொண்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

எனது கால்களைக் கட்டிப்போட்டுவிட்டு, ஓட்டப் பந்தயத்தில் கலந்துகொண்டு வெற்றி வீரர்களாகி விடலாம் என்று நினைத்தவர்களை மக்கள் தீர்ப்பு, மூலையிலே உட்கார வைத்தது. (மேசையைத் தட்டும் ஒலி) நான் முதலமைச்சர் ஆனேன். அத்தோடு விட்டார்களா? சட்டத்தின் சந்துகளில் அலைந்து, திரிந்து, என்னை முதல்வராக நீடிக்கவிடாமல்



செய்யக் காரணம் கண்டுபிடித்தார்கள். அரசியலில் ‘ஆண் காந்தாரிகள்’ கூட உண்டு என்பதை அப்போதுதான் உலகம் அறிந்துகொண்டது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நான் நிலைகுலைந்து போவேன் என்று நினைத்தார்கள். நானோ, நீதிக்குத் தலைவணங்குவேன் என்று கம்பீரத்தோடு நின்றேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) ‘ஆம்’ அவர்களுக்கு ஜாதிக்குத் தலைவணங்கிப் பழக்கம், எனக்கோ நீதிக்குத் தலைவணங்கிப் பழக்கம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நீதி தேவதை என்னை நிரபராதி என்றாள், வஞ்சகர் வாய் மூடினர். துரோகம் தன் தலையில் துண்டு போட்டுக் கொண்டது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) ஜெயலலிதா தேர்தலில் நிற்க எந்தத் தடையும் இல்லையென்று நாளிதழ்கள் எழுதின. இப்போதே ஜெயலலிதா மீண்டும் முதல்வராகப் பதவியேற்க எந்தத் தடையும் இல்லையென்று சட்டமேதைகள் கூறினர். (மேசையைத் தட்டும் ஒலி) நானோ மக்களைச் சந்திப்பேன், “மக்கள் தீர்ப்பே, மகேசன் தீர்ப்பு” (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) மக்கள் மன்றத்தின் தீர்ப்பு மூலம்தான் மீண்டும் முதல்வராக இந்தச் சட்டமன்றத்தில் நுழைவேன் என்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆண்டிப்பட்டி தேர்தல் அறிவிக்கப்பட்டது. தேர்தல் முடிவு எப்படி இருக்கும் என்பது என்னைவிட என்னை எதிரியாக நினைத்தவர்களுக்கே நன்றாகத் தெரிந்தது. அதனால் செல்லாத காரணங்களைச் சொல்லி, தேர்தலில் நில்லாமல் சிலர் ஒதுங்கிக் கொண்டார்கள். சிலர் துணிச்சல்காரர்கள். தோற்பதற்காகவே தேர்தலில் நின்றார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

*பிற்பகல் 12-10*

இந்த மக்களிடமிருந்து என்னையும், என்னிடமிருந்து இந்த மக்களையும் பிரித்து விடமுடியாது என்று மறுபடி மறுபடி மக்கள் உணர்த்தினாலும், அதைப் புரிந்துகொள்ள முடியாத மக்கு மாணவர்களாக இவர்கள் இருக்கிறார்களே என்பதுதான் என்னுடைய வருத்தம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) விரக்திப் பள்ளத்தாக்கில் என்னை இவர்கள் வீழ்த்தத் துடிக்கும்போதெல்லாம், வெற்றிச் சிகரங்களிலே என்னை மக்கள் உட்கார வைக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**Calumny requires no proof. The throwing out of malicious imputations against character, leaves a stain, which no after refutation can wipe out. The imagination is of so delicate a structure that even words wound it.** என்றார் **William Hazlit.**

'ஒருவரை களங்கப்படுத்துவதற்கு ஆதாரம் எதுவும் தேவையில்லை. ஒருவருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் வஞ்சக எண்ணத்தோடு அவதூறு குற்றச்சாட்டுகளை அள்ளிவீசும்போது ஒரு கறை படிந்துவிடுகிறது. பின்னர் எவ்வளவு மறுத்தாலும் அந்தக் கறை முழுமையாக மறைவதில்லை. கற்பனை என்பது மிக மென்மையான அமைப்பைக் கொண்டது. வெறும் வார்த்தைகள்கூட அதைக் காயப்படுத்திவிடுகின்றன' என்பது அதன் பொருள். என்னைக் களங்கப்படுத்த எத்தனை எத்தனை அவதூறுகள் எனக்கு எதிராக அள்ளி வீசப்பட்டன. பேட்டிகளில், அறிக்கைகளில், பொது மேடைகளில், பத்திரிகைகளில், தொலைக்காட்சிகளில் என்னை எத்தனை கொச்சைப்படுத்தும் குற்றச்சாட்டுகள், என்மீது எறியப்பட்டன. ஏன்? இந்தப் பேரவையிலேயே கேட்பாரில்லை என்ற எண்ணத்தில் அதிகார போதையில், மமதையில் எத்தனை உண்மைக்குப் புறம்பான அவதூறுக் கணைகள் எனக்கு எதிராகத் தொடுக்கப்பட்டன? ஜோடிக்கப்பட்டு போலிவழக்குகள் என்மீது தொடுக்கப்பட்டது மட்டுமல்லாமல், வழக்கு விசாரணை முடியும் முன்பே தீர்ப்பு இப்படித்தான் இருக்கும், தண்டனை கிடைப்பது உறுதி, இத்தனை ஆண்டுக்காலம் சிறைத் தண்டனை அளிக்கப்படும் என்றெல்லாம் எத்தனை முறை இந்த அவைக்குள்ளேயும், வெளியேயும் எத்தனை முன்னாள் மாண்புமிகுந்த நாக்குகள் நரம்பின்றிப் பேசின? (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அப்படிக் களங்கம் கற்பிக்க பேசிய பேச்சுக்களெல்லாம் உண்மையற்றவை, அள்ளி வீசப்பட்ட குற்றச்சாட்டுகள் போலியானவை, ஜோடிக்கப்பட்டு, தொடுக்கப்பட்ட வழக்குகளும், போலியானவை என்று எல்லாம் இன்று நிரூபிக்கப்பட்டுள்ளன. எனக்கு ஏற்படுத்தப்பட்ட களங்கம் நீதிமன்றங்களாலேயே துடைக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் இவையெல்லாம் என் மனதில் ஆறாத வடுக்களை ஏற்படுத்திவிட்டன. இரத்தம் வழிந்தோடும் ரணங்களை உருவாக்கிவிட்டன. அந்த வடுக்களும், ரணங்களும் தீக்காயங்களைப் போல் எரிகின்றன. செய்யாத குற்றங்களுக்காக இந்த அளவிற்கு மன உளைச்சல் வீணர்களால் ஏற்படுத்தப்பட்டதை எண்ணும்போதெல்லாம் நெருப்பாற்றில் நீந்தி வெந்து தேகம் எல்லாம் எரிவது போன்ற நரக வேதனை உண்டாகும். அப்போதெல்லாம் தமிழக மக்கள் என்மீது பொழியும் அப்பழுக்கற்ற தூய்மையான அன்பை நினைத்துப் பார்ப்பேன். அந்த மக்களை ஒருமுறை சந்தித்தால் போதும், என் வேதனை எல்லாம் மறைந்துவிடும். மறந்துபோய்விடும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நெஞ்சில் நான் சுமக்கும் ஆறாத வடுக்களையும், ரணங்களையும் ஆற்றுகின்ற அருமருந்தாய் அமைந்துள்ளது தமிழக மக்கள் என்மீது காட்டும் அன்பு. அதற்குக்





காட்டுகிற நன்றியாகத்தான் எத்தனை சோதனைகள் எதிரில் வந்தாலும், இந்த மக்கள் பணியை என் உயிர் மூச்சாகக் கொண்டிருக்கிறேன். அன்புக் களஞ்சியங்களான ஆண்டிப்பட்டி மக்களுக்கும், என் அன்பார்ந்த தமிழக மக்களுக்கும் மிகச் சிறந்த எதிர்காலத்தை வழங்குவதே என் வாழ்க்கையின் நோக்கம் என்பதை வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த வேளையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-15*

அல் உம்மா இயக்கத்தைச் சார்ந்த இமாம் அலி, ஹைதர் அலி ஆகிய இரண்டு தீவிரவாதிகள் கடந்த 8-3-2002 அன்று தப்பிச் சென்றுவிட்டனர் என்றும், இப்படி காவலில் இருக்கும் கைதிகள் தப்பிச் சென்றது ஏதோ என்னுடைய ஆட்சியில் மட்டுமே நடந்தது போலவும் குறை கூறி, இங்கே சில மாமன்ற உறுப்பினர்கள் பேசினார்கள். சிறைச்சாலைகளிலிருந்தும், காவல் துறை கண்காணிப்பிலிருந்தும் கைதிகள் தப்பியோடும் நிகழ்வுகள் கடந்த காலத்தில் பல்வேறு காலகட்டங்களில் நடந்துகொண்டுதானிருந்தன. கடந்த ஐந்தாண்டுகால தி.மு.க. ஆட்சியில் 357 சிறைக் கைதிகள் அவ்வாறு தப்பிச் சென்றனர். குறிப்பாக, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 2000 ஆம் ஆண்டில் 66 சிறைக் கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர். 2001 ஆம் ஆண்டில் 63 சிறைக் கைதிகள் காவலிலிருந்து தப்பிச் சென்றுள்ளனர். ஆனால் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பயங்கரக் குற்றம் புரிந்துள்ள அபாயகரமான சிறைக் கைதிகளை நீதிமன்றங்களுக்குக் கொண்டு செல்லும்போதோ, திரும்ப அவர்களை சிறைச்சாலைக்கு அழைத்து வரும்போதோ ஏற்படும் கைதிகள் தப்பி ஓடும் சம்பவங்களைக் கட்டுப்படுத்த எந்த ஒரு முயற்சியும் எடுக்கப்படவில்லை. மாறாக எங்கள் ஆட்சியில் இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க அறிவுபூர்வமான ஒரு முடிவை இந்த அரசு எடுத்துள்ளது. அதாவது, நீதிமன்றத்தில் நீதிபதிகள் முன்பு விசாரணைக்காக குற்றவாளிகள் நிறுத்தப்பட வேண்டும் என்பதைக் கூறுகின்ற இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டம் (Criminal Procedure Code) பிரிவு 167(2)(b)-ல் தக்க திருத்தம் கொண்டுவந்து அபாயகரமான சிறைக் கைதிகள் சிறைச்சாலைகளிலேயே தங்க வைக்கப்பட்டு, நீதிமன்றங்களில் உள்ள நீதிபதிகள் Video Conferencing முறை மூலம் குற்றவாளிகளை விசாரிக்கும் புதிய விசாரணை முறையைச் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் புதிய விசாரணை முறையானது, அபாயகரமான குற்றவாளிகள்

காவலிலிருந்து தப்பி ஓடுவதை வெகுவாகக் குறைக்கும் என்று நம்புகிறேன். இந்தப் புதிய திட்டம் சென்னையில் முதன்முதலாகக் கொண்டுவரப்பட உள்ளது. அதன் பின்னர், அனைத்து மத்திய சிறைச்சாலைகளிலும் இந்தப் புதிய முறை அமல்படுத்தப்பட உள்ளது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கள்வன் பெரிதா, காப்பான் பெரிதா என்ற சர்ச்சை காலம் காலமாக நடந்து வருகின்ற ஒன்றுதான். இதில் கள்வன் பெரிதல்ல, காப்பான் ஆகிய காவல் துறையே பெரிது என்னும் வகையில்தான் எங்கள் அரசு கள்வர்களையும், குற்றவாளிகளையும் ஒடுக்குவதில் தீவிர கவனத்தைச் செலுத்தி வருகிறது. ஆனால் இதற்கு மாறாக, கடந்த தி.மு.க. ஆட்சியில் வன்முறையாளர்களுக்கும், தீவிரவாதிகளுக்கும், குற்றவாளிகளுக்கும் மறைமுக மற்றும் வெளிப்படையான ஆதரவு வழங்கப்பட்டதை இந்த நாடே அறியும். சந்தனக் கடத்தல்காரன் வீரப்பன் விஷயத்தில் முந்தைய தி.மு.க. அரசு எப்படியெல்லாம் கபட நாடகம் ஆடியது என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் மறந்திருக்க முடியாது. தீவிரவாத இயக்கங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அன்றைய தி.மு.க. அரசு கொடுத்ததால்தான் தமிழ்நாட்டில் பல்வேறு விரும்பத்தகாத சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வந்தன என்பதை அனைவரும் நன்கு அறிவார்கள். 14-5-2001-ல் முதலமைச்சராக நான் பொறுப்பேற்றுக்கொண்டது முதல் தீவிரவாதத்தை ஒடுக்கவும், குற்றவாளிகளை அடக்கி சட்டத்தின் முன்பு நிறுத்தவும் காவல் துறையினரின் நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளேன். தற்போது தப்பிச் சென்ற அல் உம்மா தீவிரவாதிகளான இமாம் அலி, ஹைதர் அலி ஆகிய இருவரில் ஹைதர் அலி என்கிற தீவிரவாதியை காவல் துறையினர் மறுநாளே தேடிக் கண்டுபிடித்து மீண்டும் கைது செய்துள்ளனர். தப்பி ஓடிய அவனது கூட்டாளியான இமாம் அலி என்ற தீவிரவாதியைத் தேடிக் கைது செய்யும் பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. காவல் துறையினர் இந்தப் பணியில் தீவிர கவனம் செலுத்த முடுக்கி விடப்பட்டுள்ளனர். விரைவில் அந்தத் தீவிரவாதியும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவது உறுதி. தீவிரவாதிகளையோ, வன்முறையாளர்களையோ கைது செய்வதில் இந்த அரசு என்றும் தயக்கம் காட்டாது. தப்பி ஓடிய தீவிரவாதியான இமாம் அலியைப் பிடிக்க முறையான, விரைவான, உறுதியான நடவடிக்கைகள் காவல் துறையினர் மூலம் தீவிரமாக எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் தமிழ்நாட்டை என்றென்றும் அமைதிப் பூங்காவாக வைத்திருப்பதை தனது தலையாய கடமையாக இந்த அரசு கருதுகிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.





பிற்பகல் 12-20

இந்த அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கும் மாபெரும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் பற்றி இங்கே பேசிய பல மாண்புமிகு உறுப்பினர்கள் பல ஐயப்பாடுகளை எழுப்பினார்கள். தமிழக அரசு தற்போது அமல்படுத்தி வரும் மாபெரும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் கடந்த 2001 ஆம் ஆண்டு ஜூன் மாதம் என்னால் அறிவிக்கப்பட்டது. மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடந்த விவாதத்தில் பங்கேற்ற சில உறுப்பினர்கள் தமது மாவட்டத்திற்கு இந்தத் திட்டம் உண்டா என்று கேள்வி எழுப்பினார்கள். தமிழ்நாட்டில் ஒட்டுமொத்தமாக உள்ள தரிசு நிலங்கள் 20 இலட்சம் ஹெக்டேர்; அதாவது 50 இலட்சம் ஏக்கர் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதில் தரிசாக உள்ள தனியார் பட்டா நிலங்களும், அரசு சார்ந்த தரிசு நிலங்களும் அடங்கும். ஆக, இந்தத் தரிசு நிலங்கள் எவ்வித பயன்பாடும் இன்றி பல ஆண்டுகளாக இலட்சக்கணக்கான விவசாயிகளுக்கு எவ்வித வருமானத்தையும் அளிக்காமல் அப்படியே தரிசாக விட்டு வைக்கப்பட்டு வந்தது. அதன் காரணமாக ஊரகப் பொருளாதார வளர்ச்சி குன்றியது. இதனை எப்படியாவது சரி செய்து அதன் மூலம் கிராமப்புற பொருளாதாரத்தில் விரைந்த வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இந்தியாவிலேயே முதன்முதலாக நான் இந்த மாபெரும் தரிசு நிலத் திட்டத்தை உருவாக்கினேன்.

கடந்த ஆளுநர் உரை இங்கே வாசிக்கப்பட்டபோது அந்த உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் நடைபெற்றபோது பரிதி இளம்வழுதி போன்ற சில மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு கேள்வியை எழுப்பினார்கள். தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்பது ஏற்கெனவே நடைமுறையில் உள்ளதுதானே, இதை ஏதோ புதிய திட்டம் போல அறிவித்திருக்கிறீர்களே என்று கேட்டார். இதற்கு முன்னர் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அந்தத் திட்டங்களில் மேம்பாடு செய்யப்பட்ட தரிசு நிலத்தின் அளவு மிகவும் குறைவு. தமிழகத்தில் உள்ள ஒட்டுமொத்த 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலத்தையும் இந்த ஆட்சியில் மீதமுள்ள 4 ஆண்டு காலத்திற்குள் மேம்பாடடையச் செய்வதென்பது இதுவரை முன்னர் எப்போதும் எந்த மாநில அரசுமே செயல்படுத்தாத ஒரு மிகப் பெரிய திட்டமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தில் 1000 ஏக்கர் முதல் 2000 ஏக்கர் வரையிலான பழத் தோட்டப் பண்ணைகள், உணவு மற்றும் பழப் பதப்படுத்தும் தொழிற்சாலைகள்,

குளிர்பதன இருப்பு மையங்கள் ஆகியவை மேம்படுத்தப்பட்ட தரிசு நிலங்களில் தனியார் துறையின் முதலீட்டோடும், நிதி நிறுவனங்களின் நிதியோடும் மிகப் பெரிய அளவில் மேற்கொள்ளப்படும். இந்தத் திட்டத்தினை 4 ஆண்டு காலத்தில் அனைத்து மாவட்டங்களில் உள்ள தரிசு நிலங்களிலும் பண்ணைத் தோட்டங்கள் முறையில் அமல்படுத்தப்படும்.

சற்று முன்பு பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் திட்டத்தை அறிவித்திருக்கிறீர்கள். ஆனால் நடைமுறைக்குக் கொண்டு வரவில்லை. என்ன செய்திருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். அவருக்குச் சொல்லிக் கொள்கிறேன். நடப்பாண்டு 2001-2002-ல் 10 மாவட்டங்களில், 28 ஒன்றியங்களில் மொத்தம் 1,37,500 ஏக்கர் பரப்பு தரிசு நிலத்தை மேம்படுத்தும் பணி ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது. இதற்காக நடப்பாண்டில் ரூபாய் 25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆரம்பக் கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. வருகின்ற நிதியாண்டில் அனைத்து மாவட்டங்களிலும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தானத்தில் சிறந்த தானம் அன்னதானம் என்பது நமது பெரியோர்கள் நமக்கு விட்டுச் சென்ற அருள்மொழிகளில் ஒன்றாகும். 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்ற இலக்கியக் கூற்றுக்கு ஏற்ப தமிழகத்தில் உள்ள எண்ணற்ற திருக்கோயில்களில் தினந்தோறும் மதிய நேரத்தில் வருகை தருகின்ற பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கும் உயரிய திட்டம் (மேசையைத் தட்டும் ஒலி) மேதகு ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 12-25

இந்த மகத்தான மனித நேயத் திட்டம், தேர்ந்தெடுக்கப்பட்ட திருக்கோயில்களில் நன்கொடையாளர்கள் அளிக்கின்ற நன்கொடையை அடிப்படையாக வைத்து நடத்தப்படும். திருக்கோயில்களுக்கு வருகின்ற பக்தர்கள் அனைவரும் இந்தத் திட்டத்திற்காக பிரத்தியேகமாக காணிக்கை செலுத்துவதற்கு ஏதுவாக தனி உண்டியல்கள் கோயில்களில் வைக்கப்படும். நிதி வசதி படைத்த திருக்கோயில்களில் முதற்கட்டமாக தொடங்கப்படும். இந்தத் திட்டம் அந்தந்த ஆலயங்களில் உள்ள ஆலய நிதியை வைத்து அமல்படுத்தப்படும். பின்னர், இந்தத் திட்டம் பிற முக்கிய கோயில்கள் அனைத்திலும் நடைமுறைப்படுத்தப்படும்.



கலாச்சாரத்திற்கும், தொன்மையான நமது நாட்டின் நெறிமுறைகளுக்கும் எடுத்துக்காட்டாக திகழ்ந்து கொண்டிருப்பவை நமது திருக்கோயில்கள் ஆகும். இன்றைய இளம் குழந்தைகளிடையே நல்ல பண்புகளையும், நமது நாட்டின் பழம்பெருமைகளையும் வளர்ப்பதற்கு திருக்கோயில்கள் பயன்பட வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில், இத்தகைய கோயில்கள் அனைத்திலும் குழந்தைகளுக்கு ஆன்மீகம் மற்றும் ஒழுக்க நெறி ஆகியவற்றில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமையில் ஒரு மணி நேர வகுப்புகள் நடத்தப்படும் என்ற அறிவிப்பும் மேதகு ஆளுநர் உரையில் வெளியிடப்பட்டுள்ளது. நாளைய சமுதாயத்தை ஆள இருக்கின்ற இன்றைய இளம் சிறுவர் சிறுமியர்கள் பண்பட்டவர்களாகவும், நமது பாரம்பரியத்தைப் போற்றுவதில் அக்கறை கொள்பவர்களாகவும் எதிர்காலத்தில் உருவெடுக்க இந்தப் புதிய திட்டம் மிகச் சிறந்த அடித்தளத்தை அமைக்கும் என்று நான் நம்புகின்றேன்.

மகளிர் தமது வாழ்வில் சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் முன்னேற்றத்தை அடைய கல்வி மிகவும் அவசியம் என்பதோடு, சமுதாயத்தின் அனைத்து நிலைகளிலும் தமது உரிமையை நிலைநாட்டி, அதிகாரப் பகிர்வினை மகளிர் அதிக அளவில் பெற்றிட அவர்களுக்கு உயர்கல்வி மிகவும் தேவை என்பதை உணர்ந்த புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தை 1984 ஆம் ஆண்டு எழில்மிகு கொடைக்கானல் நகரில் நிறுவினார். ஆனால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தோற்றுவித்த பல்கலைக்கழகம் அது என்ற காரணத்தினால், பின்னர் வந்த தி.மு.க. அரசு இந்த மகளிர் பல்கலைக்கழகத்தை சென்னை நகருக்கு மாற்றியதோடு, இந்தப் பல்கலைக்கழகம் மேலும் செழித்தோங்க எந்தவித ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள உயர்கல்வி பயில்கின்ற மகளிர் எளிதாக சென்று தொடர்பு கொள்கின்ற வகையில் தமிழ்நாட்டில், குறிப்பாக, தென் மாவட்டங்களுக்கு அருகில் இருக்க வேண்டுமென்ற நோக்கத்தில்தான் கொடைக்கானலில் நிறுவப்பட்டது. ஆனால், அந்த உயரிய நோக்கத்தைப் புரிந்துகொள்ளாமல் தி.மு.க. அரசு இப்பல்கலைக்கழகத்தை சென்னைக்கு மாற்றியது. அதனை மீண்டும் கொடைக்கானல் நகருக்கே மாற்றி எனது தலைமையிலான முந்தைய அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அரசு உத்தரவிட்டது. தற்போது இப்பல்கலைக்கழகம் கொடைக்கானல் நகரில் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் சிறிய அளவில் அமைந்த கட்டடங்களைக் கொண்டு இயங்கி வருகின்றது. இந்நிலையில், எங்கள் அரசு அன்னை

தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தை கொடைக்கானலிலேயே ஏறத்தாழ 150 ஏக்கர் பரப்பளவு கொண்ட புதிய இடத்தில் விரிவுபடுத்தி அமைத்திட (மேசையைத் தட்டும் ஒலி) முடிவு செய்து இதற்கான நடவடிக்கைகளை எடுக்க உள்ளது. மேலும், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்திற்கு அருகிலுள்ள மாவட்டங்களைச் சார்ந்த அனைத்து அரசு மற்றும் தனியார் மகளிர் கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படும்.

மகளிர் முன்னேற்றத்திற்கான அடித்தளத்தை தமிழ்நாட்டில் சிறந்த முறையில் அமைத்திட அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் அரசுக்கு பேருதவியாக இருக்கும் என்ற அடிப்படையில் இந்தப் பல்கலைக்கழகத்தை மிகப் பெரிய அளவில், சர்வதேச பல்கலைக்கழகங்களுக்கு இணையாக இதனை Centre for Excellence என்ற அளவுக்கு ஒரு மிகச் சிறந்த உயர்கல்வி மையமாக உருவாக்கிட நான் விருப்பம் கொண்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வகையில், கடந்த 6-3-2002 அன்று சென்னைக்கு வந்து என்னைச் சந்தித்த அமெரிக்க நாட்டின் நியூயார்க் நகரில் உள்ள Ford Foundation நிறுவனத்தின் தலைவி செல்வி Susan Bressford அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு தமது நிறுவனத்தின் நிதி உதவியை பெரிய அளவில் வழங்குவதாக உறுதி அளித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதையெல்லாம் பயன்படுத்தி இப்பல்கலைக்கழகத்திற்கு அடுத்த இரண்டு ஆண்டுகளில் அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்து நமது நாட்டின் மிகச் சிறந்த பல்கலைக்கழகங்களில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகமும் ஒன்று என்ற சிறப்பைப் பெற்றுத் தந்திட இந்த அரசு உறுதி பூண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 10 மாத காலமாக என்ன செய்து கொண்டிருந்தோம் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அடிக்கடி வினா எழுப்பினார். இதையெல்லாம்தான் செய்துகொண்டிருந்தோம். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-30*

தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் நிலவும் வறுமையை அகற்றவும், அதன் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், ஊரக மக்களிடையே நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும், அவர்கள் சுய வேலை வாய்ப்புகளை தாமே உருவாக்கிக் கொண்டு தொடர்ந்து அவற்றில் ஈடுபடவும் அனைத்து உதவிகளும் செய்திட வேண்டும் என்பதே எங்கள் அரசின் கொள்கை ஆகும். இதன் அடிப்படையில்தான் மேதகு ஆளுநர் உரையில் தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 385 ஊராட்சி ஒன்றியங்கள்



ஒவ்வொன்றிலும் குறைந்தபட்சம் ஒரு கோடி ரூபாய் முதலீட்டைக் கொண்ட ஒரு தொழிற்சாலை உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தந்த ஒன்றியங்களில் ஏற்கெனவே நடைபெற்று வருகின்ற, வணிக வாய்ப்பு அதிகம் உள்ள தொழில் ஒன்று கண்டறியப்பட்டு, அந்தப் பகுதி மக்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும், வேலைவாய்ப்பு பெறுகின்ற வகையிலும், தொழிற்சாலை அந்த ஒன்றியத்தில் அமைவதால் அதனையொட்டி அங்கு சிறு தொழில்கள் பெருகும் வகையிலும், ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு தொழிற்சாலை அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, வேளாண் சார்ந்த தொழில்கள், உணவுப் பொருள்கள் பதப்படுத்துதல், மூலிகை மற்றும் மருத்துவப் பொருள்கள் தயாரித்தல் போன்ற ஏற்றுமதிக்கும், வேலை வாய்ப்பிற்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கின்ற தொழிற்சாலைகள் தனியார் துறை மற்றும் கூட்டுத் துறை, அதாவது (Joint Sector) அல்லது (Associate Sector) மூலமாக அமைக்கப்படும். இத்தொழிற்சாலை ஒவ்வொன்றும் குறைந்தபட்சம் 1 கோடி ரூபாய் மூலதனத்தைக் கொண்டு அமையும். இவ்வாறு நிறுவப்படும் தொழிற்சாலைகள் ஒவ்வொன்றிலும் ஆண்டுதோறும் 10 கோடி ரூபாய் அளவிற்கு உற்பத்தி மற்றும் விற்பனை அமையும் வகையில் இந்தத் தொழிற்சாலைகள் வெற்றிகரமாக இயங்க அரசு அனைத்து ஒத்துழைப்பையும் வழங்கி தக்க வழிகாட்டுதல்களையும் நல்கும். இதற்கு வங்கிகள், நிதி நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவி மற்றும ஒத்துழைப்பு பெற்றுத் தரப்படும். இவ்வாறு தமிழகத்தின் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், ஒன்றியத்திற்கு ஒரு தொழிற்சாலை வீதம் நிறுவப்பட்டு ஊரகத் தொழில்கள் மறுமலர்ச்சி பெறுவதற்கு இந்த அரசு போர்க்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சமுதாயத்தில் காலம்காலமாக ஒடுக்கப்பட்ட பிரிவினராக இருக்கும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் போன்ற பிரிவுகளைச் சார்ந்த மக்கள் சமூக, பொருளாதார முன்னேற்றத்தை விரைந்து அடைய வேண்டும் என்பது எங்கள் அரசின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும். அவர்களுடைய வாழ்வில் மலர்ச்சியை ஏற்படுத்த பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை எங்கள் அரசு அறிவித்து செயல்படுத்தி வருகின்றது. குறிப்பாக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவைச் சார்ந்த 11 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்புகள் படிக்கும் மாணவியர்கள் அனைவருக்கும் இலவச சைக்கிள்கள் வழங்கும் திட்டம் தமிழ்நாடு முழுவதும் மிகப் பெரிய அளவில் (மேசையைத் தட்டும் ஒலி) மற்ற மாநிலங்களில் ஒரு

முன்னுதாரணமாக எடுத்துக் கொள்ளப்படும் சிறப்பினைப் பெற்றுள்ளது. ஆகவே, கல்வி அறிவு இத்தகைய ஒடுக்கப்பட்ட பிரிவினரிடையே மென்மேலும் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்பதில் எங்கள் அரசு ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளது. இந்த உயரிய நோக்கத்தின் அடிப்படையில்தான் மேதகு ஆளுநர் உரையில் தெய்வப் புலவர் திருவள்ளுவர் பெயரில் ஒடுக்கப்பட்ட பிரிவினரின் பொருளாதார, சமூக மேம்பாட்டை முக்கிய நோக்கமாகக் கொண்ட புதிய பல்கலைக்கழகம் ஒன்று வேலூர் நகரில் ஏற்படுத்தப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எத்தனையோ பல்கலைக்கழகங்கள் இருந்த போதிலும் இந்தப் புதிய பல்கலைக்கழகத்திற்கு அப்படி ஒரு தனிச் சிறப்பு என்ன என்ற கேள்வி அனைவர் மனதிலும் எழலாம். இந்தப் புதிய பல்கலைக்கழகம், நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் ஆகிய பிரிவுகளைச் சார்ந்தவர்களுக்கு என்று சொன்னதினால், அங்கே அத்தகைய பிரிவுகளைச் சார்ந்த மாணவ மாணவியர்கள் மட்டுமே கல்வி பயில்வார்கள் என்றோ, அத்தகைய பிரிவுகளைச் சார்ந்த பேராசிரியர்கள் மட்டுமே அங்கே பணி புரிவார்கள் என்றோ பொருள் அல்ல. மாறாக, இந்தப் புதிய பல்கலைக்கழகத்தின் நோக்கம் என்னவென்றால், திருவள்ளுவர் எப்படி உலகில் உள்ள அனைத்து மொழிகளிலும், அனைத்து மதங்களைப் பின்பற்றுவோராலும், ஏற்றுக்கொள்ளப்பட்டு, போற்றப்படுகிறாரோ, அதேபோன்று அனைவருமே இந்தப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலவும், பணி புரியவும் இயலும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெளிவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன். திறனாய்வு (Research) மற்றும் உயர்கல்வி வழிமுறையின் வாயிலாக ஒடுக்கப்பட்ட பிரிவுகளின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கு உரிய வழிமுறைகளையும், கருத்துகளையும், நுட்பங்களையும் அறிவு சார்ந்த முறையில் எடுத்துரைத்து அதன் வாயிலாக அப்பிரிவு மக்களின் வாழ்க்கைத் தரத்தில் போற்றத்தக்க மாறுதல்களை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் இந்தப் புதிய பல்கலைக்கழகத்தின் நோக்கம் ஆகும். அந்த வகையில், உலகின் பல பாகங்களிலும் உள்ள ஒடுக்கப்பட்ட பிரிவைச் சார்ந்த மக்கள் எப்படி எல்லாம் தங்களுக்கு இருந்த சமூக, பொருளாதார இடர்ப்பாடுகளை வெற்றிகொண்டிருக்கிறார்கள், முன்னேறியிருக்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து அவை குறித்து தீவிர ஆய்வு செய்து உரிய கண்டுபிடிப்புகள் மூலம் அரசுக்கு ஆலோசனைகளையும், கருத்துகளையும் வழங்குவதை இந்தப் பல்கலைக்கழகம் தன்னுடைய கடமையாகக் கொண்டிருக்கும்.



*பிற்பகல் 12-35*

இன்றைய உலகில் பொருளாதார வளர்ச்சிக்கும் வேலை வாய்ப்பைப் பெருக்குவதற்கும், தகவல் தொழில் நுட்பத்தில் பிற நாடுகளுக்கு இணையாக முன்னேற்றம் காண்பது மிகவும் அவசியம். இந்தியாவில், தகவல் தொழில்நுட்பக் கொள்கை முதன்முதலாக அறிவிக்கப்பட்ட மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. தகவல் தொழில் நுட்பத்தில் புரட்சி காண்பதற்கு ஏதுவாக பொதுப் பாதைகளில் தனியார் மற்றும் பொது நிறுவனங்கள் கண்ணாடி இழைக் கேபிள்களைப் பதிக்க அனுமதிக்கும் வகையிலான கொள்கை வகுக்கப்பட்டு செயல்படும் மாநிலங்களில் தமிழகம் முன்னணி வகிக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமெரிக்காவில் உள்ள ஹார்வர்டு பல்கலைக்கழகம் (Harvard University) வெளியிட்டுள்ள ஆய்வறிக்கை ஒன்றில் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் தகவல் தொழில் நுட்பத் துறையில் முதல் இடத்தைப் பெறும் வகையில் முன்னேறிச் செல்கிறது என்று கணித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியத் தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்பு Confederation of Indian Industries - C.I.I. கடந்த செப்டம்பர் 13 முதல் 16 ஆம் தேதி வரை சென்னை வர்த்தக மையத்தில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சர்வதேச மாநாடு ஒன்றையும், கண்காட்சி ஒன்றையும் நடத்தியது. மேலும், தமிழ்நாடு தகவல் தொழில் நுட்பவியல் நிலையம் Tamil Nadu Information Technology Institute ஒன்றை அமைப்பதற்கும் இவ்வரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. உலகிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில்தான் தொழிற்கல்வி பயில நுழைவுத் தேர்வு எழுதும் மாணவ மாணவியர்களுக்கு கணினி மூலம் Online-ல் நுழைவுத் தேர்வுக்கான அனுமதிக் கடிதம் வழங்கும் முறை 12-3-2002 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சாதாரணமாக விண்ணப்பப் படிவங்களை தபாலில் அனுப்பி 45 நாட்கள் காத்திருந்து, அதன் பின்னர் அனுமதிக் கடிதம் Hall Ticket பெறப்பட்டு வந்தது. அவ்வாறு வந்த பின்னர்கூட அதில் ஏதாவது பிழைகள் இருந்தால் அதனால் மாணவ மாணவியருக்கு மன உளைச்சலும், சிரமமும் ஏற்பட்டு வந்தது. இதனைத் தவிர்க்கும் பொருட்டு கணினியில் பதிவு செய்த இரண்டு நிமிடங்களிலேயே இந்த அனுமதிக் கடிதத்தை உடனுக்குடன் பெறும் வகையில் இந்தத் திட்டம் இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் அண்ணா பல்கலைக்கழகத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன் மூலம் தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழகம் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் திகழ்கிறது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் துறையில் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதன்மையான மாநிலமாகத் திகழ்கிறது என்பது இந்த On line திட்டத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அறிவியல் துறையில் உயிரியல் தொழில்நுட்பம் தற்போது முக்கியத்துவம் பெற்று வருவதை கருத்தில் கொண்டு உயிரியல் தொழில் நுட்பத் துறையில் பன்னாட்டு நிறுவனங்களை ஈடுபடுத்த நடவடிக்கை இந்த அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு ஆகஸ்ட் 25 ஆம் தேதி தமிழக அரசின் பொதுத் துறை நிறுவனமான TIDCO நிறுவனத்திற்கும், அமெரிக்காவில் உள்ள கார்னெல் பல்கலைக்கழகத்திற்கும் இடையே உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கான தொழில்நுட்ப சேவை ஒப்பந்தம் செய்யப்பட்டது. கார்னெல் பல்கலைக்கழகம், இந்தியாவில், தமிழ்நாட்டில் மட்டும்தான் இத்தகைய ஒப்பந்தத்தைச் செய்துள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தொழில்நுட்பப் பூங்காவில் 50 புதிய நிறுவனங்கள் மூலமாக 1000 கோடி ரூபாய் அளவிற்கு மூலதனத்தை ஈர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த தொழில்நுட்பப் பூங்கா TICEL- அதாவது TIDCO Centre for Life Sciences அமைப்பது தொடர்பான பணிகள் இந்த ஆண்டு முடிவடையும்.

மேலும், அனைத்துத் துறைகளிலும் மின்னணு சார் நிர்வாகத்தை (E-Governance) செயல்படுத்தி காகிதப் பயன்பாட்டைக் குறைத்து அதன்மூலம் காலதாமதத்தையும், பொருள் விரயத்தையும் குறைக்க இவ்வரசு எண்ணுகிறது. பொது மக்களுக்கான வசதி வாய்ப்புகளைப் பெருக்க தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. திருமாவளவன் அவர்கள் பேசுகின்றபோது தெரிவித்த சில கருத்துகளுக்கு இப்போது எனது பதிலுரையை நான் அளிக்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. திருமாவளவன் அவர்கள் இந்த அவையில் உரையாற்றும்போது செல்வி ரீட்டா மேரிக்கு இழைக்கப்பட்ட கொடுமை பற்றியும், தூத்துக்குடி மாவட்டம் சங்கரலிங்கபுரம் கிராமத்தில் ஆதிதிராவிடர்கள் பாதிக்கப்பட்டு துயரத்தில் இருப்பதாகவும், கரூர் மாவட்டம் சிவகுமார் என்ற சிறுவனுக்கு நீதி கிடைக்க வேண்டுமென்றும், தருமபுரி மாவட்டம் மருக்காலம்பட்டியில் பூவி என்ற கர்ப்பிணிப் பெண் வன்கொடுமை காரணமாக மரணம் அடைந்ததாகவும் இங்கே தெரிவித்தார்.





*பிற்பகல் 12-40*

செல்வி ரீட்டா மேரி கற்பழிப்புச் சம்பவம் தொடர்பான விவரங்கள் வெளிவந்தவுடன், இந்த அரசு, துரிதமாகச் செயல்பட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நீதிமன்ற உத்தரவின்படி, ஐ.ஜி. திருமதி திலகவதி அவர்கள் விசாரணை மேற்கொண்டு, ரீட்டா மேரிக்குக் கொடுமை இழைக்கப்பட்டுள்ளது என்பது உறுதி செய்யப்பட்டவுடன், நிவாரணத் தொகையாக 5 இலட்சம் ரூபாயும், அவர் குடியிருப்பதற்கு வீடு ஒன்றும் வழங்கி அரசு உடனடியாக உத்தரவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், அரசு மருத்துவமனையில் தக்க சிகிச்சை அளிக்கவும் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

தூத்துக்குடி மாவட்டம், சங்கரலிங்கபுரம் கிராமத்தில் உள்ளாட்சித் தேர்தல் தொடர்பான சம்பவங்களினால் பகைமை உணர்வு ஏற்பட்டு, ஆதிதிராவிடர்களுக்கும் சாதி இந்துக்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டச் சென்ற காவலர் ஒருவர், சங்கரலிங்கபுரம் கிராமத்தினரால் கொலை செய்யப்பட்டுள்ளார். இருந்தபோதிலும், காவல் துறையினர் இதில் மிகவும் கவனமாகச் செயல்பட்டு, சாதிக் கலவரம் மேலும் பரவாமல், தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இந்தச் சம்பவத்தில் குற்றவாளிகளாகக் கைது செய்யப்பட்ட பெண்களை ஜாமீனில் விடுவதற்கு அவர்கள் தரப்பிலேயே போதிய ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. இந்த துரதிருஷ்டவசமான சம்பவத்தால், ஆதிதிராவிட மக்களின் வீடுகளும், உடைமைகளும் சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டிருப்பது எனது கவனத்திற்கு வந்துள்ளது. எனவே, சங்கரலிங்கபுரம் கிராமத்தில் கலவரத்தால் பாதிக்கப்பட்ட ஆதிதிராவிட மக்களுக்கு, மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின் அடிப்படையில் உரிய நிவாரண உதவிகள் வழங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கரூர் மாவட்டம், புங்கம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சிவகுமார் என்ற சிறுவன் வேட்டைக்குச் செல்ல கட்டாயப்படுத்தப்பட்டு, அதற்கு ஒத்துழைக்காததால், துப்பாக்கியால் சுடப்பட்டு கண்களில் காயம் அடைந்துள்ளான். இதுகுறித்து, சிவகுமாரின் தந்தை உடனடியாக குற்றவாளிகள் மீது காவல் துறைக்கு புகார் எதுவும் கொடுக்காமல், சிகிச்சைக்குப் போதிய பணம் தரவில்லை என்ற நிலை எழுந்த பின்பே, காவல் துறையிடம் புகார் செய்துள்ளார். இருப்பினும், காவல் துறை

அலுவலர்கள் விரைந்து செயல்பட்டு, குற்றவாளிகளைக் கைது செய்து உரிய நடவடிக்கை எடுத்துள்ளனர். பாதிக்கப்பட்ட அந்தச் சிறுவனுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 25,000 ரூபாய் நிதி உதவி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தருமபுரி மாவட்டம், மருக்காலம்பட்டியில் திருமதி பூவி என்ற கர்ப்பிணிப் பெண் சாதிக் கலவரத்தின் பாதிப்பு காரணமாக இறந்ததாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ள கருத்து தவறானது. உள்ளாட்சித் தேர்தலுக்குப் பின் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களில் ஆதிதிராவிடர்களின் வீடுகள் தாக்கப்பட்டது குறித்து தொடர்புடைய குற்றவாளிகள் 44 பேர் கைது செய்யப்பட்டு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதே நேரத்தில் ஆதிதிராவிடர்களும் தங்களுடைய எதிர்ப்பைக் காட்டும் வகையில் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துக்குத் தீ வைத்து, வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளனர். மரணம் அடைந்த திருமதி பூவி என்ற கர்ப்பிணிப் பெண்ணுக்கு குறைப் பிரசவமாக குழந்தை பிறந்து, அதன் பின் மறுநாள் வலிப்பு ஏற்பட்டு, உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்கத் தவறியதால் அவர் இறந்துள்ளார். அவரது உடலில் வெளிக் காயங்கள் எதுவும் இல்லை என்றும், அதிர்ச்சி காரணமாகவே இறந்துள்ளார் என்றும் பிரேதப் பரிசோதனை அறிக்கையில் மருத்துவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். அவரது இறப்பு குறித்து, சம்பந்தப்பட்ட வருவாய்க் கோட்ட அலுவலரும் விசாரணை நடத்தியுள்ளார். காவல் துறையினரும் புலன் விசாரணை நடத்தி வருகின்றனர். எனவே இந்த இனத்தில் பாரபட்சமின்றி செயல்பட்டு விசாரணை முடிவுகளின் அடிப்படையில், உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நிலையில் மனிதாபிமான அடிப்படையில் இறந்துபோன திருமதி பூவியின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 50,000 ரூபாய் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்போது நீங்கள் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நிகழ்ச்சி நிகழப்போகிறது. நேற்று இங்கே பல குற்றச்சாட்டுகளை அள்ளி வீசிய மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்களுக்கு இன்று பதில் கூறுவேன் என்று தெரிவித்திருந்தேன். அதை இப்போது தொடங்கவுள்ளேன்.





பிற்பகல் 12-45

மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி அவர்கள், மேதகு ஆளுநர் உரையில், ஒரு நடைமுறை உண்மை ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறி, அதற்கு நன்றி தெரிவித்துக் கொண்டிருக்கிறார். தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில், தற்போது காணப்படும் பின்னடைவு, ஏனைய மாநிலங்களிலும் இருக்கும் பொதுப் பிரச்சினைதான், அதன் காரணமாக பல மாநில அரசுகள், அவற்றின் திட்டச் செலவை பெருமளவில் குறைக்க உள்ளன என்பதே, அந்த நடைமுறை உண்மை என்று குறிப்பிட்டுள்ளார். உலகம் முழுவதும் காணப்படும் பொருளாதார வீழ்ச்சியைப் பற்றி நான் குறிப்பிட்டதை, அவருக்கு வசதியாக, தி.மு.க. அரசின் நிர்வாகச் சீர்கேடுகளை மூடிமறைக்க, அவர் இப்படிக் கூறியிருக்கிறார். சென்ற ஆண்டு ஆளுநர் உரையில் குறிப்பிட்டவாறு, தமிழகத்தின் இக்கட்டான நிதி நிலைமைக்கு, முந்தைய தி.மு.க. ஆட்சியின் நிர்வாகச் சீர்கேடுகளே, முக்கியக் காரணம் என்பதில் இருவேறு கருத்துகள் இருக்க முடியாது. அந்தக் கருத்தில், இந்த அரசுக்கு எவ்வித மாறுபாடும் இல்லை. கடந்த 5 ஆண்டுகால தி.மு.க. ஆட்சியின் நிர்வாகச் சீர்கேட்டினால், ஏற்கெனவே பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டின் நிதி நிலைமையை, தற்போது நிலவி வரும் பொருளாதார வீழ்ச்சி, மேலும் முடக்கிவிட்டது என்றுதான், இந்த ஆண்டு நிகழ்த்தப்பட்ட ஆளுநர் உரையில் கூறப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களது ஆட்சி தொட்டு, செழுமையுற்று சிறந்தோங்கி விளங்கிய தமிழக அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் 1991 முதல் 1996 வரை நடந்த, எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், தேசிய அளவில், அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கான பல்வேறு விருதுகளைப் பெற்று, புகழுடன் விளங்கியதை, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

குறிப்பாக, 1992ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டு வரை, "தேசிய உற்பத்தித் திறன் விருது", "சிறந்த முறையில் எரிபொருள் சேமிப்பு விருது" போன்ற, ஏறத்தாழ 40 விருதுகளை, அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் பெற்று தமிழகத்திற்கு பெருமை சேர்த்தன. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற, தி.மு.க. ஆட்சியின்போது, அரசுப் போக்குவரத்துக் கழகங்களை, குரங்கு கையில் அகப்பட்ட பூமாலையைப்போல், பிரித்துப் போட்டு, சின்னாபின்னம் ஆக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அடியோடு

சீரழித்துவிட்டு, இப்போது முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. பொன்முடி அவர்கள் அரசுப் போக்குவரத்துக் கழகங்களைப் பற்றி வெட்கப்படாமல் பேசி, வார்த்தை ஜாலம் காட்ட முனைந்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) சில புள்ளி விவரங்களை அள்ளி வீசி (குறுக்கீடுகள்) I am not yielding.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் நிற்கிறபோது நீங்கள் பேசக்கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதில் சொல்லவிடுங்கள், ஐயா . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி சொல்லுங்கள். (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசி முடித்தபின்னர் அவர் பேசட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டிய விளக்கத்தைச் சொல்லி முடிக்கட்டும். உங்களுக்கு வாய்ப்பு நிச்சயம் தருகிறேன். குறுக்கே பேச வேண்டாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டிய விளக்கத்தைச் சொன்ன பிறகு நான் உங்களை அழைக்கிறேன். (குறுக்கீடுகள்) உங்களை அழைக்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதையே மீண்டும் அழுத்தந்திருத்தமாகச் சொல்லுகிறேன். 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டுவரை நடைபெற்ற தி.மு.க. ஆட்சியின்போது, அரசுப் போக்குவரத்துக் கழகங்களை, குரங்கு கையில் அகப்பட்ட பூமாலையைப் போல், பிய்த்துப்போட்டு, சின்னாபின்னம் ஆக்கி (மேசையைத் தட்டும் ஒலி) அடியோடு சீரழித்துவிட்டு, இப்போது முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. பொன்முடி அவர்கள் அரசுப் போக்குவரத்துக் கழகங்களைப்பற்றி வெட்கப்படாமல் பேசி, வார்த்தை ஜாலம் காட்ட முனைந்திருக்கிறார். சில புள்ளிவிவரங்களை அள்ளி வீசி, வித்தை காட்ட முயற்சித்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது Statistical Jugglery செய்யப் பார்த்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)



அரசுப் போக்குவரத்துக் கழகங்களை நாங்கள் நிர்வகிப்பது பற்றி வேறு யாரும் பேசலாம். ஆனால் கண்டிப்பாக திரு. பொன்முடி அவர்கள் பேசக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு அந்த அருகதையே இல்லை என்று நான் கூறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. பொன்முடி:** ஒரு ஆதாரம் இருக்க வேண்டுமே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள், கடைசியாகப் பேசலாம், அழைக்கிறேன்.

*பிற்பகல் 12-50*

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமக்கெல்லாம் அருகதை ஏற்படுவது, தேர்ந்தெடுக்கப்பட்டு இந்தச் சட்டமன்றத்திற்கு வருவதன் காரணமாகத்தான். அருகதை இல்லை என்று சொல்கிறபோது, மக்கள் தேர்ந்தெடுத்து இங்கே பொன்முடி அவர்களும் வந்திருக்கிறார்கள்; நாங்களும் வந்திருக்கிறோம். இரண்டாவது, ஓர் ஆட்சி நடைபெறுகிறபோது சில குறைகள் ஏற்படலாம். குறையே ஏற்படாது என்று என்னால் வாதாட முடியாது. அப்படிச் சொல்லக்கூட அவசியம் இல்லை. அப்படி குறை ஏற்பட்ட காரணத்தினாலேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குரங்கு கை பூமாலை, குரங்கு கை பூமாலை; அதை நான் வலியுறுத்திச் சொல்வேன் என்று சொல்கிறபோது, நாங்கள் உள்ளபடியே மனம் புண்படுகிறோம். அப்படித்தான் சொல்ல முடியும் என்று சொன்னால், அப்படிப்பட்ட அவையில் எங்களுக்கு இடம் தேவையில்லை என்று நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும் மற்றும் சில தி.மு.க. உறுப்பினர்களும் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்)

**டாக்டர் க. பொன்முடி:** தலைவர் அவர்களே, நான் பதில் சொல்கிறேன்....(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, உட்காருங்கள், (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். பேராசிரியர் அவர்கள் வெளிநடப்புச் செய்து விட்டார்கள். அவர் வெளிநடப்புச் செய்ததற்குப் பிறகு நீங்கள் அதில் விளக்கம் சொல்லக்கூடாது. தலை இருக்கிறபோது வால் ஆடக்கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள்.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் அமருங்கள். (குறுக்கீடுகள்) ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக அமருங்கள். நேற்றைய தினம்.... (குறுக்கீடுகள்)

(டாக்டர் க. பொன்முடி அவர்களும் மற்றும் எஞ்சிய தி.மு.க. உறுப்பினர்களும் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

நேற்றையதினம் திரு. பொன்முடி அவர்கள் இதுபோன்ற விளக்கங்களைச் சொல்கிறபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். நாளைக்கு இதற்கு நான் பதில் சொல்கிறேன். அவசியம் பொன்முடி வரவேண்டும் என்று முதலமைச்சர் அவர்களே வேண்டுகோள் விடுத்தார்கள். இன்றைக்கு அந்த விளக்கத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்ல முற்படுகிறபோது, அதை பிரதான எதிர்க்கட்சியினர் தாங்கிக் கொள்ள முடியாமல் வெளிநடப்புச் செய்வது முறையல்ல.

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். கடந்த ஆட்சிக் காலத்திலே ஆளுநர் உரை நிகழ்த்தப்பட்டு அதற்குப் பிறகு விவாதம் நடைபெற்றபோது அந்த விவாதத்தின்போது பேசப்பட்ட கருத்துகளெல்லாம் முடிகின்ற நேரத்தில் முதலமைச்சர் அவர்கள், முன்னாள் முதலமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறபோது, திரு. ஞானசேகரன் அவர்கள் பக்கத்திலே இருக்கிற ஒருவரிடத்திலே பேசுகிறார். பேசுவதை வைத்துக்கொண்டு முன்னாள் முதலமைச்சர் சொல்கிறார். வெளிநடப்புச் செய்யப் பார்க்கிறீர்கள் போல் இருக்கிறது. ஆளுநருக்கு நன்றி தெரிவிக்கின்றபோது, அந்த விவாதம் நடைபெறுகிறபோது வெளிநடப்புச் செய்வது மரபல்ல என்று முன்னாள் முதலமைச்சர் சொல்கிறார். இவ்வளவையும் தெரிந்திருக்கக்கூடிய பேராசிரியர் அவர்கள் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கக்கூடிய இந்த விவாதத்தில் முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது இப்படி வெளிநடப்புச் செய்வது முறையற்றது. முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்கிறபோது பிரதான எதிர்க்கட்சி கேட்டு அதற்கு விளக்கம் சொல்வதற்கு வாய்ப்பு வழங்கப்படும் என்று நான் தெரிவித்திருக்கிறேன். அப்படித் தெரிவித்ததற்குப் பிறகும் இப்படி கொதி தாங்க முடியாத நொய் அரிசியாக பிரதான எதிர்க்கட்சி இப்படி வெளிநடப்புச் செய்தது (மேசையைத் தட்டும் ஒலி) மிகவும் வருந்தத்தக்கது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன எதிர்பார்த்தேனோ அதுதான் இப்போது





நடந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நேற்று இந்த அவையில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் இன்று போய் நாளை வா என்று என்னைப் பார்த்து வாய் வீரம் பேசினார். நான் அவரைப் பார்த்து அவர் இன்று போய் நாளை வரட்டும்; திரு. பொன்முடி செய்த தவறுகளை எல்லாம் நாளை இந்த அவையில் நான் தெரிவிப்பேன்; அதை திரு. பொன்முடி அவர்கள் அமர்ந்து கேட்க வேண்டும் என்று நேற்றே தெரிவித்துத்தான் நான் சென்றேன். நேற்று திரு. பொன்முடி அவர்கள் எவ்வளவோ பேசினார். அவர்கள் ஆட்சிக் காலத்தில் செய்த தவறுகளுக்கெல்லாம் நாங்கள்தான் பொறுப்பு; அதுவும் இந்தக் கடந்த 10 மாத காலத்தில் நாங்கள் நடத்திக் கொண்டிருக்கின்ற இந்த அரசுதான் பொறுப்பு என்றெல்லாம் அபாண்டமான பழியை எங்கள் மீது சுமத்தினார். அப்போதெல்லாம் நான் அமைதியாகத்தான் கேட்டுக் கொண்டிருந்தேன். இதற்கெல்லாம் நாளை நான் பதில் சொல்கிறேன் என்றுதான் தெரிவித்தேன். திரு. பொன்முடி அவர்கள் நேற்று பேசிய பேச்சின் முழுப் பங்கும் கிட்டத்தட்ட எங்களைக் குறை சொல்வதாகத்தான் அமைந்திருந்தது. நாங்கள் செய்யாத தவறுகளுக்கு எல்லாம் நாங்கள்தான் பொறுப்பு என்பதுபோல அவருடைய பேச்சு அமைந்திருந்தது. அதற்கு புள்ளி விவரங்களோடு இன்றைக்கு நான் பதில் சொல்ல முற்படும்போது அவர்கள் செய்த தவறுகளை நான் இங்கே இப்போது வெளிப்படுத்தப் போகிறேன் என்பதை உணர்ந்து, அதைக் கேட்பதற்கு அவர்களால் முடியாமல் அதைத் தாங்கிக்கொள்ள முடியாமல் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையின் மரபுகளை மீறி வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் குற்றம் புரிந்தவர்கள் என்பதை அவர்களே ஒப்புக் கொண்டுவிட்டார்கள் என்றுதான் (மேசையைத் தட்டும் ஒலி) சொல்ல முடிகிறது.

*பிற்பகல் 12-55*

அரசுப் போக்குவரத்துக் கழகங்களை நாங்கள் நிர்வகிப்பது பற்றி வேறு யாரும் பேசலாம். ஆனால், திரு. பொன்முடி கண்டிப்பாக பேசக்கூடாது. அவருக்கு அந்த அருகதையும் இல்லை என்று நான் தெரிவித்தேன். நாங்கள் ஆட்சியை விட்டு வெளியேறியபோது 1996 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டிலுள்ள அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் accumulated loss திரண்ட இழப்பு ஏறத்தாழ 368.85 கோடி ரூபாயாக இருந்தது. அதில் 1991 ஆம் ஆண்டு வரை திரண்ட இழப்பு 164.19 கோடி ரூபாய். அப்பொழுது 1991 ஆம் ஆண்டு சனவரி மாதம் வரை தி.மு.க. ஆட்சியில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. பின்னர், ஜூன் மாதம் வரை ஜனாதிபதி ஆட்சி இருந்தது. அதன் பின்னர், 1991 ஜூன் 24 ஆம் தேதி பதவி ஏற்ற

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 5 ஆண்டுகளுக்கும் சேர்த்து 1996 வரை ஏற்பட்ட இழப்பு 204.66 கோடி ரூபாய் மட்டுமே. ஆனால் 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை தி.மு.க. ஆட்சியில் திரு. பொன்முடி நிர்வாகத்தில் ஏற்பட்ட இழப்பு 1,498.21 கோடி ரூபாய் ஆகும்.

எங்கள் 5 ஆண்டு கால ஆட்சியில் 204.66 கோடி ரூபாய் மட்டுமே மொத்த இழப்பு. ஆனால் 5 ஆண்டு கால தி.மு.க. ஆட்சியில் மொத்த இழப்பு 1,498.21 கோடி ரூபாய். இதுதான் திரு. பொன்முடி அவர்களின் நிர்வாகத் திறமையின் லட்சணம். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்கு தெரிந்திருக்கும். முந்தைய அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஆட்சியில் புதிய பேருந்துகள் வேண்டும் என கோரிக்கை வந்தபோது எல்லாம் அவை அனுமதிக்கப்பட்டு, பேருந்துகள் செல்லாத கிராமங்களே இல்லை என்ற நிலை இருந்தது. நான் பங்கேற்ற ஒவ்வொரு அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவிலும் புதிய பேருந்து வழித்தடங்களை தொடங்கி வைப்பது, கண்டிப்பான ஓர் அம்சமாக இருந்தது. நானே நூற்றுக்கணக்கான வழித்தடங்களில், புதிய பேருந்துகளை இயக்கி வைத்திருக்கிறேன். ஆனால் போக்குவரத்துத் துறை அமைச்சராக, திரு. பொன்முடியை வைத்து நிர்வாகம் செய்த திராவிட முன்னேற்றக் கழக அரசு, 2001 ஆம் ஆண்டு வரை, சேர்த்து வைத்து விட்டுப்போன மொத்த இழப்பீடு 2,031.18 கோடி ரூபாய் ஆகும். இதுதான் திரு. பொன்முடி அவர்களின் நிர்வாகத் திறமையின் லட்சணம்.

1991-லிருந்து 1996 வரை, எனது முந்தைய ஆட்சியின்போது, அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள், மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை மாற்றம் செய்யப்பட்டன. வழித்தடங்களில் பழுதடைந்து நின்றுபோன பேருந்துகளைப் பார்ப்பதே அரிது. பணிமனைகளிலும், பழுதடைந்த பேருந்துகள் குறைவாகவே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. பேருந்துகளின் தூய்மை பராமரிக்கப்பட்டு, பயணிகளின் வசதிகளும் சிறப்பாகப் பேணப்பட்டன. அப்படி இருந்த நிலை போய், 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை நடந்த தி.மு.க. ஆட்சியில், ஓட்டை உடைசல் பேருந்துகளே, அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் வசம் இருக்கின்றன என்ற மோசமான நிலை ஏற்படுத்தப்பட்டது. 8 அல்லது 9 வருடங்கள் கடந்தும்கூட, பேருந்துகள் replace செய்யப்படாத, மாற்றப்படாத நிலை தொடர்ந்தது. மழைக் காலங்களில் ஒழுகும் பேருந்துகளாகவும், வழியில் நின்றுபோய் விடும் பேருந்துகளாகவுமே, அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் விளங்கின. இப்படிப்பட்ட நிலை, எங்கள் ஆட்சிக் காலத்தில்



ஏற்பட்டதே இல்லை. திரு. பொன்முடியின் நிர்வாகத்தில்தான் இத்தகைய பரிதாபமான நிலை ஏற்பட்டது.

முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில், அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் இயக்கத்தில் இருந்த ஏறத்தாழ 16,000 பேருந்துகளில் ஏறத்தாழ 4,900 பேருந்துகள் ஓட்ட முடியாத நிலையில் பணிமனையில் முடக்கி வைக்கப்பட்டுக் கிடந்தன. அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள், சோபிதம் இழந்து போயின.

அரசுப் போக்குவரத்துக் கழகங்களை, இப்படிச் சீரழித்த திரு. பொன்முடிக்கு, எங்களுடைய நிர்வாகத் திறமையைப் பற்றிப் பேசுவதற்கு அருகதையே கிடையாது என்று அதனால்தான் கூறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

பிற்பகல் 1-00

பேருந்துக் கட்டணத்தை சமீபத்தில் ஏற்றிய பிறகு, அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், இலாபத்தில்தானே இயங்கி வருகின்றன? அதனால் போக்குவரத்துக் கழகங்களை, தனியார்மயமாக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி இங்கே தெரிவித்தார்.

பேருந்துக் கட்டண விகிதத்தை ஏற்றியவுடனேயே, அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் இலாபத்தில் இயங்கத் தொடங்கிவிடும் எனக் கூறுவது சிறுபிள்ளைத்தனமான கூற்று.

அரசுப் போக்குவரத்துக் கழகங்களைப்பற்றி, இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் கொள்கையை, இந்தத் தருணத்தில், தெளிவாக எடுத்துக்கூற விரும்புகிறேன். அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், ஒருபோதும் தனியார்மயம் ஆக்கப்படமாட்டாது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சமயத்தில் கூற விரும்புகிறேன். இலாபத்தில் இயங்கும் அரசு நிறுவனங்களை, தனியார்மயமாக்க நாங்கள் ஒன்றும் முட்டாள்கள் இல்லை. ஏற்கெனவே தி.மு.க. ஆட்சி, அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் வைத்துவிட்டுப் போன நஷ்டத்தை ஈடு செய்ய என்ன வழிமுறை உள்ளது என்று விரிவாக ஆராய்ந்து பார்த்தோம். ஓரளவுக்கு பேருந்துக் கட்டண உயர்வை அமல்படுத்தி, அந்தப் பெருத்த நஷ்டத்தை சற்றுக் குறைத்திருக்கிறோம். அவ்வளவுதான், அதற்கு மேலாக, அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமாக உள்ள சில வழித்தடங்களில் தனியார் பேருந்துகளை அனுமதிக்கலாம் என முடிவெடுத்துள்ளோம்.

தி.மு.க. ஆட்சியில் திரு. பொன்முடி செய்ததுபோல, அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுக்குப் போட்டியாக மினி பஸ்களை அனுமதித்து, அரசுப் பேருந்துகள் வருமானம் ஈட்டாமல் செய்து, அவற்றை அப்படியே நிறுத்திவிட, நாங்கள் ஒருபோதும் முனையவில்லை. முனையவும் மாட்டோம். தி.மு.க. ஆட்சியில் கொண்டுவந்த திட்டம் என்றாலும், மினி பஸ்களை நாங்கள் எடுத்து விடவில்லை. மினி பஸ்கள் என்ன, அரசுப் போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்ததா? ஏறத்தாழ 4,000 மினி பஸ்கள் தமிழ்நாட்டில் வலம் வருகின்றனவே! அவை யாருக்குச் சொந்தமானவை? அவை தனியாருக்குச் சொந்தமானவை இல்லையா? அரசுப் பேருந்துகளை நஷ்டத்தில் ஓடச் செய்து, 4,000 மினி பஸ்களை அனுமதித்தது, தனியாரை ஊக்குவித்தது யார்? தி.மு.க. அரசுதானே? அன்றைய போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. பொன்முடி அவர்கள்தானே? மாமியார் உடைத்தால் மண்குடம், மருமகள் உடைத்தால் பொன்குடம். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றாக இருக்கிறது. திரு. பொன்முடி அவர்களின் வாதம்.

இந்தச் சட்டமன்றத்தின் வாயிலாக தமிழக மக்களுக்கு ஓர் உத்தரவாதத்தை, நான் அளிக்க விரும்புகிறேன். ஏற்கெனவே இந்திய நாட்டிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான், எல்லா ஊர்களும் பேருந்து வழித்தடங்களால் இணைக்கப்பட்டுள்ளன என்ற பெருமையைப் பெற்றிருக்கிறது. ஆகவே சில வழித்தடங்களில், தனியார் பேருந்துகள் அனுமதிக்கப்படுவதால், கிராமப்புற மக்களுக்கு, பாதிப்பு ஏற்படுகின்ற சூழ்நிலை அமைவதை, ஒருபோதும் இந்த அரசு அனுமதிக்காது. சில வழித்தடங்கள் இலாபகரமாக இல்லாததால் அவற்றில் தனியார் பேருந்துகள் ஓடவில்லை என்றால், அத்தகைய வழித்தடங்களில் அரசுப் பேருந்துகள் கண்டிப்பாக இயக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த அவை வாயிலாக தமிழக மக்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அரசுப் போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரை, 2000-2001ஆம் ஆண்டில், ரொக்க இழப்பு 75 கோடி ரூபாய் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி கூறியுள்ளார். அது வெறும் வார்த்தை ஜாலம். Statistical Jugglery- தான். புள்ளிவிவரங்களை வைத்து, வித்தை காட்டுவது மட்டுமே ஆகும் அது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, Transport Development Finance Corporation-க்கு மட்டும், போக்குவரத்து மேம்பாட்டு நிதிக் கழகத்திற்கு மட்டும், அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், இன்னும் 1,024 கோடி ரூபாய் கொடுக்க வேண்டியுள்ளது. தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடந்த, நிருவாகச் சீர்கேடுகளின் காரணமாக, வாங்கப்பட்ட டீசலுக்குக்கூட கிட்டத்தட்ட 342 கோடி ரூபாய் Indian Oil Corporation போன்ற அமைப்புகளுக்கு, நிலுவை வைத்துவிட்டுப் போய்விட்டார்கள். ஆகவே கட்டண உயர்விற்குப் பிறகும்கூட, அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் தத்தளிக்கின்ற நிலையிலேயே உள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில், இந்த அரசு எடுத்துள்ள சில சிக்கன நடவடிக்கைகளால், சில போக்குவரத்துக் கழகங்கள் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்காமல் இருக்குமாறு பார்த்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. மொத்தமுள்ள 18 அரசுப் போக்குவரத்துக் கழக அமைப்புகள் 7-ஆகக் குறைக்கப்படவுள்ளன. இதனால் நிருவாகச் செலவுகள் பெருமளவில் குறையும்.





இதுபோன்ற ஒரு சீரமைப்பு நடவடிக்கைதான், தெரிந்தெடுக்கப்பட்ட சில வழித்தடங்களில் தனியார் பேருந்துகளை இயக்க அனுமதிப்பதாகும். ஆகவே எங்கள் அரசின் இந்தக் கொள்கையை, குறை கூறுவதற்கு முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. பொன்முடி அவர்களுக்கு எந்தத் தகுதியும் இல்லை.

மேலும், தனியார்மயமாக்குதல்—Privatisation பற்றி, தி.மு.க. வின் இரட்டை வேடத்தை தோலுரித்துக் காட்ட விரும்புகிறேன். தி.மு.க.விற்கு இந்தக் கொள்கையில் எப்போதுமே இரட்டை வேடம், இரட்டை நாக்கு, இரட்டை முகம்தான் (மேசையைத் தட்டும் ஒலி) மத்தியில் ஒரு கொள்கை, மாநிலத்தில் ஒரு கொள்கை.

இலாபத்தில் இயங்கிவரும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தை தனியார்மயமாக்கத் துடிக்கிறது, தி.மு.க. அங்கம் வகிக்கும் மத்திய அரசு. இதை எதிர்த்து, தி.மு.க. குரல் கொடுக்காதது ஏன்? இதை எதிர்ப்பதற்கு, தி.மு.க.-விற்கு திராணி இருக்கிறதா? (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் நஷ்டத்தில் இயங்கிவரும் அரசுப் போக்குவரத்துக் கழகங்களில், சில வழித்தடங்களில், தனியார் பேருந்துகளை அனுமதிக்க இந்த அரசு முடிவெடுத்தால், உடனே அதை தனியார்மயமாக்கல் எனக் கூறி, அதை எதிர்த்து கூக்குரல் எழுப்புவது எந்த வகையில் நியாயம்?

பிற்பகல் 1-05

எங்களைக் குறை கூறுவதற்கு முன்பு உங்களை சரி பார்த்துக் கொள்ளுங்கள் என்பதுதான், திரு. பொன்முடி அவர்களுக்கு நான் கூற விரும்புகின்ற அறிவுரை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி, கடந்த ஆண்டு நிகழ்த்தப்பட்ட ஆளுநர் உரையிலும், இந்த ஆண்டுக்குரிய ஆளுநர் உரையிலும், ஒரே மாதிரியான சில அறிவிப்புகள், திரும்பத் திரும்ப வருவதாகக் குறை கூறியுள்ளார்.

முல்லைப் பெரியாறு அணையின் உயரத்தை உயர்த்த, கேரள அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தப்படும் என்று, சென்ற ஆண்டு ஆளுநர் உரையிலும், இந்த ஆண்டு ஆளுநர் உரையிலும் குறிப்பிட்டுள்ளதாக, அவர் குறை கூறியுள்ளார்.

முல்லைப் பெரியாறு அணையின் உயரத்தை உயர்த்தும் பிரச்சினை, இன்னும் நிலுவையில் தானே உள்ளது? இது குறித்து கேரள அரசுடன் கடந்த ஆண்டு தொடர்பு கொண்டுள்ளோம். தொடர்ந்து, இந்த ஆண்டும் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவோம் என்று கூறியுள்ளோம். இதில் என்ன தவறு இருக்கிறது? முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையைப் பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடாமல் நாங்கள் விட்டிருந்தால், திரு. பொன்முடியே. "ஏன் குறிப்பிடவில்லை" என்று அப்போதும் குறை கூறியிருப்பார்.

அதேபோன்றுதான், கூட்டுறவு அமைப்புகளுக்கான தேர்தல் பற்றிய அறிவிப்பு. சென்ற ஆண்டு நடத்த திட்டமிட்டிருந்த கூட்டுறவு அமைப்புத் தேர்தல், பல்வேறு காரணங்களால் நடத்த முடியாமல் போனது. ஆகவே அந்தத் தேர்தல்களை இப்போது நடத்த இருக்கிறோம் என்று குறிப்பிட்டுள்ளோம். அதை நாங்கள் குறிப்பிடவில்லை என்றால் "ஏன் குறிப்பிடவில்லை" என்று திரு. பொன்முடி அவர்களும், திரு. துரைமுருகன் அவர்களும் கேட்டிருப்பார்கள்.

அதேபோன்று, சேது சமுத்திர திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று சென்ற ஆண்டு ஆளுநர் உரையிலும் கூறியுள்ளோம். மீண்டும் இந்த ஆண்டும் அதையே கூறியுள்ளோம் என்று அதையும் திரு. பொன்முடி அவர்கள் குறை கூறியுள்ளார்.

தி.மு.க. அங்கம் வகிக்கும் மத்திய அரசு, சேது சமுத்திர திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கி, பெருமளவில் நிதி ஒதுக்கி, திட்டத்தை அமல்படுத்தத் தொடங்கிவிடுமேயானால், எந்த ஆண்டில் மத்திய அரசு அதைச் செய்கிறதோ, அந்த ஆண்டிலிருந்து ஆளுநர் உரையில் இதைக் குறிப்பிடாமல் விட்டுவிடுவோம் என்பதை திரு. பொன்முடி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



அனைவருக்கும் ஆரோக்கியமான, வளமான வாழ்வு அமைவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற இந்த அரசின் தொலைநோக்கினை எய்திட 15 அம்சங்கள் கொண்ட திட்டம் ஒன்றைச் செயல்படுத்த இந்த அரசு எண்ணியுள்ளதாக, மேதகு ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் திருவாளர்கள் பரிதி இளம்வழுதி, பொன்முடி போன்ற கற்பனைத் திறன் வாய்ந்த சில மாண்புமிகு உறுப்பினர்கள், இந்தத் திட்டத்தைக்கூட கேலியும் கிண்டலும் செய்துள்ளார்கள். இது என் கற்பனையில் உதித்த திட்டம் என்று கருதுகிறார்கள் போலும். அதனால்தான் இதைக் கிண்டல் செய்திருக்கிறார்கள். என் கற்பனையில் உதித்த திட்டம் அல்ல இது.

தமிழக திட்டக் குழுவின் துணைத் தலைவராகப் பணியாற்றும் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள், ஓர் உலகப் புகழ்பெற்ற வேளாண்மை விஞ்ஞானி. அவர் பல்வேறு நாடுகளின் அனுபவங்களில் இருந்து பெற்ற விஞ்ஞான அடிப்படையிலான ஒரு திட்டத்தை என்னுடைய பரிசீலனைக்கு அளித்தார். அந்தத் திட்டத்தில் உள்ள மேன்மையான அம்சங்களைப் புரிந்துகொண்ட நான், அந்தத் திட்டத்தை இந்த அரசினுடைய நெடுங்காலத் திட்டமாக ஏற்றுக்கொள்ளச் செய்திருக்கிறேன். அதில் தவறு ஒன்றும் இல்லையே? முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்திலும், டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள், பசிப் பிணி இல்லாப் பகுதி திட்டம் என்ற ஒரு திட்டத்திற்கு ஆலோசகராகப் பயன்படுத்திக்கொள்ளப்பட்டார். மேலும் உயிரி தொழில்நுட்பக் கொள்கை. Bio Technology Policy உருவாக்குவதற்கு இவருடைய தலைமையில் ஓர் உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டது. இப்படி, முந்தைய தி.மு.க. ஆட்சியில் பயன்படுத்திக்கொள்ளப்பட்ட ஓர் உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானி தயாரித்த திட்டம், உருப்படாத திட்டமா? அவருக்கு ஒன்றும் தெரியாது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் பரிதி இளம்வழுதியும் பொன்முடியும் கூறுகிறார்களா?

நல்ல எண்ணத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட டாக்டர் சுவாமிநாதன் அவர்களது திட்டத்தை, நாங்கள் இதய சுத்தியோடு செயல்படுத்த விரும்புகிறோம். தி.மு.க. ஆட்சியால் சரியாக, முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள முடியாத ஒரு சமூக விஞ்ஞானியை நாங்கள் மதித்து அவருடைய திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்த முன்வந்துள்ளோம். அதற்கு வாய்ப்பை நழுவவிட்ட தி.மு.க. வினர் ஏன் வீணாக முகாரி பாடுகிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று புரியவில்லை.

அடுத்து, Gender Equity-பாலின நேர்மை நெறியின் அடிப்படையில், பாலினப் பாகுபாட்டை நீக்குகின்ற வகையில், ஆண், பெண் விகிதாச்சார முரண்பாடுகள் களையப்படும் என, மேதகு ஆளுநர் உரையில் கூறப்பட்டுள்ளதைக் குறிப்பிட்டு என்னுடைய அமைச்சரவையில் பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு இல்லையே என ஆதங்கப்பட்டு இருக்கிறார் மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி.

*பிற்பகல் 1-10*

திரு. பொன்முடிக்கு Gender Equity பற்றிப் பேச தார்மீக உரிமையில்லை. எனது அமைச்சரவையில் பெண்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் இல்லை. பெண்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் இல்லை என்று குறைகூறும் திரு. பொன்முடியின் கட்சியில் தி.மு.க. வரிசையில் பெண் எம்.எல்.ஏ.-க்கள் இல்லையே! ஒரு பெண் எம்.எல்.ஏ. கூட இல்லையே! (மேசையைத் தட்டும் ஒலி)

Gender Equity பற்றி திரு. பொன்முடி அவர்கள் பேசலாமா? பெண்களுக்கு 33 சதவிகித கட்சிப் பொறுப்புகளை முதன்முதலில் ஒதுக்கியது நான் தலைமையேற்றுள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) கிளைக் கழகம், ஒன்றியக் கழகம், பேரூராட்சிக் கழகம், நகரக் கழகம், மாவட்டக் கழகம், செயற் குழு, பொதுக் குழு உட்பட கழகத்தின் அனைத்து அமைப்புகளிலும், அனைத்து லெவல்களிலும், மட்டங்களிலும், 33 சதவிகித அளவிற்கு பெண்கள் பொறுப்புகளில் அமர்த்தப்பட்டிருப்பது, நான் தலைமை வகித்து வழிநடத்தும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் மட்டும்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி அவர்கள் அறிவாரா? அவரா Gender Equity பற்றிப் பேசுவது?

எனது முந்தைய ஆட்சியின்போது, இந்தியாவிலேயே முதன்முதலாக திருமதி வசந்தகுமாரி என்ற பெண்ணை கனரக வாகன ஓட்டுநர் பதவிக்கு, அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் பணியில் அமர்த்தினேன். அந்தச் சாதனையைப் புரிந்தது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலிருந்து இறங்கியவுடன், அந்தப் பெண்மணிக்கு பல இடையூறுகள் கொடுத்து, அவரைப் பணியிலிருந்து அகற்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது தி.மு.க. அரசு. நான் மீண்டும் தமிழக முதலமைச்சராகப்





பதவியேற்ற பிறகுதான் அந்தப் பெண்ணுக்கு இழைக்கப்பட்ட அநீதியை அண்மையில் களைந்தேன்.

என்னுடைய முந்தைய ஆட்சிக் காலத்தில் உலகத்திற்கே முன்னோடித் திட்டமாக நான் தொடங்கிய 52 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை, பின்னர் ஆட்சிக்கு வந்த தி.மு.க. அரசு முடக்கிப் போட்டது. வெளிநாட்டவரும் பாராட்டிப் பின்பற்றிய அனைத்து மகளிர் காவல் நிலையங்களை தி.மு.க. அரசு புறக்கணித்தது. அனைத்து மகளிர் காவல் நிலையங்களிலிருந்த மேஜை, நாற்காலிகளைக்கூட அகற்றி, அங்கே பணியாற்றிய பெண் காவல் துறையினரை, கட்டாந்தரையில் அமர வைத்தார்கள். அப்படிச் செயல்பட்டது தி.மு.க. அரசு. உயர் அதிகாரிகள் யாரும் அந்தக் காவல் நிலையங்களைப் பார்வையிடக்கூடாது எனத் தடுத்தது தி.மு.க. அரசு. அனைத்து மகளிர் காவல் நிலையங்களை நான் தொடங்கினேன் என்ற ஒரே காரணத்தினால், அவற்றில் பணிபுரிந்த பெண் காவல் துறையினரைத் தீண்டத் தகாதவர்களைப் போல் நடத்தியது தி.மு.க. அரசு. அந்தத் தி.மு.க. அரசில் மந்திரியாக இருந்த திரு. பொன்முடி அவர்கள் Gender Equity-யைப் பற்றிப் பேசலாமா? (மேசையைத் தட்டும் ஒலி) அது அடுக்குமா?

நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்த பிறகுதான், அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் புத்துயிர் பெற்றுள்ளன. வரும் ஆண்டுகளில் ஒவ்வொரு காவல் துறை உட்கோட்டத்திற்கும், ஓர் அனைத்து மகளிர் காவல் நிலையம் அமைக்கப்படும் என்ற வகையில், 184 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் இனி தமிழகத்தில் இயக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்தபடியாக, Tamil Nadu Public Service Commission-னின் Chairperson-ஆக, தமிழ்நாடு தேர்வாணையக் குழுவின் தலைவராக முதன்முதலாக ஒரு பெண்மணியை, அதுவும் ஒரு இஸ்லாமியப் பெண்மணியை அமர்த்தியது இந்த அரசுதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடியின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதேபோல, Tamil Nadu Wakf Board-க்கும், தமிழ்நாடு வக்பு வாரியத்திற்கும், முதன்முதலாக, ஒரு பெண்மணியைத் தலைவராகப் பதவியேற்கச் செய்து, சாதனை புரிந்ததும் இந்த அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) திரு. பொன்முடியா Gender Equity பற்றிப் பேசுவது? அவர் பேசலாமா? (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாட்டிலும் முதலமைச்சராக இருப்பவரே தாய்க்குலத்தின் பிரதிநிதிதான் என்பது அவருக்குத் தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** நேற்று அவர் பேசியதற்கு நான் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறேன். கடந்த 1991 ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டு வரை, நாங்கள் ஆட்சியில் இருந்தபோது, ஒரு இலட்சம் பெண்களுக்கு, தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கும் திட்டத்தைச் செயல்படுத்தினோமே; அதுபோல தி.மு.க. ஆட்சியில் சொல்லிக்கொள்வதற்கு ஏதாவது உண்டா? அதே அடிப்படையில் இப்போது 2001 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை, 5 ஆண்டுகளில் 5 இலட்சம் பெண்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறோம். ஆனால் பெண்களுக்கு எதுவுமே செய்யாத தி.மு.க. அரசில் மந்திரியாக இருந்த திரு. பொன்முடி அவர்கள் Gender Equity பற்றிப் பேசலாமா? (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த ஆண்டு மேல்நிலைப் பள்ளிகளில் பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2 வகுப்புகளில் பயிலும், ஆதிதிராவிட மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தை வெற்றிகரமாக அமல்படுத்தி, எல்லோருடைய பாராட்டையும் பெற்றோமே, அந்த நடவடிக்கை எங்களுடைய Gender Equity பாலின நேர்மை நெறியைப் பறைசாற்றவில்லையா?

பிற்பகல் 1-15

மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி அவர்கள் கடந்த 10 மாதங்களில் எங்கள் அரசு என்ன செய்துள்ளது என்று கேட்டுள்ளார். அதே கேள்வியை சற்றுமுன் பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் துரைமுருகன் அவர்களும் எழுப்பினார். அவர்களுக்கு நான் இப்போது பதில் சொல்லப் போகிறேன். ஆனால் கேட்பதற்கு அவர்கள் இல்லை.

தமிழக விவசாயிகளுடைய கூட்டுறவுக் கடன் மீதான வட்டி மற்றும் அபராத வட்டித் தொகை 310.51 கோடி ரூபாய் அளவில் இரத்து செய்தோம். சென்னைக் குடிநீர்த் தட்டுப்பாட்டினைப் போக்க குறுகிய மற்றும் நீண்டகாலத் திட்டங்களை வகுத்து, லாரிகள் மூலம் ஈரோடு, நெய்வேலி மற்றும் மேட்டூரிலிருந்து தண்ணீரைக் கொண்டுவந்து, சென்னை மாநகர மக்களுக்குக் குடிநீரை அளித்தோம். புதிய வீராணம் திட்டத்தை இரண்டு ஆண்டுகளில் நிறைவேற்ற நடவடிக்கை எடுத்தோம். நீலகிரி சிறு தேயிலை





விவசாயிகளின் வாழ்க்கைப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில், அவர்களுக்கு சலுகைகளை வழங்கி, அவர்கள் உற்பத்தி செய்கின்ற தேயிலையை, பொது விநியோகக் கடைகளில் "ஊட்டி டீ" என்ற பெயரில், விற்பனை செய்ய ஆணையிட்டோம். தமிழகத்தின் அனைத்து ஊரகப் பகுதிகளிலும், பொருளாதார மறுமலர்ச்சி காண மாபெரும் 50 இலட்சம் ஏக்கர் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் கொண்டுவந்தோம். விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதற்காக TKM-9, ரக அரிசிக்கு levy-யிலிருந்து விலக்களித்தோம். வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள, புதிதாக திருமணமான தம்பதிகளுக்கு சமையல் எரிவாயு இலவசமாக வழங்க உத்தரவிட்டோம். Bio-Technology உயிரி தொழில் நுட்பவியல் வருங்காலத்தில் முன்னுரிமை பெறும் என்பதை உணர்ந்து, அமெரிக்க Cornell பல்கலைக்கழகத்தோடு ஒப்பந்தம் செய்தோம்.

TIDCO Centre for Life Sciences- TICEL என்ற பூங்காவை அமைக்க நடவடிக்கை எடுத்தோம். ஊரக மகளிர் நலன் கருதி, ஊரகப் பகுதிகளில், தமிழ்நாட்டில் உள்ள 12,619 பஞ்சாயத்துக்களிலும் தண்ணீர் வசதியுடன்கூடிய, துப்புரவு வளாகங்கள் அமைக்க திட்டம் தீட்டி, அதில் 5,125 துப்புரவு வளாகங்களை இந்த நிதியாண்டிலேயே அமைக்க நடவடிக்கை எடுத்தோம். இப்படி பலப் பல சாதனைகளை நான் சொல்லிக் கொண்டே போகலாம்.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம், தமிழக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வெற்றிகரமாகத் தேர்தல்கள் நடைபெற்று, ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் உறுப்பினர்கள், திறம்படப் பணியாற்றி வருகின்றார்கள். இதுவும் எங்கள் அரசின் சாதனைதான்.

தமிழக அரசு, அதன் நிறுவனங்களுக்குப் பொருட்களை வாங்கும்போது, சிறுதொழில் நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் Price Preference and Purchase Preference அதாவது, விலை முன்னுரிமை மற்றும் வாங்குவதற்கான முன்னுரிமை ஆகியவற்றை வழங்கி, தி.மு.க. ஆட்சியில் அந்த நிறுவனங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் களைந்துள்ளோம். அதன்மூலம் முக்கியமான எங்கள் தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றை நிறைவேற்றியுள்ளோம்.

கடந்த 10 மாதங்களில் மட்டும் எங்கள் ஆட்சியில் 29,135 மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு இயங்கி வருகின்றன. ஆசிரியர்களுக்கு இதுவரை இல்லாத வரப்பிரசாதமாக, வெளிப்படையான மாறுதல் Transfers through Counselling என்ற புதிய கொள்கையை அமல்படுத்தி

நடைமுறையை அமல்படுத்தி எல்லோருடைய ஒருமித்த பாராட்டையும் இந்த அரசு பெற்றிருக்கிறது. இவை அனைத்தும் தி.மு.க.-வையும், அந்தக் கட்சியின் தலைவரையும் மீறி நாங்கள் செய்த சாதனைகள்.

இந்த ஆட்சி அமைந்த முதல் நாளிலிருந்தே, முட்டுக் கட்டைகள் போடுவதையும், இடர்ப்பாடுகள் ஏற்படுத்துவதையுமே வாடிக்கையாகக் கொண்டிருந்தார்கள் தி.மு.க.வினர். ஆண்டிப்பட்டி இடைத்தேர்தல் நடக்குமா என்ற சந்தேகம் வரும் அளவிற்கு, எந்தெந்த நீதிமன்றத்திலோ தடை உத்தரவு கிடைக்காதா என்று ஏங்கி இருந்தார்கள்; காத்துக் கிடந்தார்கள். எங்களைச் செயல்படாமல் இருக்கச் செய்ய தி.மு.க.வினர் செய்த ஒவ்வொரு முயற்சியையும் முறியடித்து நாங்கள் வெற்றி பெற்றுள்ளோம். தி.மு.க.வினர் புயலை ஏற்படுத்தப் பார்த்தார்கள். அது வெறும் Storm in a tea cup - ஆகப் போனது—தேநீர் அருந்தும் கோப்பைக்குள் புயல்போல் ஆகிப் போனது. (மேசையைத் தட்டும் ஒலி.)

தி.மு.க.வினருக்கும், தி.மு.க. தலைவருக்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஒருபோதும் நம்பிக்கை இல்லை; இருந்ததில்லை. ஆகவே தி.மு.க.வினர் இனி ஓய்வு எடுத்துக்கொள்வது நல்லது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) மாறாக, நாங்கள் மக்கள் நலம் நாடும் நடவடிக்கைகளில் முழுமையான நம்பிக்கை உடையவர்கள். ஆகவேதான் முழுமையான நம்பிக்கை உடையவர்கள், நாங்கள் ஆக்கபூர்வமாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம். எனவே தி.மு.க.வினருக்கு ஒதுங்கிக்கொள்ளுங்கள் என்றுதான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-20*

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஜெயக்குமார் உட்பட, சில உறுப்பினர்கள், சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதிக்கு, 82 இலட்சம் ரூபாய் என் ஒதுக்கப்பட்டிருந்தாலும், 50 இலட்சம் ரூபாய் அரசு குறிப்பிடுகின்ற திட்டங்களுக்கே போய்விடுகிறது என்றும் மீதம் உள்ள 32 இலட்ச ரூபாயில் மட்டுமே, சட்டமன்ற உறுப்பினரின் விருப்பத்திற்கு ஏற்ப, திட்டங்களை அமல்படுத்த வேண்டியிருக்கிறது என்றும் குறைப்பட்டுக்கொண்டார்கள்.

கடந்த பொதுத் தேர்தலின்போது, தமிழகத்தில் உள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளிலும், தேர்தல் பிரச்சாரப் பயணம் மேற்கொண்ட என்னிடம், ஊரகப் பகுதிகளில் வசிக்கும் பெண்கள், கழிப்பிடங்கள் அடங்கிய துப்புரவு வளாகங்களை அமைத்துத் தர வேண்டும் என்று, என்னிடம் கோரிக்கை





வைத்தனர். அதன்மூலம் அவர்களுடைய அத்தியாவசியத் தேவைகளில் அதுவும் ஒன்று என்பதை உணர்ந்தேன். அதன் அடிப்படையில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, இந்தத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்ய, அரசு ஆணையிட்டது. இந்த மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளில் இதை அமைக்க வேண்டாம் என்று கூறுகிறார்களா?

தேசப்பிதா மகாத்மா காந்தி அவர்கள், "Just as the Universe is contained in the self, so is India contained in the villages"- என்றார். "கிராமங்கள்தான். இந்தியாவின் உயிர்நாடி" என்று கூறியுள்ளார். அந்த வகையில், அரசு நிர்வாகத்தை, கிராமத்திற்கு எடுத்துச் செல்ல நியமிக்கப்பட்டவர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், அவர்கள்தான், கிராம மக்களுடன், நேரிடையாக தொடர்பு கொள்பவர்கள். அவர்களுக்கென தனியாக அலுவலகம் கிராமத்தில் இருப்பது இன்றியமையாதது. பொது மக்களுக்கு நன்மை தரத்தக்கது. ஆகவே கிராம நிர்வாக அலுவலருக்கு அலுவலகம் அமைக்க எம்.எல்.ஏ. நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் என்ன தவறு இருக்கிறது? இது தேவையில்லையென்று இந்த மாண்புமிகு உறுப்பினர்கள் கருதுகிறார்களா? கூறுகிறார்களா?

இது சமூக நீதி நிலைநாட்டப்படும் காலம். ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகிய இனங்களைச் சேர்ந்த மாணவ மாணவியருக்கு, பல ஆண்டுகளாகவே வாடகைக் கட்டடங்களிலும், மின்சாரம் இன்றி, தண்ணீர் இன்றி, வசதி குறைவான இடங்களிலும்தான், விடுதிகள் இயங்கிவருவதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். இதை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று நினைத்தேன். இந்த விடுதிகளை எல்லாம், சொந்தக் கட்டடங்களில் அமையச் செய்து, அவர்களுக்கு வசதிகளை, விரைந்து செய்து கொடுக்க வேண்டும் என விரும்பினேன். ஆகவே அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள், இந்த விடுதிகளைக் கட்டி முடிக்க, எம்.எல்.ஏ. நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்ய அரசு ஆணையிட்டது. தந்தை பெரியாரின் வழித் தோன்றல்கள் எனக் கூறிக்கொள்ளும் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள், சமூக நீதி காக்கும் இந்தத் திட்டத்தை தடை செய்யலாமா, அதற்குத் தடை சொல்லலாமா?

மக்களுக்கு நல்லது என்பதற்காக, முக்கியமாகத் தேவைப்படுகின்ற சில திட்டங்களைத் தேர்ந்தெடுத்து, அந்தத் திட்டங்களை, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அமல்படுத்த ஆணையிட்டுள்ளோம். இந்தத் திட்டங்களை ஒருசிலர் எதிர்க்கிறார்கள் என்றால், அது அவர்களுடைய மக்கள் விரோதப் போக்கைக் காட்டுகிறது என்றுதானே பொருள்?

இந்தக் குறிப்பிட்ட திட்டங்கள், முடிவடையும் வரையில்தான் இந்த ஏற்பாடு. அதற்குப் பின்னர், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை, முழுமையாக சட்டமன்ற உறுப்பினரின் விருப்பத்திற்கு ஏற்ப, தொகுதியை மேம்படுத்த பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்கள் பல வினாக்களை இங்கே எழுப்பினார். பல துறைகள் குறித்து விளக்கங்கள் கேட்டார். அவற்றையெல்லாம் இப்போது தெரிவிக்கலாம் என்று இருந்தேன். ஆனால் அவரே இங்கு இல்லை. அதனால் அவற்றையெல்லாம் ஒத்திவைத்து, அடுத்து நடைபெறவுள்ள பட்ஜெட் கூட்டத்தொடரின்போது சம்பந்தப்பட்ட மானியக்கோரிக்கைகள்மீது விவாதம் நடைபெறும்போது அப்போது தெரிவிக்கலாம் என்று கருதுகிறேன்.

மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜரெத்தினம் அவர்கள் முன்மொழிந்துள்ள தீர்மானத்தின்மீது உரையாற்றி, ஆக்கபூர்வமான கருத்துகளைக் கூறிய அனைத்து உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்து வைத்த வாதங்கள், சொன்ன கருத்துகள், விடுத்த வேண்டுகோள்கள், ஆகியவற்றில் ஒவ்வொன்றிற்கும் என்னுடைய பதிலைச் சொல்ல வேண்டுமென்று நான் விரும்பினாலும், எண்ணியிருந்தாலும் காலத்தின் அருமை கருதி, என்னுடைய பதிலுரையின் நிறைவுப் பகுதிக்கு நான் வர விரும்புகிறேன்.

மேதகு ஆளுநர் உரைக்கு நன்றித் தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பங்கேற்ற பல்வேறு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்ட பல நல்ல திட்டங்களை வரவேற்றும், பாராட்டியும் பேசியிருக்கிறார்கள்.

குறிப்பாக, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. சந்தானம் அவர்கள், திரு. கே.என். இலட்சுமணன் அவர்கள், திருமதி யசோதா அவர்கள், தமிழக மக்களின் நலனுக்காக ஆளுநர் உரையில் கொடுக்கப்பட்டிருந்த புதிய திட்டங்களுக்கு தங்களது ஆதரவையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டதற்கு எனது உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





பிற்பகல் 1-25

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசும்போது, தமிழ்நாட்டில், வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள குடும்பங்களுக்குப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசியின் விலை 3 ரூபாய் 50 பைசாவிலிருந்து, மேலும் உயர்த்தப்படமாட்டாது என்ற உத்தரவாதத்தை அரசு அளிக்க வேண்டுமென்று கூறினார்.

ஆண்டிப்பட்டித் தொகுதி இடைத் தேர்தல் பிரசாரத்தின்போது, நான் மிகத் தெளிவாக ஓர் உறுதிமொழியைத் தமிழக மக்களுக்கு அளித்திருந்தேன். அதாவது, வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள குடும்பங்களுக்குப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசியின் விலை, எக்காரணத்தைக் கொண்டும் 3 ரூபாய் 50 பைசாவிலிருந்து நிச்சயம் உயர்த்தப்படமாட்டாது. (மேசையைத் தட்டும் ஒலி) என்று வாக்குறுதி அளித்திருந்தேன். தேர்தல் வாக்குறுதிகள் மிகவும் புனிதமானவை என்று நான் கருதுவதால், நான் ஆண்டிப்பட்டியில் ஏற்கெனவே கூறியபடி, இந்த வாக்குறுதி நிச்சயம் காப்பாற்றப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நன்றி.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** கடந்த 4 நாட்களாக நடைபெற்ற இந்த விவாதத்தின்போது பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள், தமது தொகுதிகள் மற்றும் மாவட்டங்கள் தொடர்பான பல கோரிக்கைகளை அரசுக்கு விடுத்திருந்தனர். இந்தக் கோரிக்கைகள் அனைத்தையும் உடனடியாகப் பரிசீலனை செய்து, முடிந்தவரையில் நிதிநிலைக்கேற்ப நிறைவேற்றித் தர வேண்டும் என அனைத்து அமைச்சர்களுக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்து நடைபெற இருக்கின்ற நிதிநிலை அறிக்கை—பட்ஜெட் கூட்டத் தொடரில், இவற்றிற்கான தக்க பதில்கள் விரிவாக அந்தந்தத் துறைகளால் அளிக்கப்படும் என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே.சி. கருணாகரன், திரு. ஞானசேகரன், திரு. எச்.எம். ராஜு, திரு. வி.கே. லட்சுமணன், திரு. ஐ. கணேசன், திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி ஆகியோர், மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு ஒருசில திருத்தங்களைக் கொடுத்துள்ளார்கள். மூடப்பட்ட பஞ்சாலைகளைத்

திறப்பது குறித்தும், கள்ளச் சாராய, விஷச் சாராய சாவுகள் தடுப்புத் திட்டம் குறித்தும், கடலூர் வட்டாரத்தில் ஏழை மக்களுக்கு பட்டா வழங்கும் திட்டம் பற்றியும், வீட்டுமனை, நிலப் பத்திரப் பதிவு செய்யத் தேவையான உள்ளாட்சி நிர்வாகத் தடையில்லாச் சான்று பெற வேண்டும் என்ற விதியைத் தளர்த்துதல் குறித்தும், சென்னை-பக்கிங்காம் கால்வாயைச் சுத்தப்படுத்தும் திட்டம் குறித்தும், ஆளுநர் உரையில் குறிப்பிடுதல் வேண்டும் என அந்தத் திருத்தங்கள் வேண்டுவதாக அறிகிறேன். மாநிலத்தில் நிலவும் அனைத்துப் பிரச்சினைகளைப் பற்றியும் மேதகு ஆளுநர் உரையில் குறிப்பிடுவது என்பது, இயலாத ஒன்றாகும். துறைவாரியான மானியக் கோரிக்கைகள், பட்ஜெட் கூட்டத் தொடரில் வரும்போது, இவைபற்றி விரிவாக விவாதிக்க வாய்ப்பு உள்ளது என்பதைத் தெரிவித்து, இந்தத் திருத்தங்களை வலியுறுத்த வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னைப் பொறுத்தவரையில், அறிவிக்கப்பட்டிருக்கின்ற திட்டங்களை உரிய முறையில், உரிய காலத்தில் நிறைவேற்றுவதே மிக முக்கியமானது எனக் கருதுகிறேன். அந்தப் பணியை என் தலைமையில் அமைந்துள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு சிறப்பாகச் செய்யும் என்று உறுதி கூறுகிறேன்.

"இங்கு தடைக்கற்கள் உண்டு என்றாலும்,
தடந்தோள் உண்டு எனச் சிரித்தாய்"

என்று முழங்கினார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். பாவேந்தர் சொன்னதைப்போல, இங்கு தடைக் கற்கள் உண்டுதான்; ஆனால் அவற்றையெல்லாம் பொடிப் பொடியாக்கும் வீரமும் இங்கே உண்டு; விவேகமும் இங்கே உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே எதிர்ப்படும் இடர்பாடுகளைத் தூளாக்கி, என்னோடு ஒன்றாக உள்ள தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு வாளாகவும், கேடயமாகவும் இருந்து செயல்படுவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த ஆட்சி, ஏழையெளிய மக்களின் அரசாகச் செயல்படும் என்றும், இந்த ஆட்சி புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சியாகத் திகழ்ந்து, மக்கள் எங்கள்மீது வைத்துள்ள அசைக்க முடியாத நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருப்போம் என்பதையும் தெரிவித்து, நான் முன்பு கூறியதைப் போலவே, தமிழகத்தை, இந்தியாவிலேயே முதன்மை



மாநிலமாக ஆக்கும் வரை (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஓய மாட்டேன்; இந்த அரசும் ஓயாது என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. திருத்தங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய திருத்தம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய திருத்தம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய திருத்தம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய திருத்தம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய திருத்தம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி அவர்களுடைய திருத்தம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2002 மார்ச் 15

*பிற்பகல் 1-30*

"*2002* ஆம் ஆண்டு மார்ச் திங்கள் *9* ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்" என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. இராஜரெத்தினம் அவர்களால் *12-3-2002* ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 4. அரசினர் தீர்மானம்

### பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுவது குறித்த அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25(1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2002 மார்ச் 15] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

*46.* 2000-2001ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் இருபத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

*47.* 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கிராபெட் நிறுவனத்தின் நான்காவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

*48.* 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ் ஆங்கிலம்).

*49.* அண்ணா பல்கலைக்கழகத்தின் 2000-2001 ஆம் ஆண்டுக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை (1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

Y2:,32'p02 p02 - 15.2



50. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் முப்பத்தி இரண்டாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ, பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

51. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் இருபத்தி எட்டாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

52. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் ஆண்டறிக்கை. (1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 40/1992) 16-வது பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

23. பொதுக் கணக்குக் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை. (2001-2002)

24. பொதுக் கணக்குக் குழுவின் இருபதாவது அறிக்கை. (2001-2002)

25. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்து ஒன்றாவது அறிக்கை. (2001-2002)

26. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்து இரண்டாவது அறிக்கை. (2001-2002)

27. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்து மூன்றாவது அறிக்கை. (2001-2002)

28. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (முதல் பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

29. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

30. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

31. உடுக்குறியிட[illegible]விடைகள் பட்டியல் (நான்காவது பட்டியல்) (வரி[illegible] எண்கள் 1 முதல் [illegible])

224483
சென்னை-600 008

அரசு மைய அச்சகம், சென்னை — 600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.